# அன்பின் மகிழ்ச்சி

ஆயர்கள், அருள்பணியாளர்கள், திருத்தொண்டர்கள்,

துறவியர், கிறிஸ்தவ மணத்துணைவர்கள்,

பொதுநிலையினர் அனைவருக்கும்

குடும்ப அன்புபற்றி ஆயர் மாமன்றத்தைத் தொடர்ந்து

திருத்தந்தை பிரான்சிஸ் வழங்கும்

திருத்தூது ஊக்கவுரை

**தமிழாக்கம்**

அருள்பணி. சூ. சந்தியாகு ராசா

அருள்பணி. தே. அல்போன்சு
அருள்பணி. லா. டைனிசியஸ்

அருள்பணி. ஜோ. விக்டர்
அருள்பணி. லூ. ஜீவராஜ்

**நூல் : அன்பின் மகிழ்ச்சி**

– திருத்தந்தை பிரான்சிஸ்

[*Amoris Laetitia*

- Pope Francis, 2016]

**தமிழாக்கம் : அருள்பணி. சூ. சந்தியாகு ராசா (அலகுகள் 1-2)**

**அருள்பணி. தே. அல்போன்சு (அலகு 3)**

**அருள்பணி. ஜோ. விக்டர் (அலகு 4)**

**அருள்பணி. லா. டைனிசியஸ் (அலகுகள் 5-6)**

**அருள்பணி. லூ. ஜீவராஜ் (அலகுகள் 7-9)**

**முதல் பதிப்பு :** ஆகஸ்டு 2016

**பக்கங்கள் :** xx + 236

**பிரதிகள் :** 6000

**விலை :** ரூ. 80/-

**தாள் :** 70 GSM ஃபப்

**அச்சு :** ஆண்டோ பதிப்பகம், சிவகாசி

**கிடைக்குமிடம்:**

தேடல் வெளியீடுகள்
தூய பவுல் குருத்துவக் கல்லூரி
திருச்சிராப்பள்ளி - 620 001
(0431-2412500)



# உள்ளடக்கம்

**அணிந்துரை** v

**முன்னுரை** ix

**அன்பின் மகிழ்வு**

| | | |
|---|---|---|
| அலகு - 1 | இறைவார்த்தையின் ஒளியில் | 5 |
| அலகு - 2 | குடும்பங்களின் அனுபவங்களும் சவால்களும் | 18 |
| அலகு - 3 | இயேசுவை நோக்கி: குடும்பத்தின் அழைப்பு | 39 |
| அலகு - 4 | திருமணத்தில் அன்பு | 57 |
| அலகு - 5 | நற்பயன் தரும் அன்பு | 107 |
| அலகு - 6 | சில அருட்பணிப் பார்வைகள் | 130 |
| அலகு - 7 | பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டை நோக்கி | 172 |
| அலகு - 8 | உடன்பயணித்தல், வலுவின்மையைத் தெளிந்து தேர்ந்து ஒருங்கிணைத்தல் | 194 |
| அலகு - 9 | திருமணம், குடும்பம் என்பவற்றின் அருள்வாழ்வு | 212 |

**திருக்குடும்பத்தை நோக்கி மன்றாட்டு**

**மேதகு அந்தோனி பாப்புசாமி**
**மதுரை மாமறைமாவட்டப் பேராயர்**
**பேராயர் இல்லம்**
**மதுரை - 625 007**



# அணிந்துரை

'மனம் இரங்குபவரே உண்மையான நேர்மையாளர்' (திபா 37:21). 2013-ஆம் ஆண்டில் நேர்மையாளர் யோசேப்பின் பெருவிழாவன்று திருஅவையை வழிநடத்தத் தலைமைப் பொறுப்பு ஏற்று மூன்று ஆண்டுகளை நிறைவு செய்துள்ள திருத்தந்தை பிரான்சிஸ் இதுவரை இரண்டு சுற்றுமடல்களையும் இரண்டு திருத்தூது ஊக்கவுரைகளையும் ஓர் ஆணை மடலையும் நமக்கு வழங்கியுள்ளார். இரண்டாம் வத்திக்கான் சங்கத்தைத் தொடங்கிய புனித 23-ஆம் ஜாண் "*சன்னல்களைத் திறந்து விடுங்கள், புதிய காற்று உள்ளே வரட்டும்*" எனக் கூறி திருஅவையை உலகிற்கும் பிற சமயங்களுக்கும் கத்தோலிக்கர் அல்லாத பிற திருஅவைகளுக்கும் திறந்து வைத்தார். இதன் மூலம் திருஅவை தனது இயல்பு, பணி ஆகியவற்றைச் சுய ஆய்வு செய்ய அழைப்பு விடுத்தார். சங்கம் தொடங்கி ஐம்பது ஆண்டுகளைக் கடந்த நிலையில் திருஅவையின் தலைமைப் பொறுப்பை ஏற்ற திருத்தந்தை பிரான்சிஸ் "மானுடம் தனது *இதயங்களைத்* திறக்க வேண்டும்" என வலியுறுத்தி வருகின்றார்.

இந்தச் சிந்தனைதான் அவரின் சுற்று மடல்களிலும் திருத்தூது ஊக்கவுரைகளிலும் ஆணை மடலிலும் மையமாய் உள்ளது. அவர் முதலாவதாக எழுதிய **நம்பிக்கையின் ஒளி** எனும் சுற்றுமடலில் கடவுளின் இரக்கமுள்ள அன்பில் நம்பிக்கை வைக்க அழைப்பு விடுக்கின்றார். அவர் இரண்டாவதாக எழுதிய **இறைவா உமக்கே புகழ்** என்னும் சுற்றுமடலில் இயற்கை இறைவனின் கொடை; அதை அன்பு செய்து பராமரிப்பது நமது

கடமை என்று சுட்டிக் காட்டுகிறார். அவர் எழுதிய முதல் திருத்தூது ஊக்கவுரையாகிய **நற்செய்தியின் மகிழ்ச்சி** என்பதில் இரக்கம் உள்ளவர்களாய் வாழ்வதே உண்மையான நற்செய்திப் பணி என்று அழுத்தமாய்க் கூறுகிறார். அவர் எழுதிய ஆணை மடலாகிய **இரக்கத்தின் முகம்** என்பதில் "இரக்கம் என்பது தந்தையின் செயல்பாடு மட்டுமன்று, அவருடைய உண்மைப் பிள்ளைகள் யார் என்பதை உறுதிப்படுத்தும் அளவுகோலாகவும் அது உள்ளது" (எண் 9) என்கிறார். இறுதியாக அண்மையில் அவர் எழுதியுள்ள திருத்தூது ஊக்கவுரையாகிய ***அன்பின் மகிழ்ச்சி*** என்பதில் குடும்ப வாழ்வு எங்கெல்லாம் நிறைவற்றதாகவோ, மகிழ்ச்சியிலும் அமைதியிலும் குறைபட்டதாகவோ உள்ளதோ, அங்கெல்லாம் பரிவிரக்கம், உறவு நெருக்கம் ஆகியவற்றை வழங்க அழைப்பு விடுக்கின்றார். இவ்வாறாக, இறைவனின் அன்பை நாம் சுவைக்கவும் அந்த அன்பை இயற்கையிலும், மானுடம் முழுமையிலும், குறிப்பாகக் குடும்ப வாழ்விலும் வெளிப்படுத்தவும் அழைப்பு விடுத்து வருகின்றார்.

ஆயர் மாமன்றத்தைத் தொடர்ந்து வெளிவந்துள்ள **அன்பின் மகிழ்ச்சி** எனும் இந்தத் திருத்தூது ஊக்கவுரை குடும்பம், திருமணம் ஆகியவை இன்று சந்திக்கும் பல்வேறு வகையான சவால்களையும் நெருக்கடிகளையும் மிக ஆழமாக அலசி ஆராய்கின்றது. பின்பு இறைவார்த்தையின் ஒளியிலும் திருஅவையின் போதனைகளின் அடிப்படையிலும் திருமணத்தின் இன்றியமையாப் பண்புகள் விளக்கப்பட்டுள்ளன. தவிர குடும்பம், திருமணம் ஆகியவற்றின் மையமாய் விளங்கும் அன்பு பற்றி நீண்ட உரை உள்ளது. இறுதிப் பகுதிகளில் குடும்பங்களைக் கட்டியெழுப்ப உறுதுணையாக உள்ள அருள்பணிகள்சார் அணுகுமுறைகளையும் பிள்ளைகளைப் பொறுப்புடன் வளர்ப்பது பற்றியும் பல்வேறு பிரச்சினைகளின் காரணமாகத் துன்புறும் குடும்பங்களுக்கு பரிவிரக்கம் காட்டுவது பற்றியும் இந்த திருத்தூது ஊக்கவுரை விளக்குகின்றது.

இறை இரக்கத்தின் சிறப்பு யூபிலி ஆண்டில் வெளிவந்துள்ள **அன்பின் மகிழ்ச்சி** என்னும் இந்தத் திருத்தூது ஊக்கவுரை தமிழாக்கம்



பெற்றிருப்பது தமிழகத் திருஅவைக்கே மகிழ்ச்சி தரும் ஒன்று. இந்தத் தமிழாக்கத்தைச் செம்மையாகச் செய்திருக்கும் புனித பவுல் குருத்துவக் கல்லூரிப் பேராசிரியர்களாகிய **அருள்பணியாளர்கள் சூ. சந்தியாகு ராசா, ஜோ. விக்டர், லா. டைனிசியஸ், லூ. ஜீவராஜ்,** கோட்டாறு மறைமாவட்டத்தைச் சார்ந்த **அருள்பணி. தே. அல்போன்சு** ஆகிய அனைவருக்கும் என் நெஞ்சார்ந்த பாராட்டுக்கள்.

இந்நூல் புனித பவுல் குருத்துவக் கல்லூரியின் "தேடல் வெளியீடுகள்" மூலம் தமிழகத் திருஅவையை வலம் வருகின்றது. திருஅவையின் அனைத்து நிலையினரும் இந்நூலை வாங்கி, வாசித்துப் பயன்பெற உங்களை விரும்பிக் கேட்கின்றேன். இறையருளை வேண்டி, ஆசீர் வழங்குகிறேன்.

"குடும்பங்கள் அனுபவிக்கும் அன்பின் மகிழ்வு
திருஅவையின் மகிழ்வாகவும் உள்ளது"

(**அன்பின் மகிழ்ச்சி,** எண் 1)

இறை இயேசுவின் ஆசியுடன்

+ 

+அந்தோனி பாப்புசாமி
பேராயர், மதுரை மாமறைமாவட்டம்
தலைவர், தமிழக ஆயர் பேரவை

மதுரை
06.07.2016

# முன்னுரை

குடும்ப அன்புபற்றி ஆயர் மாமன்றத்தைத் தொடர்ந்து திருத்தந்தை பிரான்சிஸ் வழங்கும் **அன்பின் மகிழ்ச்சி** என்னும் திருத்தூது ஊக்கவுரை குடும்பங்கள் அனுபவிக்கும் அன்பின் மகிழ்வு திருஅவையின் மகிழ்வாகவும் உள்ளது (எண் 1) எனத் தொடங்குகின்றது. இது குடும்பம்பற்றிய திருஅவையின் அக்கறையைத் தெளிவாகக் காட்டுகின்றது. இன்று குடும்பங்கள் பல நெருக்கடிகளைச் சந்தித்தாலும் திருமணம் செய்வதற்கான விருப்பம் இளம் வயதினரிடம் உயிர்த்துடிப்புடன் உள்ளது. இருப்பினும், இன்று பல்வேறு தளங்களில் போதிய சிந்தனையோ, ஆழ்ந்த அறிவோ இன்றி குடும்பம், திருமணம் சார்ந்த பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் மனப்பாங்கு மேலோங்கியுள்ளன. இச்சூழலில்தான் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் குடும்பம், திருமணம் ஆகியவை பற்றிய தனது எண்ணங்களை விவிலியப் பின்னணி, குடும்பங்களின் நடைமுறைச் சூழல், திருஅவையின் படிப்பினை போன்றவற்றை இத்திருத்தூது ஊக்கவுரையின் முதல் மூன்று அலகுகளில் விவரிக்கின்றார். இதன் அடிப்படையில் அடுத்த இரண்டு அலகுகளில் அன்புபற்றிப் பேசுகின்றார். ஆறாவது அலகில் குடும்பங்களைக் கட்டியெழுப்ப உதவும் அருள்பணி அணுகுமுறைகளையும் ஏழாவது பிரிவில் பிள்ளைகள் வளர்ப்பு பற்றியும் சுட்டிக்காட்டுகிறார். எட்டாவது அலகில் பரிவிரக்கத்திற்கும் அருள்பணிசார் தெளிந்த தேர்வுக்கும் அழைப்பு விடுக்கின்றார். குடும்ப அருள்வாழ்வு பற்றிய கலந்தாய்வுடன் இந்தத் திருத்தூது ஊக்கவுரையை நிறைவு செய்கின்றார்.

**இறைவார்த்தையின் ஒளியில்** எனத் தலைப்பிடப்பட்டுள்ள முதல் அலகு குடும்பங்கள், பிறப்புகள், அன்புக் கதைகள், குடும்பச் சிக்கல்கள் ஆகியவற்றால் திருவிவிலியம் நிறைந்துள்ளது எனத் தொடங்குகின்றது. தொடக்கத்திலிருந்தே வரும் இறைத்திட்டத்திற்குத் தாயும் தந்தையும்தான் உடலுருக் கொடுக்கின்றார்கள். இவ்வாறு அவர்கள் அவரது படைப்புச் செயலின் உயிருள்ள ஆற்றல்மிகு ‘‘உரு’’வாகவும் காணக்கூடிய அடையாளமாகவும் உள்ளார்கள் (எண் 10). இவர்கள் அன்பு செய்து, உயிரை ஈன்றெடுப்பதன் மூலம் மீட்பின் வரலாறு முன்னேறிச் செல்ல வழிவகுகின்றனர் (எண் 11).

மணத்துணைவர்களின் மகப்பேறளிக்கும் உறவு கடவுளின் மறைபொருளை விளக்கவும், புரியவும் பொருத்தமானதாக உள்ளது; ஏனெனில் மூவொரு கடவுள் ஓர் உறவு ஒன்றிப்பு ஆவார்.

மனிதன் தான் உணரும் தனிமையைப் போக்கக்கூடிய ''தனக்குத் தகுந்த துணையைத்'' தேடுபவனாய் தொடக்கநூலில் காட்டப்படுகின்றான் (தொநூ 2:18,20). அவன் பெறும் உயர்ந்த கொடையாய் அவனுடைய ஏற்ற துணை கருதப்படுகிறார் (சீஞா 36:24). இருவரும் இணைந்து உருவாக்கும் குடும்பத்தில் அவர்கள் உடலும் உள்ளமும் நெருக்கமாய் இருப்பதுபோன்று இணக்கத்துடன் இருப்பார்கள். இவ்வாறு அவர்கள் ஒருடலாக மாறுகின்றனர். குடும்பத்தில் பெற்றோர் அடித்தளம் என்றால் குழந்தைகள் அக்குடும்பத்தின் ''உயிருள்ள கற்கள்'' போன்றவர்கள். இவர்கள்தான் குடும்பத்தின் தொடர்ச்சியான அடையாளமாக உள்ளார்கள் (எண் 14).

குடும்பம் ஓர் இல்லத் திருஅவையாகவும் பிள்ளைகள் நம்பிக்கையில் வளரும் ஓர் இடமாகவும் உள்ளது. இவ்வாறு பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு நம்பிக்கையின் முதல் ஆசிரியர்களாக உள்ளார்கள் (எண் 15,16). இருப்பினும் பிள்ளைகள் குடும்பத்தின் சொத்து அல்ல; பிள்ளைகளின் வாழ்க்கை முடிவுகள், கிறிஸ்தவ அழைப்பு ஆகியவற்றை பெற்றோர்கள் கவனத்தில் கொண்டு அவர்களை வழிநடத்த வேண்டும்.

திருவிவிலியம் துன்பம், இரத்தப்பழி, மகன்கள் மற்றும் மனைவிகள் இடையே எழுந்த பூசல்கள், வன்முறை மற்றும் அவல நிகழ்ச்சிகள், குடும்பப் பிரச்சினைகள் போன்ற கசப்பான மெய்மைகளைச் சுட்டிக் காட்டுகிறது (எண் 19). வெறித்தனம் கொண்ட மேலோட்டமான உறவுகள் உள்ள உலகில் இன்று தேவைப்படுவது மென்மைப்பண்பு என்ற நற்பண்பு ஆகும்.

மேலும் உழைப்பு ஒருவரின் குடும்பத்திற்குரிய வாழ்வாதாரம், உறுதிப் பயனுடைமை போன்றவற்றை வழங்குகிறது. ஆனால் இன்று காணப்படும் வேலையின்மை, வேலையில் நிலையுறுதியின்மை போன்றவை குடும்ப வாழ்வின் அமைதியைப் பறித்து விடுகின்றது என எடுத்தியம்புகின்றது இந்த திருத்தூது ஊக்கவுரை.

இரண்டாம் அலகு **குடும்பங்களின் அனுபவங்களும் சவால்களும்** பற்றி எடுத்துரைக்கின்றது. குடும்பம், திருமணம் ஆகியவற்றில் ஒளிமயமான



பகுதிகள் இருண்ட பகுதிகள் என இரண்டுமே உண்டு. பண்பாடு, மானுடவியல் சார்ந்த மாற்றங்கள் குடும்பம், திருமணம் ஆகியவற்றில் இன்று அதிகமாக தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. மட்டுமீறிய தன்னலம், சுதந்திரம் போன்றவை இன்று குடும்ப இணைப்புகளைப் பலவீனப்படுத்துவதாய் உள்ளது. அதற்கு மாறாக மணத்துணைவர்கள் தங்களுக்குள் ஆள்சார்ந்த உறவுக்கு அழுத்தம் தரவேண்டும் (எண் 32). மேலும் திருமணத்தைப் பிள்ளைப்பேறுடன் மட்டுமே இணைத்துப் பார்ப்பதும் தவறு. திருமணம், குடும்பம் ஆகியவற்றின் நோக்கங்களை இன்று சுட்டிக்காட்டி அதற்கு அழுத்தம் வழங்க வேண்டும்.

பொருளாதாரம், வேலை, படிப்பு, திருமணம் பற்றிய பார்வை, மணத்துணைவர்கள் சந்திக்கும் தோல்வி, திருமணம் தொடர்புடைய பல்வேறு பயம் போன்றவைகள் ஒருவர் திருமணத்தை தள்ளிப்போட வித்திடுகின்றது. இன்னொரு பக்கம் பாலிழித் திரைப்படங்களின் பரவல், உடலை வாணிகப் பொருளாக கருதும் மனப்பான்மை போன்றவை திருமணப் பிணைப்பை பலவீனப்படுத்துகின்றது (எண்கள் 40,41). பொருளாதாரச் சிக்கல், சுதந்திர வாழ்க்கைக்கான விருப்பம், நுகர்வுப் பண்பாட்டுக்கு அடிமை போன்றவை பிள்ளைகளைப் பெற்றெடுப்பதற்கு எதிரான மனப்பான்மைக்குக் காரணமாய் உள்ளன. இதனால் கருத்தடைச் சாதனங்கள் பயன்படுத்துதல், மலடாக்கல், ஏன் கருச்சிதைவு செய்தல் போன்றவற்றில் பலர் ஈடுபடுகின்றனர். ஆனால் திருஅவை இதை ஏற்பது இல்லை. காரணம், இது சமூக வாழ்வின் எதிர்காலத்தையே கேள்விக்குள்ளாக்கிவிடும் (எண் 42).

தகுந்த உறைவிடம் இல்லாமை, உடல் நோயால் வருந்துவோரை கவனிக்க இயலாப் பொருளாதார ஏழ்மை, பாதுகாப்பற்ற வேலை, வேலைக்காக வீட்டை விட்டு வெகுநாள்கள் தொலைவில் இருத்தல் போன்றவை குடும்பத்தைப் பாதிக்கும் காரணிகளாக உள்ளன (எண் 44).

அதிக எண்ணிக்கையிலான குழந்தைகள் மண வாழ்க்கைக்கு வெளியே பிறக்கின்றார்கள். மேலும் பல குழந்தைகள் பாலியல் சுரண்டலுக்கு ஆட்படுத்தப்படுகின்றார்கள் (எண் 45). இது குழந்தைகளின் வளர்ச்சியை அதிகம் பாதிக்கின்றது. தவிர, புலம்பெயர்ந்தோர், மாற்றுத்திறனாளிகள் ஆகியோரின் துன்ப அனுபவங்கள் என்பது திருஅவைக்கு மட்டுமல்ல, பன்னாட்டு சமூகம் முழுமைக்குமே ஒரு பெரிய துன்ப அனுபவமாக உள்ளது. அவர்களுக்கு அக்கறை காட்டப்பட வேண்டும். அவ்வாறே முதியோர்களைச்

சுமைகளாகக் கருதாமல் அவர்களை ஆசீராகக் கண்டு மரியாதையுடன் நடத்த வேண்டும் (எண்கள் 45-48).

போதை மருந்துப் பழக்கம், மது அடிமைநிலை, சூதாட்டம் போன்றவை நமது காலத்தின் கொள்ளை நோய்கள் ஆகும். இவை குடும்ப உறவையே பாழாக்குகின்றன (எண் 51). இன்று பெண்கள் சொல்சார், உடல்சார், பாலியல்சார் வன்முறைக்கு ஆளாக்கப்படுகின்றனர். இதைப் பெண் விடுதலையின் விளைவு எனச் சிலர் கருதுவது உண்டு; ஆனால் அது போலியானது, பொய்யானது. அடிப்படையில் இது ஆணாதிக்க வெறியின் அடையாளம் ஆகும் (எண்கள் 52-55).

மூன்றாவது அலகு **இயேசுவை நோக்கி: குடும்பத்தின் அழைப்பு** எனத் தலைப்பு இடப்பட்டுள்ளது. திருமணம், குடும்பம் ஆகியவை பற்றித் திருஅவையின் படிப்பினை எப்பொழுதும் எதிரொலிக்க வேண்டும் என இந்த அலகு தொடங்குகிறது. திருமணத்தின் முறிவுபடாமையை மனுக்குலத்தின் மீது சுமத்தப்பட்ட ஒரு நுகத்தடியாகக் கருதாது திருமணத்தால் இணைக்கப்பட்டவர்களுக்கே தரப்படும் ஓர் அருள்கொடையாக அது கருதப்படவேண்டும். ''நாசரேத்தூர் திருக்குடும்பம் வாழ்ந்து காட்டிய அன்பு, நம்பிக்கையுடைமை என்பவற்றின் உடன்படிக்கை ஒவ்வொரு குடும்பத்திற்கும் உருக்கொடுக்கும் மூலக் கோட்பாட்டை சுடர்விடச் செய்கின்றது'' (எண் 66).

திருஅவை ஏடுகள் அன்பை குடும்பத்தின் மையமாக வைத்து, திருமணத்தை அன்பு மற்றும் அன்பின் குழுமம் என வரையறுக்கின்றது (எண் 67). இந்த அன்பு ஒருவர் மற்றவருக்குத் தன்னைக் கையளிப்பதிலும், அவர்கள் கிறிஸ்துவில் வேரூன்றியிருப்பதிலும் அடங்கியுள்ளது. மேலும் திருமண அன்பிற்கும் உயிரின் தோற்றத்திற்கும் இடையே உள்ளியல்புசார் இணைப்பு உள்ளது.

திருமணம் எனும் அருளடையாளம் மணத்துணைவர்கள் புனிதமடைவதற்காகவும் மீட்புப் பெறுவதற்காகவும் தரப்பட்டுள்ள அருட்கொடை. அது ஓர் அழைத்தல் (எண் 72). மணத்துணைவர்கள் எவரும் தம்முன் வரும் எந்தச் சவாலையும் தனியாக எதிர்கொள்வதில்லை. அர்ப்பணம், படைப்பாற்றல், நிலையுறுதி, அன்றாட முயற்சி என்பவற்றுடன் இருவருமே இறைவனின் அருட்கொடைக்குப் பதிலிறுப்பு செய்ய அழைக்கப்படுகின்றனர் (எண் 74).



கூடி வாழுகின்றவர்கள் அல்லது சமூக அரங்கில் மட்டுமே திருமணம் செய்துள்ளவர்கள், அல்லது மணவிலக்குப் பெற்று மறுதிருமணம் செய்துள்ளவர்கள் ஆகிய நம்பிக்கையாளர்கள்மீது நாம் அருள்பணிசார் அக்கறை கொண்டிருக்க வேண்டும். திருஅவையின் படிப்பினையைத் தெளிவாக எடுத்துரைக்கும் அதேவேளையில் தீர்ப்பிடுவதை அருள்மேய்ப்பர்கள் தவிர்க்க வேண்டும்.

கடவுளிடமிருந்து பிள்ளைவரம் பெறாத மணத்துணைவர்கள்கூட மனித, கிறிஸ்தவ எனும் இரு வகைகளிலும் நிறைவான பொருள் உள்ள இல்லற வாழ்வு நடத்த முடியும். இருப்பினும், இல்லறப் பாலுறவு ஒன்றிப்பு ''தன் இயல்பாகவே'' பிள்ளைப்பேற்றை நோக்கி ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. எனவே மனித உயிரின் பிறப்பை மணத்துணைவர்களின் திட்டங்களுக்கே விட்டுவிடக் கூடாது. எனவே பிறப்புக் கட்டுப்பாடு முறைகளின் பயன்பாடு, தாயின் உதரத்தில் வளரும் மாசற்ற குழந்தையின் உயிர்வாழும் உரிமை, கருணைக் கொலை, கொலைத் தண்டனை பற்றிய திருஅவையின் போதனைகளை நாம் எப்பொழுதும் மனதில் இருத்த வேண்டும் (எண் 83). கிறிஸ்தவப் புகுமுகப்படுத்தலில் தொடங்கி பிள்ளைகளுக்குக் கல்வியை வழங்குவது பெற்றோரின் மிக முக்கியக் கடமை.

**திருமணத்தில் அன்பு** என்பது நான்காம் அலகின் தலைப்பாக உள்ளது. திருமணம் மணத்துணைவர்களின் அன்பை முழுமைபெறச் செய்வதற்காகவே உள்ளது. இதை விளக்கும் விதமாக இந்த அலகு முழுவதும் பவுலின் அன்புக்கான பாடல் (1கொரி 13:4-7) எவ்வாறு குடும்பத்தின் நடைமுறைச் சூழலுக்குப் பொருந்துவதாய் உள்ளது என விளக்கப்பட்டுள்ளது.

அழகு என்பது உடல்சார்ந்த அல்லது மனம் சார்ந்த கவர்ச்சியிலிருந்து வேறுபட்டது... அது அடுத்த ஆளுடைய புனிதத்தைப் போற்றச் செய்கிறது (எண் 127). மணத்துணைவர்களுக்கு இது முற்றும் பொருந்தும். மண வாழ்க்கையில் ஒருவர் மற்றவரை மதிக்க வேண்டும். அப்பொழுதுதான் திருமணம் அன்புறவை மையப்படுத்தியதாய், நீடித்த ஒன்றாய் இருக்க முடியும். திருமண வாழ்க்கையில் மகிழ்வு இருக்க மூன்று வார்த்தைகள் – 'தயவு செய்து', 'நன்றி', 'வருந்துகின்றேன்' – முக்கியம். அவ்வாறே, ஆக்கப்பூர்வமான முறையில் மணத்துணைவர்கள் ஒருவர் மற்றவருடன் உரையாடும்போதும், உணர்ச்சிகளை வெளிப்படுத்தும்போதும் அது மணவாழ்க்கையை மகிழ்ச்சியுடையதாய் மாற்றும். தவிர, பாலுறவு ''உடலின் திருமணம்சார் அர்த்தத்தைக்'' காண வழிவகுக்கின்றது

(எண் 152); இருப்பினும், பாலுறவு நாட்டம் இல்லாதபொழுதும் ‘‘வாழ்வின் அனைத்தையும் பகிர்ந்துகொள்வதற்கென ஒரு ‘துணைவர்’ இருக்கின்றார் என்ற’’ உணர்வு அன்பை நீடித்த ஒன்றாக மாற்றுகிறது (எண் 163).

**நற்பயன் தரும் அன்பு** எனத் தலைப்பிடப்பட்டுள்ளது ஐந்தாம் அலகு. அன்பு எப்போதும் வாழ்வை வழங்குகின்றது. மணத்துணைவர்கள் ஒருவர் மற்றவருக்கு மட்டும் அன்பை வழங்குவதுடன் அவர்கள் நின்றுவிடுவது இல்லை. அவர்களின் பிள்ளைகள் அன்பின் உயிருள்ள பிரதிபலிப்புகளாக உள்ளார்கள். அவர்கள் கடவுளின் கொடை ஆவர். எனவே எந்தக் குழந்தையும் தான் புறக்கணிக்கப்படுகிறோம் என்ற உணர்வு ஏற்படாதவாறு அதைப் பேணிவளர்ப்பது நம் அனைவரின் கடமை ஆகும். ஒவ்வோர் உயிரும் கருவாகும்போது பெற்றோர்கள் இறைவனின் அன்புத் திட்டத்தில் பங்கெடுக்கிறார்கள். அந்தக் குழந்தை கருவாக இருக்கும்போதே அதன் எதிர்காலம் குறித்துப் பல கனவுகள் காண்கின்றனர். சில நேரங்களில் பிறக்கும் குழந்தை தங்களின் கனவுகளுக்கு ஏற்ப இல்லாமல் இருக்கும்போது, தளர்ச்சியின்றி அக்குழந்தையை ஏற்கும் மனப்பாங்கு பெற்றோர்களுக்கு வேண்டும். காரணம் எல்லாக் குழந்தைகளுமே மனமகிழ்ச்சி தரக் கூடியவர்கள். அதேவேளையில், பெற்றோர்களின் அன்பைப்பெற உரிமை உடையவர்கள். பிள்ளைகள் வளர்ப்பில் தந்தையைவிட தாயே சிறப்பான இடம் வகிக்கின்றார். காரணம் தாய்மைநிலை சில முக்கியமான பொறுப்புகளைக் கொண்டுள்ளது (எண்கள் 173-174). தந்தை பெரும்பாலும் கட்டுப்படுத்துபவராக, அடக்குபவராக, பிள்ளைகளின் தன்னுரிமைக்குத் தடைக்கல்லாகவே பார்க்கப்படுகின்றார். ஆனால் அவர்கள் பிள்ளைகளுடன் எல்லாச் சூழ்நிலையிலும் உடன் இருப்பவர்களாக இருக்க வேண்டும் (எண்கள் 176-177) மணத்துணைவர்கள் குழந்தைகளைப் பெற்றுக்கொள்ள இயலாநிலையில் மகவேற்பு செய்யும்போது அதாவது விரும்பப்படா குழந்தைகளை மகவேற்பு செய்யும்போது இறை அன்பின் வாய்க்காலாகவே மாறுகின்றனர்.

எந்த ஒரு குடும்பமும் தனித்து வாழ முடியாது; யாரையும் ஒதுக்கிவைப்பதும் பலன் தராது. மரியாவின் குடும்பம் ஏனைய குடும்பங்களுடன் உறவாடி மகிழ்ந்த ஒன்று. ஆகவே ஒவ்வொரு குடும்பமும் ஏழைகள்பால் அக்கறையும் அன்பும் கொண்டு வாழ்வதன்மூலம் இறையன்பை இச்சமூகத்தில் உடனிருக்கச் செய்கின்றன (எண்கள் 182-184). இவ்வாறு இறையன்பை



வெளிப்படுத்தாதச் சமூகங்களைத்தான் பவுல் தனது மடலில் (1கொரி 11:17-34) கண்டிக்கின்றார் (எண்கள் 185-186). இன்று பிற குடும்பங்களைத் தொல்லையாகக் காணும் மனப்பாங்கு அதிகமாக உள்ளது. இச்சூழலில் குடும்பங்கள் தங்களின் உறவை ஏனைய குடும்பங்களுக்கு விரிவுபடுத்தி அன்பைப் பகிர்வதன் மூலம் குடும்ப மகிழ்ச்சியைப் பெருக்க முடியும். குடும்பத்தில் பிள்ளைகள் தங்களின் பெற்றோரை மதிக்கவும், முதியோர்களைக் கவனிக்கவும் கடமைப்பட்டுள்ளார்கள். இவை தவிர, குடும்பம் என்ற உறவைத் தாண்டி அனைத்து நிலையில் வாழும் ஏனையோரை சகோதர, சகோதரிகளாக காண்பது இறையன்புக்குச் சான்றாக உள்ளது.

**சில அருட்பணிப் பார்வைகள்** எனும் ஆறாம் அலகு குடும்பத்திற்கு ஆற்ற வேண்டிய சில முக்கிய அருட்பணிச் சவால்களை முன்வைக்கின்றது. குடும்பங்கள் தற்போது சந்திக்கின்ற குழப்பமான பிரச்சினைகளுக்குப் பணியாற்றுவதற்கு ஏற்றவிதத்தில் திருநிலைத் திருப்பணியாளர்களுக்குப் பயிற்சி வழங்கப்பட வேண்டும். தவிர, குடும்பங்களுக்கான அருட்பணியில் உதவிட பொதுநிலைத் தலைவர்களையும் உருவாக்க வேண்டும் (எண்கள் 202-204).

திருமணத்தின் மாண்பையும் அழகையும் ஆழமாக உணரும் வண்ணம் திருமணத் தயாரிப்புப் பயிற்சிகளை வழங்க வேண்டும். அவ்வாறே திருமணத்தை ஏதோ ஒரு நாள் கொண்டாட்டமாக காணக்கூடாது. மாறாக, திருமண வழிபாட்டுக் கொண்டாட்டத்தை ஓர் ஆழமான ஆள்சார்ந்த அனுபவமாகக் கொண்டாட வேண்டும் (எண் 213). அப்பொழுதுதான் மணதுணைத்துணைவர்களுக்கிடையே ஏற்படும் உறவு ஒன்றிப்பு, அன்புப் பகிர்வு ஆகியவை நீடித்த ஒன்றாக இருக்கமுடியும். ஒருவர் மற்றவரை குறைபாடுகளுடன் ஏற்க வழிவகுக்கும். திருமணத்தின் தொடக்க ஆண்டுகளில் மணத்துணைவர்கள் நிறையச் சவால்களைச் சந்திக்கும்பொழுது அவர்களுக்கு அருட்பணிசார் உடன்பயணித்தல் மிகவும் தேவையான ஒன்று. அவர்கள் குடும்ப அருள்வாழ்விலும் நம்பிக்கையிலும் வளர்ச்சி பெற அருள்பணியாளர்கள் உதவ வேண்டும். வாழ்வை வரவேற்கும் மனப்பான்மையை அவர்கள் பெற உற்சாகப்படுத்த வேண்டும். இதற்குப் பங்குகள், இயக்கங்கள், கல்விக்கூடங்கள், திருஅவையின் பல்வேறு நிறுவனங்கள் உதவ முடியும்.

திருமண வாழ்வில் நெருக்கடிகள் வரும்போது சிலர் அமைதியாக ஒதுங்கி வாழ முயற்சிப்பர். ஆனால் உரையாடல் செய்து பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது என்பது அவசியம். இதற்கு அருட்பணியாளர்கள் உதவ வேண்டும். சிலவேளைகளில் குறிப்பாகக் கெடுவழக்கம், வன்முறை, இழிவுபடுத்தல், சுரண்டல், கவனிப்பின்மை, அக்கறையின்மை போன்றவற்றால் ஆழமாகப் புண்படுவதிலிருந்து வலுக்குறைந்த மணத்துணைவர் அல்லது சிறாரை இடம் மாற்றும் நிலை ஏற்படலாம் (எண் 241). ஆனால் அதுகூட இறுதி வழிமுறையே. இச்சூழலில் அருட்பணியாளர்கள் ஆற்றுப்படுத்தல் மூலமாக காயங்களைக் குணமாக்கும் முயற்சியில் ஈடுபடவேண்டும்.

திருமணங்களின் செல்லாநிலை வழக்குகளுடையச் செயல்முறையானது அதிக அணுகும்தன்மை உடையதாகவும் குறைந்த நேரம் எடுப்பதாகவும் முடிந்தால் கட்டணம் ஏதுமின்றியும் இருக்கவேண்டும் (எண் 244). மணத்துணைவர்கள் பிரிந்து செல்லும்பொழுது பிள்ளைகள் எவ்வகையிலும் பாதிக்கப்படாமல் இருக்குமாறு கவனித்துக்கொள்ள வேண்டும்.

சபைகள்சார் கலப்புத் திருமணங்களிலும் சமய வேறுபாட்டை உள்ளடக்கிய திருமணங்களிலும் காணப்படும் சிக்கல்களுக்குச் சூழ்நிலைக்கு ஏற்றவாறு கிறிஸ்தவ ஒன்றிப்புக்கு ஏதுவான விதத்திலும் பல்சமய உரையாடலுக்கு உகந்தவாறும் அருட்பணிகளை முன்னெடுக்க வேண்டும். ஒரே-பாலின ஈர்ப்பைக் கொண்ட உறுப்பினர்களுக்கு மதிப்புமிகு அருட்பணி வழங்கப்பட வேண்டும். இருப்பினும் தன் பாலினச்சேர்க்கை ஒன்றிப்புகள் திருமணம், குடும்பம் ஆகியவை பற்றிய இறைவனின் திட்டத்துக்கு ஒவ்வாதவை. பெற்றோருள் ஒருவரின் இறப்பு அல்லது குடும்பத்தை பெற்றோருள் ஒருவர் கைவிடுவது போன்ற சூழ்நிலைகளில் அங்கு அருட்பணியின் தேவை கூடுதலாக உள்ளது.

அலகு ஏழு **பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டை நோக்கி** என தலைப்பிடப்பட்டுள்ளது. பிள்ளைகளின் அறநெறி வாழ்வில் பெற்றோர்களின் தாக்கம் சிறப்பான இடம் வகிக்கிறது. குடும்பங்கள்தான் ஆதரவுதருகிற, வழிகாட்டுகிற நெறிப்படுத்துகிற இடங்களாகப் பிள்ளைகளுக்குத் திகழ்கின்றன (எண் 260). பிள்ளைகள் தீய பழக்கவழக்கங்களுக்கு ஆட்படாது விழிப்புடன் அவர்களைக் காப்பது பெற்றோரின் கடமையாகும் (எண் 260). பிள்ளைகளின் உள்ளம் எங்கே இருக்கின்றது என்பதைப் புரிந்து அவர்களை வளர்க்க



வேண்டும். கட்டுப்பாடுகளை விதிப்பதன்மூலம் அல்ல; மாறாக, பொறுப்புள்ளவகையில் தன்னுரிமை கொண்டவர்களாய் சுதந்திரத்துடன் அவர்களைப் பெற்றோர்கள் வளர்க்க வேண்டும் (எண்கள் 261-262). தன்னுரிமையுடன் வளர்ப்பது தன்விருப்பத்துடன் வளர்ப்பது என்பதிலிருந்து மாறுபட்டது என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும் (எண் 274). பிள்ளைகளிடம் நல்ல பழக்கவழக்கங்கள் வளர்த்தெடுக்கப்பட வேண்டும். அவர்கள் சில தீங்கு செய்யும்போது அன்புடன் திருத்த வேண்டும். அவர்களை எதிரிகளாகக் காணக்கூடாது. பிள்ளைகளின் முயற்சிகளை எப்பொழுதும் பாராட்ட வேண்டும். அதேவேளையில் பிள்ளைகளிடம் அளவுக்கதிகமாகவும் நாம் எதிர்பார்க்கக் கூடாது.

குடும்பம்தான் சமுதாயம் சார்ந்த செயல்பாடுகளுக்கான முதன்மைக் களமாகும். தொழில்நுட்ப வளர்ச்சியின் வேகத்தால் ஆதிக்கம் செய்யப்படுகின்ற நமது காலச்சூழலில் விமர்சனப் பார்வையோடு விழுமியச் சிதைவுகள் இன்றி பிள்ளைகள் வளர்க்கப்பட வேண்டும் (எண் 275). பிள்ளைகளுக்குப் பாலியல் கல்வி வழங்கப்பட வேண்டியதன் முக்கியத்துவத்தை இரண்டாம் வத்திக்கான் சங்கமே எடுத்துரைத்துள்ளது. குழந்தைகளுக்கும் இளைஞர்களுக்கும் உரிய காலக்கட்டத்தில், வயதிற்கு ஏற்றவகையில் அவர்கள் முழு முதிர்ச்சியை அடையும் வகையில் பாலியல் கல்வி வழங்கப்பட வேண்டும் (எண் 281). பாலியல் கல்வி தன்னடக்கம் குறித்த நலமான உணர்வை வளர்க்க வேண்டும். ஆனால் பல வேளைகளில் இது ''பாதுகாப்பான பாலியல் செயல்'' என்று தவறுதலாகப் புரியப்படுகின்றது. இதில் ''பாதுகாப்பு'' என்பதற்கு அழுத்தம் தரப்படுகின்றது. பாலியல் கல்வி இளையோர் தங்கள் உடலை ஏற்றுக்கொள்ளத் துணைபுரிய வேண்டும்; இது ஆண்-பெண் வேறுபாடுகளை மதிப்பதையும் பாராட்டுவதையும் கற்றுத் தருவதாய் இருக்க வேண்டும். மேலும், இல்லம் என்பது இறைநம்பிக்கையின் பொருளையும் அழகையும் பாராட்டவும், இறைவேண்டல் செய்திடவும், அடுத்தவர்களுக்குத் தொண்டாற்றிடவும் கற்றுக்கொடுக்கும் இடமாக அமைய வேண்டும் (எண் 289).

எட்டாம் அலகு **உடன்பயணித்தல், வலுவின்மையைத் தெளிந்து தேர்ந்து ஒருங்கிணைத்தல்** எனத் தலைப்பிடப்பட்டுள்ளது. திருமண உடன்படிக்கையில் ஏற்படும் எவ்வித முறிவும் இறைவனின் திருவுளத்திற்கு எதிரானது (எண் 219). இருப்பினும் வலுவின்மை காரணமாகவும் பொருளாதாரம்

உட்பட பல்வேறு தற்செயலான சூழ்நிலைகள் காரணமாகவும் அரசுசார் திருமண ஒப்பந்தம் கொண்டவர்களாகவோ, மணமுறிவு பெற்று மறுமணம் புரிந்தவர்களாகவோ, வெறுமனே கூடிவாழ்பவர்களாகவோ சிலர் உள்ளார்கள். இவ்வாறு மணவாழ்க்கையில் மணத்துணைவர்களில் சிலர் திருணத்தின் இலட்சியத்திற்கு முற்றிலும் மாறுபட்டு வாழ்கின்றார்கள்; சிலர் திருமணத்தின் ஒருசில கூறுகளை நிறைவு செய்கிறார்கள். நாம் இவர்களை ஒதுக்கி வைத்தல், பழைய நிலைக்குக் கொண்டு வருதல் என இரண்டு வழிகளில் அணுகலாம். ஆனால் திருஅவை ஒதுக்கிவிடும், கண்டனம் செய்யும் வழிமுறையைப் பின்பற்றாது, இரக்கத்தின் வழியைப் பின்பற்றி அவர்களை மீண்டும் திருமணத்தின் இலட்சியத்தைப் பின்பற்ற அழைப்பு விடுக்க வேண்டும் (எண் 296). இதில் திருஅவை கள மருத்துவமனை போன்று பணியாற்ற வேண்டும். இதன்மூலம் இறைவனின் இரக்கத்தை அவர்கள் அனுபவிக்க முடியும்.

மேலும் திருமண வாழ்விற்குப் புறம்பாக வாழ்பவர்களை ஒதுக்கிவிடாது கிறிஸ்தவ சமூக வாழ்வில் சமூகப் பணியாற்றவோ, பங்குப் பணியாளரின் தேர்ந்து தெளிந்த தீர்மானத்தோடு ஒத்துவருகின்ற பணிகளை ஆற்றவோ நாம் அவர்களை உற்சாகப்படுத்தலாம் (எண் 297). தவிர, இவர்களைக் கட்டுப்படுத்தும் திருவழிபாடு சார்ந்த அருள்பணி, கல்வி போன்வற்றில் இருந்து விலக்குதலை நாம் கவனமுடன் கையாள வேண்டும். இவர்கள் திருஅவையால் தாங்கள் ஏற்கப்படுவோம் என்ற உணர்வை எப்பொழுதும் பெறவேண்டும் (எண் 299). எனவே பொதுவான சட்ட விதிகளைப் பயன்படுத்தாது, ஒவ்வொரு சூழலையும் தனிச்சிறப்புமிக்க நிகழ்வாக கண்டு உய்த்துணர்ந்து முடிவெடுக்க வேண்டும் (எண் 300). அவர்கள் பாவத்தில் வாழ்கின்றனர்; புனிதப்படுத்தும் அருளை இழந்து விட்டார்கள் என ஒருபோதும் கருதக்கூடாது. மாறாக அருள்பணியாளர்கள் சூழலைக் கருத்தில் கொண்டு அருளின் வழியைக்காண தவறியவர்களை வழிநடத்த வேண்டும். அதேவேளையில் திருமணங்களைப் பலப்படுத்தவும் அருள்பணி இன்று அவசியம். காரணம், அவை அதிகமான மணமுறிவுகளைத் தடுக்கும். எனவே, இரக்கத்தின் இந்தச் சிறப்பு யூபிலி ஆண்டில் அருள்சார் பணிகள் அனைத்திலும் குறிப்பாக மணத்துணைவர்களை வழிநடத்துவதில் இரக்கமே மேலோங்கி இருக்கவேண்டும். ஒருபோதும் ஒரு சிலர் வழங்கும் உதவிகளுக்குப் பதிலிறுப்பாக ‘‘விதிவிலக்குள்’’ வழங்குவது தவறான ஒன்று.



இறுதி அலகில் திருமணம், குடும்பம் ஆகியவற்றின் அருள்வாழ்வு பற்றி திருத்தந்தை பேசுகின்றார். அருள்வாழ்வு என்பது குடும்ப உறவிலே மனுவுருவெடுக்கின்றது. அது மணத்துணைவர்களின் ஓர் இதயத்தின் செயல்பாடு ஆகும். இருவரும் ஒருவர் ஒருவருக்கு வார்த்தையால், பார்வையால், உதவிக்கரத்தால், அன்பாக தடவிக் கொடுத்தலால், தழுவுதலால் ஆறுதல் அளிக்கும் இறையன்பின் சாட்சிகளாய் திகழ முடியும் (எண் 321). ஒருவர் மற்றவரில் குறைகளைக் காணும்போது அதை அன்பு நிறைந்த அக்கறையோடு கையாள வேண்டும். அப்பொழுது அங்கு இக்கனிவு பிறக்கும். எந்தக் குடும்பமும் நிறைவாக வடிவமைக்கப்பட்டு விண்ணகத்திலிருந்து கீழே விழுவதல்ல; மாறாக குடும்பங்கள் அன்பு செய்யும் ஆற்றலில் தொடர்ந்து வளர்வதில்தான் அதன் அருள்வாழ்வு அடங்கியுள்ளது. இத்தகைய அருள்வாழ்வு வாழும்போது குடும்பங்கள் மூவொரு கடவுளின் உறவு ஒன்றிப்பை, கிறிஸ்துவுக்கும் திருஅவைக்கும் இடையே உள்ள உறவு ஒன்றிப்பை, நாசரேத்து திருக்குடும்பத்தின் உறவு ஒன்றிப்பை, விண்ணகத் தூயவர்களின் சகோதரத்துவ உறவைப் பிரதிபலிக்க முடியும்.

இறுதியாக,

இந்த ஊக்கவுரை இரக்கத்தின் யூபிலி ஆண்டில் வெளிவருவது பொருத்தம். இது கிறிஸ்தவக் குடும்பங்களுக்குக் குடும்பம், திருமணம் ஆகியவற்றின் கொடைகளை மதிக்கவும் பொறுமை, நம்பிக்கையுடைமை, அர்ப்பணம், தாராளத்தன்மை எனும் நற்பண்புகளால் உறுதிப்படுத்தப்பட்ட அன்பில் நிலைத்து நிற்கவும் அழைப்பு விடுக்கின்றது. அதே வேளையில், எங்கு குடும்ப வாழ்வு நிறைவற்றதாகவும் மகிழ்ச்சியிலும் அமைதியிலும் குறைபட்டதாகவும் உள்ளதோ அங்கு பரிவிரக்கம், உறவு நெருக்கம் ஆகியவற்றின் அடையாளமாக ஒவ்வொருவருக்கும் ஊக்கம் அளிக்க இவ்வூக்கவுரை தேவைப்படுகின்றது.

# நன்றி

திருத்தந்தையின் இந்த திருத்தூது ஊக்கவுரை தமிழாக்கம் பெற்று வெளிவரும் இவ்வேளையில் அதற்கு அணிந்துரை வழங்கியுள்ள **மதுரை மாமறைமாவட்டப் பேராயர் பா. அந்தோனி** அவர்களுக்கு எனது நன்றியை உரித்தாக்குகின்றேன். இந்த ஊக்கவுரை தமிழாக்கம் பெறத் தூண்டுதலாய் இருந்த **சிவகங்கை மறைமாவட்ட ஆயர் செ. சூசைமாணிக்கம்** அவர்களுக்கும் எனது நன்றி. இந்த ஊக்கவுரையை தமிழாக்கம் செய்த அருள்பணியாளர்களாகிய **சூ. சந்தியாகு ராசா, தே. அல்போன்சு, ஜோ. விக்டர், லா. டைனிசியஸ், லூ. ஜீவராஜ்** ஆகியோருக்கு எனது உளம் கனிந்த நன்றி. இந்த மொழியாக்கத்தை ஆங்கில உரையுடன் ஒப்பீடு செய்து திருத்தம் வழங்கிய அருள்பணியாளர்களாகிய **தே. அல்போன்சு, ச. ஆரோக்கியராஜ், வ. இரபேல், த. விக்டர்** ஆகியோருக்கு எனது மனமார்ந்த நன்றிகள். இறுதி இரண்டு அலகுகள் தவிர்த்து, இந்த மொழியாக்கம் முழுவதையும் மொழித்திருத்தம் செய்த **அருள்பணி. அமுதன்** அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றிகள். இறுதி இரண்டு அலகுகளை மொழித்திருத்தம் செய்தவர் **அருட்சகோதரி மாகி ம.ஊ.ச.** அவருக்கு என் நன்றி. இந்த திருத்தூது ஊக்கவுரை தமிழில் வெளிவர உற்சாகப்படுத்திய எமது **பவுல் இல்லக் குடும்ப உறுப்பினர்கள்** அனைவருக்கும் எனது நன்றியை சமர்பிக்கின்றேன். கையெழுத்துப் பிரதிகளை கணினிப்படுத்தித் தந்த எம் அலுவலகப் பணியாளர் **அ. ஜான்ஸி** அவருக்கு என் நன்றி. இந்நூலின் இறுதியில் உள்ள ஆங்கில அடிக்குறிப்புகளைக் கணினிப்படுத்திய எம் அலுவலகப் பணியாளர் **ஆனந்தி** அவர்களுக்கும் என் நன்றி. நூலை அழகுற அச்சிட்டுத் தந்தவர்கள் **சிவகாசி ஆண்டோ** அச்சகத்தார். அவர்களுக்கும் நன்றி.

புனித பவுல் குருத்துவக் கல்லூரி — அன்புடன்

திருச்சிராப்பள்ளி

25.07.2016 — சூ. சந்தியாகு ராசா




# அன்பின் மகிழ்ச்சி

**ஆயர்கள், அருள்பணியாளர்கள், திருத்தொண்டர்கள், துறவியர்,**

**கிறிஸ்தவ மணத்துணைவர்கள்,**

**பொதுநிலையினர் அனைவருக்கும்**

**குடும்ப அன்புபற்றி ஆயர் மாமன்றத்தைத் தொடர்ந்து**

**திருத்தந்தை பிரான்சிஸ் வழங்கும்**

**திருத்தூது ஊக்கவுரை**

1. குடும்பங்கள் அனுபவிக்கும் அன்பின் மகிழ்வு திருஅவையின் மகிழ்வாகவும் உள்ளது. ஆயர் மாமன்றத் தந்தையர் சுட்டிக்காட்டியுள்ளதுபோல, திருமணம் எனும் நிறுவனத்தில் நெருக்கடியின் அறிகுறிகள் பல இருப்பினும் "திருமணம் செய்து குடும்பத்தை உருவாக்குவதற்கான விருப்பம் சிறப்பாக இளைஞரிடம் உயிர்துடிப்புள்ளதாக உள்ளது; இது திருஅவைக்கு ஒரு தூண்டுதலாக உள்ளது."[1] இவ்விருப்பத்திற்குப் பதிலிறுப்பான "குடும்பம் பற்றிய கிறிஸ்தவ அறிவிப்பு உண்மையிலேயே ஒரு நற்செய்தியாக உள்ளது."[2]

2. மாமன்ற நடைமுறை இன்றைய உலகில் குடும்பத்தின் நிலை பற்றி ஆய்வதற்கும் அதன் வழியாகத் திருமணம், குடும்பம் என்பவை பற்றிய அதிகமான விரிவுபட்ட பார்வைக்கும் புதுப்பிக்கப்பட்ட விழிப்புணர்வுக்கும் வழிவகுத்தது. அதில் எழுந்த பல்வேறு சிக்கல்கள் மறைப்படிப்பினை, அறநெறி, ஆன்மீகம், அருட்பணி ஆகியன சார்ந்த பல கேள்விகள் பற்றிய திறந்த உள்ளம் கொண்ட ஒரு தொடர் உரையாடலின் தேவையை வெளிப்படுத்தின. திருஅவைக்கு உண்மையுடைமை, நேர்மை, மெய்ம்மைச் சார்பு, படைப்பாற்றல் என்பவற்றைக் கொண்டிருந்தால் அருள்மேய்ப்பர்கள், இறையியலாளர்கள் ஆகியோரின் சிந்தனை நாம் அதிக தெளிவைப் பெற உதவும். ஊடகங்களிலும் சில குறிப்பிட்ட வெளியீடுகளிலும் திருஅவைத் திருப்பணியாளர்கள் நடுவிலும்கூட முன்னெடுக்கப்படும் விவாதங்கள் போதிய சிந்தனையோ அடித்தளமோ இன்றி முழுமையான மாற்றத்தைக் கோரும் மட்டுமீறிய ஆர்வம்முதல் பொதுவான விதிமுறைகள் அல்லது சில குறிப்பிட்ட இறையியல் ஆய்வுகளிலிருந்து பெறப்பட்ட முடிவுகளைக் கொண்டு அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வுகாணும் மனப்பாங்குவரை வெளிப்படுத்துகின்றன.

3. ‘‘இடத்தைவிடக் காலம் பெரியதாக’’ இருப்பதால் மறைப்படிப்பினை, அறநெறி, அருள்பணி ஆகியன சார்ந்த விவாதங்கள் அனைத்தையும் திருஅவை ஆசிரியம் தலையிட்டுத் தீர்க்க வேண்டும் என்பது தேவையில்லை என்பதை நான் தெளிவுபடுத்துகிறேன். படிப்பினை, செயல்பாடு ஆகியவற்றில் ஒற்றுமை திருஅவையில் நிச்சயம் அவசியம். இருப்பினும் அப்படிப்பினையின் சில கூறுகளைப் பல்வேறு வகைகளில் விளக்குவதையோ அதன் சில பின்விளைவுகளைச் சுட்டிக்காட்டுவதையோ முன்கூட்டியே ஒதுக்கலாகாது. தூய ஆவியார் நம்மை முழு உண்மையை நோக்கி வழிநடத்துவதால் (காண் யோவா 16:13) அவர் கிறிஸ்துவின் மறையுண்மைக்குள் நம்மை முழுமையாக இட்டுச் சென்று, அவர் காண்பது போன்று அனைத்தையும் நாமும் காணச் செய்யும்வரை இவ்வாறே நாம் செயல்படுவது அவசியம். மேலும், ஒவ்வொரு நாடும், நிலப்பகுதியும் தத்தம் மரபுகளுக்கும் இடத்துத் தேவைகளுக்கும் ஏற்பத் தங்கள் பண்பாட்டிற்கு அதிகப் பொருத்தமானவையும் தங்கள் மரபுகளுக்கு இயைந்தவையுமான தீர்வுகளைத் தேடிக் கொள்ளலாம். ஏனெனில், ‘‘பண்பாடுகள் உண்மையிலேயே மிகவும் வேறுபட்டவை. ஒவ்வொரு பொதுவிதியும்... மதிக்கப்படவும், நடைமுறைப்படுத்தப்படவும் வேண்டுமென்றால், அது பண்பாட்டுமயமாக்கப்பட வேண்டும்.’’[3]



4. மாமன்ற வழிமுறை போற்றத்தக்கதாகவும் தெளிவூட்டுவதாகவும் இருந்ததை நான் சொல்லி ஆக வேண்டும். உலகம் முழுவதும் குடும்பங்கள் சந்திக்கும் பிரச்சினைகளை முழுமையாக நான் புரிந்துகொள்ளத் துணை செய்த பல்வேறு பங்களிப்புகளுக்கு நான் நன்றியுள்ளவனாக இருக்கிறேன். பன்முகத்தன்மை கொண்ட இரத்தினக்கல்போல் பல நியாயமான அக்கறைகளையும் நேர்மையான கேள்விகளையும் பிரதிபலிக்கும் மாமன்றத் தந்தையர்களின் பல்வேறு குறுக்கீடுகளுக்கும் நான் கவனமுடன் செவிகொடுத்தேன். இக்காரணத்திற்காகக் குடும்பம் பற்றி அண்மையில் நடைபெற்ற இரண்டு மாமன்றங்களின் பங்களிப்புகளைச் சேகரித்து, மாமன்றத்தைத் தொடர்ந்து ஒரு திருத்தூது ஊக்கவுரையைத் தயாரிப்பது பொருத்தம் என நான் எண்ணினேன். அது சிந்தனைக்கும் உரையாடலுக்கும் அருள்பணிச் செயல்பாட்டிற்கும் உதவும் ஏனைய கருத்துக்களை ஒன்றாகச் சேர்க்கவும் குடும்பங்களின் அன்றாட அர்ப்பணிப்புகளிலும் சவால்களிலும் உதவுவதாகவும் ஊக்கம் தருவதாகவும் திகழும்.

5. இவ்வூக்கவுரை குறிப்பாக இரக்கத்தின் இந்த யூபிலி ஆண்டிற்கு மிகவும் பொருத்தமான ஒன்று. ஏனெனில் முதலாவதாக, இது கிறிஸ்தவக் குடும்பங்களுக்குக் குடும்பம், திருமணம் ஆகியவற்றின் கொடைகளை மதிக்கவும் பொறுமை, நம்பிக்கையுடைமை, அர்ப்பணம், தாராளத்தன்மை என்னும் உறுதிப்படுத்தப்பட்ட அன்பின் நற்பண்புகளில் நிலைத்துநிற்கவும் அழைப்பு விடுப்பதாக உள்ளது. இரண்டாவதாக, எங்கெல்லாம் குடும்ப வாழ்வு நிறைவற்றதாகவும் மகிழ்ச்சியிலும் அமைதியிலும் குறைபட்டதாகவும் உள்ளதோ அங்கெல்லாம் பரிவிரக்கம், உறவுநெருக்கம் ஆகியவற்றின் அடையாளமாக ஒவ்வொருவருக்கும் ஊக்கம் அளிக்கத் தேடுகிறது.

6. இந்த ஊக்கவுரைக்குச் சரியான துவக்கத்தைத் தரும்வகையில் இதன் முதல் அலகை விவிலியப் பின்னணியில் நான் தொடங்குகிறேன். மெய்ம்மையை அடிப்படையாகக் கொண்டிருக்கும் வகையில் குடும்பங்களின் நடைமுறைச் சூழலை அதன்பின் ஆய்வு செய்கிறேன். குடும்பம், திருமணம் ஆகியன பற்றிய திருஅவையின் படிப்பினையில் உள்ள சில அடிப்படைக்

கூறுகளை நான் எடுத்துரைக்கிறேன். இது அன்பு பற்றிய அடுத்த இரு மையப் பிரிவுகளுக்கு வழிவகுக்கும். அதை அடுத்து, கடவுளின் திட்டப்படி நலமான, நற்பயன் அளிக்கும் இல்லங்களைக் கட்டியெழுப்ப வழிகாட்டும் சில அருட்பணி அணுகுமுறைகளை நான் முன்னிலைப்படுத்துகிறேன். குழந்தைகள் வளர்ப்புக்கு மட்டும் ஒரு பிரிவு முழுவதுமாக அர்ப்பணிக்கப்படுகிறது. இறுதியாக, பரிவிரக்கத்திற்கும் ஆண்டவர் நம்மிடம் கோரும் அளவிலிருந்து குறைபடும் சூழ்நிலைகள் பற்றிய அருள்பணிசார் தெளிந்து தேர்தலுக்கும் நான் அழைப்பு விடுப்பேன். மேலும், குடும்ப அருள்வாழ்வு பற்றிய ஒரு சிறிய கலந்துரையாடலுடன் நான் நிறைவு செய்கிறேன்.

7. ஈராண்டுக் கால மாமன்ற இயக்கப்போக்கில் வழங்கப்பட்ட வளமான கருத்துகளின் பின்னணியில் இந்த ஊக்கவுரை பல்வேறு வழிகளில் விரிவான பலவகைக் கேள்விகளையும் பற்றிச் சிந்திக்கும். இதனால் இந்த ஊக்கவுரை நீண்டதாக இருப்பது தவிர்க்க இயலாதது. இருப்பினும், இந்த உரையை விரைவாக வாசித்து முடிப்பதை நான் பரிந்துரைக்கவில்லை. ஒவ்வொரு பகுதியும் கவனமாகவும் பொறுமையாகவும் வாசிக்கப்பட்டால் அல்லது தங்களின் குறிப்பிட்ட தேவைகள் தொடர்பான பகுதிகள் மீது கவனம் செலுத்தப்பட்டால், அது குடும்பங்களுக்கும் குடும்ப அருட்பணியில் ஈடுபடுவோர்க்கும் மிகப்பெரும் நலன் தரும். எடுத்துக்காட்டாக, மணத்துணைவர்கள் நான்காம் ஐந்தாம் பிரிவுகளிலும் அருட்பணித் திருப்பணியாளர்கள் ஆறாம் பிரிவிலும் அதிகக் கவனம் செலுத்தலாம்; அதே வேளையில் எட்டாம் பிரிவு ஒவ்வொருவருக்கும் சவால் விடுப்பதை வாசிப்போர் உணரவேண்டும். இந்த உரையை வாசிப்பதால் குடும்ப வாழ்வை அன்பு செய்யவும் அதை வளர்த்தெடுக்கவும் அழைக்கப்பட்டுள்ளோம் என்பதை எல்லாரும் உணர்வர் என்பது என் எதிர்நோக்கு. ஏனெனில் ‘‘குடும்பங்கள் ஒரு பிரச்சினையே அல்ல; மாறாக, முதன்முதலாக அவை ஒரு வாய்ப்பு ஆகும்.’’[4]



# அலகு – 1

## இறைவார்த்தையின் ஒளியில்

8. குடும்பங்கள், பிறப்புகள், அன்புக் கதைகள், குடும்பச் சிக்கல்கள் ஆகியவற்றால் திருவிவிலியம் நிறைந்துள்ளது. அதன் முதல் பக்கத்திலேயே வன்முறையின் எல்லாச் சுமைகளோடும் அதே வேளையில் நீடித்திருக்கும் வலிமையோடும் ஆதாம், ஏவாள் ஆகியோரின் குடும்பம் தோற்றம் அளிப்பது தொடங்கி (காண் தொநூ 4), அதன் இறுதிப் பக்கத்தில் மணமகளுக்கும் ஆட்டுக்குட்டிக்குமான திருமண விழாவை நாம் காண்பதுவரை இந்த உண்மையைக் காண்கிறோம் (திவெ 21:2,9). ஒன்று பாறையின்மீதும் மற்றொன்று மணல்மீதும் கட்டப்பட்ட இரு வீடுகள் பற்றிய இயேசுவின் விளக்கவுரை (காண் மத் 7:24-27) குடும்ப உறுப்பினர்களுடைய தன்னுரிமைச் செயல்பாட்டால் உருவான பல்வேறு சூழ்நிலைகளை அடையாளப்படுத்துகின்றது. ஆம், கவிஞர் ஒருவர் கூறுவதுபோல் ‘‘ஒவ்வொரு குடும்பமும் ஒரு விளக்குத்தண்டு’’[5] ஆகும். திருப்பாடல் ஆசிரியரால் வழிநடத்தப்பட்டு யூத கிறிஸ்தவத் திருமணத் திருவழிபாடுகளில் இன்றும் எதிரொலிக்கும் பாடலுடன் அத்தகைய வீடு ஒன்றில் இப்பொழுது நாம் நுழைவோம்.

> ‘‘ஆண்டவருக்கு அஞ்சி அவர் வழிகளில் நடப்போர் பேறுபெற்றோர்!
>
> உமது உழைப்பின் பயனை நீர் உண்பீர்!
>
> நீர் நற்பேறும் நலமும் பெறுவீர்!
>
> உம் இல்லத்தில் உம் துணைவி கனிதரும் திராட்சைக் கொடி போல் இருப்பார்;
>
> உண்ணும் இடத்தில் உம் பிள்ளைகள் ஒலிவக் கன்றுகளைப்போல் உம்மைச் சூழ்ந்திருப்பர்.
>
> ஆண்டவருக்கு அஞ்சி நடக்கும் ஆடவர் இத்தகைய ஆசி பெற்றவராய் இருப்பார்.

ஆண்டவர் சீயோனிலிருந்து உமக்கு ஆசி வழங்குவாராக!

உம் வாழ்நாளெல்லாம் நீர் எருசலேமின் நல்வாழ்வைக் காணும்படி செய்வாராக!

நீர் உம் பிள்ளைகளின் பிள்ளைகளைக் காண்பீராக''!

இஸ்ரயேலுக்கு நலம் உண்டாவதாக!'' (திபா 128:1-6).

## நீயும் உன் மனைவியும்

9. விருந்துண்ணச் சுற்றி அமர்ந்திருக்கும் அமைதியான இக்குடும்பத்தின் வாயிலைக் கடந்து உட்செல்வோம். அதன் மையத்தில் தங்களுக்கே உரிய தனிப்பட்ட காதல் கதையுடன் மணத்துணைவர்களாகிய தந்தையும் தாயும் இருப்பதை நாம் காண்கின்றோம். கிறிஸ்து தெளிவாகக் கூறியுள்ளதுபோல அவர்கள் தொடக்கத்திலிருந்தே வரும் இறைத் திட்டத்திற்கு உடலுரு கொடுக்கின்றார்கள்: ''படைப்பின் தொடக்கத்திலேயே கடவுள் 'ஆணும் பெண்ணுமாக அவர்களைப் படைத்தார்' என்று நீங்கள் மறைநூலில் வாசித்ததில்லையா?'' (மத்: 19:4). இதில் தொடக்க நூலில் காணப்படும் கட்டளையின் ஓர் எதிரொலியை நாம் கேட்கிறோம்: ''இதனால் கணவன் தன் தாய் தந்தையை விட்டுவிட்டுத் தன் மனைவியுடன் ஒன்றித்திருப்பான்; இருவரும் ஒரே உடலாய் இருப்பர்'' (தொநூ 2:24).

10. தொடக்க நூலின் தனிப்பெருஞ் சிறப்புடைய தொடக்க அலகுகள் மானிட மணத்துணைவர்கள் பற்றிய ஆழமான மெய்ம்மையை வெளிப்படுத்துகின்றன. திருவிவிலியத்தின் முதல் பக்கங்கள் மிகத் தெளிவான பல கூற்றுகளை எடுத்தியம்புகின்றன. ''கடவுள் தம் உருவில் மானிடரைப் படைத்தார்; கடவுளின் உருவிலேயே அவர்களைப் படைத்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைப் படைத்தார்'' (தொநூ 1:27) என்னும் முதல் கூற்றிற்கு இயேசு பொருளுரை வழங்கியுள்ளார். இங்கு ''கடவுளின் உரு'' என்பது மணத்துணைவர்களாகிய ''ஆணையும் பெண்ணையும்'' குறிப்பது கருத்தைக் கவரக் கூடியதாய் உள்ளது. பாலியல்பு கடவுளுக்கே உரிய இயல்புக்கூறு என்றோ, அல்லது சில தொடக்க காலச் சமயங்கள் தந்துள்ளது போன்று, ஒரு பெண்தெய்வத்தைக் கடவுள் துணையாகக் கொண்டிருந்தார் என்றோ பொருள்படுகிறதா? இல்லை என்பதுதான் இயல்பான பதில். புனித



பூமியில் வாழ்ந்த கனானியர்கள் இடையே காணப்பட்ட இத்தகைய நம்பிக்கைகளை சிலை வழிபாடு என்று திருவிவிலியம் எவ்வளவு தெளிவாக மறுக்கின்றது என்பதை நாம் அறிவோம். இங்கு கடவுளின் கடப்புநிலை பாதுகாக்கப்படுகிறது; இருப்பினும், அவரே படைத்தவராகவும் இருப்பதால், மானிட மணத்துணைவர்களின் மகப்பேறுடைமை, அவரது படைப்புச் செயலின் உயிருள்ள ஆற்றல்மிகு ''உரு''வாகவும் அதன் காணக்கூடிய அடையாளமாகவும் உள்ளது.

11. அன்பு செய்து, வாழ்வை ஈன்றெடுக்கும் மணத்துணைவர்கள் பத்துக் கட்டளையால் தடைசெய்யப்பட்ட கல்லாலோ, பொன்னாலோ ஆன ஒரு பொய்த் தெய்வச் சிலை அல்ல; மாறாக, படைத்தவரும் மீட்பருமாகிய கடவுளை வெளிப்படுத்தும் உண்மையான உயிருள்ள உருவ ஓவியம் ஆவர். இக்காரணத்திற்காக, மகப்பேறளிக்கிற அன்பு என்பது கடவுளுடைய அக வாழ்வின் ஓர் அடையாளமாக மாறுகின்றது (காண் தொநூ 1:28; 9:7; 17:2-5,16; 28:3; 35:11; 48:3-4). எனவேதான் தொடக்கநூலின் அறிக்கை, ''குருத்துவ மரபை''ப் பின்பற்றி, பல்வேறு குடும்பத் தலைமுறைப் பட்டியல்களுடன் இணைத்துப் பின்னப்பட்டுள்ளது (காண் 4:17-22,25-26; 5; 10; 11:10-32; 25:1-4,12-17,19-26; 36). உயிரை ஈன்றெடுக்கும் மானுட மணத்துணைவர்க்கு இந்த ஆற்றல்தான் மீட்பின் வரலாறு முன்னேறிச் செல்லும் பாதையாகவும் உள்ளது. இந்நோக்கில் காணும்போது, மணத்துணைவர்களின் மகப்பேறளிக்கும் உறவு கடவுளின் மறைபொருளையே புரிந்துகொள்ளவும் விளக்கவும் பொருத்தமான உருவமாகிறது; ஏனெனில் மூவொரு கடவுள் பற்றிய கிறிஸ்தவப் புரிதல், கடவுள் தந்தை, மகன், அன்பின் தூய ஆவி என்றே ஆழமாக அருள்சிந்தனை செய்கிறார். மூவொரு கடவுள் ஓர் உறவு ஒன்றிப்பு ஆவார். அதன் வாழும் பிரதிபலிப்பே குடும்பம் ஆகும். புனித இரண்டாம் ஜான் பால் இது பற்றி விளக்கமளிக்கும்போது இவ்வாறு கூறினார்: ''நம் கடவுள் தமது ஆழமிக்க மறைபொருளில் தனிமையில் அல்ல; தனித்த ஒரு குடும்பமாகவே உள்ளார். ஏனெனில், அவர் தமக்குள்ளேயே தந்தைமை, மகன்தன்மை, குடும்பத்தின் உள்ளியல்பாகிய அன்பு ஆகியவற்றைக் கொண்டுள்ளார். இறைக் குடும்பத்தில் அந்த அன்பாகத் தூய ஆவி உள்ளார்.''[6] இவ்வாறு, குடும்பம் என்பது கடவுளின் உள்ளியல்புடன் தொடர்பற்றது அன்று. இந்த மூவொருமைப் பரிமாணம் புனித பவுலின் இறையியலில்

கூறப்படுவதைக் காண்கிறோம்; அவர் மணத்துணைவர்களைக் கிறிஸ்துவுக்கும் திருஅவைக்கும் இடையே உள்ள ஒன்றிப்பின் ''மறைபொருளுடன்'' தொடர்புபடுத்துகிறார்.

12. இயேசு திருமணத்தைப் பற்றிப் பேசும்போது தொடக்க நூலில் உள்ள இன்னொரு பகுதியையும் நமக்குச் சுட்டிக்காட்டுகின்றார்; அந்நூலின் இரண்டாம் அலகில் மணத்துணைவர்களின் மிக எழிலான துவக்கமான உருவப்படத்தை வரைகிறார். முதலில், மனிதன் தன்னைச் சுற்றியுள்ள உலகிலும் விலங்குகள் நடுவிலும் தான் உணரும் தனிமையைப் போக்கக்கூடிய ''தனக்குத் தகுந்த துணையை'' (தொநூ 2:18,20) ஆர்வத்துடன் தேடுவதை நாம் பார்க்கிறோம். முகத்திற்கு முகம், கண்ணுக்குக் கண் – என அமைதியான ஓர் உரையாடலில் நிகழும் ஒரு நேரடிச் சந்திப்பை எபிரேய மூலநூல் குறிப்பிடுகிறது, ஏனெனில், எங்கு அன்பு உள்ளதோ, அங்கு வார்த்தைகளைவிட அமைதி எப்பொழுதும் அதிகச் சொல்திறன்மிக்கது. இது முகமுகமாய் ஒரு ''நீ''வை சந்திப்பது. அந்த ''நீ'' கடவுளின் அன்பையே பிரதிபலிக்கிறார். விவிலிய ஞானியின் வார்த்தைகளில், மனிதன் ஓர் ''உயர்ந்த உடைமையைப் பெறுகிறான்; தனக்கு ஏற்ற துணையையும் ஆதரவு தரும் தூணையும் அடைகிறான்'' (சீஞா 36:24). அல்லது மீண்டும் சாலமோனின் இனிமைமிகு பாடலின் நாயகி மிக நேர்த்தியாக அன்பையும் ஒருவர் ஒருவருக்கான தற்கையளிப்பையும் அறிக்கையிட்டுப் பாடுவதுபோல் அமைகிறது: ''என் காதலர் எனக்குரியர்; நானும் அவருக்குரியள்;... நான் என் காதலர்க்குரியள்; என் காதலர் எனக்குரியர்'' (இபா 2:16; 6:3).

13. மனிதரின் தனிமையைப் போக்கும் இச் சந்திப்பு புதிய பிறப்புக்கும் குடும்பத்திற்கும் காரணமாகிறது. குறிப்பிடத்தக்க வகையில், எல்லாக் காலத்துக்கும் இடத்துக்கும் உரிய மனிதராகிய ஆதாம் தம் மனைவியுடன் சேர்ந்து ஒரு புதிய குடும்பத்தைத் தொடங்குகிறார். தொடக்கநூலில் உள்ள பகுதியை மேற்கோள்காட்டி, இயேசு இதைப் பற்றிக் கூறுகிறார்: ''கணவன் தன் மனைவியுடன் ஒன்றித்திருப்பான். இருவரும் ஒரே உடலாய் இருப்பர்'' (மத் 19:5; காண் தொநூ 2:24). ''ஒன்றித்திரு'' அல்லது ''பற்றிக்கொண்டிரு'' என்ற சொல் எபிரேய மூலமொழியில் உடலும் உள்ளமும் நெருக்கமாய் இருப்பதுபோன்ற மிக ஆழ்ந்த ஓர் இணக்கத்தை எடுத்துரைக்கிறது. இதனால்தான் இச்சொல் கடவுளுடன் உள்ள நமது ஒன்றிப்பை விளக்கக் கூடியதாய் உள்ளது: ''நான்



உம்மை உறுதியாகப் பற்றிக் கொண்டேன்'' (திபா 63:8). இவ்வாறு, திருமண ஒன்றிப்பு என்பது அதன் பாலியல், உடல்சார்ந்த பரிமாணங்களுடன் மட்டுமல்ல; அது தன்னையே மனமார்ந்த முறையில் வழங்கும் அன்புடனும் குறித்துக் காட்டப்படுகிறது. இவ்வாறு அவர்கள் உடல் அளவிலும் உள்ளம், வாழ்க்கை ஆகியவற்றின் ஒன்றிப்பிலும் ''ஓருடலாக மாறுகின்றனர்.'' மேலும் அவ்வொன்றிப்பு பெற்றோரின் ''ஊனில்'' இனமரபுவழியில் மட்டுமின்றி ஆன்மீக முறையிலும் பங்கேற்கும் அவர்களது குழந்தையிலும் வெளிப்படுகிறது.

## உங்கள் பிள்ளைகள் ஒலிவ மரக் கன்றுகளைப் போன்றவர்கள்

14. திருப்பாடல் ஆசிரியரின் பாடலை மீண்டும் ஒரு முறை கருத்தில் கொள்வோம். இல்லத்தில் உண்ணும் இடத்தில் கணவனும் மனைவியும் அமர்ந்திருக்க, குழந்தைகள் ''ஒலிவக் கன்றுகளைப்போல்'' (திபா 128:3) உயிர்த் துடிப்பும் ஆற்றலும் நிறைந்தவர்களாய் அவர்கள் அருகில் இருப்பர். ஒருவகையில் இல்லத்தின் அடித்தளங்கள் பெற்றோர்கள் என்றால், குழந்தைகள் அக்குடும்பத்தின் ''உயிருள்ள கற்கள்'' போன்றவர்கள் (காண் 1 பேதுரு 2:5). குறிப்பிடத்தக்க வகையில், பழைய ஏற்பாட்டில் கடவுளின் பெயருக்குப் பின் (*யாவே*, ''ஆண்டவர்'') மிக அடிக்கடித் தோன்றும் சொல் ''குழந்தை'' (''மகன்'') என்பது ஆகும்; இவ்வார்த்தையும் ''கட்டியெழுப்பு'' என்ற வினைச்சொல்லுடன் தொடர்புடையது. இதனால்தான், பிள்ளைகள் என்னும் கொடையைப் பற்றித் திருப்பாடல் 128 பேசும்போது, அது வீட்டைக் கட்டுதல், நகரங்களின் சமூக வாழ்வு போன்றவற்றில் இருந்து எடுக்கப்பட்ட உருவகங்களையே பயன்படுத்துகின்றது: ''ஆண்டவரே வீட்டைக் கட்டவில்லையெனில், அதைக் கட்டுவோரின் உழைப்பு வீணாகும்... பிள்ளைகள், ஆண்டவர் அருளும் செல்வம்; மக்கட்பேறு, அவர் அளிக்கும் பரிசில். இளமையில் ஒருவருக்குப் பிறக்கும் மைந்தர் வீரரின் கையிலுள்ள அம்புகளுக்கு ஒப்பானவர். அவற்றால் தம் அம்பறாத் தூணியை நிரப்பிய வீரர் நற்பேறு பெற்றோர்; நீதிமன்றத்தில் எதிரிகளோடு வழக்காடும்போது அவர் இகழ்ச்சியடைய மாட்டார்'' (திபா 127:1,3–5). இத்தகைய உருவகங்கள் பண்டைக்காலச் சமூகத்தின் பண்பாட்டைப் பிரதிபலிக்கின்றன; இருப்பினும், பிள்ளைகளின் உடனிருப்பு என்பது மீட்பின் வரலாறு முழுவதும்

தலைமுறை தலைமுறையாகக் குடும்பத்தினுடைய தொடர்ச்சியின் அடையாளமாக உள்ளது.

15. இங்குக் குடும்பத்தின் மற்றொரு பண்புக்கூறையும் நாம் காண முடியும். ''வீட்டில் ஒன்றுகூடும் திருஅவைகள்'' பற்றிப் புதிய ஏற்பாடு பேசுவதை நாம் அறிவோம் (காண் 1 கொரி 16:19; உரோ 16:5; கொலோ 4:15; பில 2). ஒரு குடும்பத்தின் வாழும் இடம் ஓர் இல்லத் திருஅவையாகவும் உணவு மேசையில் அமர்ந்திருக்கும் இயேசுவின் உடனிருப்பைக் கொண்டாடும் நற்கருணைக்கு ஏற்ற சூழமைவாகவும் மாறமுடியும். திருவெளிப்பாட்டு நூலில் காணப்படும் இந்த உருவத்தை நாம் ஒருபோதும் மறக்க முடியாது. அதில் ஆண்டவர் கூறுகிறார்: ''இதோ, நான் கதவு அருகில் நின்று தட்டிக்கொண்டிருக்கிறேன். யாராவது எனது குரலைக் கேட்டுக் கதவைத் திறந்தால், நான் உள்ளே சென்று அவர்களோடு உணவு அருந்துவேன்; அவர்களும் என்னோடு உணவு அருந்துவார்கள்'' (திவெ 3:20). இங்குக் கடவுளின் உடனிருப்பாலும் குழும மன்றாட்டாலும் அனைத்து ஆசியாலும் ஒரு வீடு நிரப்பப்பட்டுள்ளதை நாம் காண்கிறோம். நாம் மேலே மேற்கோளாகக் காட்டிய திருப்பாடல் 128-இன் முடிவுரையின் பொருள் இதுதான்: ''ஆண்டவருக்கு அஞ்சி நடக்கும் ஆடவர் இத்தகைய ஆசி பெற்றவராய் இருப்பார். ஆண்டவர் சீயோனிலிருந்து உமக்கு ஆசி வழங்குவாராக!'' (திபா 128:4-5).

16. மேலும், பிள்ளைகள் நம்பிக்கையில் வளர்க்கப்படும் ஓர் இடமாகவும் குடும்பத்தைத் திருவிவிலியம் முன்னிறுத்துகின்றது. இது பாஸ்கா கொண்டாட்டத்தின் விளக்கவுரையில் தெளிவாக உள்ளது (காண் விப 12:26-27; இச 6:20-25); மேலும், இது பிற்காலத்தில் யூதப் பாஸ்கா விழா கொண்டாடப்படும் முறைபற்றிய நூலில் பாஸ்கா உணவு பற்றிய சடங்குடன் இணைந்து வரும் உரையாடலில் இன்னும் வெளிப்படையாகக் காணப்படுகிறது. திருப்பாடல் ஒன்று குடும்பங்களில் அறிக்கையிடப்படும் நம்பிக்கையைக் கொண்டாடுகின்றது: ''நாங்கள் கேட்டவை, நாங்கள் அறிந்தவை, எம் மூதாதையர் எமக்கு விரித்துரைத்தவை இவற்றை உரைப்போம். அவர்களின் பிள்ளைகளுக்கு நாங்கள் அவற்றை மறைக்க மாட்டோம்; வரவிருக்கும் தலைமுறைக்கு ஆண்டவரின் புகழ்மிகு, வலிமைமிகு செயல்களையும் அவர் ஆற்றிய வியத்தகு செயல்களையும் எடுத்துரைப்போம். யாக்கோபுக்கென அவர் நியமங்களை வகுத்தார்; இஸ்ரயேலுக்கென திருச்சட்டத்தை ஏற்படுத்தினார்;



இதனையே தம் பிள்ளைகளுக்கும் கற்பிக்குமாறு நம் மூதாதையர்க்கு அவர் கட்டளையிட்டார். வரவிருக்கும் தலைமுறையினர் இவற்றை அறிந்திடவும் இனி பிறக்கவிருக்கும் பிள்ளைகள் - இவர்கள் தம் புதல்வர்களுக்கு ஆர்வத்துடன் கற்றுக்கொடுக்கவும் செய்தார்'' (திபா 78:3-6). இவ்வாறு, பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கு நம்பிக்கையின் முதல் ஆசிரியர்களாகத் திகழும் ஓர் இடமாகக் குடும்பம் உள்ளது. அவர்கள் இந்த ''மரபைக்'' கற்று, ஒரு நபர் அடுத்த நபருக்கு அதை வழங்குகின்றார்கள்: ''... பிற்காலத்தில் உன் மகன் உன்னிடம் கேட்டால், நீ அவனுக்குச் சொல்வாய்...'' (விப 13:14). இவ்வாறு பின்வரும் தலைமுறைகள் ஆண்டவரை ஏத்திப் பாடுவர்: ''இளைஞரே, கன்னியரே, முதியோரே மற்றும் சிறியோரே, நீங்கள் எல்லாரும் ஆண்டவரைப் போற்றுங்கள்'' (திபா 148:12).

17. விவிலிய ஞானிகள் அடிக்கடி நமக்கு நினைவூட்டுவதுபோல், பெற்றோர்கள் கல்விசார்ந்த இப்பணிக்கு மிக முக்கியப் பொறுப்பு உடையவர்கள் (காண் நீமொ 3:11-12; 6:20-22; 13:1; 22:15; 23:13-14; 29:17). தங்கள் பங்கிற்கு, பிள்ளைகளும் கட்டளையை ஏற்றுக் கடைப்பிடிக்க அழைக்கப்படுகின்றார்கள்: ''உன் தந்தையையும் உன் தாயையும் மதித்து நட'' (விப 20:12). இங்கு ''மதித்து நட'' என்னும் வினைச்சொல் குடும்ப, சமூக ஈடுபாடுகளை நிறைவேற்றுவதைச் சுட்டிக்காட்டுகிறது; போலியான சமய நோக்கங்களுக்காக அவற்றை ஒதுக்கிவிட முடியாது (காண் மாற் 7:11-13). ''தந்தையரை மதிப்போர் பாவங்களுக்குக் கழுவாய் தேடிக்கொள்கின்றனர். அன்னையரை மேன்மைப்படுத்துவோர் செல்வம் திரட்டி வைப்போருக்கு ஒப்பாவர்'' (சீஞா 3:3-4).

18. பிள்ளைகள் ஒரு குடும்பத்தின் உடைமை அல்ல என்பதை நற்செய்தி நமக்குத் தொடர்ந்து நினைவுபடுத்தியுள்ளது; அவர்கள் தங்கள் சொந்த வாழ்வை நடத்த உரிமையுடையவர்கள். இயேசு தம் மண்ணகப் பெற்றோரின் பொறுப்பில் தம்மையே வைத்து அவர்களுக்குக் கீழ்ப்படிவதில் மாதிரியாக விளங்குகிறார் (காண் லூக் 2:51); இருப்பினும், பிள்ளைகளின் வாழ்க்கைசார் முடிவுகளும் அவர்களின் கிறிஸ்தவ அழைப்பும் இறையாட்சிக்காக அவர்கள் பெற்றோரை விட்டுப் பிரிந்திடுமாறு கோரலாம் என்பதையும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார் (காண் மத் 10:34-37; லூக் 9:59-62). இயேசு தமது மண்ணகக் குடும்பத்திற்கு அப்பாற்பட்டுத் தாம் நிறைவேற்ற வேண்டிய அதைவிடப் பெரிய பணி ஒன்று உண்டு என அவரே தம் பன்னிரண்டாம் வயதில் யோசேப்பிடமும் மரியாவிடமும்

சொல்கின்றார் (காண் லூக் 2:48-50). இவ்வாறு, குடும்பத்திற்குள்ளேயே பிற ஆழமான பிணைப்புகளும் அவசியம் என அவர் சுட்டிக் காட்டுகிறார்: "இறைவார்த்தையைக் கேட்டு அதன்படி செயல்படுகிறவர்களே என் தாயும் என் சகோதரர்களும் ஆவார்கள்" (லூக் 8:21). பண்டைய அண்மைக் கிழக்கு நாடுகளின் சமூகங்களில் பிள்ளைகள் தனிப்பட்ட உரிமைகள் இன்றி, பொருள்களாகவும் குடும்பத்தின் உடைமையாகவும்கூடக் கருதப்பட்டனர். இருந்தபோதிலும், இயேசு அவர்களுக்குக் காட்டும் அக்கறையில், அவர் அவர்களின் எளிய நம்பிக்கையுறுதி, அடுத்தவர்களிடம் இயல்பாக நடந்துகொள்ளும் பாங்கு என்பவற்றில் அவர்களை ஆசிரியர்களாகக் கருதும் அளவுக்கே செல்கின்றார். "நீங்கள் மனந்திரும்பிச் சிறு பிள்ளைகளைப்போல் ஆகாவிட்டால் விண்ணரசில் புகமாட்டீர்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். இந்தச் சிறு பிள்ளையைப்போலத் தம்மைத் தாழ்த்திக் கொள்பவரே விண்ணரசில் மிகப் பெரியவர்" (மத் 18:3-4).

### துன்பம், இரத்தம் இவற்றின் பாதை

19. திருப்பாடல் 128-இல் வழங்கப்பட்டுள்ள இலட்சியக் காட்சி திருவிவிலியம் முழுவதும் காணப்படும் கசப்பான மெய்மையில் இருந்து முற்றும் மாறுபட்டது. துன்பமும் தீமையும் குடும்பங்களையும் அவற்றின் வாழ்வு, அன்பு என்பவற்றாலான உறவு ஒன்றிப்பையும் பிரிக்கும் வன்முறையும் குடும்பங்களில் இருப்பதுதான் அக்கசப்பான உண்மை. இக்காரணத்திற்காகத்தான் திருமணம் பற்றிய கிறிஸ்துவின் படிப்பினை (காண் மத் 19:3-9) மணமுறிவு பற்றிய விவாதத்திற்குள் புகுத்தப்பட்டுள்ளது. ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே உள்ள அன்பும் தூய்மையுமான உறவு பாவத்தால் அதிகமாக மாறுகின்ற துயரமான பரிமாணம் தொடக்கத்திலிருந்தே இருந்து வந்துள்ளது என்பதற்கு இறைவார்த்தை தொடர்ந்து சான்று பகர்கின்றது. "உன் கணவன் மேல் நீ வேட்கை கொள்வாய், அவனோ உன்னை ஆள்வான்" (தொநூ 3:16).

20. காயீன் தன் சகோதரன் ஆபேலைக் கொன்றதுமுதல் துன்பம், இரத்தப் பழி என்பவை நூலிழைபோல் விவிலியத்தின் பக்கங்கள் முழுவதும் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, முதுபெரும் தந்தையராகிய ஆபிரகாம், ஈசாக், யாக்கோபு ஆகியோரின் மகன்கள், மனைவிகள் இடையே எழுந்த



பூசல்கள், தாவீதின் குடும்பத்தை அடையாளப்படுத்தும் வன்முறை மற்றும் அவல நிகழ்ச்சிகள், தோபித்தின் கதையில் வெளிப்படும் குடும்பப் பிரச்சினைகள், யோபுவின் கசப்புணர்வுமிகு முறையீடு போன்றவற்றை நாம் அதில் வாசிக்கின்றோம்: "என் உடன்பிறந்தவரை என்னிடமிருந்து அகற்றினார்; ... என் உற்றார் என்னை ஒதுக்கினர்; என் நண்பர்கள் என்னை மறந்தனர்... என் மனைவிக்கு என் மூச்சு வீச்சம் ஆயிற்று; என் தாயின் பிள்ளைகளுக்கு நாற்றம் ஆனேன்" (யோபு 19:13-14,17).

21. இயேசுகூட ஓர் எளிய குடும்பத்தில்தான் பிறந்தார்; அவர் விரைவில் அந்நிய மண்ணிற்குத் தப்பி ஓட வேண்டியிருந்தது. பேதுருவின் மாமியார் காய்ச்சலில் இருந்தபோது, இயேசு அவரது வீட்டிற்குச் செல்கின்றார் (காண் மாற் 1:30-31); லாசர், யாயிர் ஆகியோரின் இல்லங்களில் நிகழ்ந்த இறப்புகள் பற்றிக் கேள்விப்பட்டபோது, பரிவிரக்கம் காட்டுகிறார் (காண் மாற் 5:22-24,35-43; யோவா 11:1-44). இறந்த தன் மகனுக்காக நயீன் ஊர்க் கைம்பெண் நம்பிக்கையற்ற நிலையில் புலம்பி அழுததற்குச் செவிசாய்த்தார். (காண் லூக் 7:11-15); நாட்டுப்புறத்திலுள்ள ஒரு சிறு நகரத்தில் வலிப்பு நோய்க்கு ஆளான சிறுவனுடைய தந்தையின் கோரிக்கைக்குச் செவிமடுக்கின்றார் (காண் மாற் 9:17-27). சக்கேயு, மத்தேயு போன்ற வரிதண்டுவோரின் வீடுகளுக்குச் செல்கின்றார் (காண் மத் 9:9-13; லூக் 19:1-10); பரிசேயராகிய சீமோனின் வீட்டில் இருந்த பெண் போன்ற பாவிகளிடம் பேசுகிறார் (காண் லூக் 7:36-50). சாதனைகள் புரிய வீட்டை விட்டு வெளியேறும் பிள்ளைகள் (காண் லூக் 15:11-32), தொல்லை தருவோர் (மத் 21:28-31) அல்லது வன்முறைக்கு இரையாவோர் (மாற் 12:1-9) என்போரால் குடும்பங்கள் அனுபவிக்கும் மன அழுத்தங்கள், கவலைகள் போன்றவை இயேசுவுக்குத் தெரியும்; அவர் அவற்றை தம் உவமைகளில் பின்னுகின்றார். மேலும் திருமண விருந்தில் திராட்சை மதுவின் பற்றாக்குறை காரணமாக ஏற்பட்ட இகழ்வுறல் (யோவா 2:1-10), விருந்தினர்கள் விருந்திற்கு வரத் தவறியது (மத் 22:1-10), நாணயம் தொலைந்தது பற்றிய ஏழைக் குடும்பத்தின் கவலை (லூக் 15:8-10) போன்றவை பற்றிக் கூருணர்வு உள்ளவராக இருக்கிறார்.

22. இந்தச் சுருக்கமான மறுஆய்வில் கடவுளின் வார்த்தை என்பது அருவமான கருத்தாக்கங்களால் ஆன ஒரு தொடர் அல்ல என்பதை நாம் காணமுடியும்; மாறாக, அது இடர்களும் இன்னல்களும் அனுபவிக்கும்

ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஆறுதலும், தோழமையும் தரும் ஊற்று ஆகும். ஏனெனில், ''அவர்களுடைய கண்ணீர் அனைத்தையும் அவர் (கடவுள்) துடைத்து விடுவார். இனிமேல் சாவு இராது, துயரம் இராது, அழுகை இராது, துன்பம் இராது'' (திவெ 21:4) என்னும் அவர்களின் பயணத்தின் இலக்கை அது அவர்களுக்குக் காட்டுகிறது.

## உம் கைகளின் வேலைப்பாடு

23. திருப்பாடல் 128-இன் தொடக்கத்தில் தந்தை ஓர் உழைப்பாளியாகத் தோன்றுகின்றார்; அவர் தமது உடல் உழைப்பின் மூலம் தமது குடும்பத்தின் உடல் நலனையும் அமைதியையும் காக்கின்றார்: ''உமது உழைப்பின் பயனை நீர் உண்பீர்! நீர் நற்பேறும் நலமும் பெறுவீர்!'' (திபா 128:2). உழைப்பு என்பது மானுட மாண்பின் இன்றியமையாப் பகுதி என்பது விவிலியத்தின் முதல் பக்கங்களில் இருந்தே தெளிவாக உள்ளது: ''ஏதோன் தோட்டத்தைப் பண்படுத்தவும் பாதுகாக்கவும் ஆண்டவராகிய கடவுள் மனிதனை அங்குக் கொண்டுவந்து குடியிருக்கச் செய்தார்'' (தொநூ 2:15). இங்கு மனிதர் தம் சொந்தத் திறமைகளையும் கொடைகளையும் வளர்த்துக்கொள்வதோடு நிலத்தைப் பண்படுத்துபவராகவும் இயற்கையின் ஆற்றல்களைப் பயன்படுத்துபவராகவும் ''வருந்தி உழைத்து உணவை'' (திபா 127:2) உற்பத்தி செய்யும் ஓர் உழைப்பாளியாகவும் காட்டப்படுகிறார்.

24. மேலும், உழைப்பு சமூகத்தின் வளர்ச்சியை உறுதி செய்து, ஒருவரின் குடும்பத்திற்குரிய வாழ்வாதாரம், உறுதி, பயனுடைமை போன்றவற்றை வழங்குகின்றது: ''உம் வாழ்நாளெல்லாம் நீர் எருசலேமின் நல்வாழ்வைக் காணும்படி செய்வாராக! நீர் உம் பிள்ளைகளின் பிள்ளைகளைக் காண்பீராக!'' (திபா 128:5-6) . மேலும், நீதிமொழிகள் நூல் குடும்பங்களில் தாய்மார்களின் உழைப்பைச் சுட்டுகிறது; தங்கள் கணவர்கள், பிள்ளைகள் ஆகியோரின் பாராட்டைப் பெறும் அவர்களின் அன்றாட வேலை விரிவாக விளக்கப்பட்டுள்ளது (காண் 31:10-31). தமது சொந்த உடல் உழைப்பால் உழைத்து, தமது சொந்த வாழ்வாதாரத்தை உறுதி செய்த திருத்தூதர் பவுல் பிறருக்குச் சுமையாக தாம் வாழாதது பற்றிப் பெருமைப்பட்டார் (காண் திப 18:3; 1கொரி 4:12; 9:12). உழைப்பின் தேவை பற்றிப் பவுல் ஆழமான உறுதிப்பாடு கொண்டிருந்ததால்தான் ''உழைக்க மனமில்லாத எவரும் உண்ணலாகாது''



(2தெச 3:10; காண் 1தெச 4:11) என அவர் தம் கிறிஸ்தவ சமூகங்களுக்குக் கடுமையான சட்டத்தை அளித்தார்.

25. மேற்கூறப்பட்டவற்றிற்குப் பின்பு, ரூத்து நூலில் காணப்படுவதுபோன்ற, வேலையின்மை, வேலையில் நிலையுறுதியின்மை என்பவற்றால் ஏற்படும் துன்பம், நகர்ச் சதுக்கத்தில் வேலையின்றிச் சோம்பிநிற்கும் நிலைக்குத் தள்ளப்பட்ட தொழிலாளர்கள் பற்றி இயேசு கூறிய உவமை, வறுமையாலும் பசியாலும் தவித்த மக்களை நேரடியாகச் சந்தித்த அவரது அனுபவம் என்பவற்றை நாம் நன்கு புரிந்துகொள்ளமுடியும். வருந்தத்தக்கது என்னவெனில், இன்றும் பல நாடுகளில் இத்தகைய மெய்ம்மைகள் காணப்படுகின்றன; அங்கு வேலைவாய்ப்புக் குறைவு குடும்ப வாழ்வின் அமைதியைப் பறித்து விடுகின்றது.

26. மனிதர்கள் தன்னலத்துடனும் மிகக் கடுமையாகவும் இயற்கையைப் பாழ்படுத்துவதுபோன்ற பாவத்தால் ஏற்படும் சமூகச் சிதைவை நாம் கண்டுகொள்ளாமல் இருக்கமுடியாது; இது பூமி தரிசு நிலமாக மாறவும் (காண் தொநூ 3:17-19), அநீதிக்கு எதிராக எலிசா தொடங்கி (காண் 1அர 21) இறைவாக்கினர்களால் கண்டிக்கப்பட்டு, இயேசுவின் சொந்த வார்த்தைகளில் நிறைவுபெறும் (காண் லூக் 12:13; 16:1-31) சமூக, பொருளாதாரச் சமநிலையற்றதன்மைக்கும் வழிவகுக்கிறது.

## தழுவலின் மென்மைப்பண்பு

27. அன்பின் கட்டளையையும் பிறருக்காகத் தம்மையே வழங்குவதையும் தம் சீடர்களின் தனிப்பட்ட அடையாளமாகக் கிறிஸ்து முன்வைத்தார் (காண் மத் 22:39; யோவா 13:34). தந்தையரும் தாய்மார்களும் தங்களது சொந்த வாழ்வுகளில் வெளிப்படுத்துகின்ற ஒரு மூலக் கோட்பாட்டை எடுத்துரைக்கும்போது அவர் அதைச் செய்தார். ''தம் நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதைவிடச் சிறந்த அன்பு யாரிடமும் இல்லை'' (யோவா 15:13). மேலும், பரிவிரக்கம், மன்னிப்பு எனும் கனிகளையும் அன்பு விளைவிக்கிறது. விபசாரத்தில் பிடிப்பட்ட பெண்பற்றிய காட்சியில் சிறப்பான விதத்தில் நாம் இதைக் காண்கிறோம்; கோவில் முற்றத்தில் அவரைக் குற்றம் சுமத்தியவர்களால் அந்தப் பெண் சூழப்பட்டிருக்கிறார்; ஆனால் பின்பு, இயேசுவுடன் மட்டும்

இருந்தபோது அவர் தீர்ப்பை அல்ல; மாறாக, உயர்வுமிகு ஒழுக்க வாழ்வு நடத்தத் தேவையான அறிவுரையைப் பெற்றார் (காண் யோவா 8:1-11).

28. திருமணம், குடும்பம் ஆகியவற்றின் கிறிஸ்தவ அனுபவத்திற்கு மிகவும் மையமாக உள்ள அன்பின் பின்னணியில் இன்னொரு நற்பண்பு உயர்ந்தோங்கி நிற்கிறது. அதுவே மென்மைப் பண்பு. வெறித்தனம் கொண்ட, மேலோட்டமான உறவுகள் உள்ள நமது உலகில் பெரும்பாலும் அது கவனிக்கப்படுவதில்லை. திருப்பாடல் 131-இல் இதைப் பற்றிய நெஞ்சைத் தொடும் வார்த்தைகளை நாம் கவனிப்போம். ஏனைய விவிலியப் பகுதிகளில் உள்ளது போன்று (எ.கா., விப 4:22; எசா 49:15; திபா 27:10), ஆண்டவருக்கும் அவரின் நம்பிக்கையாளர்களுக்கும் இடையே உள்ள ஒன்றிப்பு பெற்றோருக்குரிய அன்பின் வகையில் வெளிப்படுத்தப்படுகிறது. இங்குத் தாய்க்கும் குழந்தைக்கும் இடையே உள்ள மென்மையான, இனிமையான உறவு நெருக்கத்தை நாம் காண்கிறோம்: பால் குடித்த பிறகு ஒரு குழந்தை தன் தாயின் கைகளில் தூங்கும் உருவம் இதைச் சித்தரிக்கிறது. *கமுல்* என்ற எபிரேய வார்த்தை சுட்டிக்காட்டுவதுபோல், பசி ஆறிய குழந்தை தன் தாயைப் பற்றிக்கொண்டுள்ளது; தாய் அதனைத் தம் மார்போடு அணைக்கிறார். இங்கு நிலவும் உறவுநெருக்கம் உடல்சார்ந்தது மட்டுமல்ல, உணர்வு சார்ந்ததும் ஆகும். இந்த உருவத்தைத் தீட்டிய திருப்பாடல் ஆசிரியர் இவ்வாறு பாடுகின்றார்: ''என் நெஞ்சம் நிறைவும் அமைதியும் கொண்டுள்ளது; தாய்மடி தவழும் குழந்தையென என் நெஞ்சம் என்னகத்தே அமைதியாயுள்ளது'' (திபா 131:2). மேலும், கடவுள் கூறுவதாக இறைவாக்கினர் ஓசேயா தரும் உள்ளத்தைத் தொடக்கூடிய வார்த்தைகளை நாம் சிந்திக்கலாம்: ''இஸ்ரயேல் குழந்தையாய் இருந்தபோது அவன் மேல் அன்பு கூர்ந்தேன்... அவர்களைக் கையிலேந்தியதும் நானே, ... பரிவு என்னும் கட்டுகளால் அவர்களைப் பிணைத்து, அன்புக் கயிறுகளால் கட்டி நடத்தி வந்தேன்; அவர்கள் கழுத்தின்மேல் இருந்த நுகத்தை அகற்றினேன்; அவர்கள் பக்கம் சாய்ந்து உணவு ஊட்டினேன்'' (ஓசே 11:1, 3-4).

29. அன்பும் நம்பிக்கையும் அருளும் மெய்ப்பற்றும் நிறைந்த கூரிய பார்வையுடன் நாம் மானுடக் குடும்பங்களுக்கிடையேயும் மூவொரு கடவுளுக்கிடையேயும் உள்ள உறவை ஆழமாகச் சிந்தித்துள்ளோம். நம் குடும்பம் ஆணிடமும் பெண்ணிடமும் அவர்களின் பிள்ளைகளிடமும்



ஒப்படைக்கப்பட்டுள்ளது எனக் கடவுளின் வார்த்தை நமக்குச் சொல்கிறது; இவ்வாறு அவர்கள் தந்தை, மகன், தூய ஆவி ஆகியோரின் ஒற்றுமையின் உருவில், ஆட்களின் ஒரு கூட்டுறவாக மாறுவார்கள். பிள்ளைகளைப் பெற்றெடுத்தலும் வளர்த்தலும் கடவுளின் படைப்புச் செயலைப் பிரதிபலிக்கின்றன. குடும்பம் அன்றாட இறைவேண்டலில் ஒன்று சேரவும் கடவுளின் வார்த்தையை வாசிக்கவும் நற்கருணை விருந்தில் பங்கேற்கவும் அழைக்கப்படுகின்றது; இவ்வாறு அன்பில் வளரவும் அதன் மூலம் தூய ஆவி உறையும் கோவிலாக அது மாறவும் முடியும்.

30. ஒவ்வொரு குடும்பமும் நாசரேத்தூர்ப் புனித குடும்பத்தின் உருவ ஓவியத்தைப் பார்க்க வேண்டும். அதன் அன்றாட வாழ்வில் அதற்குரிய சுமைகள், கவலைகள், ஏரோதின் தணிக்க இயலாத வன்முறையைச் சந்தித்தபோது ஏற்பட்டதுபோன்ற திகிற்கவலைகள் என்பனவும் இருந்தன. இந்த இறுதி அனுபவம் நமது காலத்தில்கூட ஒதுக்கப்பட்டவர்களாகவும் உதவியற்றவர்களாகவும் உள்ள புலம் பெயர்ந்த பல குடும்பங்களைத் தொடர்ந்து துயரத்துக்கு உள்ளாக்குகிறது. ஞானிகளைப் போன்று குழந்தையையும் (இயேசு) அதன் தாயையும் பற்றிக் கூர்ந்து அருட்சிந்தனை செய்யவும் அவரைப் பணிந்து வணங்கவும் ஆராதிக்கவும் நம் குடும்பங்களும் அழைக்கப்பட்டுள்ளன (காண் மத் 2:11). மரியாவைப் போன்று அவர்களும், நல்ல தருணங்களிலும் தீய தருணங்களிலும், கடவுள் செய்துள்ள அரும்பெரும் காரியங்களைத் தங்கள் உள்ளத்தில் வைத்து (காண் லூக் 2:19,51), தங்கள் குடும்பத்தின் சவால்களை வீரத்துடனும், நிலையமைதியுடனும் எதிர்கொள்ள அழைக்கப்படுகின்றார்கள். மேலும், மரியாவின் உள்ளக் கருவூலம் அவர் நெஞ்சார நேசிக்கும் குடும்பங்கள் ஒவ்வொன்றின் அனுபவங்களையும் கொண்டுள்ளது. இக் காரணத்திற்காக, இத்தகைய அனுபவங்களின் பொருளைப் புரிந்துகொள்ளவும் கடவுள் வெளிப்படுத்த விரும்பும் செய்திக்கு நமது குடும்ப வாழ்வின் வழியாகச் செவிமடுக்கவும் மரியா நமக்கு உதவ முடியும்.

# அலகு - 2

# குடும்பங்களின் அனுபவங்களும் சவால்களும்

31. திருஅவை, உலகு ஆகியவற்றின் எதிர்காலத்திற்குக் குடும்பத்தின் நலம் இன்றியமையாதது. குடும்பம், திருமணம் ஆகியவற்றின் இன்றைய சிக்கல்கள், சவால்கள்பற்றி எண்ணிலடங்கா ஆய்வுகள் செய்யப்பட்டுள்ளன. உறுதியான மெய்ம்மைகள்மேல் நாம் அதிகக் கவனம் செலுத்துவோம்; காரணம், ''வரலாற்றின் நிகழ்வுகளில் ஆவியின் அழைப்பும் கோரிக்கைகளும் எதிரொலிக்கின்றன.'' இதன் மூலம் ''குடும்பம், திருமணம் ஆகியவற்றின் குறையா நிறைவளமுடைய மறைபொருளின் மிக ஆழமான புரிதலுக்குத் திருஅவையும் வழிநடத்தப்படலாம்.''[8] இன்றைய குடும்பத்தைப்பற்றிச் சொல்லப்படக் கூடியவை அனைத்தையும் இங்கு வழங்குவதற்கு நான் முயற்சி எடுக்கவில்லை. இருப்பினும், உலகம் முழுவதும் உள்ள குடும்பங்களின் சூழ்நிலையை மாமன்றத் தந்தையர் ஆய்வு செய்ததால், என்னுடைய சொந்த அனுபவத்தில் இருந்து பெறப்பட்ட சிலவற்றுடன், அவர்களின் அருள்பணிசார்ந்த ஆழமான கருத்துகள் சிலவற்றையும் கூறுவது பொருத்தம் என நான் கருதுகிறேன்.

## குடும்பத்தின் இன்றைய மெய்ம்மை

32. ''கிறிஸ்துவின் படிப்பினைகளுக்கு உண்மையுள்ளவர்களாய் இருந்து குடும்பத்தின் எல்லாச் சிக்கல்களிலும், அதன் ஒளிமயமான பகுதிகள், இருண்ட பகுதிகள் ஆகிய இரண்டோடும் இன்றைய குடும்பத்தின் மெய்ம்மையை நாம் காண்கிறோம்... நமது காலத்தில் பண்பாடு, மானுடவியல் ஆகியன சார்ந்த மாற்றங்கள் வாழ்வின் எல்லா நிலைகளிலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன; அவை பகுத்தாய்கின்ற, பல்வகைப்படுத்துகின்ற ஓர் அணுகுமுறைக்கு அழைப்பு விடுக்கின்றன.''[9] பல பத்தாண்டுகளுக்கு முன் ஸ்பெயின் நாட்டு ஆயர்கள் ''பணிகளையும் பொறுப்புகளையும், கடமைகளையும் நேர்மையான முறையில் பகிர்ந்தளிப்பதன் மூலமாக'' குடும்பங்கள் அதிகச் சுதந்திரத்தை அனுபவிக்க ஆரம்பித்துள்ளன எனக் குறிப்பிட்டனர்; உண்மையாகவே,



''மணத்துணைவர்களுக்கிடையே ஆள்சார்ந்த முறையில் நிகழும் உறவுப் பரிமாற்றத்திற்குக் கொடுக்கப்படும் அதிக அழுத்தம் குடும்ப வாழ்வை மனிதப் பண்புநயமுள்ளதாக மாற்ற மிகவும் உதவுகிறது''; அதே வேளையிலே, ''இன்றைய சமூகமோ அல்லது எந்தச் சமூகத்தை நோக்கி நாம் முன்னேறுகின்றோமோ அதுவோ திறனாய்வுக்கு உட்படாமல் அழியாது தொடர்ந்து நிலவுகின்ற பழைய மாதிரிகளையோ வடிவங்களையோ அனுமதிப்பதில்லை.''[10] மேலும், ''மானுடவியல்-பண்பாட்டு மாற்றங்களின் முதன்மையான மனப்பாங்குகள், தனி மனித வாழ்விலும் குடும்ப வாழ்விலும் கடந்த காலத்தைவிடச் சமூக அமைப்புகளில் இருந்து மிக மிகக் குறைவான ஆதரவைப் பெறுவதற்கே''[11] இட்டுச் செல்கின்றன என்பது தெளிவு.

33. இன்னொரு புறம், ''குடும்ப இணைப்புகளை வலுக்குறையச் செய்யும் குடும்ப நபர்கள் ஒவ்வொருவரையும் தனிமைப்படுத்தப்பட்ட ஒருவராகக் கருதுவதற்கு இட்டுச் செல்லும் மட்டுமீறிய தன்னலத்தால் வெளிப்படுத்தப்படும் வளரும் தீமைக்குச் சமமான முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டிய தேவை உள்ளது; இது ஒருவரின் (அவனின் அல்லது அவளின்) ஆளுமை அவர் முழுமுதன்மையானவை எனக் கருதும் அவருடைய விருப்பங்களால் உருவாக்கப்படுகின்றது என்னும் சிந்தனைக்குச் சில வேளைகளில் இட்டுச் செல்லும்.''[12] ''மிகையான தனியாள் மையப் பண்பாட்டால் உருவாக்கப்படும் இறுக்கங்கள், இன்பங்கள், உடைமைகள் ஆகியவற்றுக்கு ஆளாகும் குடும்பங்கள் சகிப்புத்தன்மையற்ற நிலைக்கும் பகையுணர்விற்கும் இட்டுச்செல்லப்படுகின்றன.''[13] மேலும், இன்றைய வாழ்வின் வேகமான ஓட்டம், நெருக்கடி, சமூக அமைப்பு, உழைப்பு ஆகியவற்றை நான் இங்குச் சேர்த்துக்கொள்ள விரும்புகின்றேன். காரணம், இவை எல்லாம் நிலையான முடிவுகளுக்கு எதிரான ஆற்றல் பெற்ற பண்பாட்டுக் கூறுகள் ஆகும். இதனால் நாம் பரந்துபட்ட நிலையற்ற தன்மையையும், தெளிவற்ற தன்மையையும் சந்திக்கின்றோம். எடுத்துக்காட்டாக, வெறுமனே ஒத்துப்போவதற்கு எதிராக, உண்மைத்தன்மையைத் தேடும் ஆள் முதன்மைக் கொள்கைக்கு நாம் சரியான மதிப்பு அளிக்கிறோம். இது தன்னியல்பாகவே செயல்படும் தன்மைக்கும் மக்களின் திறமைகளைச் சிறந்த முறையில் பயன்படுத்துவதற்கும் உதவ முடியும்; ஆனால், தவறான வழியில் செலுத்தப்பட்டால் இது தொடர் சந்தேகம், அர்ப்பணம்பற்றிய அச்சம், தன்னையே மையப்படுத்தல், ஆணவம் எனும்

மனப்பாங்குகளை வளர்த்துவிடக் கூடும். மாறாக, தேர்ந்தெடுக்கும் சுதந்திரம் நமது வாழ்க்கையைத் திட்டமிடுவதற்கும் நம்மையே அதிகமாக உருவாக்குவதற்கும் உகந்ததாகிறது. இருப்பினும், இச்சுதந்திரம் மிக உயர்வான இலக்குகள் அல்லது தனி ஆள் கட்டுப்பாடு போன்றவற்றில் குறைவுற்றிருந்தால், அது ஒருவரைத் தம்மையே பிறருக்குத் தாராளமாகத் தருவதற்கு இயலாததாகச் சீர்குலைக்கின்றது. உண்மையில், பல நாடுகளில் எங்கெல்லாம் திருமணங்களின் எண்ணிக்கை குறைகின்றதோ, அங்கெல்லாம் அதிகமதிகமான மக்கள் தனியாக வாழ்வதைத் தேர்வு செய்கின்றார்கள், அல்லது கூடி வாழாது வெறுமனே இணைந்து நேரத்தைக் கழிக்கின்றார்கள். மேலும், நீதிக்கான பாராட்டுதலுக்குரிய அக்கறையையும் நாம் சுட்டிக்காட்டலாம்; ஆனால், தவறாகப் புரிந்துகொள்ளப்பட்டால், இது பணிகளைப் பெறுவதில் மட்டுமே ஆர்வம்காட்டும் வாடிக்கையாளர்களாக குடிமக்கள் மாறிட வழிவகுக்கும்.

34. குடும்பம் பற்றிய நமது புரிதலை இத்தகைய கூறுகள் பாதிக்கின்றபோது, அது இடைநிறுத்த நிலையமாகக் குடும்பம் பார்க்கப்பட வழிவகுக்கலாம்; இவ்வாறு குடும்பம் கருதப்படும்போது அது வசதிக்கு உதவுவதாகவும் காற்றுப்போல மாறுகின்ற தனி ஆளின் விருப்பங்களுக்கும் சூழ்நிலைகளுக்கும் உறவுகள் விடப்பட்டு உரிமைகள் கோரப்படும் இடமாகவும் மாறிவிடலாம். இறுதியாக, இக்காலத்தில் வழிகாட்டுதல் வழங்க உண்மைகளோ, மதிப்பீடுகளோ, ஒழுங்குமுறைகளோ இல்லாதது போலவும், எல்லாமே செய்யக்கூடியது, அனுமதிக்கப்பட்டது என்று எண்ணி, ஒவ்வொரு தனிஆளும் தம் விருப்பப்படி செயல்படலாம் என்ற கருத்துடன் உண்மையான சுதந்திரத்தைக் குழப்புவது எளிதாகிவிடுகிறது. ஒருவரொருவருக்கு மட்டுமே உரித்தானதும் நிலையுறுதித்தன்மை உடையதுமான அர்ப்பணத்தால் அடையாளமிடப்படும் திருமண இலட்சியம் வசதியற்றதாகவோ சலிப்பூட்டுவதாகவோ ஆகிவிடும்போது அது தூக்கி எறியப்படுகிறது. ஒருவர் தம் தனிப்பட்ட இலக்குகளை அடைவதற்கு இடையூறாகவும் ஒரே உறவில் மாட்டிக்கொள்வதுபற்றிய அச்சம் என்பது, தனிமைபற்றிய அச்சம், நிலையுறுதித்தன்மை, நம்பிக்கையுடைமை என்பவற்றிற்கான விருப்பம் என்பவற்றுடன் அருகருகாகவே காணப்படுகின்றது.

35. தற்கால உணர்வுப் போக்குகளை எதிர்த்து நிற்பதை வெறுமனே தவிர்ப்பதற்காகவோ, காலப் போக்குகளுக்கு ஏற்பச் செயல்படும் விருப்பத்தினாலோ, மானுடம், அறநெறி ஆகியன சார்ந்த வீழ்ச்சிகள் பற்றி எதுவும் செய்ய இயலாத நிலையினாலோ கிறிஸ்தவர்கள் என்ற வகையில் நாம் திருமணத்தை வெளிப்படையாக ஆதரிப்பதை இக்காலத்தில் நிறுத்த முடியாது. அது நாம் உலகிற்கு வழங்கவேண்டிய விழுமியங்களை அதற்குக் கிடைக்காமல் செய்துவிடும். இன்றைய நாளின் தீமைகளை, வெறுமனே இகழ்ந்துரைப்பதால் மட்டும் அவை மாறிவிடும் என எண்ணிச் செயல்படுவதில் எந்த அர்த்தமும் இல்லை என்பது உண்மையே. அதிகாரத்தினால் மட்டுமே நாம் விதிமுறைகளைத் திணிப்பதால் பயன் இல்லை. நமக்குத் தேவையானது குடும்பத்தையும் திருமணத்தையும் தேர்வு செய்வதற்கான காரணங்கள், குறிக்கோள்கள் ஆகியவற்றை எடுத்துரைப்பதில் அதிகப் பொறுப்புணர்வும் தாராளத்தன்மையும் கொண்ட முயற்சிகளே. இதன் மூலம், ஆண்களுக்கும் பெண்களுக்கும் கடவுள் வழங்கும் அருளுக்கு அவர்கள் சிறப்பான முறையில் பதிலிறுக்க நாம் உதவ முடியும்.

36. மேலும், நம் கிறிஸ்தவ நம்பிக்கைகளை சில நேரங்களில் நாம் முன்வைக்கும் முறையும் ஏனைய மக்களை நடத்தும் பாணியும் இன்றைய சிக்கலான சூழல் உருவாகக் காரணமாக இருந்துள்ளன என்பதை ஏற்றுக்கொள்ளும் வகையிலான தாழ்ச்சியும் மெய்ம்மை நோக்கும் நமக்கு அவசியம். தன் விமர்சனம் என்னும் நலமான மருந்து நமக்குத் தேவை. அது தவிர, திருமணத்தை நாம் எடுத்துக்காட்டும் முறையில் ஒன்றிணைதல் என்னும் அதன் பொருள், அன்பிலும் அதன் குறிக்கோளாகிய ஒருவர் ஒருவருக்கு உதவுவதிலும் வளர அது தரும் அழைப்பு இருட்டடிப்பு செய்யப்படும் வகையில் அதன் இனப்பெருக்கக் கடமை ஒருதலைச் சார்பாக அழுத்தியுரைக்கப்படுகிறது. திருமணமான இளம் மணத்துணைவர்களுக்கு அவர்களின் காலஅட்டவணை, அவர்களின் சிந்தனைப்போக்கு, அவர்களின் நடைமுறைசார் அக்கறைகள் என்பவற்றைப் புரிந்துகொண்டு உறுதியான வழிகாட்டுதலை நாம் எப்பொழுதும் வழங்கியதில்லை. சில வேளைகளில் உண்மைக் குடும்பங்களின் மெய்ம்மைச் சூழ்நிலைகளுடனும் நடைமுறைச் செயல் வாய்ப்புகளுடனும் சிறிதும் தொடர்பற்ற மிக அருவமானதும் பெரிதும் செயற்கையானதுமான திருமண இறையியல் இலட்சியத்தை நாம் முன்மொழிந்திருக்கின்றோம். குறிப்பாக, கடவுளின் அருளில் நம்பிக்கை வைக்க எப்பொழுது நாம் தூண்டத் தவறுகின்றோமோ அப்பொழுது அந்த மிகையான இலட்சியப்படுத்தல்

திருமணத்தை அதிக விரும்பத்தக்கதாகவோ, ஈர்ப்புடையதாகவோ ஆக்குவதற்கு உதவுவதில்லை; மாறாக அதற்கு முற்றிலும் எதிர்மறையாகவே அது செயல்பட்டுள்ளது.

37. இறை அருளைத் திறந்த மனத்தோடு ஏற்றுக்கொள்வதை உடையவராய் இருப்பதை ஊக்கப்படுத்தாமல், வெறுமனே மறைப் படிப்பினை, உயிரி அறவியல், அறநெறி என்பவை சார்பான பிரச்சினைகளுக்கு அழுத்தம் கொடுப்பதால் மட்டுமே நாம் திருமணப் பிணைப்பை வலுப்படுத்தி, திருமண வாழ்விற்கு அர்த்தம் வழங்கி, போதுமான உதவியைக் குடும்பங்களுக்கு வழங்குகிறோம் என நீண்ட காலமாக நாம் நினைத்துக் கொண்டிருந்தோம். திருமணம் வாழ்நாள் முழுவதும் ஒரு சுமையாக இருப்பதைக் காட்டிலும் தனிப்பட்ட வளர்ச்சிக்கும் நிறைவுக்கும் அதிகமான ஆற்றல் வாய்ந்த ஒரு வழியாக அதைக் காட்டுவது நமக்குக் கடினமாக இருக்கிறது. மேலும், நம்பிக்கையாளர்கள் பல வேளைகளில் தங்கள் குறைபாடுகளுக்கு நடுவிலும் நற்செய்திக்குத் தங்களால் இயன்ற அளவு சிறப்பாகப் பதிலிறுப்பு செய்கின்றவர்களாகவும் தாங்களாகவே தெளிந்து தேர்ந்தெடுக்கும் ஆற்றல் உடையவர்களாகவும் இருக்கின்றார்கள். ஆனால் தெரிவு செய்யும் அவர்களுடைய மனச்சான்றுகளுக்கு வழிவிடுவது நமக்குக் கடினமாக உள்ளது. மனச்சான்றுகளை உருவாக்கத்தான் நாம் அழைக்கப்பட்டுள்ளோமே தவிர, அவற்றிற்கு மாற்றாக இன்னொன்றை வைப்பதற்காக அல்ல.

38. ஒருவர்மீது மற்றவர் கொண்டுள்ள மதிப்பால் முத்திரையிடப்பட்ட நிலையான குடும்ப உறவுகளை நிறைய மனிதர்கள் மதிக்கின்றார்கள் என்பதற்கு நாம் நன்றியுணர்வுள்ளவர்களாய் இருக்க வேண்டும். அன்பில் வளர்ச்சியடைவது, முரண்பாடுகளை வெற்றி கொள்வது, பிள்ளைகளை வளர்ப்பது தொடர்பான தளங்களில் வழிகாட்டுதலும் ஆலோசனையும் வழங்கும் திருஅவையின் முயற்சிகளை அவர்கள் பாராட்டுகின்றார்கள். நற்கருணையிலும் ஒப்புரவு அருளடையாளத்திலும் அனுபவிக்கப்படும் அருளின் ஆற்றலால் பலர் பயனடைந்துள்ளார்கள். திருமணம், குடும்பம் ஆகியவற்றின் சவால்களைச் சந்திக்க அந்த அருள் அவர்களுக்கு உதவுகிறது. பல நாடுகளில், குறிப்பாக ஆப்பிரிக்காவின் பல பகுதிகளில், உலகுசார் கொள்கை ஒரு சில மரபு விழுமியங்களை வலுவிழக்கச் செய்யவில்லை; அங்கு முரண்பாடுகள், பிரச்சினைகள் போன்றவற்றைக் கையாளத் தெளிவாக



வரையறுக்கப்பட்ட அமைப்புகளுடன், திருமணங்கள் இரு விரிந்த குடும்பங்களுக்கிடையே வலுவான ஒரு பிணைப்பை உருவாக்குகின்றன. மேலும், தற்பொழுது நிலைத்திருப்பதில் மட்டுமல்ல; மாறாக, அன்புடையதாகவும் பலன்தரக்கூடியதாகவும் விளங்குவதில் வெற்றி கண்டுள்ள குடும்பங்களின் சாட்சியத்திற்கு நாம் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம். இவை எல்லாம் நற்செய்தியின் கோரிக்கைகளை ஏற்றுப் போற்றுவதில் வளர்ந்திட உதவும் நேர்மறையான, வரவேற்கத்தக்க அருட்பணி அணுகுமுறைக்குத் தூண்டுதலாக இருக்க முடியும். இருப்பினும், நாம் பெரும்பாலும் தற்காப்பு நோக்கில், உண்மையான மகிழ்ச்சியைக் கண்டுபிடிக்க உதவும் வழிமுறைகளை முன்வைப்பதில் முனைப்புடன் செயல்படாமல், சீர்கெட்ட உலகைப் பழித்துரைப்பதில் நம் மேய்ப்புப்பணி ஆற்றலை வீணடித்து வந்திருக்கின்றோம். குடும்பம், திருமணம் ஆகியன பற்றிய இயேசுவின் போதனையையும் உளப்பாங்குகளையும் திருஅவையின் தூதுரை தெளிவாகப் பிரதிபலிக்கவில்லை எனப் பலரும் உணர்கின்றனர்; இயேசு கடினமான இலட்சியத்தை முன்வைத்தாலும், சமாரியப் பெண் அல்லது விபச்சாரத்தில் பிடிபட்ட பெண் போன்ற தனிப்பட்ட நபர்களின் வலுவின்மைக்குத் தம் பரிவிரக்கத்தையும் நெருக்கத்தையும் காட்டுவதற்கு ஒருபோதும் தவறவில்லை.

39. இது அன்பையும் தற்கையளிப்பையும் வளர்க்கத் தவறும் பண்பாட்டுச் சரிவுக்கு எதிராக நாம் எச்சரிக்கை விடுவதை நிறுத்த வேண்டும் எனக் கூறுகிறோம் என்பதல்ல. கடந்த இரண்டு மாமன்றங்களுக்கு முன்பாக நடந்த கலந்தாய்வு ‘‘நாளுக்குநாள் நிலைமாறும் பண்பாட்டின்’’ பல்வேறு நோய்க் குறிகளைச் சுட்டிக்காட்டியது. எடுத்துக்காட்டாக, மக்கள் உணர்ச்சி சார்ந்த ஓர் உறவிலிருந்து இன்னொன்றுக்கு வேகமாகக் கடந்து செல்வதை நான் இங்கு நினைத்துப் பார்க்கிறேன். சமூக வலைத்தளங்களின் பார்வையை ஒட்டி, நுகர்வோரின் சபலத்திற்கு ஏற்ப அன்புத் தொடர்பு ஏற்படுத்தப்படலாம் அல்லது அறுத்துக்கொள்ளப்படலாம் என அவர்கள் நம்புகின்றனர்; இதனால் உறவு விரைவில் ‘‘முடக்கப்படுகின்றது’’. மேலும், நிலையான அர்ப்பணம் பற்றிய அச்சங்கள், வேலையற்ற நேரங்கள் பற்றிய மிகை ஆர்வம், இழப்புகளையும் பயன்களையும் கணித்துத் தனிமையைப் போக்கவும் பாதுகாப்பைத் தேடவும் வேறு ஏதாவது பணியைப் பெறவும் கொள்ளப்படும் உறவுகள் என்பவற்றையும் நான் நினைத்துப் பார்க்கின்றேன். நாம் எவ்வாறு பொருள்களையும்,

சுற்றுச்சூழலையும் பாவிக்கின்றோமோ அவ்வாறுதான் நாம் உணர்ச்சிசார்ந்த உறவுகளையும் நடத்துகின்றோம்: அதாவது, அனைத்தும் பயன்படுத்திவிட்டு வீசப்பட வேண்டியவையே; இதனால், ஒவ்வொருவரும் பயன்படுத்துகின்றார்கள், தூக்கி எறிகின்றார்கள்; எடுக்கின்றார்கள், உடைக்கின்றார்கள், சுரண்டுகிறார்கள், இறுதிச் சொட்டுவரை பிழிகின்றார்கள். பின்பு போய் வா என்கின்றார்கள். மிகையான தன்அன்பு மனிதர்களைத் தங்களுக்கு அப்பாலும் தங்களின் சொந்த விருப்பங்கள், தேவைகளைத் தாண்டியும் பார்க்க இயலாதவர்கள் ஆக்கிவிடுகிறது. இருப்பினும், இன்றோ நாளையோ, பிறரைப் பயன்படுத்துபவர்கள் தாங்களும் பயன்படுத்தப்படுவதில்தான் முடிவார்கள்; அதே மனப்பான்மையில்தான் அவர்களும் கையாளப்படுவார்கள், கைவிடப்படுவார்கள். மேலும், முறிவுகள் பெரும்பாலும் ஒருவகையான ''சுதந்திரத்தை''த் தேடி, ஒருவரையொருவர் கவனித்தும் ஒருவருக்கொருவர் ஆதரவாகவும் இருந்து, இணைந்து முதுமை அடையும் இலட்சியத்தை ஏற்க மறுக்கும் முதிர் வயதுவந்தோர் நடுவில்தான் மணமுறிவுகள் நடைபெறுகின்றன என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

40. ''மிகவும்'' எளிமைப்படுத்திக் கூறுகிறோம் எனும் குறை இருக்கலாம் என்றாலும், எதிர்காலத்திற்கான வாய்ப்புகள் குறைவுபடுவதால் குடும்ப வாழ்வைத் துவங்காமலிருக்க இளையோருக்கு அழுத்தம் தரும் ஒரு பண்பாட்டில் நாம் வாழ்கின்றோம் எனச் சொல்லலாம். அதே வேளையில் இப்பண்பாடு ஏனையோருக்குக் குடும்ப வாழ்வை ஆரம்பிப்பதற்கு எதிரான தூண்டுதலைத் தரும் வகையிலான மிகப் பல தேர்வுகளை முன்வைக்கிறது.''[14] சில நாடுகளில் பல இளம் வயதினர் ''பொருளாதாரம், வேலை, படிப்பு போன்ற காரணங்களுக்காகத் திருமணத்தைத் தள்ளிவைக்கின்றனர். இன்னும் சிலர் வேறு பல காரணங்களுக்காக அவ்வாறு செய்கின்றனர்: அவை, திருமணம், குடும்பம் ஆகியவற்றைக் குறைத்து மதிப்பிடும் கருத்தியல்களின் தாக்கம், பிற மணத்துணைவர்கள் சந்திக்கும் தோல்விகளைத் தவிர்ப்பதற்கான விருப்பம், மிகப் புனிதமானதாகவும் முக்கியமானதாகவும் அவர்கள் கருதுவது பற்றிய அச்சம், வெறுமனே கூடிவாழ்வதால் கிடைக்கும் சமூக வாய்ப்புகள் பொருளாதார நலன்கள், அன்பைப் பற்றிய வெறும் உணர்ச்சிமயமான கனவுலகக் காதல்சார் புரிதல், தற்சார்பையும் சுதந்திரத்தையும் இழந்துவிடும் அச்சம், முற்றிலும் நிறுவனமயமாக்கப்பட்டதாகவும் அதிகாரத்திற்குட்பட்டதாகவும் திருமணம் கருதப்படுவதால் அதை எதிர்த்தல்''[15] ஆகியன ஆகும். எனவே நாம் சரியான மொழி, வாதங்கள், சாட்சியத்தின் வகைகள் போன்றவற்றைக் கண்டு பிடிக்க வேண்டிய தேவை உள்ளது. அவை இளையோரின் இதயங்களைத் தொடவும் தாராளம், அர்ப்பணம், அன்பு, பெருஞ்செயல் வீரம் போன்ற இளையோரின் பல திறன்களுக்கு அழைப்புவிடுக்கவும் அதன் வழியாகத் திருமணம் என்னும் சவாலை ஆர்வத்துடனும் துணிவுடனும் சந்திக்க நாம் அவர்களை அழைக்கவும் உதவும்.

41. ஓர் ஆளின் உணர்ச்சித்தன்மைக்கு ''இன்றைய உலகின் பண்பாட்டுப் போக்குகள் எந்த எல்லையும் வைக்காததுபோல் தோன்றுகிறது;'' உண்மையிலே, ''மிகையான தன்அன்பு, நிலையற்ற அல்லது மாறக்கூடிய உணர்ச்சித்தன்மை ஒருவர் முதிர்ச்சிசார் வளர்ச்சி அடைய எப்பொழுதுமே அனுமதிப்பதில்லை'' என மாமன்றத் தந்தையர்கள் குறிப்பிட்டுள்ளனர். உண்மையில் அவர்கள் இக்காலத்தில் ''பாலிழிப் படைப்புகளின் பரவல், உடலை வணிகப் பொருளாகக் கருதும் மனப்பான்மை, இவை வலைத்தளத்தின் தவறான பயன்பாட்டால் வளர்க்கப்படல், ''பாலியல் தொழிலுக்கு மக்கள் தள்ளப்படும் கண்டிக்கத்தக்க சூழல்கள்'' ஆகியன பற்றியும் தங்கள் அக்கறையை வெளிப்படுத்துகின்றார்கள்.'' இத்தகைய சூழலில் ''மணத்துணைவர்கள் தாங்கள் வளர்வதற்குத் தேவையான வழிகளைப் பல வேளைகளில் உறுதியின்றியும் தயக்கத்தோடும் போராட்டத்துடனும்தான் கண்டறிகிறார்கள். பலரும் தங்களின் உணர்ச்சிசார், பாலியல்சார் வாழ்வின் தொடக்க நிலைகளிலேயே நின்றுவிடும் போக்கு நிலவுகிறது. மணமக்களின் உறவில் ஏற்படும் இந்த நெருக்கடி, குடும்பத்தில் நிலையற்ற தன்மையை ஏற்படுத்துவதுடன் பிரிதல், மணவிலக்கு போன்றவை மூலம் தனிஆள்சார், சமூகம்சார் பிணைப்புகளைப் பலவீனப்படுத்தி, வயதுவந்தோருக்கும், குழந்தைகளுக்கும், ஏன், சமூகம் முழுவதற்குமே கடுமையான விளைவுகளை ஏற்படுத்தலாம்.[16] ''பொறுமையுடனிருத்தல், ஆழ்ந்து சிந்தனை செய்தல், தியாகங்கள் செய்தல், ஒருவரையொருவர் மன்னித்தல் ஆகியவற்றுக்கான மனத்திடம் இன்றியுமே திருமணப் பிரச்சினைகள் பல வேளைகளில் அவசரமாக எதிர்கொள்ளப்படுகின்றன. புதிய உறவுகளுக்கும் புதிய மணத்துணைவர்களும் கூடிவாழும் புதிய ஒன்றிப்புகளுக்கும் புதிய திருமணங்களுக்கும் தோல்விகள் வழிவகுக்கின்றன; இவை கிறிஸ்தவ வாழ்வுக்குச் சிக்கல்களும் பிரச்சினைகளும் மிகுந்த குடும்பச் சூழல்களை உருவாக்குகின்றன.''[17]

42. மேலும், ''பிள்ளைகளைப் பெற்றெடுப்பதற்கு எதிரான மனநிலையாலும் இனப்பெருக்க நலன் பற்றிய உலக அரசியலின் ஊக்கப்படுத்தலாலும் மக்கள் தொகை சரிவு கண்டுள்ளது. தலைமுறைகளுக்கு இடையேயான உறவை உறுதிப்படுத்தாத ஒரு சூழலை உருவாக்குவதோடு மட்டும் அன்றி, காலப்போக்கில் பொருளாதார ஏழ்மைக்கும் எதிர்காலம் பற்றிய நம்பிக்கை இழப்புக்கும் இட்டுச் செல்லும் ஆபத்து உள்ளது. உயிரி தொழில்நுட்பத் துறையின் வளர்ச்சியும் கூடப் பிறப்பு விகிதத்தில் ஒரு பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.''[18] இதனுடன் சேர்ந்த பின்வரும் காரணிகளும் உள்ளன: அவை ''தொழில்துறைமயமாக்கல், பாலியல் புரட்சி, அதிக மக்கள் தொகை பற்றிய பயம், பொருளாதாரப் பிரச்சினைகள் போன்றவை ... நுகர்வுமயமாக்கலும் மக்கள் ஒருவகைச் சுதந்திரத்தையும் வாழ்க்கைப் பாணியையும் தக்கவைக்கும் வகையில் பிள்ளைகளைப் பெற்றெடுப்பதிலிருந்து அவர்களைத் தடுக்கலாம்; சுருங்கக் கூறின், அவர்கள் குறிப்பிடத்தகுந்த சுதந்திரமும் வாழ்க்கைமுறையும் கொண்டிருக்க விரும்புகின்றனர்.''[19] வாழ்வை அடுத்த தலைமுறைக்குத் தருவதில் தாராளமாய் இருந்துள்ள மணத்துணைவர்களில் நேர்மையான மனச்சான்றுகள் சில முக்கிய காரணங்களுக்காகத் தங்கள் பிள்ளைகளின் எண்ணிக்கையைக் குறைக்க அவர்களை இட்டுச்செல்லலாம்; இருப்பினும் துல்லியமாக, ''மனச்சான்றின் இந்த மாண்பின் காரணமாகவே திருஅவை கருத்தடை, மலடாக்கல், ஏன் கருச்சிதைவு ஆகியன சார்ந்த அரசின் கட்டாயப்படுத்தப்பட்ட குறுக்கீட்டை வன்மையாக எதிர்க்கின்றது''[20] அதிகப் பிறப்பு விகிதம் உள்ள இடங்களில்கூட இத்தகைய நடவடிக்கைகள் ஏற்கத்தக்கவை அல்ல; இருப்பினும், கலக்கத்தை ஏற்படுத்தக்கூடிய மிகக் குறைந்த பிறப்பு விகிதம் உள்ள நாடுகளில் அரசியலார் அதை ஊக்கப்படுத்துவதை நாம் காண்கிறோம். கொரிய நாட்டு ஆயர்கள் கூறியுள்ளதுபோல் இது ''தன்முரண்பாடான வகையில் செயல்படுவதும் தனது கடமையில் இருந்து தவறுவதும்'' ஆகும்.

43. சில சமூகங்களில் நம்பிக்கையும் சமயச் செயல்பாடும் நலிவுறுவது குடும்பங்கள்மீது தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. இது தங்கள் துன்பங்களுக்கு நடுவே அவை மேலும் தனிமைப்படுத்தப்படக் காரணமாகிறது. மாமன்றத் தந்தையர்கள் குறிப்பிடுவதுபோல், ''ஒரு மனிதரின் வாழ்வு, உறவு ஆகியவற்றின் வலுவற்ற இயல்பில், கடவுள் இல்லா நிலையில் இருந்து



எழக்கூடிய தனிமை என்பது இன்றையப் பண்பாட்டினுடைய பெரிய ஏழ்மையின் அடையாளம் ஆகும். மேலும் பல வேளைகளில் குடும்பங்களைச் சிதைத்துவிடும் சமூக-பண்பாட்டு மெய்ம்மைகளின் முன்னிலையில் பொதுவான வலுவின்மை உணர்வும் உள்ளது... நிறுவனங்களின் தரப்பில் இருந்து கிடைக்கும் ஆர்வம், அக்கறை ஆகியன குறைகின்ற சூழலில், குடும்பங்கள் கைவிடப்பட்டதாக அடிக்கடி உணர்கின்றன. இதன் எதிர்மறைத் தாக்கங்கள் சமூக ஒழுங்கமைப்பில் தெளிவாகத் தெரிகின்றன. அவை பிள்ளைகளை வளர்ப்பதில் உள்ள இன்னல், புதிய உயிரை வரவேற்பதில் உள்ள தயக்கம், முதியவர்களைச் சுமைகளாகக் கருதும் மனப்பாங்கு, உணர்ச்சிசார் பிரச்சினைகளின் அதிகரிப்பு, வன்முறையின் வெறி எழுச்சிகள் எனச் சமுதாயநிலைப் புள்ளி விவர ஆய்வுகள் காட்டுவன ஆகும். சட்டங்களை இயற்றுதல், இளம் வயதினருக்கு எதிர்காலத்தை உறுதிப்படுத்தும் வேலைகளை உருவாக்குதல், குடும்பத்தை உருவாக்க அவர்களின் திட்டத்தை உணர்தல் ஆகியவை மூலம் அரசு அவர்களுக்கு உதவ வேண்டிய கடமை உள்ளது.''[22]

44. மாண்புக்கும் வசதிக்கும் உகந்த வீடு ஒன்று இல்லாத நிலைமை பல வேளைகளில் முறையான உறவுகளைத் தள்ளிப்போட வழிவகுக்கின்றது. ''குடும்ப, குழும வாழ்க்கைக்கான அடிப்படை வசதிகள் உள்ள ஓர் இடத்துச் சூழலில் குடும்ப வாழ்விற்கு உகந்ததும் உறுப்பினர்களின் எண்ணிக்கைக்குப் போதுமானதுமான ஓர் உறைவிடத்திற்கான உரிமை குடும்பத்திற்கு உண்டு''[23] என்பது நினைவில் இருத்தப்பட வேண்டும். ஏனெனில் குடும்பங்களும் இல்லங்களும் இணைந்தே செல்கின்றன. இது தனிப்பட்ட நபர்களின் உரிமை மட்டுமல்ல, குடும்பத்தின் உரிமைகளும் எந்த அளவுக்கு முக்கியமானவை என்பதை வலியுறுத்தி நாம் அதை உணரச் செய்கிறது. குடும்பம் என்பது ஒரு நலன். அது இல்லாமல் சமூகம் இருக்க முடியாது; எனவே அது பாதுகாக்கப்பட வேண்டும்.[24] குறிப்பாக இன்று அரசியல் திட்டங்களில் அதற்குக் குறைவான கவனம் வழங்கப்படும் நிலையில் ''குடும்பத்திற்கும் திருமணத்திற்கும் ஊக்கமளிப்பதையும் அவற்றை எதிர்ப்பவர்களுக்கு எதிராக அவற்றைக் காப்பதையும் திருஅவை எப்பொழுதும் தனது பணியின் ஒரு பகுதியாகக் கொண்டுள்ளது.''[25] ''சட்டம், பொருளாதாரம், சமூகம், நீதி ஆகிய துறைகளைச் சார்ந்த அரசு அதிகாரிகளிடமிருந்து சரியானக் குடும்பத் திட்டத்தைப் பெற்றிடும் உரிமை குடும்பங்களுக்கு உண்டு.'' சில வேளைகளில் அன்பு

செய்யப்படுபவர்கள் நோயில் விழும்போதும், அவர்கள் உடல் நலம் பெறப் போதிய வாய்ப்புகள் குறையும்போதும் பொருத்தமான வேலைவாய்ப்புப் பெறப் போராடும்போதும் குடும்பங்கள் அதிகம் துன்புறுகின்றன. ''கல்வி, பண்பாட்டுச் செயல்பாடுகள், சமூக வாழ்வில் ஈடுபாடு என்பவற்றிற்கான குடும்பத்தின் வாய்ப்புகளைப் பொருளாதாரக் குறைவுநிலை தடுக்கின்றது. இன்றைய பொருளாதாரச் சூழல் சமூகத்தில் மக்கள் பங்கேற்பதைப் பல வழிகளில் தடுக்கின்றது. குறிப்பாக, இளையோருக்கு மிகக் குறைந்த வாய்ப்புகளே இருப்பதும் வேலைக் காலியிடங்கள் தனிச்சில துறைகளையே சார்ந்தவையாகவும் உறுதியற்றதாகவும் இருப்பதுமான இடங்களில் வேலைத் தொடர்புடைய சிக்கல்களால் குடும்பங்கள் துன்புறுகின்றன. பல வேளைகளில் வேலை நாள்கள் நீண்டிருப்பதாலும் வீட்டிற்கு வெளியே நீண்ட காலம் இருக்க வேண்டியிருப்பதாலும் சுமையானவை ஆகின்றன. இந்தச் சூழ்நிலை குடும்ப உறுப்பினர்கள் ஒன்று கூடி வரவோ, பெற்றோர் தங்கள் பிள்ளைகளுடன் இருந்து உறவுகளை அன்றாடம் வளப்படுத்திக் கொள்ளவோ உதவுவதாக இல்லை.''[27]

45. அதிக எண்ணிக்கையிலான குழந்தைகள் மண வாழ்க்கைக்கு வெளியே பிறக்கிறார்கள்; அவர்களுள் பலர் தங்கள் பெற்றோர் ஒருவருடன் மட்டுமோ, ஒரு கலப்பு அல்லது மாற்றி அமைக்கப்பட்ட குடும்பத்திலோ வளர்கிறார்கள்... மேலும் பிள்ளைகளின் பாலியல் சுரண்டல் இன்றைய சமூகத்தின் இன்னுமோர் நெறிபிறழ்ந்த, இழிவான மெய்ம்மையாக உள்ளது. போரினால் ஏற்படும் வன்முறை, பயங்கரவாதம், திட்டமிட்டு செய்யப்படும் குற்றங்கள் ஆகியவை காரணமாக சமூகங்கள் வன்முறையை அனுபவிக்கும்; சமூகங்கள், குடும்பங்களின் சீர்குலைவு அனைத்திற்கும் மேலாக, பெரு நகரங்களில் காண்கின்றன. அவற்றின் புறநகர்ப் பகுதிகளில் 'தெருவோரச் சிறுவர்கள்' எனப்படுவோரின் எண்ணிக்கை பெருகிக்கொண்டிருக்கிறது. அது குடும்பங்களின் நலிவுக்கு வித்திடுகிறது.''[28] பிள்ளைகள் மிகப் பாதுகாப்பாக இருக்க வேண்டிய இடங்களில், குறிப்பாக குடும்பங்கள், பள்ளிகள், குழுமங்கள், கிறிஸ்தவ நிறுவனங்கள் என்பவற்றில் பிள்ளைகள் பாலியல் சுரண்டலுக்கு ஆளாக்கப்படுவது எல்லாவற்றையும் விட மிக இழிச்செயலாகும்.[29]

46. ''புலம்பெயர்தல் என்பது குடும்ப வாழ்வின்மீது அது ஏற்படுத்தும் எதிர்மறை விளைவுகளின் பின்னணியில் புரியப்படவும் சந்திக்கப்படவும் வேண்டிய இன்னுமொரு காலத்தின் அடையாளம் ஆகும்.''[30] அண்மையில் நடைபெற்ற மாமன்றம் இந்தப் பிரச்சினைமீது கவனத்தைத் திருப்பியது; ''புலம்பெயர்தல் என்பது உலகின் பல்வேறு பகுதிகளில் உள்ள எல்லா மக்கள் தொகை முழுவதையும் பல்வேறு வகையில் பாதிக்கின்றது'' என அது குறிப்பிட்டது. திருஅவை இத்தளத்தில் பெரும் பங்காற்றியுள்ளது. மேலும் நற்செய்திக்கு இத்தகைய சான்றுபகர்வதும் (காண் மத் 25:35) தொடர்ந்து செயல்படுத்துவதும் விரிவுபடுத்துவதும் எப்பொழுதும் இல்லாத அளவுக்கு இன்று அவசரத் தேவையாக உள்ளது... மக்களின் இயல்பான வரலாற்று இயக்கத்துடன் தொடர்புடைய மானுட இடம் பெயர்தல் என்பது புலம்பெயரக்கூடிய குடும்பங்கள், அவற்றை வரவேற்கக் கூடிய நாடுகள் ஆகிய இரண்டுக்கும் உண்மையிலேயே வளமூட்டக் கூடியதாக விளங்க முடியும். மேலும் போர், துன்புறுத்தல், ஏழ்மை, அநீதி ஆகிய சூழல்களின் விளைவாகக் குடும்பங்களின் கட்டாயப்படுத்தப்பட்டப் புலம்பெயர்தலாலும் உயிரையே பணயம் வைக்கும் அளவுக்கு இடர்மிகுந்த பயணமும் மக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கி குடும்பங்களை நிலைகுலையச் செய்கின்றன. புலம் பெயர்ந்தோருடன் திருஅவை உடன்சென்று புலம்பெயரும் குடும்பங்களை மட்டுமல்ல, புலம்பெயராது அங்கேயே தங்கியுள்ள குடும்ப உறுப்பினர்களையும் மையப்படுத்திய தனிப்பட்ட அருள்பணிச் செயல்திட்டம் அதற்குத் தேவைப்படுகிறது. இந்த அருட்பணிச் செயல்பாடு அவர்களின் பண்பாடுகள், அவர்கள் முன்பு இருந்த இடத்தில் பெற்றுள்ள மானுட, சமய உருவாக்கம், அவர்களுடைய மரபுகள், சடங்குகள் ஆகியவற்றின் ஆன்மீக வளமை என்பவற்றைக் கருத்தில் கொண்டு, தேவைப்பட்டால் அருட்பணி ஒரு தனிப்பட்ட அக்கறையுடன் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்... புலம் பெயர்தல் சட்டத்திற்குப் புறம்பான முறையில் நடைபெறும்போதும் மனித ஆள் வணிகம் பன்னாட்டு வலையிணைப்பு அமைப்புகளால் நடத்தப்படும்போதும் அது குடும்பங்களுக்கும் தனி ஆட்களுக்கும் நிலைகுலையவைக்கும் பேரிடியாக அமைகின்றன. இது பிறருடன் ஒருங்கிணைந்து வாழ்வதற்கான உறவைத் தொடங்க இயலாத வகையிலான தற்காலிகத் தங்குமிடங்களிலும் அகதி முகாம்களிலும் நீண்ட காலம் இருக்கும் நிலைக்கு ஆளாக்கப்பட்ட பெண்களையும் உறவினர் துணையற்ற பிள்ளைகளையும் பொறுத்த வரையிலும்கூட மெய்ம்மையே. மிகுந்த ஏழ்மையும் குடும்ப உறவு முறிவுக்கு இட்டுச்செல்லும் வேறு சூழ்நிலைகளும் சில வேளைகளில் குடும்பங்கள் தங்கள்

பிள்ளைகளைப் பரத்தமைத் தொழிலுக்கோ உடல் உறுப்பு வணிகத்திற்கோ விற்றுவிட வழிவகுக்கின்றன.''[31] ''உலகின் பல பகுதிகளில், குறிப்பாக மத்திய கிழக்குப் பகுதியில் கிறிஸ்தவர்களும், இன, சமயச் சிறுபான்மையினரும் எதிர்கொள்ளும் துன்புறுத்தல்கள் திருஅவைக்கு மட்டுமல்ல, பன்னாட்டுச் சமூகம் முழுமைக்குமே ஒரு பெரிய பிரச்சினையாக உள்ளது. குடும்பங்களும் கிறிஸ்தவச் சமூகங்களும் தங்கள் சொந்த மண்ணிலேயே வாழ்ந்திட நடைமுறைசார்ந்த முறையிலும்கூட அனைத்து முயற்சிகளும் ஊக்கமளிக்க வேண்டும்.''[32]

47. மேலும், மாமன்றத் தந்தையர் ''சிறப்புத் தேவைகள் உள்ள ஆட்களின் குடும்பங்கள் எங்கெல்லாம் தங்களின் சமநிலை, விருப்புகள், எதிர்பார்ப்புகள் ஆகியவற்றை நிலைகுலையச் செய்யும் ஓர் இயலாமையின் எதிர்பாராச் சவாலைச் சந்திக்க வேண்டியுள்ளதோ'' அங்கெல்லாம் சிறப்புக் கவனம் செலுத்த அழைப்பு விடுத்தனர்... சிறப்புத் தேவைகளைக் கொண்ட பிள்ளையைக் கவனிக்கும் கடினமான துன்பத்தை அன்போடு ஏற்றுக் கொள்ளும் குடும்பங்கள் சிறப்பாகப் பாராட்டப்பட வேண்டும். வாழ்வு எனும் கொடைக்கு அவர்கள் திருஅவைக்கும் சமூகத்திற்கும் விலைமதிக்க முடியா உண்மையுடைமையான சான்று பகர்கின்றார்கள். இத்தகைய சூழ்நிலைகளில் மானுட வாழ்வின் வலுவின்மை எனும் மறைபொருளை வரவேற்றுப் பேணுவதின் வழியாக கிறிஸ்தவ சமூகத்துடன் இணைந்து குடும்பம் புதிய அணுகுமுறைகள், செயல்பாட்டுக்கான புதிய வழிமுறைகள், பிறரை வேறு வகையில் புரிந்து கொள்ளுதல், அவர்களுடன் தம்மையே ஒன்றுபடுத்திக்கொள்ளுதல் என்பவற்றைக் கண்டறிய முடியும். மாற்றுத் திறனாளிகள் என்போர் குடும்பத்திற்கு ஒரு கொடையாகவும் அன்பிலும், ஒருவருக்கொருவர் உதவுவதிலும் ஒற்றுமையிலும் வளர ஒரு வாய்ப்பாகவும் உள்ளார்கள்... ஒரு குடும்பம் நம்பிக்கையின் ஒளியில், சிறப்புத் தேவைகளுடன் உள்ள நபர்களின் உடனிருப்பை ஏற்றுக்கொண்டால், அவர்கள் ஒவ்வொரு மனித வாழ்வுக்கும் அதற்கே உரிய தேவைகள், உரிமைகள், வாய்ப்புகள் ஆகியவற்றுடன் அதன் உயர்பண்பையும் மதிப்பையும் கண்டறிந்து உறுதிப்படுத்துவார்கள். இந்த அணுகுமுறை தாழ்நிலையிலுள்ள மக்கள் சார்பான அக்கறையையும் பணிகளையும் ஆதரிக்கும்; அவர்களுடைய வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் அவர்களை அணுகிச் சென்று பாசத்தை வழங்க ஊக்கப்படுத்தும்.''[33]



புலம்பெயர்ந்தோர்க்கும் சிறப்புத் தேவைகள் உள்ளோர்க்கும் காட்டப்படும் அர்ப்பணம், அக்கறை ஆகியவை ஆவியின் அடையாளம் என நான் வலியுறுத்துகிறேன். இரு சூழ்நிலைகளுமே எடுத்துக்காட்டானவை: அவை பிறரை நாம் வரவேற்பதிலும் அவர்களுக்குப் பரிவிரக்கம் காட்டுவதிலும் பாதிக்கப்பட்டோர் நமது குழுமங்களின் முழுமையான ஒரு பகுதியாக இருக்க உதவுவதிலும் நமது அர்ப்பணத்தின் உரைகல்லாக உள்ளன.

48. ''பெரும்பான்மையான குடும்பங்கள் முதியோரை ஆசீராகக் கருதி அவர்களுக்கு உயர்வான மதிப்பு அளித்து, அவர்களைப் பாசத்தால் சூழ்கின்றன. முதியோருக்கு அருள்வாழ்வு, சமூகப் பணிசெய்யத் தங்களை அர்ப்பணித்துள்ள கழகங்களும் குடும்ப இயக்கங்களும் சிறப்பான பாராட்டுக்கு உரியன... மிக அதிகமாகத் தொழில்மயமாக்கப்பட்ட சமூகங்களில், பிறப்பு விகிதம் குறைந்து முதியோரின் எண்ணிக்கை அதிகரிக்கும் நிலையில் அவர்கள் ஒரு சுமையாகக் கருதப்படக்கூடும். இன்னொரு பக்கம், அவர்களுக்குத் தேவைப்படும் கவனிப்பு பல வேளைகளில் அவர்களின் அன்புக்குரியவர்கள்மேல் பாரத்தைச் சுமத்துகின்றது.''[34] இறப்பு, இறப்பின் தருவாய் ஆகியவற்றின் அனைத்துச் சுவடுகளையும் நீக்க முயற்சிக்கும் இன்றைய சமூகத்தில் வாழ்வின் இறுதி நிலைகளில் கவனிப்பும் அக்கறையும் மிக அவசியமானவை. வலுக்குறைந்து. பிறரைச் சார்ந்திருக்கும் முதியவர்கள் சில வேளைகளில் வெறும் பொருளாதார நலனுக்காக முறையற்ற வகையில் சுரண்டப்படுகின்றார்கள். ஓர் ஆளுடைய வாழ்வின் நிறைவு உணர்வு, ஆண்டவரின் பாஸ்கா மறைபொருளில் அவரது பங்கேற்பு ஆகியவற்றின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதன் மூலம் வாழ்வின் இறுதி நிலைகளை நன்முறையில் அணுக முடியும் என்று பல குடும்பங்கள் காட்டுகின்றன. பெரும் எண்ணிக்கையிலான முதியவர்கள் திருஅவையின் நிறுவனங்களில் கவனிக்கப்படுகின்றார்கள்; அங்கு அவர்கள் பொருளாதார, அருள்வாழ்வு முறைகளில் அமைதியான குடும்பச் சூழலில் வாழ்கின்றார்கள். கருணைக் கொலையும் பிறர் உதவியுடன் செய்யப்படும் தற்கொலையும் உலகம் முழுவதும் உள்ள குடும்பங்களுக்குக் கடுமையான அச்சுறுத்தல்களாக உள்ளன. பல நாடுகளில் அவை சட்ட முறைப்படுத்தப்பட்டுள்ளன. திருஅவை இத்தகைய நடைமுறைகளை உறுதியாக எதிர்க்கும் வேளையில் முதிர்ந்த, நலிவடைந்த உறுப்பினர்களைக் கவனித்துக் கொள்ளும் குடும்பங்களுக்கு உதவ வேண்டியதன் தேவையை உணர்கிறது.

49. கடுமையான ஏழ்மையிலும் மிகுதியான இயலாமைகளிலும் வாழும் குடும்பங்களின் சூழ்நிலையை நான் இங்குக் குறிப்பிட விரும்புகிறேன். ஏழைக் குடும்பங்கள் சந்திக்கும் பிரச்சினைகள் பல வேளைகளில் மிகவும் கடினமானவை.[36] எடுத்துக்காட்டாக, தனியாக ஒரு தாய் தாமாகவே தன் பிள்ளையை வளர்க்க வேண்டியிருப்பின், அவர் வேலைக்குச் செல்லும்பொழுது அப்பிள்ளையை வீட்டிலேயே தனியாக விட்டுச்செல்ல வேண்டியுள்ளது; அப்போது அது தனது ஆளுமை வளர்ச்சிக்கு ஊறான பல ஆபத்துகளையும் தடைகளையும் எதிர்கொண்டே அது வளருகிறது. இக்கட்டான அச்சூழ்நிலைகளில் அவர்களைப் புரிதல், ஆறுதல், ஏற்றுக்கொள்தல் ஆகியவற்றை வழங்குவதில் கவனமுடன் இருக்க வேண்டும். இதற்கு மாறாக, பல்வேறு சட்டங்களை உடனடியாகத் திணிப்பது இறைவனின் பரிவிரக்கத்தை தங்களுக்குக் காட்ட வேண்டிய தாயாகிய திருஅவையாலேயே தாங்கள் தீர்ப்பிடப்படுகிறோம், கைவிடப்படுகிறோம் என்று மக்களை நினைக்கச் செய்யும். இது நலமாக்கும் அருளின் ஆற்றலையும் நற்செய்தியின் படிப்பினையின் ஒளியையும் வழங்குவதற்குப் பதிலாக, சிலர் அச்செய்தியை ''பிறர் மீது வீசப்படக்கூடிய உயிரற்ற கற்களாக ஆக்கிக் கொள்கைத் திணிப்பு செய்வார்கள்.''[37]

## சில சவால்கள்

50. மாமன்றத்திற்கு முன்னைய இரு கருத்துக் கேட்டல்களில் பெறப்பட்ட பதில்மொழிகள் மிக வேறுபட்ட சூழ்நிலைகளையும் அவை முன்வைக்கும் புதிய சவால்களைப் பற்றியும் எடுத்துரைத்தன. ஏற்கெனவே குறிப்பிடப்பட்டவற்றுடன் இணைந்து பிள்ளைகளை வளர்ப்பதில் குடும்பங்கள் எதிர்கொள்ளும் சிக்கல்களையும் மறுமொழியாளர்கள் சுட்டியிருந்தனர். பல வேளைகளில் பெற்றோர் களைப்புற்று வீடு திரும்புகின்றனர்; அவர்கள் பேச விரும்புவதில்லை; தொலைக்காட்சிக்கு அடிமையாதல் என்பது உட்பட கவனச் சிதறல்களும் மிகுந்துள்ளன. இது பெற்றோர் நம்பிக்கையைத் தங்கள் பிள்ளைகளுக்கு வழங்குவதை இன்னும் அதிகக் கடினமாக்குகிறது. நிகழ்காலத்தில் மகிழ்வுறாமல் எதிர்காலத்தை உறுதிப்படுத்திக் கொள்வதிலேயே அதிகம் மூழ்கியிருப்பதாகத் தோன்றும் குடும்பங்களில் அதன் விளைவாக ஏற்படுகின்ற கடுமையான அழுத்தத்தையும் வேறு மறுமொழிகள் காட்டியுள்ளன. நிலையான வேலை, நிதி,



பிள்ளைகளின் எதிர்காலம் என்பவை பற்றிய அச்சத்தால் பெரிதாக்கப்பட்டுள்ள பரவலான பண்பாட்டுச் சிக்கல் இது.

51. போதை மருந்துப் பழக்கம் நமது காலத்தின் கொள்ளை நோய்களுள் ஒன்று எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. பல குடும்பங்களில் அது பெரும் துன்பத்தையும் முறிவையும்கூட ஏற்படுத்துகிறது. மது அடிமைநிலை, சூதாட்டம், ஏனைய போதைப் பழக்கங்கள் என்பனவும் அதே தாக்கங்களை ஏற்படுத்துபவையே. இவற்றைத் தடுக்கவும் மேற்கொள்ளவும் ஏற்ற இடமாகக் குடும்பம் விளங்க முடியும். ஆனால், இத்தகைய இடர்நிலையில் உள்ள குடும்பங்கள் ''தங்கள் உறுப்பினர்களுக்கு உதவச் செயல்படும் ஆற்றலை இழக்கின்றன... பிளவுபட்ட குடும்பங்களின் சீர்குலைவால் ஏற்பட்டுள்ள கடுமையான விளைவுகளை நாம் காணுகின்றோம்: எடுத்துக்காட்டாக, இளையோர் இடம் பெயர்கின்றனர், முதியோர் கைவிடப்படுகின்றனர்; பெற்றோர் உயிர்வாழ்கையிலேயே பிள்ளைகள் அனாதைகள் ஆகின்றனர்; இளையோரும் வயதுக்குவந்த இளைஞர்களும் குழப்பமுற்றும் ஆதரவற்றும் உள்ளனர்.''[38] இந்நிலையைச் சமூகமும் அரசியலும் கண்டுகொள்ளத் தவறுகின்றன. மெக்சிகோ நாட்டு ஆயர்கள் சுட்டிக்காட்டியுள்ளதுபோல குடும்பங்களில் இடம்பெறும் வன்முறை, சமூக வலுச்சண்டைகளின் புதிய வடிவங்களைத் தோற்றுவிக்கின்றது. ஏனெனில், வன்முறையான ஆளுமைப் போக்கிற்கு உரிய விளக்கம் குடும்ப உறவுகளில் காணக்கிடக்கிறது. தகவல் பரிமாற்றம் குறைபடுகின்ற, தற்காப்பு அணுகுமுறைகள் மேலோங்கிநிற்கின்ற, உறுப்பினர்கள் ஒருவருக்கொருவர் ஆதரவு அளிக்காத, பங்கேற்பை வளர்க்கின்ற குடும்பச் செயல்பாடுகள் இல்லாத, பெற்றோரின் உறவுகள் அடிக்கடி சண்டை சச்சரவுகளுக்கு ஆளாகின்ற, பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் உள்ள உறவுகளில் பகைமை வெளிப்படுகின்ற குடும்பங்களில் மேற்கூறிய மெய்ம்மை பல வேளைகளில் காணக்கிடக்கின்றது. மிக அடிப்படையான மனித உறவுகளில் ஏற்படும் எதிர்ப்புணர்விற்கும் பகைமைகளுக்கும் பிறப்பிடமாக இருப்பது குடும்பத்தில் உள்ள வன்முறையே.''[39]

52. திருமணத்தை அடிப்படையாகக் கொண்ட இயல்புசார் சமூகமாகிய குடும்பத்தை வலுவிழக்கச் செய்வது சமூகம் முழுவதற்கும் நலம் பயக்கும் என எவரும் எண்ணலாகாது. உண்மை அதற்கு எதிர்மறையானதே. அது தனி ஆட்களுடைய வளர்ச்சி முதிர்ச்சிக்கும், குமுக விழுமியங்களை

வளர்த்தெடுப்பதற்கும், நகரங்கள் நாடுகளின் அறம்சார் முன்னேற்றத்திற்கும் ஊறு விளைவிக்கிறது. ஓர் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலான ஒருவர் ஒருவருக்கே உரியதும் முறிவுபடாததுமான ஒன்றிப்பு என்பது புதிய உயிர் என்னும் கனியை ஈன்றிடும் நிலையான அர்ப்பணம் என்னும் வகையில் சமூகத்தில் முழுநிறைவான ஒரு பங்கு வகிக்கிறது என்பது இன்று சரியாகக் கண்டுகொள்ளப்படுவதில்லை. குடும்பச் சூழ்நிலைகள் ஒரு குறிப்பிட்ட நிலையுறுதித்தன்மையைத் தரமுடியும் என்பதை நாம் ஏற்றாகவேண்டும். இருப்பினும் எடுத்துக்காட்டாக மணமாகாதவர்கள் அல்லது ஒரே பாலினரின் ஒன்றிப்புகள் திருமணத்திற்கு இணையானவை எனக் கருதப்பட முடியாதவை. தற்காலிகமான அல்லது அடுத்த தலைமுறைக்கு உயிரை வழங்குவதற்குத் தன்னையே மூடிக்கொள்ளுகின்ற எந்த ஒன்றிப்பும் சமூகத்தின் எதிர்காலத்தை உறுதிசெய்ய இயலாது. ஆனால் இக்காலத்தில் திருமணங்களை வலுப்படுத்தவும், திருமணமான வாழ்க்கைத்துணைவர்கள் தங்கள் பிரச்சினைகளை மேற்கொள்ள உதவவும், பிள்ளைகளை வளர்க்க அவர்களுக்குத் துணைசெய்யவும், பொதுவாகக் கூறின், திருமணப் பிணைப்பின் நிலையுறுதியை ஊக்கப்படுத்தவும் யார்தான் முயற்சி செய்கிறார்கள்?

53. "இன்றும் பல சமூகங்கள் பல துணை மணமுறை என்னும் வழக்கத்தைக் காத்துவருகின்றன; வேறு சில இடங்களில் ஏற்பாட்டுத் திருமணங்கள் தொடர்ந்து நடைமுறையில் உள்ளன... மேற்கத்திய நாடுகளில் மட்டுமல்ல, வேறு பல இடங்களிலும் திருமணம் இன்றியே கூடிவாழும் நடைமுறையும் திருமணம் செய்யும் நோக்கத்தையே முற்றிலும் தள்ளிவிட்ட ஒருவகை ஒன்றிணைந்த வாழ்க்கைமுறையும் பரவலாக உள்ளன."[40] பல்வேறு நாடுகளில் திருமணத்திற்கு மாற்றான பல வகை உறவுமுறைகளின் வளர்ச்சியைச் சட்டமே எளிதாக்கியுள்ளது. இதன் விளைவாக, ஒருவர் ஒருவருக்கே உரியது, முறிவுபடாமை, உயிருக்குத் திறந்திருக்கும் நிலை எனும் பண்புக்கூறுகளைக் கொண்ட திருமணம் பழங்காலத்திற்கே உரியதும் இன்றைக்குப் பொருந்தாததுமான தேர்வு எனத் தோன்றத் துவங்கியுள்ளது. குடும்பம் சட்டமுறையில் கட்டுடைப்புக்கு ஆளாவதும் தனி ஆளுடைய விருப்பாற்றலின் தன்னுரிமையை மட்டுமே அடிப்படையாகக் கொண்ட உறவுப் பாணிகள் ஏற்றுக்கொள்ளப்படும் போக்கும் பல நாடுகளில் காணக்கிடக்கின்றன.



மரபுசார் குடும்பத்தில் அதிகார ஆதிக்கமும் வன்முறையும்கூட நிலவும் பழைய வடிவங்களைத் தள்ளிவிடுவது சட்டமுறையானதும் சரியானதும் என்பது உறுதியே. இருப்பினும் அது திருமணத்தை இகழ்வதற்கு அல்ல, மாறாக, அதன் உண்மைப் பொருளை மீண்டும் கண்டுகொள்வதற்கும் அதனைப் புதுப்பித்தலுக்குமே இட்டுச் செல்லவேண்டும். குடும்பத்தில் வலிமை என்பது "அன்புசெய்யவும் எப்படி அன்புசெய்வது எனக் கற்றுத்தரவும் அதற்குள்ள ஆற்றலில்தான் காணக்கிடக்கின்றது. ஒரு குடும்பத்தில் எத்தனை பிரச்சினைகள் இருந்தாலும் அன்பில் தொடங்கி அது எப்போதும் வளரமுடியும்."[41]

54. பெண்களின் உரிமைகளையும் பொது வாழ்வில் அவர்களது பங்கேற்பையும் ஏற்றுக்கொள்வதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் ஏற்பட்டிருப்பினும் சில நாடுகளில் அவர்களின் உரிமைகளை வளர்த்தெடுக்க இன்னும் நிறையச் செய்யப்படவேண்டியிருக்கிறது என்ற மெய்ம்மையை இந்தக் குறுகிய பொது ஆய்வில் நான் அழுத்திக் கூற விழைகிறேன். ஏற்றுக்கொள்ளப்பட முடியாத பல வழக்கங்கள் களையப்பட வேண்டியவையாகவே இன்னும் உள்ளன. குறிப்பாக, சில வேளைகளில் பெண்கள் ஆளாக்கப்படும் இழிவான கொடுமைகள், குடும்ப வன்முறை, பல்வேறு வகையான அடிமைப்படுத்தல்கள் என்பவற்றை நான் நினைத்துப் பார்க்கிறேன். இவை ஆண் ஆற்றலின் வெளிப்பாடு அல்ல; மாறாக ஆற்றல் குன்றிய கோழைத்தனமான செயல்பாடுகளே. சில திருமணங்களில் பெண்கள் அனுபவிக்கும் சொல்சார், உடல்சார், பாலியல்சார் வன்முறை இல்லற ஒன்றிப்பின் இயல்புக்கே முரணானது. சில பண்பாடுகளில் நடைமுறையில் உள்ள கண்டிக்கத்தக்க பெண் பிறப்பு உறுப்புக் களைவையும் மதிப்புள்ள வேலைக்கும் முடிவெடுக்கும் பொறுப்புகளுக்கும் பெண்களுக்கு சம வாய்ப்புகள் இல்லாததையும் நான் நினைத்துப் பார்க்கிறேன்... பெண்களைத் தாழ்வானவர்கள் எனக் கருதிய ஆணாதிக்கப் பண்பாடுகளுடைய அடாச் செயல்களின் சுமைகள் வரலாற்றில் உண்டு. இருப்பினும் இன்றுகூட பதிலாள் தாய்களாகப் பெண்கள் பயன்படுத்தப்படுவதையும் "இன்றைய ஊடகக் கலாச்சாரத்தில் பெண்ணின் உடல் சுரண்டலுக்கும் வணிகமயமாக்கலுக்கும் ஆளாக்கப்பட்டுள்ளதையும்"[42] நாம் கண்டுகொள்ளாமல் இருக்க இயலாது. பெண் விடுதலையின் விளைவுதான் இன்றைய பல பிரச்சினைகள் எனக் கருதுவோரும் இன்று உள்ளனர். அவர்களது வாதம் ஏற்கமுடியாதது மட்டுமல்ல;

அது "போலியானது, பொய்யானது, ஆணாதிக்க வெறியின் ஒரு வகையானது".[43] பழைய வகைப் பாகுபாடுகள் அழிந்தொழிவதையும் குடும்பங்களில் சமப் பரிமாற்றம் வளருவதையும் கண்டு ஆண், பெண் சம மாண்பு நம்மை மகிழ்வடையச் செய்கிறது. எழுச்சி கண்டுள்ள பெண்ணியத்தின் சில வடிவங்களை நாம் குறைபட்டவை எனக் கருதவேண்டும் என்றாலும் பெண்களின் மாண்பும் உரிமைகளும் இன்னும் அதிகத் தெளிவாக ஏற்றுக்கொள்ளப்படுவதற்கான ஆவியின் செயல்பாடுகளைப் பெண்களின் இயக்கத்தில் நாம் காணவேண்டும்.

55. ஆண்கள் "குடும்பத்தில், குறிப்பாகத் தங்கள் மனைவியரையும் பிள்ளைகளையும் பாதுகாப்பதிலும் அவர்களுக்கு வாழ்வாதாரம் அளிப்பதிலும் இணையானதும் நிறைஅறுதியுமான பங்கு வகிக்கின்றனர்... குடும்பத்தில் தங்களது பங்கின் முக்கியத்துவத்தை உணர்ந்து பல ஆண்கள் அதற்கேற்பத் தங்கள் ஆண்மையை வாழ்ந்துகாட்டுகின்றனர். தந்தை இல்லாமை குடும்ப வாழ்வையும் பிள்ளை வளர்ப்பையும் அவர்கள் சமூகத்தில் ஒருங்கிணைதலையும் ஆழமாகப் பாதிக்கிறது. உடல்சார், உணர்ச்சிசார், உளவியல்சார், அருள்வாழ்வுசார் அவரது உடனிருப்பு இன்மை பிள்ளைகளுக்கு ஏற்ற ஒரு தந்தை உரு கிடைக்காத நிலையை உருவாக்குகிறது."[44]

56. பாலினம்சார் ஒரு கருத்தியலின் பல்வேறு வடிவங்கள் இன்னொரு சவாலை முன்வைக்கின்றன. அவை "இயல்பிலேயே ஆணுக்கும் பெண்ணுக்கும் உள்ள வேறுபாட்டையும் அவர்களுக்கு இடையே உள்ள சம பரிமாற்றத்தையும் மறுக்கின்றன; குடும்பத்தில் மானிடவியல் அடிப்படையான பாலியல் வேறுபாடுகளை ஒழித்து அத்தகைய வேறுபாடுகள் அற்ற சமூகத்தை எதிர்நோக்கி இருக்கின்றன. இந்தக் கருத்தியல் ஆண், பெண் உடல்சார் வேறுபாடுகளுடன் முற்றிலும் தொடர்பற்ற தனிஆள் தான்மையையும் உணர்ச்சிசார் உறவு நெருக்கத்தையும் வளர்த்தெடுக்கின்றது. இதன் விளைவாக, மனித மாண்பு தனி ஆளின் காலத்திற்கு ஏற்ப மாறக்கூடிய விருப்பத்தேர்வுக்கு விடப்படுவதாக ஆகிறது."[45] சில வேளைகளில் புரிந்துகொள்ளக்கூடிய விளைவுகளுக்குப் பதிலிறுப்புச் செய்ய முனைகின்ற இவ்வகையான கருத்தியல்களுள் சில அறுதியானவையாகவும் கேள்விக்கு உட்படுத்தக் கூடாதவையுமாகத் தங்களை நிலைநாட்டுவதில் வெற்றியடைவதுமின்றிப் பிள்ளைகள் எவ்வாறு வளர்க்கப்பட வேண்டும் எனக் கட்டளையிடுவதும் நம்



கவலைக்குக் காரணமாகிறது. "உடல்சார் பாலியல்பும் சமூக-பண்பாட்டுப் பாலியல்புப் பணிகளும் (பாலினம்) வேறுபடுத்திக் கருதக்கூடியவையே அன்றி, பிரிக்க முடியாதவை"[46] என்பது வலியுறுத்தப்படவேண்டும். மறுபுறம் மனித மகப்பேற்றுத் துறையில் ஏற்பட்டுள்ள தொழில்நுட்பப் புரட்சி ஆண்-பெண் பாலியல் உறவைச் சாராத வகையில் இனப்பெருக்கத்தைத் தூண்டிவிடும் ஆற்றலை அறிமுகப்படுத்தியுள்ளது. இவ்வகையில் தனி ஆள்கள், மணத்துணைவர்கள் விருப்பத்திற்குப் பெரிதும் உட்பட்டு, மனித வாழ்வையும் பெற்றோர் பணியும் தனித்தனி அலகு அமைப்புகளாகவும் பிரிக்கப்படக்கூடிய மெய்மைகளாகவும் ஆக்கப்பட்டுள்ளன."[47] மனித வலுக்குறைவுகளையும் வாழ்வின் குழப்பச் சிக்கல்களையும் புரிந்துகொள்வது ஒன்று; மெய்ம்மையின் பிரிக்கமுடியாத கூறுகளைத் துண்டித்திட முயலும் கருத்தியல்களை ஏற்பது என்பது இன்னொன்று. படைத்தவரது இடத்தைப் பிடிக்க முயலும் குற்றத்தில் நாம் விழாதிருப்போம். நாம் படைப்புகள், எல்லாம் வல்லவர்கள் அல்ல. படைப்பு நமக்கு முந்தியது, கொடையாக நாம் ஏற்றுக்கொள்ள வேண்டியது. அதே வேளையில், நமது மனிதத்தை நாம் காத்துக்கொள்ளவும் அழைக்கப்படுகிறோம். இதன் பொருள் முதன்முதலில் படைக்கப்பட்ட முறையிலேயே அதனை ஏற்கவும் மதிக்கவும் செய்வதே.

57. பல குடும்பங்கள் தங்களை முற்றிலும் நிறைவுள்ளவை எனக் கருதிக்கொள்வதைத் தவிர்த்து, பாதையில் பலமுறை வீழ்ந்திடினும், அன்பில் வாழ்ந்து, தங்கள் அழைத்தலை நிறைவேற்றி, தொடர்ந்து முன்னேறிக்கொண்டிருப்பதற்காக நான் இறைவனுக்கு நன்றி செலுத்துகிறேன். இலட்சியக் குடும்பம் என்னும் மாறா உருவப் படிவம் எதுவும் இல்லை, மாறாகத் தங்களுடைய பல்வேறு மகிழ்ச்சிகள், எதிர்நோக்குகள், பிரச்சினைகள் என்பவற்றுடன் பல வேறுபட்ட மெய்ம்மைகளால் ஆன சவால்மிகு ஓர் ஒட்டுச்சில்யமே அது என்பதை மாமன்றத்தின் லோவி சிந்தனைகள் நமக்குக் காட்டுகின்றன. நம்மைக் கவலைப்படச் செய்யும் சூழ்நிலைகள் சவால்களே. துயர்மிகு புலம்பல்களில் நம் ஆற்றல்களை வீணாக்கும் நிலையில் நாம் மாட்டிக்கொள்ளல் ஆகாது. மாறாக, மறைத்தூதுப் படைப்பாற்றலின் புது வகைகளை நாம் தேடவேண்டும். எதிர்வரும் ஒவ்வொரு சூழ்நிலையிலும் உண்மையின் மற்றும் எதிர்நோக்கின் ஒரு வார்த்தையை வழங்கவேண்டிய அவசியத்தைத் திருஅவை உணர்ந்துள்ளது... திருமணம், கிறிஸ்தவக் குடும்பம்

என்பவற்றின் உயர் விழுமியங்கள் மனித இருப்பின் இன்றியமையாத கூறாக இருக்கும் ஏக்கத்துடன் இயைந்திருப்பவை.''[48] பல பிரச்சினைகளை நாம் பார்க்கின்றோம் என்றால், கொலம்பியா நாட்டு ஆயர்கள் கூறுவதுபோல் அவை ஓர் அழைப்பே. ''நமது எதிர்நோக்கிற்கு உயிரூட்டி, அதனை இறைவாக்கினர்சார் காட்சிகளுக்கும் மாற்றத்தை ஏற்படுத்தும் செயல்பாடுகளுக்கும் படைப்பாற்றல் உள்ள பிறரன்புச் செயல்பாட்டு வடிவங்களுக்கும் ஊற்றுக்கண் ஆக்கிடுவதற்கான அழைப்பு''[49]அது.



# அலகு – 3

## இயேசுவை நோக்கி: குடும்பத்தின் அழைப்பு

58. குடும்பங்களிலும் அவற்றிற்கு இடையிலும் நற்செய்தியின் படிப்பினை எப்பொழுதும் எதிரொலிக்கவேண்டும். அச்செய்தியின் மையமான தொடக்க நம்பிக்கை அறிக்கை ''மிக அழகானதும் மிகச் சிறந்ததும் மிகக் கவர்ச்சியானதும் அதே வேளையில் மிக அவசியமானதும் ஆகும்.[50] அச்செய்தியே ''அனைத்து நற்செய்தி அறிவிப்புச் செயல்பாட்டிலும் மையமான இடத்தைப் பெறவும் வேண்டும்.''[56] அதுவே ''பல்வேறு வகைகளில் நாம் மீண்டும் மீண்டும் செவிகொடுக்கவும் ஒரு வடிவில் அல்லது இன்னொரு வடிவில் எப்போதும் நாம் எடுத்துரைக்கவும் வேண்டிய''[52] முதன்மையும் மிக முக்கியமுமான அறிவிப்பும் ஆகும். உண்மையில் ''அச்செய்தியைவிட அழுத்தமும் ஆழமும் உறுதியும் பொருள் உள்ளதும் மெய்யறிவு மிகுந்ததும் வேறு எதுவும் இல்லை.'' இதன் விளைவாக, அம்முதல் நம்பிக்கை அறிக்கையில் அதிக ஆழமாக நுழைவதிலேயே அனைத்து உருவாக்கமும் அடங்கியுள்ளது.''[53]

59. திருமணம், குடும்பம் என்பவைபற்றிய நமது படிப்பினை அன்பு, மென்மைப் பண்பு என்பவற்றின் இச்செய்தியால் உந்துதலும் உருமாற்றமும் பெறாமல் இருக்க இயலாது. இல்லையெனில் அது உலர்ந்த, உயிரற்ற கொள்கையைப் பாதுகாப்பதாக அமையுமே அன்றி வேறு எதுவுமாக அல்ல. நமக்காகத் தம்மைக் கையளித்தவரும் நம் நடுவே தொடர்ந்து குடியிருப்பவருமான கிறிஸ்துவில் வெளிப்பட்ட இறைத்தந்தையின் வரம்பற்ற அன்பின் ஒளியில்தான் கிறிஸ்தவக் குடும்பம் என்னும் மறைபொருளை முழுமையாக நாம் புரிந்துகொள்ள முடியும். எனவே, மிகப் பல அன்புக் கதைகளின் மையமாக விளங்கும் உயிர்வாழும் கிறிஸ்துவின்மீது என் பார்வையைத் திருப்பவும் உலகில் உள்ள எல்லாக் குடும்பங்களிலும் ஆவியாரின் நெருப்பு பொழியப்படுவதற்காக மன்றாடவும் இப்போது நான் விழைகிறேன்.

60. திருமணம், குடும்பம் என்பவைபற்றித் திருஅவை தருகின்ற படிப்பினையை இந்த அலகு சுருக்கமாக எடுத்தியம்பும். நமது நம்பிக்கை

சிந்தும் ஒளியைப்பற்றி ஆயர் மாமன்றம் கூறுவதையும் இவண் நான் குறிப்பிடவிருக்கிறேன். அவர்கள் இயேசுவின் கண்ணோக்குடன் தொடங்கி ''அவர் இறையாட்சியின் கோரிக்கைகளை அறிக்கையிட்டபோது தாம் சந்தித்த பெண்களையும் ஆண்களையும் எவ்வாறு அன்புடனும் கனிவுடனும் நோக்கி, உண்மையுடனும் பொறுமையுடனும் பரிவிரக்கத்துடனும் அவர்களுடன் வழிநடந்தார்''[24] என எடுத்துரைத்துள்ளனர். குடும்பத்தின் நற்செய்தியை வாழவும் வழங்கவும் நாம் முயலும்போது நம்முடனும் இன்றும் ஆண்டவர் இருக்கின்றார்.

## இறைவனின் திட்டத்தை இயேசு மீட்டுருவாக்கி நிறைவுசெய்கிறார்

61. திருமணத்தைத் தீயது என விலக்கியோருக்கு எதிராகக் ''கடவுள் படைத்த அனைத்தும் நல்லதே... எதையும் விலக்கவேண்டியதில்லை'' (1 திமோ 4:4) எனப் புதிய ஏற்பாடு கற்பிக்கிறது. திருமணம் ஆண்டவர் தரும் ''ஓர் அருள்கொடை'' (1 கொரி 7:7). அதே வேளையில், இத்தகைய நேர்மறையான புரிதலின் காரணமாகவே கடவுளின் அவ்வருள்கொடையைப் பாதுகாக்க வேண்டிய அவசியத்தையும் புதிய ஏற்பாடு வலுவாக அழுத்தியுரைக்கிறது: ''திருமணத்தை அனைவரும் உயர்வாக மதியுங்கள். மணவறைப் படுக்கை மாசுறாமல் இருக்கட்டும்'' (எபி 13:4). இறைவனின் இந்த அருள்கொடை பாலியல்பையும் உள்ளடக்கியதே: ''மணவாழ்க்கைசார் உரிமைகளை ஒருவருக்கொருவர் மறுக்காதீர்கள்'' (1கொரி 7:5).

62. ஆணுக்கும் பெண்ணுக்கும் உரிய கடவுளின் தொடக்கத் திட்டத்தைப் பற்றிப் பேசும்போது இயேசு அவர்களுக்கு இடையில் உள்ள முறிவுபடா ஒன்றிணைப்பை உறுதிப்படுத்தி உரைத்ததையும், 'உங்கள் கடின உள்ளத்தின் பொருட்டே உங்கள் மனைவியரை விலக்கிவிடலாம் என்று மோசே உங்களுக்கு அனுமதி அளித்தார். ஆனால் தொடக்கமுதல் அவ்வாறு இல்லை' (மத் 15:8) என்றுகூட அவர் கூறியுள்ளதையும் ஆயர் மாமன்றத் தந்தையர்கள் குறிப்பிட்டுள்ளனர். 'கடவுள் இணைத்ததை மனிதர் பிரிக்காதிருக்கட்டும்' (மத் 19:6) என எடுத்துரைக்கப்பட்ட திருமணத்தின் முறிவுபடாமை மனிதகுலத்தின் மீது சுமத்தப்பட்ட ஒரு 'நுகத்தடியாக'க் கருப்படலாகாது; மாறாக, திருமணத்தால் இணைக்கப்படுபவர்களுக்குத் தரப்படும் ஓர் அருள்கொடையாகவே அது கருதப்படவேண்டும்... கடவுளின்



தாராள அன்பு நமது மனிதப் பயணத்தில் எப்போதும் நம்முடன் துணைவருகிறது. இறுகிப்போன இதயங்களை அருளால் அது நலப்படுத்தி, உருமாற்றி, சிலுவையின் பாதை வழியாகத் தொடக்க நிலைக்கு மீண்டும் அவற்றைக் கொணர்கிறது. கடவுளின் தொடக்கத் திட்டத்தை மீட்டெடுக்கும் இறைவெளிப்பாட்டின் நிறைவு என திருமணத்தின் பொருளை அறிக்கையிட்ட இயேசுவின் மாதிரியை நற்செய்தி ஏடுகள் தெளிவாகக் காட்டுகின்றன (காண். மத் 19:3).[55]

63. ''தம்மில் அனைத்தையும் ஒப்புரவாக்கிய இயேசு திருமணத்தையும் குடும்பத்தையும் அவற்றின் தொடக்க உருவில் மீட்டெடுத்தார்'' (காண் மத் 10:1-12). திருமணமும் குடும்பமும் கிறிஸ்துவால் மீட்கப்பட்டுள்ளன (காண் எபே 5:21-32); உண்மையான அனைத்து அன்பிற்கும் ஊற்றாகிய மூவொரு கடவுள் எனும் மறைபொருளின் சாயலில் அவை மீட்டுருவாக்கப்பட்டுள்ளன. படைப்பில் தொடங்கப்பட்டு, மீட்பு வரலாற்றில் வெளிப்படுத்தப்பட்டுள்ள மணத்துணைவர்களின் உடன்படிக்கை கிறிஸ்துவிலும் திருஅவையிலும் முழுமையாகப் பொருள்பெறுகின்றது. இறைவனது அன்பிற்குச் சாட்சியம் பகரவும் உறவு ஒன்றிப்பு வாழ்வை வாழ்ந்து காட்டவும் தேவையான அருளை தமது திருஅவை வழியாகக் கிறிஸ்து திருமணத்தின்மீதும் குடும்பத்தின்மீதும் பொழிகிறார். கடவுளின் உருவிலும் சாயலிலும் ஆணும் பெண்ணும் படைக்கப்பட்டதிலிருந்து தொடங்கி (காண் தொநூ 1:26-27), அவ்வுடன்படிக்கையின் மறைபொருள் கிறிஸ்துவில் காலத்தின் இறுதியில் நிகழவிருக்கும் செம்மறியின் திருமணத்துடன் நிறைவுகாணும் வரை (காண் திவெ 19:9) குடும்பத்தின் நற்செய்தி உலக வரலாறு முழுவதும் நீழுவது.''[56]

64. ''இயேசுவின் மாதிரி திருஅவைக்கு ஒரு புரிதல் படிவமாக அமைகிறது... அவர் தமது பொதுத் திருப்பணியைக் கானாவூர்த் திருமண விழாவில் நிகழ்த்திய வியப்புறு செயலுடன்தான் தொடங்கினார் (காண் யோவா 2:1-11). லாசர், அவருடைய சகோதரிகள் என்போரின் குடும்பம் (காண் லூக் 10:38), பேதுருவின் குடும்பம் (காண் மாற் 8:14) என்பவற்றுடன் அன்றாட நட்புறவுப் பொழுதுகளை அவர் பகிர்ந்துகொண்டார். பிள்ளைகளை இழந்த பெற்றோரின் துயரத்தைத் தாமும் உணர்ந்து, அவர்களுடைய பிள்ளைகளுக்கு மீண்டும் உயிரளித்தார் (காண் மாற் 5:41; லூக் 7:14-15).

இவ்வாறு அவர் உடன்படிக்கையின் மீட்டுருவாக்கத்தை உள்ளடக்கிய பரிவிரக்கத்தின் உண்மையான பொருளை வெளிப்படுத்தினார் (காண் 2ஆம் ஜாண் பால், *இரக்கமிகு இறைவன்*, 4). சமாரியப் பெண்ணுடனும் கூடா ஒழுக்கத்தில் பிடிபட்ட பெண்ணுடனும் அவர் நடத்திய உரையாடலில் (காண் யோவா 1:4-30; 8:1-11) இது தெளிவாகத் தெரிகிறது. அதில் இயேசுவின் அருள்கொடையான அன்பைச் சந்தித்ததால் குற்ற உணர்வு தூண்டியெழுப்பப்படுகிறது."[57]

65. நாசரேத்தூரில் ஒரு மனிதக் குடும்பத்தில் வார்த்தை மனிதரான நிகழ்ச்சி தனது புதுமைப் பண்பால் உலக வரலாற்றையே மாற்றியுள்ளது. தமது உதரத்தில் வார்த்தை கருவாகும் வகையில் மரியா வானதூதரின் செய்திக்குத் தந்த "ஆகட்டும்", இயேசுவுக்குப் பெயரிட்டவரும் மரியாவைப் பாதுகாத்தவருமான யோசேப்பின் "ஆகட்டும்" என்பவற்றை உள்ளடக்கிய இயேசுவின் பிறப்பின் மறைபொருளில் நாம் நுழையவேண்டும். தீவனத்தொட்டியின்முன் இடையர்கள் அடைந்த மகிழ்ச்சியையும் ஞானியரின் தொழுகையையும் தம் மக்களின் நாடுகடத்தப்படல், துன்புறுத்தப்படுதல், இழிவுபடுத்தப்படல் எனும் அனுபவங்களில் இயேசு பங்குபெற்ற அவரது எகிப்திய தப்பித்தலையும் நாம் ஆழ்ந்து அருட்சிந்தனை செய்ய வேண்டும். செக்கரியாவின் சமயம்சார் எதிர்பார்ப்பையும் திருமுழுக்கு யோவானின் பிறப்பில் அவர் பெற்ற மகிழ்ச்சியையும் சிமியோனுக்கும் அன்னாவுக்கும் கோயிலில் வெளிப்படுத்தப்பட்ட வாக்குறுதியின் நிறைவேற்றத்தையும் சிறுவர் இயேசுவின் ஞானத்தைக் கேட்டுத் திருச்சட்ட ஆசிரியர்கள் அடைந்த வியப்பையும் நாம் ஆழ்ந்து அருட்சிந்தனை செய்யவேண்டும். தம் கைகளால் வேலைசெய்து, தமது உணவு உறைவிடத்திற்கான வருவாயை இயேசு தேடிக்கொண்ட முப்பது நீண்ட ஆண்டுகளையும் மரபுசார் மன்றாட்டுக்களைச் சொல்லித் தம் மக்களின் நம்பிக்கை வெளிப்பாடுகளில் அவர் பங்கேற்றதையும் தம் குலமுன்னோரின் நம்பிக்கையை அவர் இறையாட்சியின் மறைபொருளில் கனிதரச் செய்யும்வரை அதை அறிந்துகொண்டதையும் நாம் உற்றுநோக்க வேண்டும். குடும்ப வாழ்வின் அழகை மிளிரச் செய்யும் கிறிஸ்து பிறப்பின் மறைபொருளும் நாசரேத்தூர் இரகசியமும் இதுவே. அசிசி பிரான்சிஸ், குழந்தை இயேசுவின் தெரெசா,



சார்ல்ஸ் புக்கோ என்போரை ஈர்த்து வியப்பில் ஆழ்த்தியதும் கிறிஸ்தவக் குடும்பங்களை எதிர்நோக்காலும் மகிழ்ச்சியிலும் நிறைவாக்குவதும் இதுவே.

66. நாசரேத்தூர் திருக்குடும்பம் வாழ்ந்து காட்டிய அன்பு, நம்பிக்கையுடைமை என்பவற்றின் உடன்படிக்கை ஒவ்வொரு குடும்பத்திற்கும் உருக்கொடுக்கும் மூலக் கோட்பாட்டைச் சுடர்விடச் செய்கின்றது; வாழ்வு, வரலாறு என்பவற்றின் வளைவு நெளிவுகளை நன்கு எதிர்கொள்ள அதுவே ஆற்றலும் அளிக்கிறது. அதன் அடிப்படையில் ஒவ்வொரு குடும்பமும், பல குறைகளைக் கொண்டிருப்பினும், இவ்வுலக இருளில் ஒளியாகத் திகழக் கூடிய குடும்ப வாழ்வின் பொருளையும், அதன் அன்புமயமான உறவுஒன்றிப்பையும், அதன் எளிமையும் மிகைமையற்றதுமான அழகையும், அதன் புனிதமானதும் மீறமுடியாததுமான இயற்பண்பையும் நாசரேத்தூர் நமக்குக் கற்றுத்தருகிறது. அதன் பயிற்சி எவ்வளவு இனியதும் இன்றியமையாததும் ஆனது எனவும், சமூக ஒழுங்கமைப்பில் அதன் பங்கு எவ்வளவு அடிப்படையானதும் ஒப்புமையற்றதும் எனவும் அது கற்றுத்தருவதாக (6-ஆம் பவுல், *நாசரேத்தூரில் ஆற்றிய உரை*, 5, ஜனவரி, 1964)."[58]

## திருஅவை ஏடுகளில் குடும்பம்

67. இரண்டாம் வத்திக்கான் சங்கம் திருமணம், குடும்பம் என்பவற்றின் மாண்பைப் பேணி வளர்ப்பதில் தான் கொண்டுள்ள அக்கறையை *மகிழ்வும் எதிர்நோக்கும்* என்னும் தனது அருட்பணிக் கொள்கைத் திரட்டில் வெளிப்படுத்துகிறது (காண். எண் 47-52) அக்கொள்கைத் திரட்டு "அன்பைக் குடும்பத்தின் மையமாக வைத்து, திருமணத்தை வாழ்வு மற்றும் அன்பின் குழுமம் என வரையறுத்துக் கூறுகிறது (காண். 48)... 'கணவனுக்கும் மனைவிக்கும் இடையிலான உண்மையான அன்பு' (49) என்பது இறைத்திட்டத்திற்கு ஏற்ற பாலியல்பு, உணர்ச்சி என்னும் பரிமாணங்களை உள்ளடக்கியதும் ஒருங்கிணைப்பதுமான ஒருவர் ஒருவருக்குச் செய்யும் தற்கையளிப்பைக் கொண்டது (காண் 48-49)". மணத்துணைவர்கள் கிறிஸ்துவில் வேரூன்றியிருப்பதையும் அச்சங்க ஏடு எடுத்துரைக்கிறது. கிறிஸ்து ஆண்டவர் திருமணம் எனும் அருளடையாளத்தின் வழியாகக் கிறிஸ்தவ மணமக்களைச் சந்திக்கிறார்' (48); அவர்களுடன் உடனிருக்கவும்

செய்கிறார். தம் மனிதராதலின் வழியாக அவர் மனித அன்பை ஏற்றெடுக்கிறார், அதனைத் தூய்மைப்படுத்துகிறார்; அதனை நிறைவுக்குக் கொண்டுவருகிறார். தம் ஆவியின் வழியாக நம்பிக்கை, எதிர்நோக்கு, அன்பு என்பவற்றால் மணத்துணைவர்களின் வாழ்வுகளை ஊடுருவி, அவ்வன்பை வளர்த்திட அவர்களை ஆற்றல்படுத்துகிறார். இவ்வாறு, மணமக்கள் புனிதப்படுத்தப்பட்டு, தனி ஓர் அருளின் உதவியால் கிறிஸ்துவின் உடலைக் கட்டியெழுப்பி, இல்லத் திருஅவையை உருவாக்குகின்றனர் (காண் *மக்களின் ஒளி*, 11) இவ்வாறு, திருஅவை தனது மறைபொருளை முழுமையாகப் புரிந்துகொள்ள, தன்னை உண்மையான முறையில் வெளிப்படுத்தும் கிறிஸ்தவக் குடும்பத்தை உற்று நோக்குகிறது.''[55]

68. அருளாளர் 6-ஆம் பவுல் இரண்டாம் வத்திக்கான் சங்கப் பின்னணியில் திருமணம், குடும்பம் என்பவைப்பற்றிய திருஅவையின் படிப்பினையை மேலும் வளர்த்தெடுத்தார். குறிப்பாக, *மானிட உயிர்* எனும் தம் சுற்றுமடல் வழியாகத் திருமண அன்பிற்கும் உயிரின் தோற்றத்திற்கும் இடையிலான உள்ளியல்புசார் இணைப்பை எடுத்துரைத்தார்: 'கணவனும் மனைவியும் பொறுப்புள்ள பெற்றோர் பணியாற்றும் முழுமையான புரிதலைத் திருமண அன்பு கோருகின்றது. இன்று அது போதுமான அளவு அதிகம் அழுத்தம் பெறுவது மட்டுமின்றி, அதே வேளையில் அது சரியாகப் புரிந்துகொள்ளப்பட வேண்டியதாகவும் உள்ளது... பொறுப்புள்ள பெற்றோர் பணியின் செயலாக்கம் கணவனும் மனைவியும் முதன்மைகளின் சரியான ஒழுங்குமுறையைக் காத்து, இறைவனுக்கும் தங்களுக்கும் தங்கள் குடும்பங்களுக்கும் மனித சமூகத்திற்கும் ஆற்றவேண்டிய கடமைகளை அறிந்து ஏற்றுக்கொள்வதையும் கோருகின்றது' (எண் 10). *நற்செய்தி அறிவிப்பு* எனும் தமது திருத்தூது ஊக்கவுரையில் 6-ஆம் பவுல் குடும்பத்திற்கும் திருஅவைக்கும் இடையே உள்ள உறவைத் *தூக்கிக் காட்டுகிறார்*.''[60]

69. குடும்பங்களுக்குத் தாம் எழுதிய *அன்பு மிகுந்த* என்னும் மடலிலும், குறிப்பாகக் *குடும்ப வாழ்வு* என்னும் தமது திருத்தூது ஊக்கவுரையிலும் புனித 2-ஆம் யோவான் பவுல் வழங்கும் மனித அன்புபற்றிய தமது மறைக்கல்வியில் குடும்பத்தின்மீது தனிக் கவனம் செலுத்துகிறார். இவ்வேடுகளில் திருத்தந்தை குடும்பத்தைத் 'திருஅவையின்



வழி' என வரையறுத்துள்ளார். அன்புசெய்ய ஆணும் பெண்ணும் பெற்றுள்ள அழைப்புபற்றிய பொதுவான பார்வையைத் தருவதுடன் குடும்பம்சார் அருட்பணி அக்கறை, சமூகத்தில் குடும்பத்தின் பணி என்பவற்றிற்கான அடிப்படை வழிமுறைகளையும் அவர் முன்மொழிந்துள்ளார். குறிப்பாக, திருமண அன்புபற்றி விளக்கியிருப்பதன் வழியாக (காண் எண் 13) மணத்துணைவர்கள் எவ்வாறு தாங்கள் ஒருவர் ஒருவருக்குக் காட்டும் அன்பில் கிறிஸ்துவின் ஆவியைக் கொடையாகப் பெறுவதுடன் புனிதத்திற்கான தங்கள் அழைப்பையும் வாழுகின்றனர் என விரித்துரைத்துள்ளார்.''[61]

70. திருத்தந்தை 16-ஆம் பெனடிக்ட் *இறைவன் அன்பாய் இருக்கிறார்* எனும் தம் சுற்றுமடலில் கணவன், மனைவிக்கு இடையிலான அன்பின் உண்மை என்பது சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவின் அன்பால் மட்டுமே முழுமையாக ஒளியூட்டப்படுகிறது என்னும் தலைப்புபற்றி மீண்டும் பேசுகிறார் (காண் எண் 2). ஒருவருக்கே உரியதும் அறுதியானதுமான அன்பை அடிப்படையாகக் கொண்ட திருமணம் இறைவனுக்கும் அவருடைய மக்களுக்கும், மக்களுக்கும் அவர்களுடைய கடவுளுக்கும் இடையே உள்ள உறவின் உருவச் சின்னம் ஆகிறது என்பதை அவர் அழுத்தியுரைத்தார். இறைவனின் அன்புப் பாணி மனித அன்பிற்கு அளவுகோல் ஆகிறது'' (11) மேலும், *உண்மையில் விளங்கும் அன்பு* என்னும் சுற்றுமடலில் அவர் சமூகத்தில் வாழ்வதன் மூலக் கோட்பாடு அன்பே என்னும் வகையில் அதன் முக்கியத்துவத்தைச் சுட்டிக்காட்டியுள்ளார் (காண் 44). அச்சமூகமே பொது நலன்பற்றி அனுபவமுறையில் நாம் அறிந்துகொள்ளும் இடம்.''[62]

## திருமணம் எனும் அருளடையாளம்

71. "குடும்பத்தின் தோற்றக்கூறுகளைக் கொண்டதாக வெளிப்படுத்தப்படும் மூவொரு கடவுள் பற்றிய அறிவைத் திருநூலும் மரபும் நமக்குத் தருகின்றன. ஆள்களின் ஒன்றிணைப்பாக விளங்கும் கடவுளின் சாயலே குடும்பம். கிறிஸ்து திருமுழுக்கு பெற்றபோது அவரைத் தம் அன்பு மகன் என அழைத்த தந்தையின் குரல் கேட்கப்பட்டது. அந்த அன்பில் நாம் தூய ஆவியாரையும் காணமுடியும் (காண் மாற் 1:10-31). அனைத்தையும் தம்மில் ஒப்புரவாக்கியவரும் பாவத்திலிருந்து நம்மை மீட்டவருமான இயேசு

திருமணத்தையும் குடும்பத்தையும் அவற்றின் தொடக்க உருவில் மீட்டெடுத்தது மட்டுமின்றி திருஅவைமீது அவர் கொண்டுள்ள அன்பின் ஓர் அருளடையாளச் சின்னமாகவும் திருமணத்தை உயர்த்தினார் (காண் மத் 19:1-12; மாற் 10:1-12; எபே 5:21-32). உண்மை அன்பு அனைத்திற்கும் ஊற்றாகிய மூவொரு கடவுளின் 'உருவும் சாயலும்' (காண் தொநூ 1:26) கிறிஸ்துவில் ஒன்றுகூட்டப்பெற்ற மானிடக் குடும்பத்தில் மீட்டெடுக்கப்பட்டுள்ளன. திருஅவை வழியாகத் திருமணமும் குடும்பமும் கிறிஸ்துவிடமிருந்து வரும் தூய ஆவியின் அருளைப் பெறுகின்றன. இதனால் அவை இறைவனது அன்பின் நற்செய்திக்குச் சாட்சியம் பகர முடியும்."[63]

72. திருமணம் எனும் அருளடையாளம் ஒரு வெறும் சமூக வழக்கமோ, வெற்றுச் சடங்கோ, அர்ப்பணத்தின் வெறும் புறக் குறியீடோ அல்ல. இந்த அருளடையாளம் மணத்துணைவர்கள் புனிதமடைவதற்காகவும் மீட்புப் பெறுவதற்காகவும் தரப்பட்டுள்ள அருட்கொடை: ஏனெனில், "அவர்கள் ஒருவருக்கு ஒருவர் உரியவர் ஆவது அருளடையாளக் குறியீட்டின் வழியாக கிறிஸ்துவுக்கும் திருஅவைக்கும் உள்ள அதே உறவின் உண்மையான வெளிப்பாடு ஆகும். இதனால் மணத்துணைவர்கள் இருவரும் திருஅவைக்குச் சிலுவையில் நிகழ்ந்ததன் நிலையான நினைவுறுத்தல் ஆகின்றனர். ஒருவர் ஒருவருக்கும் தங்கள் பிள்ளைகளுக்கும் அவர்கள் தாங்கள் பங்குபெறும் அருளடையாளம் வழங்குகின்ற மீட்பின் சாட்சிகளாகத் திகழ்கின்றனர்."[64] திருமணம் ஓர் இறை அழைத்தல். கிறிஸ்துவுக்கும் திருஅவைக்கும் இடையிலான அன்பின் குறையுள்ள குறியீடாக திருமண அன்பை அனுபவிப்பதற்கான தனிப்பட்ட அழைத்தலுக்குரிய பதிலிறுப்பாக அது விளங்குகின்றது. இதனால் திருமணம் செய்யவும் குடும்பத்தை உருவாக்கவும் செய்யப்படும் முடிவு இறை அழைத்தலைத் தெளிந்து தேர்வுசெய்யும் வழிமுறையின் கனியாக இருக்கவேண்டும்.

73. "திருமணம் எனும் அருளடையாளத்தில் செய்யப்படும் ஒருவர் ஒருவருக்கான தற்கையளிப்பு ஒவ்வோர் ஆளும் திருஅவையில் கிறிஸ்துவுடன் செய்துள்ள அடித்தள உடன்படிக்கையை ஏற்படுத்தும் திருமுழுக்கு அருளில் வேரூன்றியிருக்க வேண்டும். மணஉறுதி செய்துள்ள இருவரும் ஒருவர் ஒருவரை ஏற்றுக்கொள்ளும்போது கிறிஸ்துவின் அருளுதவியுடன் முழுமையான தற்கையளிப்பு, நம்பிக்கையுடைமை, புது



உயிரை ஏற்றல் என்பவற்றையும் ஒருவருக்கொருவர் வாக்குறுதியாக அளிக்கின்றனர். இவை திருமணத்தின் இன்றியமையா இயல்புக் கூறுகள், தங்களுக்கு இறைவன் தந்துள்ள கொடைகள் எனக் கருதி அவர்கள் இறைவனின் பெயரிலும் திருஅவையின் முன்னிலையிலும் ஒருவர் ஒருவருக்குச் செய்யும் அர்ப்பணத்தை முக்கியம் என ஏற்றுக்கொள்கின்றனர். அருளடையாளம் வழங்கும் அருளுதவியுடன் இன்னும் சிறப்பாகக் கடைப்பிடிக்கக் கூடிய அர்ப்பணங்கள் எனத் திருமணத்தின் நலன்களை ஏற்றுக்கொள்வதை நம்பிக்கை இயன்றது ஆக்குகின்றது... இதனால் இயேசுவை நோக்கும் மணத்துணைவர்கள் இருவருமே குடும்பத்தின் இதயம் எனத் திருஅவை கண்நோக்குகிறது."[65] அருளடையாளம் ஒரு பொருளோ, ஆற்றலோ அல்ல; ஏனெனில், கிறிஸ்துவே அதில் "இப்போது கிறிஸ்தவ மணமக்களைச் சந்திக்கிறார்... அவர்களுடன் அவர் குடியிருக்கிறார்; தங்கள் சிலுவைகளைத் தூக்கிக்கொண்டு அவரைப் பின்தொடரவும், அவர்கள் விழுந்தபின் எழுந்திடவும், ஒருவரை ஒருவர் மன்னிக்கவும், ஒருவர் ஒருவருடைய பாரங்களைச் சுமக்கவும் அவர் அவர்களுக்கு ஆற்றல் அளிக்கிறார்."[66] சிலுவையில் முத்திரையிடப்பட்ட உடன்படிக்கையின் வழி கிறிஸ்து தமது திருஅவையை எவ்வளவு அன்புசெய்கிறார் என்பதற்குக் கிறிஸ்தவத் திருமணம் ஒரு குறியீடாகத் திகழ்கிறது. அதே அன்பினை மணத்துணைவர்களின் உறவு ஒன்றிப்பின் வழியாக அது உடனிருக்கவைக்கவும் செய்கிறது. ஒருடலாய் ஆவதன் வழியாக அவர்கள் இறைமகன் மனித இயல்பை மணம்செய்ததை ஊனுருவில் வெளிப்படுத்துகின்றனர். இதனால்தான் "அவர்களுடைய அன்பு மற்றும் குடும்ப வாழ்வின் மகிழ்ச்சிகளின் வழியாக இம்மண்ணிலேயே அவர் அவர்களுக்குச் செம்மறியின் திருமண விழாவின் முன்சுவையைத் தருகிறார்"[67] கணவன், மனைவி என்னும் மனித மணத்துணைவர் ஆகியோரைக் கிறிஸ்து மற்றும் அவரது திருஅவையுடன் ஒப்புமைப்படுத்துவது "குறையுற்றதாக"[68] இருப்பினும் ஒவ்வொரு மணத்துணைவர் இணையின்மீதும் ஆண்டவர் தம் இறையன்புப் பெருக்கைப் பொழிந்திடுமாறு அவரை இறைஞ்ச அது நம்மைத் தூண்டுகிறது.

74. அன்பில் அனுபவிக்கப்படுவதும் அருளடையாளத்தால் புனிதப்படுத்தப்பட்டதுமான பாலியல் கூடல் மணத்துணைவர்கள் அருள்வாழ்வில் வளர வழியாகிறது. அதுவே "திருமண மறைபொருள்."[69] அவர்களது உடல்சார் ஒன்றிப்பின் பொருளும் பலனும் அவர்கள் தங்கள் வாழ்வுகளை முழுமையாகப் பகிர்ந்துகொள்வதற்காக அவர்கள் ஒருவர் ஒருவரை ஏற்கவும் ஒருவர் ஒருவருக்குத் தங்களையே கையளிக்கவும் முன்வந்த உடன்பாட்டு வார்த்தைகளில் எடுத்துரைக்கப்படுகின்றன. அவ்வார்த்தைகள் பாலுறவுக்குப் பொருள் தருவதுடன் அதனைப் பொருள் தெளிவின்மையிலிருந்து விடுவிக்கின்றன. பொதுவாக நோக்கின், கணவன் மனைவியின் பொதுவான வாழ்வும் தங்கள் பிள்ளைகளுடனும் தங்களைச் சுற்றியுள்ள உலகுடனும் அவர்கள் உருவாக்கிக்கொள்ளும் அனைத்து உறவு வலைப்பின்னல்களும் அருளடையாள அருளில் ஆழப் பதிக்கப்பட்டு, அதனால் ஆற்றல் அடையவும் செய்கின்றன. கடவுள் நம்முடன் ஒன்றிணைந்து தமது அன்பின் நிறைவை மனிதகுலத்திற்கு வெளிப்படுத்திய அவரது மனிதராதல், பாஸ்கா மறைபொருள் என்பவற்றிலிருந்து திருமணம் என்னும் அருளடையாளம் ஊற்றெடுக்கிறது. மணத்துணைவருள் எவரும் தம்முன் வரும் எந்தச் சவாலையும் தனியாக எதிர்கொள்வதில்லை. அர்ப்பணம், படைப்பாற்றல், நிலையுறுதி, அன்றாட முயற்சி என்பவற்றுடன் இருவருமே இறைவனது அருட்கொடைக்கு பதிலிறுப்பு செய்ய அழைக்கப்படுகின்றனர். தாங்கள் எதிர்கொள்ளும் எச்சூழலிலும் தூய ஆவியாரின் அருளை உணரும் வகையில் அவர்களது ஒன்றிப்பைப் புனிதப்படுத்திய அவரது உதவியை அவர்கள் எப்போதும் கோரி மன்றாடமுடியும்.

75. திருஅவையின் இல்லத்தின் மரபில் திருமணம் செய்யும் ஆணும் பெண்ணுமே திருமண அருளடையாளத்தின் திருப்பணியாளர்கள்;[70] தங்கள் உடன்பாட்டை எடுத்துரைப்பதாலும் உடல்சார்ந்த முறையில் அதனை வெளிப்படுத்துவதாலும் அவர்கள் ஒரு பெரும் அருட்கொடையைப் பெற்றுக்கொள்கின்றனர். அவர்களது உடன்பாடும் உடல்சார் ஒன்றிப்பும் அவர்கள் "ஓர் உடல்" ஆக இறைவன் ஏற்படுத்தியுள்ள வழிமுறைகள். தங்கள் திருமுழுக்கு அர்ப்பணத்தின் வழியாக அவர்கள் ஆண்டவரின் திருப்பணியாளர்களாகத் திருமணத்தில் ஒன்றிணையவும் அதன்வழியாக



இறைவனது அழைப்பிற்குப் பதிலிறுக்கவும் ஆற்றல்படுத்தப்பட்டனர். இதனால், கிறிஸ்தவர் அல்லாத இரு மணத்துணைவர்கள் திருமுழுக்குப் பெறும்போது அவர்கள் தங்கள் திருமண உறுதியேற்புகளைப் புதுப்பிக்க வேண்டிய அவசியம் இல்லை; திருமுழுக்குப் பெறுவதன் வழியாக அவர்களது ஒன்றிணைப்பு தன்னியல்பாகவே அருளடையாளப் பண்பைப் பெறுவதால் அவர்கள் அவ்வுறுதியேற்புகளை விட்டுவிடாமல் இருந்தாலே போதும். திருநிலைப்பாடு பெற்ற திருப்பணியாளரின் உடனிருப்பு இன்றி கொண்டாடப்படும் குறிப்பிட்ட சில ஒன்றிணைப்புகள் செல்லுபடியாதல் நிலையில் உள்ளவை என்பதையும் திருஅவைச் சட்டம் ஏற்றுக்கொள்கிறது.[71] இயேசுவினுடைய மீட்பின் அருளால் இயல்புசார் ஒழுங்கமைவு எவ்வளவு ஊடுருவப்பட்டுள்ளது என்றால் "திருமுழுக்குப் பெற்ற ஆள்களிடையே நிகழும் செல்லுபடியாகும் திருமண ஒப்பந்தம், தன் இயல்பிலேயே அருளடையாளமற்றதாக இருத்தல் இயலாது."[72] சாட்சிகள் முன்னிலையிலும் காலத்திற்கு ஏற்ப மாறிவந்துள்ள வேறு நிபந்தனைகளுடனும் திருமண நிகழ்வு பொதுஅரங்கில் கொண்டாடப்பட வேண்டும் எனத் திருஅவை கோரலாம்; ஆனாலும் திருமணம் செய்துகொள்ளும் மணமக்களே அவ்வருடையாளத்தின் திருப்பணியாளர்கள் எனும் மெய்ம்மை அதனால் மாற்றப்பெறுவதில்லை; ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே அருளடையாளப் பிணைப்பை ஏற்படுத்தும் அவர்களது உடன்பாட்டின் மைய இடத்தையும் அது மாற்றுவதில்லை. இவற்றைக் கூறியபின் திருமணச் சடங்குமுறையில் கடவுளின் செயல்பாடுபற்றி இன்னும் அதிகமாகச் சிந்திப்பது அவசியமாகிறது. இது கீழைத் திருஅவைகளில் ஆவியாரது கொடையின் அடையாளமாக மணமக்கள் பெறும் ஆசிக்குத் தரப்படும் முக்கியத்துவத்தில் தெளிவாக வெளிப்படுகிறது.

## வார்த்தையின் விதைகளும் குறையுள்ள சூழமைவுகளும்

76. "குடும்பத்தின் நற்செய்தி முளைக்கக் காத்திருக்கும் விதைகளுக்கு ஊட்டமளிப்பதுடன், கண்டுகொள்ளாமல் விடக்கூடாத வாடும் செடிகளையும் பராமரிப்பதற்கான அடிப்படையாகவும் அமைகிறது."[73] இவ்வாறு, அருளடையாளத்தில் கிறிஸ்து தந்துள்ள கொடையை அடிப்படையாகக்

கொண்டு திருமணம் செய்துள்ள இருவரும் “தங்கள் வாழ்வுகளில் இம்மறைபொருளைப் பற்றிய அதிக ஆழமான புரிதலையும் அதன் அதிக முழுமையான ஒருங்கிணைப்பையும் அடையப் படிப்படியாக வழிநடத்தப்படுவர்.”[74]

77. அனைத்தும் கிறிஸ்து வழியாகவும் கிறிஸ்துவுக்காகவும் படைக்கப்பட்டுள்ளன (காண் கொலோ 1:16) என்னும் விவிலியப் படிப்பினையை முன்வைத்து, ஆயர் மாமன்றத் தந்தையர்கள் பின்வருமாறு குறிப்பிடுகின்றனர்: “படைப்பின் ஒழுங்குமுறையை மீட்பின் ஒழுங்குமுறை ஒளிரச்செய்து நிறைவாக்குகிறது. எனவே இயல்புசார் திருமணம் என்பது திருமணம் என்னும் அருளடையாளத்தின் வழியாகப் பெறும் அதன் நிறைவாக்கத்தின் ஒளியில்தான் முழுமையாகப் புரிந்துகொள்ளப்பட வேண்டும். கிறிஸ்துவை ஆழ்நிலை அருள்சிந்தனை செய்வதன் வழியாகவே எந்த ஆளும் மனித உறவுகளின் ஆழ்ந்த உண்மையைப்பற்றித் தெரிந்துகொள்ளமுடியும். ‘மனிதராகப் பிறந்த வாக்கின் மறைபொருளில்தான் மனிதரின் மறைபொருள் உண்மையாகவே விளக்கம் பெறுகிறது... புதிய ஆதாம் கிறிஸ்து, தந்தையுடையவும் அவரது அன்பினுடையவும் மறைபொருளை வெளிப்படுத்துவதின் வழியாக மனிதரை மனிதருக்கே முழுமையாக வெளிப்படுத்தி, அவர்களின் உயரிய அழைப்பை அவர்களுக்குத் தெளிவுபடுத்துகிறார் (*மகிழ்வும் எதிர்நோக்கும்*, 22). ஒருமை, உயிரினை ஏற்றல், நம்பிக்கையுடைமை, முறிவுபடாமை என்பவையும், கிறிஸ்தவத் திருமணத்தில் ஆண்டவருடன் கொண்டுள்ள முழுமையான நட்புறவு நோக்கிய பாதையில் ஒருவர் ஒருவருக்குத் தரும் ஆதரவும் ஆகிய மணத்துணைவர்களின் நலன்களைக் கிறிஸ்துமையக் கண்ணோக்கில் புரிந்துகொள்ள இது தனிப்பட்டமுறையில் உதவுகிறது.[75] “ஏனைய பண்பாடுகளில் உள்ள ‘வார்த்தையின் வித்துகளை’ (காண் *மக்களினத்தார்க்கு* 11) ஆய்ந்தறிதல் திருமணம், குடும்பம் எனும் மெய்மைகளுக்கும் பொருந்துவதே. உண்மையான இயல்புசார் திருமணத்துடன் பிற சமய மரபுகளில் உள்ள திருமண வகைகளில் சில வேளைகளில் மறைவாகவே காணக்கிடக்கும் நேர்மறைக் கூறுகள் உள்ளன. மக்கள் சமூகம், சமயம் அல்லது நிலப்பகுதி என்பவற்றுள் எதைச் சார்ந்திருப்பினும் தீமையை மேற்கொள்ளும் நோக்குடைய எச்செயலையும் கண்டு எழுச்சியடையப் பிள்ளைகளுக்குக் கற்றுத்தரும் குடும்பத்தை இவ்வுலகில் உருவாக்க விழையும் எல்லாரும் நமது நன்றியையும் பாராட்டையும் பெறுவர். அத்தகைய குடும்பம் தூய ஆவியார் உயிருடன் இருந்து செயலாற்றுகிறார் என்பதைக் காட்டுகிறது.”[77]

78. “கிறிஸ்துவின் ஒளி ஒவ்வொரு மனிதரையும் ஒளிர்விக்கின்றது (காண் யோவா 1:9 *மகிழ்வும் எதிர்நோக்கும்*, 22). கிறிஸ்துவின் கண்களுடன் மெய்ம்மைகளைப் பார்ப்பது கூடி வாழுகின்றவர்கள், அல்லது சமூக அரங்கில் மட்டுமே திருமணம் செய்துள்ளவர்கள், அல்லது மணவிலக்கு பெற்று மறு திருமணம் செய்துள்ளவர்கள் என்னும் நம்பிக்கையாளர்கள் மீது கொண்டிருக்க வேண்டிய அருள்பணிசார் அக்கறையைத் தூண்டியெழுப்புகின்றது. தனது வாழ்வில் குறையுற்ற முறையில் பங்குபெறுபவர்களையும் திருஅவை இறைப் பயிற்றுமுறையைப் பின்பற்றி அன்புடன் கண்ணோக்குகிறது; அவர்களின் மனமாற்றத்திற்கான அருளைத் தேடுகிறது; நல்லதைச் செய்யவும் ஒருவர் ஒருவரை அன்புடன் பராமரிக்கவும் தாங்கள் வாழ்ந்து வேலைசெய்யும் குழுமத்திற்காகப் பணியாற்றவும் அவர்களை அது ஊக்குவிக்கிறது... ஒழுங்குமுறையற்ற ஒன்றிணைப்பில் வாழுகின்ற மணத்துணைவர்கள் ஆழ்ந்த அன்புணர்வு, பிள்ளைகள்பால் பொறுப்புடைமை, இடர்களை மேற்கொள்ளும் ஆற்றல் எனும் பண்புகளைக் கொண்ட ஒரு குறிப்பிடத்தக்க நிலையுறுதி என்பவற்றைப் பொதுஅரங்குப் பிணைப்பின்வழி அடைந்துள்ளபோது இயலும் சூழ்நிலைகளில் அதனைத் திருமண அருளடையாளத்தைக் கொண்டாடுவதற்கு இட்டுச் செல்லும் ஒரு வாய்ப்பாகக் கருத முடியும்.”[78]

79. “கடினமான சூழ்நிலைகளையும் காயப்பட்ட குடும்பங்களையும் சந்திக்கும்போது இந்தப் பொதுவான மூலக் கோட்பாட்டை நினைவுபடுத்திக்கொள்வது அவசியம்: ‘உண்மைக்காக, சூழ்நிலைகளைக் கவனமாகத் தெளிந்து தேர்வுசெய்யும் கடமை அவர்களுக்கு உண்டு என அருள்மேய்ப்பர்கள் அறிந்திருக்கவேண்டும்’ (*குடும்ப வாழ்வு* 24). பொறுப்பின் அளவு எல்லாப் பிரச்சினைகளிலும் சமமானது அல்ல; மேலும் முடிவெடுக்கும் ஆற்றலைக் குறைக்கும் காரணிகள் இருக்கக்கூடும். எனவே, திருஅவையின் படிப்பினையைத் தெளிவாக எடுத்துரைக்கும்போது பல்வேறு சூழ்நிலைகளின் சிக்கலான தன்மையைக் கருத்தில் கொள்ளாது

தீர்ப்பிடுவதை அருள்மேய்பர்கள் தவிர்க்க வேண்டும். மேலும், தங்கள் நிலை காரணமாக மக்கள் எவ்வாறு மனப்பாரங்களை அனுபவிக்கவும் தாங்கவும் செய்கின்றனர் என்பதை அவர்கள் கட்டாயமாகக் கவனிக்க வேண்டும்.''[79]

## உயிரை வழங்குவதும் பிள்ளைகளை வளர்ப்பதும்

80. திருமணம் என்பது முதலில் ''வாழ்வு, அன்பு என்பவைசார் நெருக்கமான கூட்டுப் பங்கேற்பு ஆகும்.''[80] அது மணத்துணைவர்களின் நலனுக்காகவும்[81] பாலியல்பு என்பது ஆண், பெண் இருவரின் இல்லறப் பாலுறவு அன்பிற்காகவும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.''[82] இதனால் கடவுளிடமிருந்து பிள்ளைவரம் பெறாத மணத்துணைவர்கள்கூட மனித, கிறிஸ்தவ எனும் இரு வகைகளிலும் நிறைவான பொருள் உள்ள இல்லற வாழ்வு நடத்தமுடியும்.''[83] எனினும், இல்லறப் பாலுறவு ஒன்றிப்பு ''தன் இயல்பாகவே''[84] பிள்ளைப்பேற்றை நோக்கி ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. பிறக்கும் எந்தக் குழந்தையும் 'மணத்துணைவர்கள் ஒருவர் ஒருவர்மீது கொண்டுள்ள அன்பிற்குப் புறமிருந்து கொண்டுவந்து சேர்க்கப்பட்ட ஒன்றாக வருவதில்லை; மாறாக அது அவர்கள் ஒருவர் ஒருவருக்குச் செய்யும் தற்கையளிப்பின் மையத்திலிருந்து அதன் கனியாகவும் நிறைவாக்கமாகவும் தோன்றுவதே.''[85] ஆணோ பெண்ணோ அக்குழந்தை ஒரு வளரியக்கத்தின் இறுதியில் தோன்றுவது அல்ல; அன்பின் தொடக்கத்திலிருந்தே அதன் இன்றியமையாத கூறாக அது உடனிருக்கிறது. அவ்வன்பை உருக்குலைக்காமல் இதனை மறுக்க இயலாது. தன்னைத் தனக்குள் மூடிக்கொள்ள வைக்கும் ஒவ்வோர் உள்தூண்டுதலையும் அன்பு தொடக்கத்திலிருந்தே ஏற்க மறுக்கிறது. தனக்கு அப்பால் தன்னை இட்டுச்செல்லும் ஒரு கனியுடைமையை ஏற்க அது எப்போதும் திறந்தே இருக்கிறது. இதனால், கணவன் மனைவி இருவரின் பிறப்புறுப்புசார் எச்செயலும், பல்வேறு காரணங்களால் அது எப்போதும் புதிய உயிரைப் பிறப்பிப்பதில்லை என்றாலும்கூட, இப்பொருளை மறுக்க இயலாது.[86]

81. எக்குழந்தையும் அந்த அன்பிலிருந்து பிறக்கும் தகுதி படைத்ததே அன்றி, வேறு எவ்வகையிலும் அல்ல. ஏனெனில் ''ஆணோ பெண்ணோ அது எவரது உடைமையும் அல்ல; மாறாக அது ஒரு கொடையே.''[87] அது பெற்றோரது தனிக் குறிப்பிட்ட இல்லறப் பாலுறவு அன்புச் செயலின்



கனியே.[88] இந்த மெய்ம்மைக்குக் காரணம் ''படைப்பின் ஒழுங்கு முறைப்படி ஆண், பெண் இடையிலான இல்லறப் பாலுறவு அன்பும் அடுத்த தலைமுறைக்கு உயிரை வழங்குதலும் ஒன்றிற்கு ஒன்று என்றே அமைக்கப்பட்டுள்ளன (காண் தொநூ 1:27-28). இவ்வாறு, படைத்தவர் ஆணையும் பெண்ணையும் தமது படைப்பு வேலையில் பங்கேற்கச் செய்தார்; அதே வேளையில் மனித உயிரை அடுத்த தலைமுறைக்குத் தருவதன் வழியாக மனிதகுலத்தின் வருங்காலத்திற்கான பொறுப்பை அவர்களிடம் ஒப்படைத்து, அவர்களைத் தமது அன்பின் கருவிகளாக ஆக்கியுள்ளார்.''[89]

82. ''மனித உயிரின் பிறப்பை தனி ஒருவரின் அல்லது மணத்துணைவர்களின் திட்டங்களுக்கு விட்டுவிடவேண்டிய ஒன்றாகக் குறைத்துக் கருதிடும் ஒரு வகை மனநிலையின் வளர்ச்சி தெளிவாகத் தென்படுகிறது''[90] என ஆயர் மாமன்றத் தந்தையர்கள் கூறியுள்ளனர். கணவன், மனைவி என்னும் தங்களது உறவு ஒன்றிப்பை மணத்துணைவர்கள் முழுமையாகவும் ஒருங்கிணைவுடனும் உணர்வுபூர்வமாகவும், உயிரைப் பிறப்பிக்கும் தங்களது பொறுப்புணர்வுடன் அனுபவித்திட உதவும் நோக்கு உடையதே திருஅவையின் படிப்பினை. அருளாளர் திருத்தந்தை 6-ஆம் பவுலின் *மானிட உயிர்* எனும் சுற்றுமடலின் செய்தியை மீண்டும் நாம் கருத்தில் கொள்ளவேண்டும். பிறப்புக் கட்டுப்பாடு முறைகள் பற்றி அறம்சார் மதிப்பீடு செய்யும்போது மனித ஆளின் மாண்பைக் காப்பதன் அவசியத்தை அது எடுத்துரைக்கிறது. மகவேற்பு செய்ய அல்லது வளர்ப்புப் பெற்றோராக செயல்படச் செய்யப்படும் தேர்வும் திருமணத்திற்குரிய கனியுடைமையின் வெளிப்பாடாக அமையமுடியும். ''பல்வேறு ஊனங்களைக் கொண்ட குழந்தைகளை ஏற்று, வளர்த்து, அன்புணர்ச்சியால் அவர்களைச் சூழச்செய்யும் குடும்பங்ளை''[92] திருஅவை தனிப்பட்ட நன்றியுணர்வுடன் ஆதரிக்கிறது.

83. குடும்பம் உயிரின் புனித இடம், உயிர் கருவாகி பராமரித்து வளர்க்கப்படும் இடம். அவ்வாறெனில் உயிரை ஏற்க மறுக்கும் அல்லது அழிக்கும் இடமாக அது ஆவது மிகக் கொடுமையான முரண்பாடு என்பதை நான் எடுத்துரைப்பது மிக அவசரம் என உணர்கிறேன். மனித உயிரின் மதிப்பு எவ்வளவும் உயர்வானது, தாயின் உதரத்தில் வளரும் மாசற்ற

குழந்தையின் உயிர்வாழும் உரிமை எவ்வளவும் மறுக்கமுடியாதது. இதனால் தனது உடல்மீதான உரிமை எனக் கூறப்படும் எதுவும் அவ்வுயிரை அழிக்கும் முடிவை நியாயப்படுத்த முடியாது. அவ்வுயிர் தன்னிலேயே ஒரு குறிக்கோள் என்னும் இயல்பு உடையது மட்டுமின்றி அது இன்னொரு மனிதருடைய "உடைமையாக" ஒருபோதும் கருதப்படக்கூடாதது. மனித உயிரை அதன் இறுதி நிலை உட்பட எல்லா நிலைகளிலும் குடும்பம் பாதுகாக்கிறது. இதனால் நலவாழ்வு மையங்களில் வேலைசெய்வோர் தங்கள் மனச்சான்றுசார் எதிர்ப்பை வெளிப்படுத்தும் தங்களது அறம்சார் கடமைபற்றி நினைவுறுத்தப்படுகின்றனர். அதுபோல, மிகையான மருத்துவமும் கருணைக் கொலையும் அற்ற இயற்கையான சாவுக்கான உரிமையை ஆணித்தரமாக எடுத்துரைக்கும் அவசரத்தைத் திருஅவை உணர்வது மட்டுமின்றி கொலைத் தண்டனையையும் உறுதியாக ஏற்க மறுக்கிறது."[93]

84. "பிள்ளைகளை வளர்ப்பது என்பது இன்று குடும்பங்கள் எதிர்கொள்ளும் அடிப்படைச் சவால்களுள் ஒன்று" என்பதை ஆயர் மாமன்றத் தந்தையர்கள் அழுத்திக் கூற விழைகின்றனர். "இன்றைய பண்பாட்டு மெய்ம்மை, ஊடகங்களின் ஆற்றல்மிகு தாக்கம் என்பவற்றால் அது இன்னும் அதிகக் கடினமானதும் சிக்கல் மிகுந்ததுமாக ஆகியுள்ளது."[94] "வரவேற்கும் குழுமங்கள் வழியாகக் கிறிஸ்தவப் புகுமுகப்படுத்தலில் தொடங்கி குடும்பங்களுக்கு ஆதரவு தரும் பயனுள்ள பணியைத் திருஅவை ஆற்றுகிறது."[55] அதே வேளையில், பிள்ளைகளின் ஒட்டுமொத்தக் கல்வி பெற்றோரின் "மிக முக்கிய கடமையும்" "முதன்மையான உரிமையும்" ஆகும்[96] என்பதை எடுத்துரைப்பது முக்கியமானது என நான் உணருகிறேன். இது ஒரு வேலையோ, சுமையோ அல்ல; மாறாக, அது பெற்றோர் பாதுகாக்க அழைக்கப்படும் இன்றியமையாததும் அவர்கள் விட்டுவிட முடியாததுமான அவர்களுடைய உரிமையும் ஆகும். அதை அவர்களுக்கு மறுத்திட யாருக்கும் உரிமை இல்லை. பெற்றோர் மறுக்கக்கூடாத இப்பணியில் அவர்களுக்கு உதவிடும் வகையில் அரசு துணையான முறையில் கல்வித் திட்டங்களை வழங்குகிறது. ஆனால் தங்களுடைய உறுதிப்பாடுகளுக்கு ஏற்ப தங்களால் இயன்றதும் தரமானதுமாகத் தங்கள் பிள்ளைகளுக்குத் தாங்கள் தர விழையும் கல்வியைச் சுதந்திரமாகத் தேர்ந்தெடுக்கும் உரிமை பெற்றோருக்கு உண்டு. கல்விக்கூடங்கள் பெற்றோருக்கு மாற்றாக இருப்பவை அல்ல;



மாறாக, அவை அவர்களது பணியை நிறைவாக்குபவையே. "கல்வி வழங்குவதில் ஏனைய எல்லாப் பங்கேற்பாளர்களும் பெற்றோரின் பெயராலும் அவர்களது உடன்பாட்டுடனும் ஓரளவு அவர்களால் அதிகாரம் அளிக்கப்பட்டும்தான் தங்கள் பொறுப்புக்களை நிறைவேற்றுகின்றனர்"[97] என்பதே அடிப்படைக் கோட்பாடு. இருப்பினும் குடும்பத்திற்கும் சமூகத்திற்கும், குடும்பத்திற்கும் கல்விக்கூடத்திற்கும் இடையே ஒரு பிளவு ஏற்பட்டுள்ளது; கல்விசார் உடன்பாடு இன்று உடைபட்டுள்ளது; இதனால் சமூகத்திற்கும் குடும்பத்திற்கும் இடையே இருந்த கல்விக் கூட்டுறவு இன்று நெருக்கடியில் உள்ளது."[98]

85. பெற்றோர் தங்களது கல்விசார் திருத்தூதுப் பணியை நிறைவேற்ற அவர்களுக்கு உதவிடும் வகையில் ஏற்ற அருள்பணி முதன்முயற்சிகள் வழியாகத் திருஅவை அவர்களுடன் ஒத்துழைக்க அழைக்கப்படுகிறது. பெற்றோர் தங்களுக்கு உரிய பணியைப் போற்றவும் திருமணம் எனும் அருளடையாளப் பேற்றின் வழியாக அவர்கள் தங்கள் பிள்ளைகளது கல்வியின் திருப்பணியாளர்கள் ஆகின்றனர் என்பதை அவர்கள் உணர்ந்திட உதவும் வகையிலும் திருஅவை எப்போதும் செயல்படவேண்டும். பிள்ளைகளுக்கு கல்வி அளிப்பதன் வழியாக அவர்கள் திருஅவையைக் கட்டி எழுப்புகின்றனர்;[99] இவ்வாறு செயல்படுவதன் வழியாக அவர்கள் இறைவன் தந்துள்ள அழைப்பை ஏற்றுக்கொள்கின்றனர்.[100]

## குடும்பமும் திருஅவையும்

86. "நற்செய்தியின் படிப்பினைகளுக்கு உண்மையுடன் இருக்கும் குடும்பங்களை உள்ளார்ந்த மகிழ்ச்சியுடனும் ஆழ்ந்த ஆறுதலுடனும் திருஅவை நோக்குகிறது. அவற்றை அது ஊக்கப்படுத்துவதுடன் அவை தரும் சாட்சியத்திற்காக அவற்றிற்கு நன்றிகூறுகிறது. ஏனெனில், முறிவுபடாததும் என்றும் நம்பிக்கையுடைமையைக் கொண்டுள்ளதுமான திருமணத்தின் அழகிற்கு நம்பத்தகுந்த முறையில் அவை சாட்சியம் பகர்கின்றன. அருளின் உதவியால் மூவொரு கடவுளின் மறைபொருளைப் பிரதிபலிக்கும் திருஅவையின் அனுபவமாகிய ஆட்களின் உறவுஒன்றிப்பை இல்லத் திருஅவை என அழைக்கப்படக்கூடிய குடும்பத்தில் (*மக்களின் ஒளி*, 11) தனி ஆட்கள் பெறத் தொடங்குகின்றார். 'நிலைத்திருத்தல், உழைப்பின் மகிழ்ச்சி,

சகோதர அன்பு, தாராளமானதும் மீண்டும் மீண்டும் வழங்கப்படுவதுமான மன்னிப்பு, அனைத்திற்கும் மேலாக மன்றாட்டில் செய்யப்படும் இறை வழிபாடு, மற்றும் தன் வாழ்வைக் கையளித்தல் என்பவற்றைக் குடும்பத்தில் ஒருவர் கற்றுக்கொள்கின்றார்' (*கத்தோலிக்கத் திருஅவையின் மறைக்கல்வி*, 1657).''[101]

87. குடும்பங்களின் குடும்பமே திருஅவை; இல்லத் திருஅவைகளைச் சார்ந்த அனைவரின் வாழ்வுகளால் அது தொடர்ந்து வளமையடைகிறது. ''திருமணம் எனும் அருளடையாளத்தின் ஆற்றலால் ஒவ்வொரு குடும்பமும் நடைமுறையில் திருஅவைக்கு ஓர் நன்மையாக ஆகிறது. இந்நிலையில் நின்று குடும்பத்திற்கும் திருஅவைக்கும் ஊடான செயல்பாடுகளைச் சிந்தித்துப் பார்ப்பது நமது காலத்தில் திருஅவைக்கு விலைமதிக்கமுடியாத கொடையாக அமையமுடியும். குடும்பத்திற்குத் திருஅவை நலமானது, குடும்பம் திருஅவைக்கு நலமானது. திருமணம் எனும் அருளடையாளத்தில் ஆண்டவர் வழங்கும் கொடையை பாதுகாப்பது தனிக் குடும்பங்களுக்கு மட்டுமல்ல, கிறிஸ்தவ சமூகம் முழுமைக்கும் உரிய அக்கறை ஆகும்.''[102]

88. குடும்பங்களில் நிகழும் அன்பு அனுபவம் திருஅவையின் வாழ்விற்கு வலுவூட்டும் வற்றா ஊற்றாகும். ''திருமணத்தின் ஒன்றிணைக்கும் நோக்கம் அவ்வன்பை வளர்க்கவும் ஆழப்படுத்தவும் தரப்படும் தொடர் அழைப்பு ஆகும். தங்களது அன்பின் ஒன்றிணைப்பின் வழியாக, மணத்துணைவர்கள் தந்தைமை, தாய்மை என்பவற்றின் அழகை அனுபவிக்கின்றனர்; தங்கள் திட்டங்களையும் துன்பங்களையும் எதிர்பார்ப்புகளையும் அக்கறைகளையும் பகிருகின்றனர்; ஒருவரையொருவர் பராமரிக்கவும் ஒருவருக்கொருவர் மன்னிப்பு வழங்கவும் கற்றுக்கொள்ளவும் செய்கின்றனர். இவ்வன்பில் அவர்கள் தங்கள் மகிழ்ச்சியான நேரங்களைக் கொண்டாடவும் அவர்களது கூட்டு வாழ்வின் இக்கட்டான காலக்கட்டங்களில் ஒருவரை ஒருவர் ஆதரிக்கவும் செய்கின்றனர்... ஒருவருக்கொருவர் அவர்கள் தரும் இந்த விலையில்லாக் கொடையும் உயிரின் பிறப்பாலும் தவழும் குழந்தை முதல் முதியோர் வரை உள்ள குடும்ப உறுப்பினர்கள் அனைவரின் அன்பான அக்கறையாலும் கிடைக்கின்ற மகிழ்ச்சியும் குடும்ப வாழ்வுக்கான இறையழைத்தலுக்குத் தரும் பதிலிறுப்பை திருஅவைக்கும் சமூகம் முழுவதற்கும் தனிச்சிறப்பானதும் மாற்று அற்றதாகவும் ஆக்கும் கனிகளுள் சில மட்டுமே.''[103]



# அலகு – 4

## திருமணத்தில் அன்பு

89. அன்பைப் பற்றி நாம் பேசாமல் விட்டுவிட்டால், இதுவரை நாம் சொன்ன அனைத்தும், திருமணம் மற்றும் குடும்பம் ஆகிய நற்செய்தியை, போதிய அளவில் எடுத்தியம்ப இயலாது. ஏனென்றால், இல்லற மற்றும் குடும்ப அன்பை வளர்த்தெடுப்பதையும் அந்த அன்பை உறுதிப்படுத்துவதையும் ஆழப்படுத்துவதையும் ஊக்குவிக்காமல், நம்பிக்கையுடைமை மற்றும் ஒருவர் ஒருவருக்குரிய தற்கையளிப்புக்கான வழியை நாம் ஊக்குவிக்க முடியாது. உண்மையில், திருமண அருளடையாளம் வழங்குகின்ற இறைஅருளானது அனைத்திற்கும் மேலாக மணத்துணைவர்களின் அன்பை முழுமைபெறச் செய்வதற்காகவே ஆகும்.[104] இங்கும் கூட நாம் இவ்வாறு கூற முடியும்: ''மலைகளை இடம் பெயரச் செய்யும் அளவுக்கு நிறைந்த நம்பிக்கை கொண்டிருப்பினும் என்னிடம் அன்பு இல்லையேல் நான் ஒன்றுமில்லை. என் உடைமையை எல்லாம் நான் வாரி வழங்கினாலும் என் உடலையே சுட்டெரிப்பதற்கென ஒப்புவித்தாலும் என்னிடம் அன்பு இல்லையேல் எனக்குப் பயன் ஒன்றுமில்லை'' (1கொரி 13:2-3). இருப்பினும், ''அன்பு'' என்ற வார்த்தையானது பொதுவாகவும் பல நேரங்களில் தவறாகவும் பயன்படுத்தப்படுகிறது.

### நமது அன்றாட அன்பு

90. புனித பவுலின் கவிதைப் பகுதியில் உண்மை அன்பின் சில கூறுகளை நாம் பார்க்கின்றோம்:

அன்பு பொறுமையுள்ளது;
நன்மை செய்யும்;
பொறாமைப் படாது;
தற்புகழ்ச்சி கொள்ளாது;
இறுமாப்பு அடையாது.
அன்பு இழிவானதைச் செய்யாது;

தன்னலம் நாடாது;

எரிச்சலுக்கு இடம் கொடாது;

தீங்கு நினையாது.

அன்பு தீவினையில் மகிழ்வுறாது;

மாறாக உண்மையில் அது மகிழும்.

அன்பு அனைத்தையும்

பொறுத்துக் கொள்ளும்;

அனைத்தையும் நம்பும்;

அனைத்தையும்

எதிர்நோக்கி இருக்கும்;

அனைத்திலும் மனவுறுதியாய் இருக்கும்.''

(1கொரி 13:4-7)

மணத்துணைவர்கள் மற்றும் அவர்களுடைய குழந்தைகளின் அன்றாட வாழ்வில் அன்பு அனுபவிக்கப்படுகிறது; பேணி வளர்க்கவும்படுகிறது. பவுலின் இந்தப் பகுதியினுடைய பொருளையும், இந்தப் பகுதிக்கும் ஒவ்வொரு குடும்பத்தின் நடைமுறைச் சூழலுக்கும் உள்ள தொடர்பையும் பற்றி நாம் சற்று ஆழமாகச் சிந்திப்பது உதவியாக இருக்கும்.

## அன்பு பொறுமையுள்ளது

91. முதலில் பயன்படுத்தப்பட்டுள்ளது '*மக்கரோத்திமேய்*' எனும் சொல்; இது 'எல்லாவற்றையும் தாங்கிக் கொள்வதை' மட்டும் குறிப்பது அல்ல. ஏனெனில் இந்தக் கருத்து ஏழாவது சொல்தொடரின் இறுதியில் கூறப்பட்டுள்ளதை நாம் பார்க்கின்றோம். இதன் உண்மைப் பொருளானது, கடவுள் ''சினம் கொள்ளத் தயங்குபவர்'' (விப 34:6; எண் 14:18) என்று நாம் வாசிக்கின்ற பழைய ஏற்பாட்டுப் பகுதியின் கிரேக்க மொழிபெயர்ப்பில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. எனவே இது உணர்ச்சி வேகத்தில் செயல்படாத, பிறருக்கு மனவருத்தத்தை ஏற்படுத்தாத ஒருவரது பண்பைக் குறித்துக்காட்டுவதாக உள்ளது. உடன்படிக்கையின் கடவுளிடம் நாம் இந்தப் பண்பைக் காண்கிறோம்; நாமும் நமது குடும்ப வாழ்வில் அவரது இந்தப் பண்பைப் பின்பற்ற அவர் நமக்கு அழைப்பு விடுக்கிறார். புனித பவுல் இந்த



வார்த்தையைப் பயன்படுத்தியிருக்கிற பகுதிகள் சாலமோனின் ஞானம் நூலின் ஒளியில் வாசிக்கப்பட வேண்டும் (காண்க 11:23; 12:2,15-18). மனம் திரும்புவதற்கான வாய்ப்பை நல்குவதற்காகக் கடவுள் தம்மைக் கட்டுப்படுத்திக் கொள்வதை அந்நூல் மிக உயர்வாகப் புகழ்வதுடன் அதே வேளையில் கடவுளது பரிவிரக்கச் செயல்களில் அவரது ஆற்றல் வெளிப்படுத்தப்படுவதையும் வலியுறுத்திச் சொல்கிறது. பாவிகள் மீது காட்டப்படும் பரிவிரக்கத்தில் வெளிப்படுத்தப்படும் கடவுளின் ''பொறுமை'', அவரது உண்மையான ஆற்றலின் அடையாளமாகும்.

92. பொறுமையாக இருப்பது என்பது நாம் தொடர்ந்து இழிவாக நடத்தப்பட வழிவிடுவதோ, உடல் சார்ந்த தாக்குதலைச் சகித்துக்கொள்வதோ, பிறர் நம்மைப் பயன்படுத்திக்கொள்ள அனுமதிப்பதோ அல்ல. உறவுகள் அல்லது மனிதர்கள் குறையில்லாதவர்களாக இருக்கவேண்டும் என நாம் எப்போதெல்லாம் எண்ணுகிறோமோ, நம்மையே நாம் மையப்படுத்தி மற்றவை அனைத்தும் நம்மைச் சுற்றியே நாம் விரும்புகிறபடி இயங்கவேண்டும் என எதிர்பார்க்கிறோமோ அப்போதெல்லாம் நாம் பிரச்சினைகளைச் சந்திக்கிறோம். அப்போது அனைத்துமே நம்மைப் பொறுமையிழக்கச் செய்யும்; அனைத்துமே நம்மைத் தீவிரமாக எதிர்தாக்குதல் புரியச் செய்யும். பொறுமையை நாம் வளர்த்தெடுக்காவிட்டால், நாம் எப்போதுமே சீற்றத்தோடு செயல்படுவதை நியாயப்படுத்தும் காரணங்களைக் கண்டுபிடித்துக் கொண்டேயிருப்போம். இறுதியில் நாம் சேர்ந்து வாழ்வதற்கு இயலாதவர்களாக, சமூக விரோதிகளாக, உணர்ச்சி வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாதவர்களாக மாறிவிடுவோம்; நம் குடும்பங்களும் போர்க்களங்களாக மாறிவிடும். எனவேதான் இறைவார்த்தை இப்படிக் கூறுகிறது: ''மனக்கசப்பு, சீற்றம், சினம், கூச்சல், பழிச்சொல் எல்லாவற்றையும் தீமை அனைத்தையும் உங்களைவிட்டு நீக்குங்கள்'' (எபே 4:31). ஏனையோருக்கும் அவர்கள் இருப்பதுபோலவே இவ்வுலகில் வாழ்ந்திட உரிமை உண்டு என்பதை நான் உணரும்போதுதான் பொறுமை வேர்கொள்ளும். மற்றவர்கள் என்னைப் பின்னுக்குத் தள்ளினாலும், என் திட்டங்களை நிலைகுலையச் செய்தாலும், தங்களது சிந்தனை அல்லது செயல்பாணியால் எனக்கு எரிச்சல் ஏற்படுத்தினாலும், அல்லது அவர்கள் எப்படியெல்லாம் இருக்கவேண்டுமென விரும்புகிறேனோ அப்படி அவர்கள்

இல்லையென்றாலும் இவையெல்லாம் எனக்கு ஒரு பொருட்டல்ல. ஆணோ பெண்ணோ நான் விரும்புவதற்கு மாறாகச், செயல்பட்டாலும் அவரையும் இவ்வுலகின் ஓர் அங்கமாக ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆழமான பரிவிரக்கத்தின் பரிமாணத்தை அன்பு எப்போதும் கொண்டிருக்கும்.

### அன்பு நன்மை செய்யும்

93. பவுல் பயன்படுத்துகிற அடுத்த சொல் "*கிரெஸ்தேயுத்தாய்*" என்பதாகும். விவிலியம் முழுவதும் இச்சொல் இங்கு மட்டுமே பயன்படுத்தப்படுகிறது. இச்சொல் "*கிரெஸ்தோஸ்*" எனும் சொல்லிலிருந்து வருகிறது. நல்ல மனிதர் அல்லது தம் செயல்பாடுகளில் தமது நன்மைத்தனத்தை வெளிப்படுத்துபவர் என்பது அதன் பொருளாகும். இங்கு இது முந்தைய வினைச்சொல்லுக்கு நெருங்கிய இணையாளியாக நின்று, அதனை நிறைவுபடுத்துகிறது. "பொறுமை" என்பது முற்றிலும் செயலற்ற மனநிலை அல்ல, மாறாக அது பிறரோடு கொள்ளும் துடிப்பான உயிரோட்டமுள்ள உறவாடலில் இணைந்து வருவது என்பதைப் பவுல் தெளிவுபடுத்த விரும்புகிறார். அன்பு அடுத்தவருக்குப் பயனளிப்பதாகவும் உதவுவதாகவும் உள்ளது என்பதை இச்சொல் குறித்துக்காட்டுகிறது. இக்காரணத்திற்காகத்தான் அது "நன்மை செய்யும்" என மொழிபெயர்க்கப்பட்டுள்ளது; அன்பு எப்போதுமே உதவி செய்வதற்குத் தயாராக இருக்கும்.

94. அன்பு என்பது வெறுமனே ஓர் உணர்வு அல்ல, அதைவிடப் பெரியது என்று பவுல் வலியுறுத்திக் கூற விரும்புவது இந்தப் பகுதி முழுவதிலுமே தெளிவாகத் தெரிகிறது. இன்னும் சொல்லப்போனால், "அன்பு செய்ய" என்பதற்கான எபிரேய மொழியின் வினைச்சொல்லின் அடிப்படையில் இந்த வார்த்தை புரிந்து கொள்ளப்பட வேண்டும். எபிரேய மொழியில் "அன்பு செய்ய" என்ற வினைச்சொல்லின் அர்த்தம் "நன்மை செய்ய" என்பதாகும். புனித லொயோலா இஞ்ஞாசியார் கூறுவதைப் போல, "அன்பானது வார்த்தைகளில் வெளிப்படுத்தப்படுவதை விடச் செயல்களில் வெகுவாக வெளிப்படுத்தப்படுகிறது."[106] இவ்வாறாக அன்பு தனது நன்மைபயக்கும் தன்மையை வெளிப்படுத்துகிறது; கொடுப்பதில் மகிழ்வினை அனுபவிக்க நம்மை அனுமதிக்கிறது; எல்லையில்லாமல்



நம்மையே தாரைவார்க்கின்ற பெருந்தன்மையையும் மேன்மையையும் தருகிறது; மேலும் பிரதிபலனை எதிர்பார்க்காமல் கொடுப்பதிலும் பணிபுரிவதிலுமே மகிழ்வினைக் காணச் செய்கிறது.

### அன்பு பொறாமைப்படாது

95. "*ஜெலோயி*" என்னும் வினைச்சொல் குறித்துக்காட்டுகின்ற அழுக்காறு அல்லது பொறாமை கொள்ளுதல் என்னும் மனநிலையை அன்புக்கு எதிரானது எனப் பவுல் தள்ளிவிடுகிறார். அடுத்தவருக்கு வாய்த்த நலம் கண்டு மன உளைச்சலுக்கு அன்பு இடங்கொடாது என்பதை இது உணர்த்துகிறது (காண்க: திப 7:9; 17:5). பொறாமை என்பது அடுத்தவரது வளமையைக் கண்டு நமக்குள் தூண்டப்படுகின்ற ஒருவகைத் துயரம் ஆகும். இது நாம் மற்றவர்களது மகிழ்ச்சியைப் பற்றி அக்கறைப்படாமல் நமது நலனைக் குறித்துமட்டுமே அக்கறை கொண்டவர்களாக இருக்கிறோம் என்பதைக் காட்டுகிறது. பொறாமை நமக்குள் நம்மை முடக்கிப்போடுகிறது, ஆனால் அன்போ நம்மை நம்மிலிருந்து கடந்துசெல்ல வைக்கிறது. உண்மை அன்பு அடுத்தவருடைய சாதனைகளை உயர்வாக மதிக்கும். அது அடுத்தவரை ஓர் அச்சுறுத்தலாகப் பார்க்காது. பொறாமை என்ற வயிற்றெரிச்சலிலிருந்து அது நம்மை விடுவிக்கிறது. ஒவ்வொருவரும் வெவ்வேறு கொடைகளைப் பெற்றவர்கள் என்பதையும் தமக்கே உரித்தான தனி வாழ்வுப் பாதையைக் கொண்டிருப்பவர்கள் என்பதனையும் உண்மை அன்பு அடையாளம் கண்டு கொள்ளும். எனவே உண்மை அன்பானது அடுத்தவர்களைத் தங்கள் வழியைத் தாங்களே கண்டுகொள்ள அனுமதித்து, தனது மகிழ்ச்சிக்கான வழியைத் தானே தேடிக் கண்டுபிடிக்க முயற்சிக்கும்.

96. ஒரு வார்த்தையில் சொல்வ தென்றால், அன்பு என்பது கடவுளுடைய சட்டத்தின் கடைசி இரு கட்டளைகளை நிறைவேற்றுவது ஆகும்: "பிறர் வீட்டைக் கவர்ந்திட விரும்பாதே; பிறர் மனைவி, அடிமை, அடிமைப்பெண், மாடு, கழுதை அல்லது பிறர்க்குரியது எதையுமே கவர்ந்திட விரும்பாதே" (விப 20:17). அன்பு ஒவ்வொரு மனிதர் மீதும் உண்மையான நன்மதிப்பைத் தூண்டியெழுப்புவதாகவும், அடுத்தவரது மகிழ்ச்சியைத் தூண்டியெழுப்புவதாகவும், அடுத்தவரது மகிழ்ச்சிக்கான உரிமையை ஏற்றுக்கொள்வதாகவும் இருக்கிறது. நான் இந்த ஆளை அன்பு செய்கிறேன்;

“நம்முடைய இன்பத்திற்காகவே” (1திமோ 6:17) எல்லாவற்றையும் அளிக்கும் கடவுளுடைய கண் கொண்டு நான் இவரைப் பார்க்கிறேன். இதன் விளைவாக, நான் நிறைவான மகிழ்வையும் அமைதியையும் உணர்கிறேன். இத்தகைய ஆழமாக வேரூன்றிய அன்பே, ஒரு சிலர் மிகையாகவும் மற்றவர்கள் வெகு குறைவாகவும் உடைமைகளைக் கொண்டிருக்கும் அநீதியை அகற்றுவதற்கு என்னை இட்டுச் செல்கிறது. இந்த அன்பே சமூகத்தில் புறந்தள்ளப்பட்டவர்கள் ஒரு சிறிதேனும் மகிழ்வைக் காண்பதற்கு உதவுவதற்கான வழிவகைகளைக் கண்டறிய என்னை உந்தித் தள்ளுகிறது. இது பொறாமை அல்ல, மாறாகச் சமத்துவத்திற்கான விருப்பம் ஆகும்.

## அன்பு தற்புகழ்ச்சி கொள்ளாது

97. தொடர்ந்து வருகிற *“பெர்ப்பெரயுத்தாய்”* என்ற வார்த்தை வீண் கர்வத்தையும் ஆணவத்தையும் செருக்கையும் மற்றும் மிகையான தன்முனைப்பையும் குறிப்பதாக இருக்கிறது. அன்பு செய்பவர்கள், தங்களைப் பற்றி அதிகமாகத் தம்பட்டம் அடித்துக்கொள்வதைத் தவிர்ப்பவர்களாக மட்டுமல்ல, அடுத்தவர்களை மையப்படுத்துபவர்களாகவும் இருப்பார்கள். தாங்கள் கவன ஈர்ப்பு மையமாக இருக்க வேண்டுமெனக் கவலைப்படமாட்டார்கள். அடுத்து வருகிற *“பிசியோவ்த்தாய்”* என்ற வார்த்தை இதை ஒத்ததே. இவ்வார்த்தையானது அன்பு இறுமாப்பு அடையாது என்பதைக் குறிக்கிறது. சொல்லுக்குச் சொல் சரியாகப் பொருள்கொள்ள வேண்டுமானால், இதற்கு அடுத்தவர்முன் நாம் “வீண் பெருமையுடன்” இருக்கமாட்டோம் என்பது பொருளாகும். மேலும் இது சற்று நுட்பமாக வேறொன்றையும் குறித்துக்காட்டுகிறது: அதாவது, மெய்மை உணர்வை இழந்து தன்னைத் தானே பெருமைபாராட்டிக் கொள்வதில் மிகை ஆர்வம் கொண்டிருப்பதை அது குறித்துக்காட்டுகிறது. மற்றவர்களைவிடத் தாங்கள் அதிக ஆன்மீகமும் ஞானமும் உடையவர்கள் என இத்தகைய மனிதர்கள் கருதுவதால் தாங்கள் உண்மை நிலையில் இருப்பதைவிட அதிக முக்கியத்துவம் வாய்ந்தவர்கள் என எண்ணுகிறார்கள். பவுல் இந்த வினைச்சொல்லை வேறு இடங்களிலும் பயன்படுத்துகிறார். உதாரணமாக “அறிவு இறுமாப்பு அடையச் செய்யும்”, ஆனால் “அன்பு உறவை வளர்க்கும்” (1கொரி 8:1) என்று கூறுகிறார். சிலர் தாங்கள் மற்றவர்களைவிட



அதிக அறிவாளிகள் என்பதால் தாங்கள் முக்கியமானவர்கள் எனக் கருதுகிறார்கள்; மற்றவர்களை அடக்கி ஆள அவர்கள் விரும்புகிறார்கள். இருப்பினும், அடுத்தவரைப் புரிந்துகொள்கின்ற, அவர்கள் மீது அக்கறை காட்டுகின்ற, வலுக்குறைந்தவர்களை ஆரத் தழுவிக் கொள்ளுகின்ற அன்புதான் உண்மையிலேயே நம்மை முக்கியமானவர்களாக உருவாக்குகிறது. வேறு இடங்களில் இந்த வார்த்தையானது, தங்களது முக்கியத்துவத்தை எண்ணி “இறுமாப்பு” கொண்டிருப்பவர்களை (காண்க: 1கொரி 4:18), ஆனால் உண்மையில் ஆவியின் வல்லமையினால் அல்ல, வெற்று வார்த்தைகளால் நிரப்பப்பட்டிருந்தவர்களை (காண்க: 1கொரி 4:19) விமர்சனம் செய்யப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

98. நம்பிக்கையைப் பற்றிப் போதிய அறிவில்லாத, தங்களுடைய உறுதிப்பாடுகளில் வலுவற்று அல்லது உறுதிகுன்றி இருக்கிற குடும்ப உறுப்பினர்களை நடத்தும் முறையில் அன்பைக் கிறிஸ்தவர்கள் வெளிப்படுத்துவது மிகவும் முக்கியமாகும். சில நேரங்களில் இதற்கு எதிர்மாறானதுதான் நடந்தேறுகிறது: குடும்பத்திலிருக்கிற நம்பிக்கையில் முதிர்ச்சியடைந்தவர்களென நம்பப்படுகிறவர்கள், பொறுக்கமுடியாத அளவுக்கு ஆணவம் கொண்டவர்களாகிவிடுகிறார்கள். அதற்கு மாறாக, அன்பு தாழ்ச்சியினால் அடையாளப்படுத்தப்படுகிறது; நாம் இதயப்பூர்வமாக மற்றவர்களைப் புரிந்துகொள்ள வேண்டும், மன்னிக்க வேண்டும், மேலும் அவர்களுக்குப் பணிவிடை புரிய வேண்டும் என்றால், நமது ஆணவம் நலமாக்கப்பட வேண்டும், தாழ்ச்சி தழைந்தோங்க வேண்டும். அதிகாரம் ஆட்சிசெலுத்தும் உலகில் ஒவ்வொருவரும் அடுத்தவரை அடக்கி ஆள முயலுகின்றனர், ஆனால் “உங்களிடையே அப்படி இருக்கக் கூடாது” (மத் 20:26) என்று இயேசு தம் சீடர்களுக்குக் கூறினார். கிறிஸ்தவ அன்பின் உள்நியாயவாதம் முக்கியத்துவத்தைப் பற்றியதோ, அதிகாரத்தைப் பற்றியதோ அல்ல; மாறாக, “உங்களுள் முதன்மையானவராக இருக்க விரும்புகிறவர் உங்களுக்குப் பணியாளராக இருக்கட்டும்” (மத் 20:27). குடும்ப வாழ்வில் யார் அதிக அறிவு படைத்தவர் அல்லது ஆற்றல் மிக்கவர் என்கிற ஆதிக்கத்திற்கான, போட்டிக்கான தர்க்கவாதமானது அன்பை அழித்துவிடுகிறது. புனித பேதுருவின் எச்சரிக்கை குடும்பத்திற்கும் பொருந்துவதாக உள்ளது: “ஒருவர் மற்றவரோடு பழகும் போது எல்லாரும்

மனத்தாழ்மையை ஆடையாய் அணிந்திருங்கள். ஏனெனில், ''செருக்குற்றோரைக் கடவுள் இகழ்ச்சியுடன் நோக்குவார்; தாழ்நிலையில் உள்ளவர்களுக்கோ கருணை காட்டுவார்'' (1 பேது 5:5).

## அன்பு இறுமாப்பு அடையாது

99. அன்புசெய்வது என்பது கனிவாக இருப்பதும் பிறர் நலன் கருதுவதுமாகும் எனும் கருத்தானது *''அஸ்செமெனோயி''* என்ற அடுத்த வார்த்தையால் எடுத்துரைக்கப்படுகிறது. அன்பு முரட்டுத்தனமாகவோ, பண்பு இன்றியோ கடுமையாகவோ நடந்து கொள்ளாது என்பதை இது குறிக்கிறது; அதன் செயல்களும், வார்த்தைகளும், அசைவுகளும் மகிழ்வளிப்பனவாக இருக்குமேயன்றி, புண்படுத்துவனவாகவோ இறுக்கமானவையாகவோ இருக்காது. மற்றவர்களைத் துன்பப்பட வைப்பதை அன்பு வெறுக்கிறது. மரியாதை என்பது ''உணர்திறனையும் பற்றற்ற தன்மையையும் பயிற்றுவிக்கும் பள்ளியாகும்''; இதற்குத் தேவைப்படுவது ''எப்படிச் செவிமடுப்பது, எப்படிப் பேசுவது, சில நேரங்களில் எப்படி அமைதி காப்பது என்பதைப் பயின்று கொள்வதற்கேற்ப ஒருவர் தம் மனதையும் உணர்வுகளையும் வளர்த்தெடுப்பது.''[107] இது ஏதோ கிறிஸ்தவர்கள் விரும்பினால் ஏற்றுக்கொள்ளலாம் அல்லது மறுக்கலாம் என்கிற ஒன்றல்ல. ''ஒவ்வொரு மனிதரும் நம்மைச் சுற்றி வாழ்பவர்களோடு ஒத்திசைவோடு வாழக் கடமைப்பட்டிருக்கிறார்''[108] என்பது அன்பின் அடிப்படைத் தேவையாகும். ஒவ்வொருநாளும் ''ஒருவர் ஏற்கெனவே நமது வாழ்வில் பங்கேற்கக் கூடியவராக இருப்பினும், அவரது வாழ்வில் நுழைவதற்கு உணர்திறனும் தற்கட்டுப்பாடும் தேவைப்படுகிறது; இது நம்பிக்கையையும் நன்மதிப்பையும் புதுப்பிக்கச் செய்யும். உண்மையில், அன்பு எந்த அளவு ஆழமாக இருக்கிறதோ, அந்த அளவுக்கு அடுத்தவருடைய தன்னுரிமையை மதிக்கவும் அடுத்தவர் தமது இதயக் கதவைத் திறக்கும் வரை பொறுமையோடு காத்திருக்கவும் அது அழைப்பு விடுக்கிறது.''[109]

100. அடுத்தவர்களோடு ஒரு நேரிய சந்திப்பிற்கு திறந்த மனத்தோடு இருப்பதற்குக் ''கனிவான பார்வை'' அவசியமானதாகும். இது தன்னுடைய குறைபாடுகளைக் கண்டுகொள்ளாமல் அடுத்தவர்களுடைய குறைபாடுகளை உடனடியாகச் சுட்டிக்காட்டும் எதிர்மறை மனநிலைக்கு ஒவ்வாதது ஆகும்.



கனிவான பார்வையானது நம்முடைய குறைபாடுகளைக் கடந்து நாம் பார்ப்பதற்கும், அடுத்தவர்களோடு நமக்கு முரண்பாடுகள் இருப்பினும் நாம் பொறுமை காக்கவும், அடுத்தவர்களோடு ஒத்துழைக்கவும் நமக்கு உதவுகிறது. அன்போடு கூடிய கனிவு பிணைப்பை ஏற்படுத்துகிறது, உறவுகளை வளர்க்கிறது, ஒருங்கிணைந்த வலைப் பின்னல்களை உருவாக்குகிறது; மேலும் ஓர் உறுதியான சமூகக் கட்டமைவை உருவாக்குகிறது. இந்த வகையில், அது எப்போதும் மேன்மேலும் வலுவாக வளர்கிறது; ஏனெனில் உரிமைபாராட்டும் உணர்வு இன்றி அடுத்தவருக்கான அர்ப்பணிப்பில் நாம் நீடித்து நிற்க முடியாது; நம் சொந்த நலன்களை மட்டுமே தேடுபவர்களாக நாம் மாறிவிடுவோம்; பொதுவான வாழ்வு என்பது இயலாத ஒன்றாகிவிடும். அடுத்தவர்கள் இருப்பதே தங்களுடைய தேவைகளைத் தீர்த்து வைப்பதற்காக மட்டுமே எனச் சமூகவிரோத மனிதர்கள் எண்ணுகிறார்கள். இதன் விளைவாக மென்மையான அன்பிற்கோ அதன் வெளிப்பாட்டிற்கோ இடமில்லாமல் போகிறது. அன்பு செய்பவர்கள் ஆறுதலான, ஊக்கமூட்டுகின்ற, தேற்றுகின்ற மற்றும் உற்சாகப்படுத்துகின்ற வார்த்தைகளைப் பேசும் ஆற்றல் படைத்தவர்களாக இருக்கிறார்கள். இயேசுவே கூட இத்தகைய வார்த்தைகளையே பேசினார்: ''மகனே துணிவோடிரு!'' (மத் 9:2); ''உமது நம்பிக்கை பெரிது!'' (மத் 15:28); ''எழுந்திடு!'' (மாற் 5:41); ''அமைதியுடன் செல்க'' (லூக் 7:50); ''துணிவோடிருங்கள்'' (மத் 14:27). இவ்வார்த்தைகள் இழிவுபடுத்துபவையோ, துயரப்படுத்துபவையோ சினம் அல்லது வெறுப்பைக் காட்டுபவையோ அல்ல. நம்முடைய குடும்பங்களில், ஒருவர் மற்றவரோடு பேசும் முறையில் இயேசுவின் பண்பார்ந்த பாணியைப் பின்பற்ற நாம் கற்றுக்கொள்ள வேண்டும்.

## அன்பு தாராள மனமுடையது

101. அடுத்தவரை அன்பு செய்வதற்கு நாம் முதலில் நம்மை அன்பு செய்வது அவசியமாகும் என்பதை நாம் மீண்டும் மீண்டும் கூறியுள்ளோம். இருப்பினும், அன்பின் பாடலில் பவுல் அன்பு ''தன்னலம் நாடாது'', என்று கூறுகிறார். இதே கருத்து வேறு ஒரு பகுதியில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது: ''நீங்கள் யாவரும் உங்களைச் சார்ந்தவற்றில் அல்ல, பிறரைச் சார்ந்தவற்றிலேயே அக்கறை கொள்ளவேண்டும் (பிலி 2:4). தாராள

மனத்தோடு பிறருக்குப் பணிவிடை புரிவது நம்மை நாம் அன்பு செய்வதைவிட மேன்மையானது என்பதை விவிலியம் தெளிவுபடுத்துகிறது. மற்றவர்களை அன்புசெய்ய இயலுவதற்கு உளவியல்சார் முன்தேவை என்பதால் மட்டுமே, நம்மை நாமே அன்பு செய்வது என்பது முக்கியமானதாகிறது: "தம்மையே கடுமையாக நடத்துவோர் அடுத்தவரிடம் எவ்வாறு தாராளமுடன் நடந்து கொள்வர்? தமக்குத் தாமே கருமியாய் இருப்போரைவிட இழிவானவர் எவருமில்லை" (சீராக் 14:5-6).

102. புனித அக்குயின் தாமஸ் "அன்பின் பண்பு அன்பு செய்யப்படுவதைவிட அன்பு செய்ய ஆசைப்படுவதே"[110] என விளக்குகிறார். உண்மையில், "அதிகம் அன்பு செய்பவர்களான தாய்மார்கள், அன்பு செய்யப்படுவதை விட, அன்பு செய்யத் தேடுபவர்களாக இருக்கின்றார்கள்."[111] ஆகையால் அன்பு "திரும்பக் கிடைக்கும் என எதிர்பார்க்காமல்" (லூக் 6:35), "அடுத்தவருக்காக உயிரைக் கொடுக்க" நீதியின் கோரிக்கைகளைத் தாண்டியும் நிறைவாக்கிப் பொங்கிவழியும் முறையிலும் இட்டுச் செல்லும். தன்னுரிமையுடனும் (காண்க யோவான் 15:13) முழுமையாகவும் நம்மையே கையளிக்கத் தூண்டும் இத்தகைய தாராள மனம் உண்மையிலேயே இயன்றதா? ஆம், ஏனெனில் நற்செய்தியின் கோரிக்கை இதுவே: "கொடையாகப் பெற்றீர்கள்; கொடையாகவே வழங்குங்கள்" (மத் 10:8).

### அன்பு எரிச்சலுக்கு இடம் கொடாது

103. பவுலின் பாடலில் முதல் வார்த்தை, அடுத்தவரது வலுவின்மைகளுக்கும் குறைகளுக்கும் கடுமையாக எதிர்வினை புரியாத பொறுமையின் அவசியத்தைப் பற்றிப் பேசியது என்றால், அவர் அடுத்ததாகப் பயன்படுத்துகிற *"பரோக்சினேதாய்"* என்ற வார்த்தை வெளியிலிருந்து ஏதேனும் ஒன்றால் தூண்டப்படுகின்ற உளச் சீற்றம் பற்றியதாக இருக்கிறது. இது உள்ளத்தில் உருவாகும் வன்மையான எதிரியக்கத்தைக் குறிக்கிறது; அடுத்தவர்கள் ஏதோ நமக்கு இடர் விளைவிப்பவர்களாகவும் அச்சுறுத்தலாளர்களாகவும் இருப்பதாகவும், அதனால் அவர்கள் தவிர்க்கப்படவேண்டியவர்கள் என எண்ணுகிற நிலைக்கு நம்மைத் தள்ளுகிற உள் வெறுப்புணர்வையும் இது குறிக்கிறது. இத்தகைய உள்ளார்ந்த பகைமையுணர்வை வளர்ப்பது எவருக்கும் பயன்படாது. அது



காயத்தையும் அந்நியப்படுத்தப்படுவதையும்தான் உண்டாக்குகிறது. மாபெரும் அநீதிக்கு எதிராகச் செயல்பட வைக்கின்றபோதுதான் சினம் நலமானது; மாறாக அடுத்தவர்களுக்கு எதிரான உணர்வால் நமது மனநிலையை ஊடுருவும் போது அது தீங்கானது.

104. நற்செய்தி நம் கண்ணில் இருக்கும் மரக்கட்டையைப் பார்க்க (காண்க: மத் 7:5) நமக்கு அறிவுறுத்துகிறது. "தீமை உங்களை வெல்ல விடாதீர்கள்" (உரோ 12:21) எனக் கோபத்தைக் காத்து வளர்க்காது இருக்குமாறு கடவுளின் வார்த்தை விடுக்கும் தொடர் எச்சரிக்கையைக் கிறிஸ்தவர்கள் புறக்கணித்துவிட முடியாது. "நன்மை செய்வதில் மனம் தளராதிருப்போமாக" (கலா 6:9). திடீரெனப் பகையுணர்வு நம்முள் எழுவதை உணர்வது என்பது வேறு; அந்தப் பகைவுணர்வுக்கு இடம்கொடுத்து அது நம் இதயத்தில் வேர்விட அனுமதிப்பது என்பது வேறு: "சினமுற்றாலும் பாவம் செய்யாதிருங்கள்; பொழுது சாய்வதற்குள் உங்கள் சினம் தணியட்டும்" (எபே 4:26). உங்கள் குடும்பத்தில் அமைதியை ஏற்படுத்தாமல் எந்த ஒரு நாளையும் முடிவடைய அனுமதிக்க வேண்டாம் என்பதே எனது அறிவுரை. "நான் எப்படி அமைதியை ஏற்படுத்தப் போகிறேன்? மண்டியிடுவதன் வழியாகவா? இல்லை! சின்ன ஒரு சைகை, சிறிய ஒரு செயல் போதும். குடும்பத்தில் அமைதி மீட்டெடுக்கப்படும். வார்த்தைகள் எதுவும் தேவையில்லை; மென்மையான ஒரு வருடுதலே போதும். எப்படியும் உங்கள் குடும்பத்தில் அமைதியை ஏற்படுத்தாமல் எந்த நாளையும் முடிவடைய விட வேண்டாம்."[112] நமக்கு எரிச்சல் ஏற்படும்போது இதயப்பூர்வமாக ஆசி வழங்கி அந்த ஆளுக்கு அருள் பாவித்து அவரை விடுவிக்க, நலப்படுத்த வேண்டுவதுதான் நமது முதல் எதிர்வினை. "மாறாக, ஆசி கூறுங்கள். ஏனென்றால், கடவுள் வாக்களித்த ஆசியை உரிமையாக்கிக் கொள்வதற்கே அழைக்கப்பட்டிருக்கிறீர்கள்" (1பேது 3:9). தீமையை எதிர்த்து நாம் போராடவேண்டியிருப்பின், போராடுவோம்; ஆனால் வீட்டில் வன்முறைக்கு எப்போதுமே நாம் "மறுப்பு" சொல்ல வேண்டும்.

### அன்பு மன்னிக்கும்

105. நமது இதயங்களில் வெறுப்பு வேர்விட அனுமதித்துவிட்டோம் என்றால், அது ஆழமான ஆத்திரத்திற்கு இட்டுச் சென்று விடுகிறது.

*உ லோஜிசெத்தாய் தோ காக்கோன்* என்ற கிரேக்கச் சொற்றொடருக்கு அன்பு ''தீமையை கணக்கிலெடுத்துக் கொள்ளாது''; ''அது ஆத்திரம் கொள்ளாது'' என்பது பொருளாகும். ஆத்திரத்திற்கு எதிர்மறையானது மன்னிப்பு ஆகும்; அது அடுத்தவர்களுடைய வலுவின்மைகளைப் புரிந்துகொள்ளவும் அவற்றைப் பொறுத்துக் கொள்ளவும் முயற்சி செய்கிற நேர்மறையான மனநிலையில் வேரூன்றியுள்ளது. இயேசு கூறியுள்ளது போல, ''தந்தையே, இவர்களை மன்னியும். ஏனெனில், தாங்கள் செய்வது என்னவென்று இவர்களுக்குத் தெரியவில்லை'' (லூக் 23:34). இருப்பினும் நாம் மேலும் மேலும் குற்றங்களைத் தேடிக்கண்டு பிடித்துக் கொண்டும், அதிகமான தீமைகளைக் கற்பனை செய்து கொண்டும், அனைத்து வகையான தவறான நோக்கங்களை ஊகித்துக் கொண்டும் இருந்தால் ஆத்திர உணர்வு வளர்கிறது, ஆழமாகிறது. இவ்வாறு மணத்துணைவருடைய ஒவ்வொரு தவறும் அல்லது பிழையும் அன்பின் பிணைப்பிற்கும் குடும்பத்தின் நிலைத்த தன்மைக்கும் ஊறு விளைவிக்கக் கூடும். ஒவ்வொரு பிரச்சினையுமே சமமான இடர்மிக்கது என நாம் கருதுவது தீங்கு விளைவிப்பதே. இதனால் பிறருடைய குறைபாடுகள் பற்றி மிகையான கடுமை காட்டும் இடருக்கு ஆளாகலாம். நம் உரிமைகள் மதிக்கப்பட வேண்டும் என்னும் நேரிய ஆவல், நமது கண்ணியத்தைக் காத்துக் கொள்வதைவிடப் பழிவாங்குவதற்கான துடிப்பாக மாறிவிடுகிறது.

106. நாம் உள்ளம் புண்படுத்தப்பட்டுள்ள அல்லது கைநெகிழவிடப்பட்டிருக்கின்றபோது, மன்னிப்பு இயன்றதும் விரும்பத் தக்கதும் ஆகிறது; ஆனால் அது எளிதானது என்று எவரும் சொல்லமுடியாது. உண்மை என்னவென்றால் ''குடும்ப உறவு மிகப் பெரிய தியாக உணர்வின் மூலமாக மட்டும்தான் காக்கப்படவும் நிறைவாக்கப்படவும் முடியும். உண்மையில், புரிந்துகொள்ளுதல், பொறுத்துக்கொள்ளல், மன்னித்தல், ஒப்புரவாதல் என்பவற்றிற்கு ஒவ்வொருவரும் தயாராகவும் தாராளம் உள்ளவர்களாகவும் இருப்பது அவசியம். சுயநலமும், முரண்பாடுகளும் சண்டை சச்சரவுகளும் குடும்ப உறவு ஒன்றிப்பை எவ்வாறு வன்மையாகத் தாக்குகின்றன, சாகடிக்கும் அளவுக்குக் காயப்படுத்துகின்றன என்பதை அறியாத குடும்பம் எதுவும் இல்லை; இதிலிருந்துதான் குடும்ப வாழ்வின் பல்வேறு பிரிவினையின் வடிவங்கள் பிறப்பெடுக்கின்றன.''[113]



107. மற்றவர்களை மன்னிக்க இயல்வது என்பது நம்மையே புரிந்து மன்னிக்கின்ற விடுதலை அனுபவத்தை உள்ளடக்கியுள்ளது என்பதை இன்று நாம் அறிந்திருக்கிறோம். பல நேரங்களில் நம்முடைய தவறுகள் அல்லது நம் அன்புக்குரியவர்களிடமிருந்து நாம் பெற்றுக்கொண்ட விமர்சனங்களும் நமது தன்மதிப்பு இழப்புக்கு இட்டுச் செல்லலாம். நாம் அன்பை மறுப்பவர்களாகவும் ஆனால் உறவுகளில் அச்சவுணர்வுடையவர்களாகவும் ஆகி பிறரிடமிருந்து விலகியிருப்பவர்களாக நாம் மாறிவிடுகிறோம். இந்நிலையில் மற்றவர்களைக் குறைகூறுவது போலியான தன்னுறுதிப்பாட்டை நமக்குத் தருகிறது. நம்மையே நாம் ஏற்றுக்கொள்ளவும், நமது குறைபாடுகளோடு எவ்வாறு நாம் வாழவேண்டும் எனக் கற்றுக்கொள்ளவும், நம்மையே நாம் மன்னிப்பதற்கும், அதே அணுகுமுறையை மற்றவர்களிடத்தும் கொண்டிருப்பதற்கும் நமது கடந்த கால வரலாற்றைக் குறித்து நாம் மன்றாடக் கற்றுக்கொள்ள வேண்டும்.

108. இவையனைத்தும், நாமே கடவுளால் மன்னிக்கப்பட்ட அனுபவத்தைப் பெற்றிருக்கிறோம், நமது தகுதியினடிப்படையில் அல்ல இறைவனது அருளால்தான் நாம் ஏற்புடையவர்களாயிருக்கிறோம் என்பதன் அடிப்படையில் அமைந்தவை. நம்முடைய எந்தவித முயற்சிக்கும் முந்தைய அன்பை நாம் அறிந்திருக்கிறோம். அது எப்பொழுதுமே கதவுகளைத் திறந்திருக்கிறது, ஊக்குவிக்கின்றது, மேலும் உற்சாகப்படுத்துகின்றது. கடவுளது அன்பு நிபந்தனையில்லாதது, தந்தையாகிய அவரது அன்பு வாங்கப்படவோ அல்லது விற்கப்படவோ முடியாதது என்பதை நாம் ஏற்றுக்கொண்டோமானால், நாமும் எல்லையில்லாத அன்பைக் காட்டக் கூடியவர்களாகவும், அடுத்தவர்கள் நமக்கெதிராகத் தீங்கு இழைத்திருந்தாலும் அவர்களை மன்னித்து ஏற்றுக்கொள்ளக் கூடியவர்களாகவும் மாறிவிடுவோம். இல்லையெனில், நமது குடும்ப வாழ்வு புரிந்துகொள்கின்ற, ஆதரவளிக்கின்ற, மற்றும் ஊக்கமளிக்கின்ற இடமாக இருக்காது; மாறாகத் தொடர் மன அழுத்தமும் ஒருவரொருவரை விமர்சனப்படுத்தலும் உள்ள இடமாக இருக்கும்.

## அன்பு அடுத்தவரோடு அகமகிழும்

109. *கைரேயி எப் தே அடிக்கியா* என்ற கிரேக்கக் கூற்றானது மனித இதயத்தின் ஆழத்தில் ஒளிந்திருக்கின்ற எதிர்மறை மனப்பாங்கைப் பற்றியதாக இருக்கிறது. இது அடுத்தவர்களுக்கு இழைக்கப்படுகின்ற அநீதியைக் கண்டு அகமகிழ்பவர்களுடைய நச்சு மனநிலையாகும். அடுத்து வருகின்ற சொற்றொடர் *சிக்சைரேயி தே அல்த்தேய்யா:* ''அது உண்மையில் அகமகிழும்.'' வேறு வார்த்தைகளில் அதாவது, மற்றவர்களது மாண்பையும் அவர்களுடைய திறமைகள் நற்செயல்கள் என்பவற்றின் பயன்களையும் நாம் பார்க்கின்றபோது நாம் அகமகிழ்வோம். அடுத்தவர்களது தோல்விகளில் இரகசியமாக மகிழ்வைக் காணும்பொருட்டு, எப்போதுமே அடுத்தவரோடு, தங்கள் துணைவர் அல்லது துணைவியோடு கூட, தங்களை ஒப்பிட்டுக்கொண்டும் போட்டியிட்டுக் கொண்டும் இருக்கவேண்டியவர்களுக்கு இது இயலாது.

110. அன்பானவர் அடுத்தவர்களுக்கு நல்லது செய்யும்போது, அல்லது அடுத்தவர்கள் மகிழ்ச்சியாய் இருப்பதைக் காணும்போது, தாமும் மகிழ்ச்சியாக வாழ்வார்; இவ்வாறு கடவுளை மகிமைப்படுத்துவார்கள், ஏனெனில் ''முகமலர்ச்சியோடு கொடுப்பவரே கடவுளின் அன்புக்கு உரியவர்'' (2கொரி 9:7). அடுத்தவர்களது மகிழ்ச்சியில் இன்பம் காண்பவர்களை நம் ஆண்டவர் சிறப்பாகப் பாராட்டுகிறார். அடுத்தவர்களது நல்வாழ்வில் எப்படி மகிழ்வு கொள்வது என்பதை கற்றுக்கொள்ளத் தவறி, நமது சொந்தத் தேவைகளின் மட்டில் முதன்மையாகக் கவனம் செலுத்துவோமென்றால், மகிழ்ச்சியற்ற வாழ்விற்கு நம்மை நாமே உட்படுத்திக் கொள்கிறோம்; ஏனெனில் இயேசு கூறியது போல, ''பெற்றுக்கொள்வதைவிடக் கொடுத்தலே பேறுடைமை'' (திப 20:35). குடும்பம் என்பது, அதன் உறுப்பினர்களுள் ஒருவருக்கு நல்லது நிகழும்போது அதைத் தங்களுடன் கொண்டாடப் பிறரும் இருப்பார்கள் என்று உணருகின்ற இடமாகக் குடும்பம் எப்போதும் இருக்க வேண்டும்.

## அன்பு அனைத்தையும் பொறுத்துக் கொள்ளும்

111. ''அனைத்தையும்'' என்ற வார்த்தையை உள்ளடக்கிய நான்கு சொற்றொடரோடு பவுலின் பட்டியல் முடிகிறது: அன்பு அனைத்தையும்



பொறுத்துக் கொள்ளும், அனைத்தையும் நம்பும், அனைத்தையும் எதிர்நோக்கி இருக்கும், அனைத்திலும் மன உறுதியாய் இருக்கும். அன்பிற்கு அச்சுறுத்தலாய் இருக்கக்கூடிய எதையும் எதிர்கொள்கின்ற அன்பின் மாற்றுக்கலாச்சார சக்தியை இங்கு நாம் தெளிவாகக் காண்கிறோம்.

112. முதலில், அன்பு ''அனைத்தையும் பொறுத்துக்கொள்ளும்'' *(பந்தா ஸ்டேஜேபி)* என்று பவுல் கூறுகிறார். இது வெறுமனே தீமையை சகித்துக்கொள்வது என்பதைவிட மேலானதாகும்; இது *நாவைப் பயன்படுத்துவது* பற்றியதாகும். சரியற்ற ஒன்றை அடுத்தவரிடம் காணும்போது ''ஒருவர் அமைதி காப்பது'' என்றும் இச்சொல் பொருள்படும். தீர்ப்பிடுவதைக் குறைத்துக்கொள்வது, உறுதியான மற்றும் கடுமையான கண்டனத்தை வெளிப்படுத்துவதற்கான உந்துதலைக் கட்டுப்படுத்துவது இவற்றை இது குறிக்கிறது: ''பிறர் குற்றவாளிகள் எனத் தீர்ப்பளிக்காதீர்கள்; அப்போதுதான் நீங்களும் தீர்ப்புக்குள்ளாக மாட்டீர்கள்'' (லூக் 6:37). பொதுவாக நாம் நமது நாவினைப் பயன்படுத்துகின்ற முறைக்கு எதிரானதாக இது இருந்தாலும், இறைவார்த்தையானது நமக்குக் கூறுவது: ''சகோதர சகோதரிகளே, உங்களுள் ஒருவர் மற்றவரைப் பழித்துரைக்க வேண்டாம்'' (யாக் 4:11). அடுத்தவரைப் பழித்துரைக்க விரும்புவதென்பது, அடுத்தவருக்கு நாம் இழைக்கக்கூடிய தீங்கைக் கருத்தில் கொள்ளாமல், நமது மனக்கசப்பையும் பகைமையையும் வெளிக்காட்டி நம்மை நிலைப்படுத்திக் கொள்வதற்கான ஒரு வழியாகவே இருக்கிறது. அடுத்தவரைப் பழித்துரைப்பது மிகப் பெரிய பாவச் செயலாகும் என்பதை நாம் அடிக்கடி மறந்துவிடுகிறோம்; அடுத்தவருடைய நற்பெயருக்கு வெகுவாகத் தீங்கு இழைக்கின்றபோதும், சரிசெய்வதற்குக் கடினமான பாதிப்பை ஏற்படுத்துகின்றபோதும் அது கடவுளுக்கு எதிரான மிகப்பெரிய குற்றமாகும். எனவேதான் நாவானது ''நெறிகெட்ட உலகின் உரு'' எனவும், அது ''நம் உடல் முழுவதையும் கறைப்படுத்துகிறது'' (யாக் 3:6) எனவும் இறைவார்த்தை தெளிவாகக் கூறுகிறது; அது ''கட்டுப்படுத்த முடியாத அளவுக்குக் கொடியது, சாவை விளைவிக்கும் நஞ்சு நிறைந்தது'' (3:8). நாவு ''கடவுளின் சாயலாக உண்டாக்கப்பட்ட மனிதரைத் தூற்ற'' (3:9) பயன்படுத்தப்படுகிறது; அன்பு அடுத்தவர்களது, ஏன் ஒருவரின் எதிரிகளுடைய நற்பெயரைக் கூட மனதில் வைத்துப் போற்றும். கடவுளின் கட்டளையை நிலைநாட்ட முற்படுகையில்

அன்பினுடைய இந்தக் குறிப்பிட்ட கோரிக்கையை நாம் ஒருபோதும் மறந்துவிடக் கூடாது.

113. அன்பால் ஒன்றிணைக்கப்பட்ட மணத்துணைவர்கள் ஒருவர் மற்றவரைப் பற்றி உயர்வாகப் பேசுவார்கள்; அவர்கள் தங்கள் துணைவருடைய வலுவின்மையையும் தவறுகளையும் அல்ல, நல்லவற்றையே காட்ட முனைவார்கள். எந்தச் சூழலிலும் தங்கள் துணைவரைப்பற்றிக் குறைபேசுவதைவிட அமைதியே காப்பார்கள். இது மற்றவர்களுக்கு முன்னால் நடிப்பது அல்ல; மாறாக, இது அவர்களது உள்ளார்ந்த மனநிலையிலிருந்து ஊற்றெடுக்கிறது. அடுத்தவரது குறைகளையும் வலுவின்மைகளையும் கபடற்ற முறையில் கண்டுகொள்ளாமல் இருப்பது என்றில்லாமல், அந்த வலுவின்மைகளையும் குறைகளையும் பரந்துபட்ட சூழலில் பார்ப்பது. இந்தக் குறைபாடுகளெல்லாம் பரந்துபட்ட சூழலின் ஒரு பகுதியாகும் என்பதை இது உணர்ந்து கொள்கிறது. நாம் எல்லோருமே ஒளியும் நிழலும் கொண்ட ஒரு சிக்கலான கலவை என்பதை நாம் உணரவேண்டும். அடுத்தவர் ஏதோ என்னை எரிச்சல்படுத்துகின்ற சின்னம்சிறியவற்றின் கூட்டுரு அல்ல, அதற்கும் மிக மேலானவர். அன்பை நாம் மதிப்பதற்கு, அது முழுநிறைவானதாக இருக்க வேண்டும் என அவசியம் இல்லை. அடுத்தவர் தம் வரம்புகளுடன் இயன்ற அளவு என்னை அன்பு செய்கிறார்; ஆனால் அன்பு குறைபாடுகளுடையது என்பதனால் அது பொய்யானது அல்லது போலியானது என்றாகிவிடாது. வரம்புக்குட்பட்டதாகவும் இவ்வுலகு சார்ந்ததாகவும் இருந்தாலும் அன்பு மெய்யானது. நான் அளவுக்கு அதிகமாக எதிர்பார்த்தால், அடுத்தவர் எனக்கு தெரியப்படுத்திவிடுவார், அதாவது அவனோ அல்லது அவளோ கடவுளைப்போலச் செயல்படவோ, எனது எல்லாத் தேவைகளையும் நிறைவு செய்யவோ இயலாது என்பதை. அன்பு குறைபாடுகளோடு சேர்ந்தே இருக்கிறது. அது ''அனைத்தையும் பொறுத்துக் கொள்ளும்'' மேலும் தன் அன்புக்குரியவருடைய குறைபாடுகளுக்கு முன்பு அதனால் அமைதியைக் கடைப்பிடிக்க முடியும்.



## அன்பு அனைத்தையும் நம்பும்

114. *பாந்தா பிஸ்துயேயி* என்பதற்கு அன்பு அனைத்தையும் நம்பும் என்பது பொருளாகும். இங்கு ''நம்பிக்கை'' என்பது முற்றிலும் இறையியல் பொருளில் அன்றி அடுத்தவரை நம்புதல் எனும் பொருளில் புரிந்துகொள்ளப்பட வேண்டும். இது அடுத்தவர் பொய்சொல்வதில்லை அல்லது ஏமாற்றுவதில்லை எனத் துணிவு கொள்வதையும் கடந்து செல்கிறது. இத்தகைய அடிப்படையான நம்பிக்கை, சாம்பலுக்கு அடியில் கனன்று கொண்டிருக்கும் தணலைப்போல, இருளைக் கடந்து சுடர்விடும் கடவுளின் ஒளியைக் கண்டுகொள்கிறது.

115. இந்த நம்பிக்கை என்பது உறவைச் சுதந்திரமாக இருக்கச் செய்கிறது. அடுத்தவர் நமது கட்டுப்பாட்டிலிருந்து தப்பிவிடாதவாறு அவரின் ஒவ்வொரு அடியையும் கண்காணித்து அடுத்தவர்களைக் கட்டுப்படுத்த வேண்டியதில்லை என்பது இதன் பொருள். அன்பு நம்புகிறது, விடுவிக்கிறது. அது அனைத்தையும் தனது கட்டுக்குள் கொண்டுவரவோ, உரிமையாக்கிக்கொள்ளவோ, ஆதிக்கம் செலுத்தவோ முயற்சிசெய்யாது. நம்மைச் சுற்றியுள்ள உலகிற்கும் புதிய அனுபவங்களுக்கும் திறந்த மனமுடையவர்களாக நாம் இருப்பதற்கும் உதவுகின்ற இந்தத் தன்னுரிமையானது உறவுகளை வளப்படுத்துவதற்காகவும், விரிவுபடுத்துவதற்காகவும் மட்டுமே இருக்கமுடியும். அப்போது மணத்துணைவர்கள் தங்கள் குடும்ப வட்டத்திற்கு வெளியே தாங்கள் பெற்றுக்கொண்ட மற்றும் கற்றுக்கொண்ட அனைத்தின் மகிழ்வையும் ஒருவர் ஒருவரோடு பகிர்ந்து கொள்வார்கள். அதே வேளையில், இந்தத் தன்னுரிமை நேர்மைக்கும் வெளிப்படைத்தன்மைக்கும் வழிவகுக்கிறது; ஏனெனில் தாங்கள் நம்பப்படுவதையும், பாராட்டப்படுவதையும் அறிந்தவர்கள் அனைத்திலும் ஒளிவு மறைவு அற்றவர்களாக இருப்பார்கள், தங்கள் கணவர் அல்லது மனைவி எப்போதும் சந்தேகப்படுபவராக. தீர்ப்பிடுபவராக, நிபந்தனையற்ற அன்பு இல்லாதவராக இருக்கிறார் என்பதை அறிந்தவர்கள் இரகசியமாக இருக்கவும் தங்களுடைய தவறுகளையும் குறைகளையும் மறைக்கவும், தங்களிடமிருந்து வேறுபட்ட இன்னொரு ஆளாக நடிக்கவும் முற்படுவார்கள். அதற்கு மாறாக, அன்பு மிகு நம்பிக்கையைக் கொண்ட குடும்பமானது, குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் இயல்பாக இருக்கவும்

வஞ்சகம், கபடம், பொய்மை இவற்றை இயல்பாகவே புறந்தள்ளவும் உதவி செய்யும்.

## அன்பு அனைத்தையும் எதிர்நோக்கி இருக்கும்

116. *பாந்தா எல்பிசேய்* என்பதற்கு அன்பு எதிர்காலத்தைக் குறித்த நம்பிக்கை இழப்பிற்கு ஆளாகாது என்பது பொருளாகும். முன் கூறப்பட்ட வற்றை வைத்துப் பார்க்கும்போது, இந்தச் சொற்றொடர், அடுத்தவர்கள் மாறவும் முதிர்ச்சியடையவும், எதிர்பாராத அழகையும் அறிவிக்கப்படாத ஆற்றலையும் வெளிப்படுத்தவும் முடியும் என்பதை அறிந்த ஒருவரது எதிர்நோக்கைப் பற்றிப் பேசுகிறது. அனைத்துமே இந்த வாழ்வில் மாறிவிடும் என்பது இதன் பொருள் அல்ல. நாம் விரும்புகிறபடியே காரியங்கள் எப்போதும் நடக்கவில்லையென்றாலும், கடவுள் கோணலானவற்றை நேராக்கவும், நாம் இவ்வுலகில் தாங்கிக்கொள்கின்ற தீமையிலிருந்து சில நன்மைகளை வருவிக்கவும் கூடியவர் என்று உய்த்துணர்தலை இது உள்ளடக்கியிருக்கிறது.

117. இங்கு எதிர்நோக்கு அதன் முழுமையைப் பெறுகிறது. ஏனெனில், இறப்புக்குப்பின் வரும் வாழ்க்கை பற்றிய அறிவுறுதியை இது அணைத்து நிற்கிறது. ஆணோ பெண்ணோ ஒவ்வோர் ஆளும் தன் அனைத்துக் குறைபாடுகளோடும், விண்ணகத்தில் நிறை வாழ்வுக்கு அழைக்கப்பட்டிருக்கிறார். அங்குக் கிறிஸ்துவின் உயிர்ப்பினால் முழுமையாக உருமாற்றப்பட்டு, அனைத்துக் குறைபாடும், இருளும், வலுவின்மையும் மறைந்துபோகும். அங்கு ஒருவருடைய உண்மையான இயல்பு அதனுடைய அனைத்து நன்மையியல்போடும் அழகோடும் ஒளிவீசும். இந்த உய்த்துணர்தலானது, இன்றைய வாழ்வின் பெருந்தீமைகளுக்கு நடுவிலும் ஒவ்வொரு மனிதரையும் எதிர்நோக்கின் ஒளியில் இயல்புயர் கண்ணோக்கத்திலிருந்து பார்ப்பதற்கும், அவனோ அவளோ விண்ணக அரசில் அடையப்போகும் நிறைவுக்காக, அது இன்னும் தெளிவாகத் தெரியவில்லையெனினும், அதற்காகக் காத்திருக்கவும் உதவுகிறது.



## அன்பு அனைத்திலும் மன உறுதியாய் இருக்கும்

118. *பாந்தா ஹிப்போமெனேய்* என்பதற்கு அன்பு ஒவ்வொரு சோதனையையும் நேர்மறையான மனநிலையோடு தாங்கிக்கொள்கிறது என்பது பொருளாகும். பகைமையான சூழல்களிலும் அது உறுதியாய் நிற்கிறது. இந்த ‘‘மன உறுதி’’ என்பது சில பெருந் தீங்குகளைத் தாங்கிக்கொள்ளும் திறனை உள்ளடக்கியது மட்டுமல்ல, அதைவிட உயரியதாகும்; எந்தச் சவாலையும் எதிர்கொள்ள எப்போதும் தயாராயிருக்கும் நிலையே அது. ஒருபோதும், இருள்சூழ்ந்த நேரங்களிலும் கூட, முடியாது என விட்டுவிடாத அன்பு அது. ஒருவகையான விடாப்பிடியான வீரத்தையும், எந்தவொரு எதிர்மறைப் போக்கையும் எதிர்க்கக்கூடிய ஆற்றலையும், நன்மைக்கான அடக்கமுடியாத அர்ப்பணத்தையும் இது வெளிப்படுத்துகிறது. சகோதர அன்போடு எல்லாவகையான சோதனைகளையும் துன்பங்களையும் சந்தித்த மார்ட்டின் லூதர் கிங் அவர்களின் வார்த்தைகளை இங்கு நான் நினைவு கூர்கிறேன்: ‘‘உன்னை மிக அதிகமாக வெறுக்கின்ற மனிதரிடமும் சிறிது நன்மையியல்பு உண்டு; உன்னை அதிகமாக வெறுக்கும் நாட்டிலும் கூடச் சில நன்மைகள் உண்டு. உன்னை மிக அதிகமாக வெறுக்கும் இனத்திலும் கூடச் சில நன்மைகள் உண்டு. சமயம் கூறுகின்ற ‘‘இறைச்சாயலை’’ ஒவ்வொரு மனிதனின் முகத்திலும் மேலும் அவனுக்குள்ளாக ஊடுருவியும் பார்க்கின்ற நிலைக்கு நீ வரும்போது, அனைத்தையும் கடந்து அவனை நீ அன்புசெய்யத் தொடங்குவாய். அவன் என்ன செய்தாலும் சரி, அங்கு நீ இறைச்சாயலைக் காண்பாய். அவனால் ஒருபோதும் உதறித்தள்ள முடியாத நன்மைத்தனத்தின் ஒரு கூறு அங்கு இருக்கிறது.... உன் எதிரியை நீ அன்பு செய்வதற்கான இன்னொரு வழி இதுவாகும்: உன் எதிரியை வீழ்த்துவதற்கான வாய்ப்பு வரும்போது அதை நீ செய்யாமலிருப்பது... அன்பின், அதன் அளப்பரிய அழகு மற்றும் ஆற்றலின் நிலைக்கு நீ உயரும் போது, தீய கட்டமைப்புகளை மட்டுமே நீ வீழ்த்த முற்படுவாய். அந்தக் கட்டமைப்புக்குள் சிக்கிக்கொள்ள நேர்ந்த தனிஆள்களை நீ அன்பு செய்வாய். ஆனால் அந்தக் கட்டமைப்பை நீ உடைக்க முயலுவாய். வெறுப்புக்கு வெறுப்பு என்பது இந்த அண்டத்தில் இருக்கும் வெறுப்பு மற்றும் தீமையை இன்னும் அதிகரிக்கத்தான் செய்யும். நான் உன்னை அடிக்க, நீ என்னை அடிக்க, நான் திருப்பி உன்னை அடிக்க,

நீ திருப்பி என்னை அடிக்க என்று நீங்கள் பார்ப்பது போல், அது முடிவில்லாமல் போய்க்கொண்டேயிருக்கும். அது ஒருபோதும் முடிவுக்கு வராது. எங்காவது எவராவது சிறிது அறிவுத்திறன் கொண்டிருக்க வேண்டும்; அவர்தான் ஆற்றல் வாய்ந்தவர். எவரால் இந்த வெறுப்பின் தொடர்சங்கிலியை, தீமையின் தொடர்சங்கிலியை அறுத்தெறிய முடிகிறதோ, அவரே ஆற்றல் வாய்ந்த மனிதர்... இந்தச் சங்கிலியை அறுத்தெறிந்து, உறுதியான, ஆற்றல்மிக்க அன்பின் மூலப்பொருளை இந்த அண்டத்தின் கட்டமைப்புக்குள் உட்செலுத்திடப் போதிய சமயவுணர்வையும், போதிய அறவுணர்வையும் யாராவது கொண்டிருக்க வேண்டும்.''[114]

119. குடும்ப வாழ்வில், இத்தகைய அன்பின் ஆற்றலை நாம் வளர்த்தெடுத்தாக வேண்டும்; அது குடும்ப வாழ்வுக்கு அச்சுறுத்தலாயிருக்கின்ற ஒவ்வொரு தீமையையும் எதிர்த்துப் போராட உதவியாக இருக்கும். அன்பு ஆத்திரத்திற்கு இடங்கொடாது, அடுத்தவரை இகழ்ச்சி செய்யாது, காயப்படுத்தவோ அல்லது ஆதாயம் தேடவோ ஆசைப்படாது. ஒருபோதும் கைவிடாத அன்பே கிறிஸ்தவ, குறிப்பாக குடும்பங்களுக்கான, உயரிய இலட்சியமாகும். தங்களுடைய சொந்த பாதுகாப்பு கருதி தங்கள் கணவன் அல்லது மனைவியிடமிருந்து பிரிந்துசெல்ல நேரிட்டாலும், தங்களது நீடித்த இல்லற அன்பின் காரணமாக அவர்களுடைய நோயிலும், துன்ப துயர நேரங்களிலும், அடுத்தவர்களைப் பணியில் அமர்த்தியாவது, அவர்களுக்கு உதவி செய்ய முயலுகின்ற ஆண்களையும் பெண்களையும் பார்த்து நான் சிலநேரங்களில் வியப்படைவதுண்டு. இங்கும் ஒருபோதும் கைவிடாத அன்பை நாம் காண்கிறோம்.

## இல்லற அன்புறவில் வளர்தல்

120. புனித பவுலின் அன்புக்கான பாடல் மீதான நமது சிந்தனை இல்லற அன்புறவு பற்றி விவாதிக்க நம்மைத் தயாரித்திருக்கின்றது. இதுதான் கணவன் மனைவி இடையிலான அன்பு,[115] புனிதப்படுத்தப்பட்ட அன்பு, திருமணம் என்ற அருளடையாளத்தின் அருளினால் அணிசெய்யப்பட்ட ஒளியூட்டப்பட்ட அன்பு. அது ''அன்பின் ஒன்றிப்பு,''[116] அது ஆன்மீகமயமானது, தியாகசிந்தையுடையது; அது நட்பின் நெருக்க



ஆர்வத்தையும் உள்ளத்துக் காமத்தின் கிளர்ச்சியையும் ஒன்றிணைக்கிறது; உணர்ச்சிகளும் கிளர்ச்சிகளும் தணிந்த பின்பும் அது நீடிக்கிறது. இந்த அன்பானது திருமண வாழ்வின் கடமைகளை ஊடுருவி நிற்பதும் அதில் முதன்மையான இடத்தை வகிப்பதும் ஆகும் எனத் திருத்தந்தை 11–ஆம் பயஸ் கற்பித்தார்.[117] இந்த ஆற்றல்நிறைந்த அன்பானது தூய ஆவியாரால் பொழியப்பட்டு, கிறிஸ்துவுக்கும் மனிதகுலத்துக்கும் இடையே ஏற்படுத்தப்பட்டு, சிலுவையில் கிறிஸ்துவின் தியாகப்பலியில் உச்சத்தை எட்டிய, உடைபடாத உடன்படிக்கையின் பிரதிபலிப்பாக இருக்கிறது. ஆண்டவர் பொழிந்தருளுகின்ற ஆவி புதிய இதயத்தை அருளுகின்றது; கிறிஸ்து நம்மை அன்பு செய்துள்ளது போல், ஆணும் பெண்ணும் ஒருவர் மற்றவரை அன்பு செய்ய இயலவைக்கிறது. இல்லற அன்பானது இல்லறப் பிறரன்புச் செயல்களில் நிறைவை எய்துகிறது; இல்லறப் பிறரன்புச் செயல்களுக்காகவே இல்லற அன்பானது உள்ளூர ஒழுங்கமைக்கப்பட்டிருக்கிறது.[118]

121. திருமணம் மதிப்புயர்ந்த அடையாளமாகும், ஏனெனில் ''ஓர் ஆணும் ஒரு பெண்ணும் திருமணம் எனும் அருளடையாளத்தைக் கொண்டாடுகிறபோது, ஒருவகையில் கடவுள் அவர்களில் 'பிரதிபலிக்கப்படுகின்றார்'; தம் பண்புக்கூறுகளையும் மேலும் தமது அன்பின் அழியாத முத்திரையையும் அவர்களில் பதிக்கின்றார். திருமணம் கடவுள் நம்மீது கொண்டுள்ள அன்பின் உருவகக் குறியீடாக இருக்கிறது. உண்மையில், கடவுளும் ஒரு கூட்டுறவாகவே இருக்கின்றார்: தந்தை, மகன், தூய ஆவி ஆகிய மூன்று ஆள்களும் நிறைவான ஒன்றிப்பில் என்றும் நிலைத்துள்ளனர். இதுவே துல்லியமாகத் திருமணத்தின் மறைபொருள் ஆகும். இரு மணத்துணைவர்களைக் கொண்டு ஒரே ஒரு இருப்பைக் கடவுள் உருவாக்குகிறார்.''[119] இது அன்றாட வாழ்வுக்கான நடைமுறைசார் விளைவுகளைக் கொண்டுள்ளது; ஏனெனில் மணத்துணைவர்கள் ''திருமண அருளடையாளத்தின் விளைவாக, உண்மையானதும் தங்களுக்கே உரியதுமான பணியால் அணிசெய்யப்பட்டிருக்கிறார்கள்; இதனால் எளிய சாதாரண வாழ்வின் செயல்பாடுகள் வழியாக கிறிஸ்து திருஅவைமீதுகொண்டு, அதற்காகத் தமது உயிரைத் தொடர்ந்து கையளிக்கின்ற அன்பைக் கட்புலனாகச் செய்ய இவர்களால் முடியும்.''[120]

122. இருப்பினும், நாம் வெவ்வேறு நிலைகளைக் குழப்பிக் கொள்ளக்கூடாது: வரம்புள்ள இரு ஆள்கள் மீது கிறிஸ்துவுக்கும் திருச்சபைக்குமிடையே நிலவும் உறவு ஒன்றிப்பை முழுமையாக மீட்டாக்கம் செய்யும் கடுமையான சுமையைச் சுமத்த வேண்டிய தேவையில்லை; ஏனெனில், திருமணம் ஓர் அடையாளம் என்ற வகையில், ''ஒரு தொடர் இயக்க முறை... அது கடவுளின் அருட்கொடைகளை மேன்மேலும் ஒருங்கிணைத்துக் கொண்டு படிப்படியாக முன்னேறுகிற ஒன்றாகும்.''[121]

## வாழ்நாள் முழுவதும் நீடிக்கும் பகிர்வு

123. நம்மைக் கடவுளோடு ஒன்றிணைக்கும் அன்பிற்கு அடுத்ததாக, இல்லற அன்பு ''மிகச் சிறந்த நட்பின் வடிவாகும்.''[122] அது நல்ல நட்பின் சிறப்புத் தன்மைகள் அனைத்தையும், அதாவது அடுத்தவரது நலனில் அக்கறை, சம பரிமாற்றம், உறவு நெருக்கம், உணர்வுபூர்வமான அன்பு, நிலைத்த தன்மை மற்றும் வாழ்வுப் பகிர்வில் மலர்ந்த ஒத்தத் தன்மை என்பவற்றைத் தன்னகத்தே கொண்டிருக்கும் ஒன்றிப்பாகும்: திருமணம் இவையனைத்துடனும் முறிக்க முடியாத ஒருவருக்கே உரிய தன்மையை இணைக்கிறது; இந்த ஒருவருக்கே உரிய தன்மையானது வாழ்வு முழுவதையும் இணைந்து வடிவமைப்பதற்கும் பகிர்வதற்குமான நிலைத்த அர்ப்பணத்தில் வெளிப்படுத்தப்படுகிறது. இதுதான் உண்மை என்பதை உணர்த்துகின்ற அடையாளங்களை ஏற்றுக்கொள்வதில் நாம் நேர்மையுள்ளவர்களாக இருப்போம். காதலர்கள் தங்களது நட்புறவை வெறுமனே தற்காலிகமானதொன்றாகப் பார்ப்பதில்லை. மணமுடிப்பவர்கள் தங்களது உத்வேகம் மங்கிப்போகும் என எதிர்பார்ப்பதில்லை. ஓர் அன்பு ஒன்றிப்புக் கொண்டாட்டத்தில் பங்கெடுப்பவர்கள், அது எவ்வளவுதான் வலுவற்றதாக இருந்தாலும், காலத்தின் சோதனையை அது வெல்லும் என்றே நம்புகிறார்கள். பிள்ளைகள் தங்கள் பெற்றோர்கள் ஒருவர் மற்றவரை அன்பு செய்ய வேண்டும் என்று மட்டுமல்ல, அவர்கள் நம்பிக்கையுடைமையுடனும் ஒன்றிணைந்தும் தொடர்ந்து வாழவேண்டும் என்றே விரும்புகிறார்கள். இவையும் இவைபோன்ற ஏனைய அறிகுறிகளும், அறுதியானதாக இருப்பது இல்லற அன்பின் இயல்பிலேயே இருக்கிறது என்பதைக் காட்டுகின்றன. திருமண உறுதிப்பாடுகளில் வெளிப்படுத்தப்படுகின்ற நிலைத்த ஒன்றிப்பு



என்பது ஏதோ ஒரு சடங்கு அல்லது மரபு வாய்பாடு என்பதைவிட மேலானது. அது மனித ஆளின் இயல்பு நாட்டங்களில் வேரூன்றியிருப்பது. நம்பிக்கையாளர்களுக்கு, அது கடவுள் முன்னிலையில் செய்யப்படுகின்ற நம்பிக்கையுடைமைக்கு அழைக்கின்ற உடன்படிக்கை ஆகும்: ''உனக்கும் உன் மனைவிக்கும் உன் இளமையில் நிகழ்ந்த திருமணத்திற்கு ஆண்டவர் சாட்சியாய் இருந்தார். அப்படியிருக்க, உன் துணைவியும் உடன்படிக்கையால் உன் மனைவியுமான அவளுக்கு நீ நம்பிக்கைத் துரோகம் செய்தாயே... எவனும் தான் இளமையில் மணந்த மனைவிக்கு நம்பிக்கைத் துரோகம் செய்யாதிருப்பதில் கவனமாய் இருப்பானாக. ஏனெனில், ''மணமுறிவை நான் வெறுக்கிறேன்'' என்கிறார் இஸ்ரயேலின் கடவுளாகிய ஆண்டவர்'' (மலா 2:14-16).

124. எதிர்கொண்டு போராடவேண்டிய, மறுபிறப்புக்கும் புதுப்பித்தலுக்கும் புதுக் கண்டுபிடித்தலுக்கும் உரிய சவாலாகத் திருமணத்தை ஏற்றெடுக்க இயலாத வலுக்குறைந்து, நலிவுற்ற அன்பால் ஒரு பெரும் அர்ப்பணத்தைத் தொடர்ந்து செய்ய இயலாது. தொடர் வளர்ச்சியைத் தடுக்கின்ற தற்காலிகக் கலாச்சாரத்திற்கு அது ஆட்பட்டுவிடும். இருப்பினும், ''எப்போதும் தொடர்ந்து நீடிக்கக்கூடிய அன்பை வாக்குறுதியளிப்பது இயன்றதே. நம்முடைய எண்ணங்களையும் முயற்சிகளையும் விட மேலான, நாம் அன்பு செய்யும் ஒருவரிடம் நமது எதிர்காலத்தை முழுமையாக ஒப்படைக்கத் தூண்டுகின்ற, நம்மை நிலைக்கச் செய்கின்ற ஒரு பெரிய திட்டத்தை நாம் கண்டுணருகின்றபோது அது இயன்றதாகும்''.[123] இந்த அன்பு, அனைத்துச் சோதனைகளையும் வெற்றிகொள்ள வேண்டும், அனைத்தின் முன்னிலையிலும் அது நம்பிக்கையுடைமையாக நிலைக்க வேண்டும் என்றால், இந்த அன்பை உறுதிப்படுத்துவதற்கும், அதை உயர்வாக்குவதற்கும் அருளின் கொடை அவசியமாகிறது. புனித இராபர்ட் பெல்லார்மினின் வார்த்தைகளில், ''ஓர் ஆண் ஒரு பெண்ணோடு முறிக்கப்பட முடியாத பிணைப்பில் தன்னை இணைத்துக் கொள்வதும், அனைத்து வகையான இன்னல்களுக்கு மத்தியிலும், குழந்தைப் பேறுக்கான நம்பிக்கையே இல்லா நிலையிலும், அவர்கள் பிரிந்துபோகாமல் இணைந்து இருப்பதும், ஓர் உன்னதமான மறைபொருளின் அடையாளமாக மட்டுமே இருக்கமுடியும்.''[124]

125. அவ்வாறே திருமணமானது உணர்ச்சியால் உருவாக்கப்படும் நட்புறவாகும்; ஆனால் அந்த உணர்ச்சி எப்போதுமே மேன்மேலும் நிலையான மற்றும் ஆழமான ஒன்றிப்புக்கு இட்டுச்செல்வதாக இருக்கவேண்டும். ஏனெனில், "திருமணம் பிள்ளைகளைப் பெற்றெடுப்பதற்காக மட்டுமே ஏற்படுத்தப்படவில்லை"; மாறாக மணத்துணைவர்கள் ஒருவர் ஒருவர்பால் கொள்ளவேண்டிய அன்பு "சரியான முறையில் காக்கப்படவும், அது வளர்ந்து முதிர்ச்சியடைய வேண்டும் என்பதற்காகவும்தான்."[125] ஓர் ஆணுக்கும் பெண்ணுக்குமிடையேயான இந்தத் தனித்தன்மை வாய்ந்த நட்புறவானது, அனைத்தையும் உள்ளடக்கும் தன்மையை இல்லறப் பாலுறவு ஒன்றிப்பிற்குள் மட்டுமே பெற்றுக்கொள்கிறது. அனைத்யையும் உள்ளடக்குவது என்பதால், இந்த ஒன்றிப்பு ஒருவருக்கு மட்டுமே உரியதாகவும் நம்பிக்கையுடையதாகவும், பிரமாணிக்கமானதாகவும் புதிய வாழ்வுக்குத் திறந்த மனம் கொண்டதாகவும் இருக்கிறது. அது அனைத்தையும் தொடர் சம பரிமாற்ற மதிப்புடன் பகிர்ந்துகொள்ளும். இதையே இரண்டாம் வத்திக்கான் சங்கமும் இவ்வாறு எதிரொலிக்கிறது: "இத்தகைய அன்பில் மனித நலன்களும் தெய்வீக நலன்களும் ஒருங்கிணையக் காணக்கிடக்கின்றன. மணமக்கள் பாசமிக்க அன்பின் வழியாகவும் செயல் வழியாகவும் ஒருவர் ஒருவருக்குச் சுதந்திரமாகத் தம்மையே கொடையாகக் கையளிக்க அவர்களைத் திருமண அன்பு இட்டுச் செல்கிறது; அவர்கள் வாழ்க்கை முழுவதுமே ஊடுருவி நிற்கிறது."[126]

## மகிழ்வும் அழகும்

126. திருமணத்தில், அன்பின் மகிழ்வு வளர்த்தெடுக்கப்பட வேண்டும். இன்பத்திற்கான தேடலானது ஆட்டிப்படைக்கும்போது, அது நம்மை அடிமைப்படுத்தி நாம் மற்றவற்றில் மனநிறைவை அனுபவித்துணர்வதைத் தடுக்கிறது. ஆனால் மறுபக்கத்தில், மகிழ்வு நமது இன்பத்தை அதிகரிக்கிறது; மேலும் உடல் சார்ந்த இன்பம் குன்றிவிட்ட வாழ்வுக் காலங்களிலும் கூட, எண்ணற்றவற்றில் நாம் நிறைவைக் கண்டடைய அது நமக்கு உதவுகிறது. புனித அக்குயின் தாமஸ் "மகிழ்வு" என்ற வார்த்தை இதயம் விரிவடைவதைக் குறிப்பதாகக் கூறுகிறார்.[127] திருமண மகிழ்வு துன்பங்களுக்கு மத்தியிலும் அனுபவிக்கப்பட முடியும். அதற்குத் திருமணமானது தவிர்க்க முடியாத



மகிழ்தலும் வருத்தமும், போராட்டமும் அமைதியும், வலியும் விடுதலையும், நிறைவும் ஏக்கமும், தொல்லைகளும் இன்பங்களும் நிறைந்தது என்பதை ஏற்றுக்கொண்டாக வேண்டும்; எனினும் திருமணம் "ஒருவருக்கொருவர் உதவியும் பணியும் செய்கின்றனர்"[128] என்பதற்கு ஏற்ப மணத்துணைவர்கள் ஒருவரை ஒருவர் அக்கறையோடு கவனித்துக்கொள்ளும் நட்பின் பாதையில் எப்போதும் பயணிக்கச் செய்கிறது.

127. நட்புறவின் அன்பு அடுத்தவருடைய "உயரிய மதிப்பைக்" கண்டுணர்ந்து உயர்வாக எண்ணும்போது, அது "பிறரன்பு" என்று அழைக்கப்படுகிறது.[129] அழகு என்பது உடல்சார்ந்த அல்லது மனம்சார்ந்த கவர்ச்சியிலிருந்து வேறுபட்டது. அதை உடைமையாக்கும் அவசியத்தை உணராது. அது அடுத்த ஆளுடைய புனிதத்தைப் போற்றச் செய்கிறது. நுகர்வுக் கலாச்சார சமூகத்தில் அழகு உணர்வு குன்றிவிட்டதால் மகிழ்வு மங்கிப்போகிறது. மனிதர்கள் உட்பட எல்லாமே வாங்கப்படவும், உடமையாக்கப்படவும், நுகரப்படவுமே இருப்பதாக எண்ணப்படுகிறது. ஆனால் மென்மைப் பண்பு என்பது உரிமையாக்கிக் கொள்ளவேண்டும் என்ற சுயநலத்திலிருந்து விடுபட்ட, அன்பின் அடையாளமாக இருக்கிறது. இது நாம் ஓர் ஆளை மிகுந்த மரியாதையோடு அணுகவும், ஒருவேளை நாம் அவர்களுக்கு ஏதாவது தீங்கிழைத்து விடுவோமோ என்ற ஒரு வகை அச்சத்தோடு அவர்களை நெருங்கவும் செய்கிறது. அடுத்தவரை அன்பு செய்வது என்பது அவர்களது இயல்பான அழகையும் புனிதத்தையும் ஆழமாகச் சிந்தித்துப் போற்றுகின்ற மகிழ்வையும் கொண்டதாகும்; அந்த அழகும் புனிதமும் என்னுடைய தேவைகளைவிட உயர்ந்தவை. இது, அடுத்தவர் எனக்கு உரியவராக ஆகமுடியாத போதும் உடல்ரீதியாகக் கவரக்கூடியவராக இல்லாதபோதும், அவசியமின்றித் தலையிட்டு எரிச்சலூட்டுபவராக இருக்கும்போதும் நான் அவர்களது நலனை நாடச் செய்கிறது. ஏனெனில், "ஒருவர் அடுத்தவருக்கு மனமகிழ்ச்சியைக் கொடுக்கும் அன்பானது, அவனோ அல்லது அவளோ கொடையாக தம்மைக் கொடுப்பதைப் பொறுத்தது."[130]

128. அழகுணர்வோடு கூடிய அன்பின் அனுபவம், மற்றவர்கள் நோயுற்றவர்களாக, வயது முதிர்ந்தவர்களாக, உடல் கவர்ச்சியிழந்தவர்களாக இருந்தாலும், அவர்கள் தம்மிலேயே மதிப்புடையவர்கள் என்று கருதிப்

போற்றுகின்ற ''பார்வையில்'' வெளிப்படுகிறது. பாராட்டும் பார்வை அளப்பரிய முக்கியத்துவத்தைக் கொண்டுள்ளது. அதைத் தர மறுப்பது பொதுவாகத் தீங்கிழைப்பதாக இருக்கிறது. தாங்கள் கவனிக்கப்பட வேண்டும் என்பதற்காகச் சில வேளைகளில் மணத்துணைவர்களும் குழந்தைகளும் எத்தனை செயல்களைச் செய்கிறார்கள்! நாம் ஒருவர் மற்றவரை உற்று நோக்குவதை நிறுத்துகின்றபோது, அதிகக் காயமும், பல பிரச்சினைகளும் விளைகின்றன. இது நாம் குடும்பங்களில் அடிக்கடி கேட்கின்ற குற்றச்சாட்டுகளுக்கும் மனத்தாங்கல்களுக்குமான உட்காரணமாக அமைந்திருக்கிறது: ''என்னுடைய கணவர் என்னை நோக்குவதில்லை; நான் ஏதோ அவர் கண்ணில் படாதது போல அவர் செயல்படுகிறார்.'' ''நான் உங்களோடு பேசும்போது தயவுசெய்து என்னைப் பாருங்கள்!'' ''என் மனைவி இப்போதெல்லாம் என்னைப் பார்ப்பதில்லை, குழந்தைகளைப் பார்ப்பதற்கு மட்டும்தான் அவளுக்குக் கண்கள் இருக்கின்றன.'' ''எனது சொந்த வீட்டிலேயே யாரும் என்னைப் பற்றிக் கவலைப்படுவதில்லை; அவர்கள் என்னைப் பார்ப்பதுகூடக் கிடையாது. நான் இல்லாததுபோல் இருக்கிறது.'' அன்பு நம் கண்களைத் திறக்கின்றது; அனைத்திற்கும் மேலாக, ஒரு மனித ஆளுடைய உயரிய மதிப்பை நாம் காணச் செய்கிறது.

129. ஆழச் சிந்திக்கின்ற அன்பின் மகிழ்வு வளர்த்தெடுக்கப் படவேண்டும். நாம் அன்பு செய்வதற்காகவே படைக்கப்பட்டிருப்பதால், நல்லவற்றைப் பகிர்ந்து கொடுப்பதைவிட மேலான மகிழ்வு எதுவுமில்லை என்பது நாம் அறிந்ததே: ''கொடுத்து வாங்கு; மகிழ்ந்திரு'' (சீராக் 14:16). பிறரை மகிழ்வுறச் செய்யும்போதுதான் நமது வாழ்வில் விண்ணகத்தின் முன்சுவைபோல ஆழ்ந்த மகிழ்வு உதயமாகிறது. Babbette's Feast என்ற திரைப்படத்தில் வருகிற ஓர் அழகிய காட்சியை நாம் எண்ணிப்பார்க்கலாம். அந்தக் காட்சியில் தாராள மனமுடைய சமையற்காரர் நன்றியுணர்வுடனான தழுவலையும் ''ஓ! நீங்கள் வானதூதர்களையே எவ்வளவோ மகிழ்ச்சிப்படுத்துவீர்கள்!'' என்ற பாராட்டையும் பெறுகிறார். பிறரை மகிழ்ச்சிப்படுத்துவதும், பிறர் மகிழ்ந்திருப்பதைக் காண்பதும் மிகப்பெரிய மகிழ்வும் ஆறுதலும் ஆகும். சகோதர அன்பின் கனியான இந்த மகிழ்வு, தற்பெருமை பாராட்டுவோர் அல்லது தம்மை மையப்படுத்துவோருக்கு உரியது அல்ல; மாறாகத் தாங்கள் அன்பு செய்பவருடைய நலனில்



மகிழ்வுறும் அன்பர்களுக்கு உரியது; அவர்கள் தாங்கள் அன்பு செய்பவர்களுக்குத் தாராளமாகக் கொடுப்பதன் மூலம் நல்ல கனிகளைக் கொடுப்பார்கள்.

130. மறுபக்கம் பார்த்தால், வலியிலும் துயரிலும் கூட மகிழ்வு வளர்ச்சியுறுகிறது. புனித அகுஸ்தினாரின் வார்த்தைகளில், ''போரில் எந்த அளவுக்கு ஆபத்து அதிகமோ அந்த அளவுக்கு வெற்றியின் மகிழ்வும் அதிகமாக இருக்கும்.''[131] இணைந்து அனுபவித்த துன்பத்திற்கும் போராட்டத்திற்கும் பிறகு, தாங்கள் அனுபவித்த பயன் உள்ளது என மணத் துணைவர்கள் கண்டுணரமுடிகிறது. ஏனெனில் அந்த அனுபவத்தின் மூலம் அவர்கள் சில நன்மையைப் பெற்றிருப்பார்கள்; மணத்துணைவர்கள் எனச் சிலவற்றைக் கற்றிருப்பார்கள்; அல்லது தங்களிடம் இருப்பதைப் பாராட்டத் துவங்கியிருப்பார்கள். ஒருவர் ஒருவரை அன்பு செய்யும் இருவர் மேற்கொண்ட உயரிய இணைந்த முயற்சியினால் சாதித்ததை அனுபவிப்பதில் இருக்கின்ற மகிழ்வின் ஆழமும் கிளர்ச்சியும் போன்றவை மிக அரிதானவையே.

## அன்புக்காகத் திருமணம் செய்தல்

131. தங்களுடைய அன்பு திருமணத்தில் வெளிப்படுத்தப் படுகின்றபோது, மேற்கூறிய எதுவுமே இழப்புக்குள்ளாகாது என்பதை இளையோருக்கு நான் கூற விரும்புகிறேன். அவர்களது ஒன்றிப்பு, திருமணம் எனும் அமைப்பில், அவர்களது அன்பு நிலைத்திருப்பதையும் வளர்ச்சியடைவதையும் உறுதி செய்வதற்கான வழிமுறையைக் கண்டடைகின்றது. இயல்பாகவே, அன்பு என்பது வெளிப்படையான உடன்பாடு அல்லது ஒப்பந்தம் என்பதை விட மேலானது; இருப்பினும் சில வாக்குறுதிகளை அளிப்பதன் மூலம், திருமணத்திற்குச் சமூகத்தில் ஒரு காணக்கூடிய வடிவத்தைக் கொடுப்பது, அது எவ்வளவு முக்கியமானது என்பதை உணர்த்துகிறது. மற்றவரோடு ஒருவர் தம்மை முழுமையாக ஒன்றுபடுத்திக் கொள்வதன் முக்கியத்துவத்தையும், வளர்இளம்பருவத்திற்குரிய தனியாள்போக்கை விடுத்து, ஒருவர் ஒருவருக்கு உரியவர் என்பதற்கான உறுதியான முடிவையும் அது வெளிப்படுத்துகிறது. திருமணமானது, வேறு புதிய வலுவான உறவுப் பிணைப்புகளை

உருவாக்குவதற்காகவும், இன்னோர் ஆளுக்காகப் புதிய பொறுப்பை மேற்கொள்வதற்காகவும், நாம் வளர்ந்து வந்த வீட்டின் பாதுகாப்பை உண்மையிலேயே விட்டுவிடுகிறோம் என்பதை வெளிக்காட்டுவதற்கான ஒரு வழிமுறையாகும். தங்களது இன்பப் பரிமாற்றத்திற்காக இருவர் தாங்களாக ஏற்படுத்திக்கொள்ளும் வெறும் கூட்டுறவே எனத் திருமணத்தைத் தனியாட்கள் மட்டும் சார்ந்ததாகக் கருதுவதைவிட இது அதிகப் பொருள் உள்ளது. ஒரு சமூக நிறுவனம் என்ற வகையில் திருமணம், முழுச் சமூகத்தின் நலனுக்காக ஒருவர் மற்றவருக்கான அன்பிலும் அர்ப்பணத்திலும் ஆழமாக வளர்வதற்கான பொது அர்ப்பணத்தை பேணிப் பாதுகாக்கின்றது. எனவேதான் திருமணம் என்பது விரைந்தோடிப் போகும் காலப் பாணி அல்ல; மாறாக அது நீடித்து நிலைக்கும் முக்கியத்துவம் வாய்ந்தது. திருமணத்தின் அடிப்படைப் பண்பானது நமது மனித இயல்பிலிருந்தும் சமூகப் பண்பிலிருந்தும் பெறப்படுகிறது. அது அன்பிலிருந்து பிறப்பெடுக்கின்ற பல தொடர் பொறுப்புக்களை உள்ளடக்கியிருக்கிறது; அந்த அன்பு எந்த இடரையும் எதிர்கொள்வதற்கான ஆழத்தையும் தாராள மனதையும் கொண்டது.

132. இந்த வழியில், திருமணத்தைத் தெரிவு செய்வது, எதுவரினும் தயங்காது இரு பாதைகளை இணைப்பதற்கான உண்மையான உறுதியான முடிவை வெளிப்படுத்துகிறது. திருமணத்தின் முக்கியத் தன்மையைக் காணும்போது பொது அரங்கில் செய்யப்படும் அன்பின் அர்ப்பணம் அவசரமாக எடுக்கப்படும் முடிவின் விளைவாக இருக்கமுடியாது என்பதும், அதே வேளையில் காலவரையின்றித் தள்ளிப்போட முடியாதது என்பதும் தெளிவாகிறது. தன்னை இன்னொருவருக்கு மட்டும் அறுதியாக அர்ப்பணிப்பது என்பது எப்போதுமே இழப்புக்களைச் சந்திக்கத் தயங்காத துணிச்சலை உள்ளடக்கியதாக இருக்கிறது. அத்தகைய அர்ப்பணிப்பை அளிக்க மனமில்லாமல் இருப்பது என்பது தன்னலமிக்கதும், மிகையாகக் கணக்குப் பார்ப்பதும், சிறுமைத்தனமானதும் ஆகும். இது அடுத்தவருடைய உரிமையை ஏற்கத் தவறுகிறது; அவனையோ அல்லது அவளையோ நிபந்தனையில்லாத அன்புக்குத் தகுதியுடையவராக இந்த சமூகத்திற்கு அடையாளம் காட்டவும் அது தவறுகிறது. இருஆள்கள் உண்மையிலேயே அன்புறவு கொண்டிருந்தார்கள் என்றால், அவர்கள் இயல்பாகவே அதை



மற்றவர்களுக்கு வெளிக்காட்டுவார்கள். அன்பானது, திருமண உடன்பாட்டில் அதற்குரித்தான அனைத்துப் பொதுவாழ்வுப் பொறுப்புக்களோடும், மற்றவர்களுக்கு முன்னால் வெளிப்படுத்தப்படுகின்றபோது, அது அவர்கள் ஒருவருக்கொருவர் சுதந்திரமாகவும் முழுமையாகவும் கொடுக்கின்ற ''ஆம்'' என்ற உடன்பாட்டைக் குறித்துக்காட்டுவதாகவும், பாதுகாப்பதாகவும் இருக்கிறது. இந்த ''ஆம்'', அவர்கள் எப்போதும் ஒருவரை ஒருவர் நம்ப முடியும் என்பதை அவர்களுக்குக் கூறுவதாகவும் இருக்கிறது; மேலும் நெருக்கடிகள் வருகின்ற பொழுதோ புதிய கவர்ச்சிகளும் தன்னலப் பற்றுகளும் தலைகாட்டுகின்றபோதோ ஒருபோதும் கைவிடப்படமாட்டார்கள் என்பதையும் அவர்களுக்கு அது உரைக்கிறது.

## தன்னையே வெளிப்படுத்துகின்ற மற்றும் வளருகின்ற அன்பு

133. நட்புறவின் அன்பு திருமண வாழ்வின் அனைத்துப் பரிமாணங்களையும் ஒன்றிணைக்கிறது; மேலும் அது குடும்ப உறுப்பினர்கள் தொடர்ந்து அன்புறவில் வளர உதவுகிறது. இந்த அன்பு தன்னுரிமையோடும் தாராளமாகவும் சொற்களிலும் செயல்களிலும் வெளிப்படுத்தப்பட வேண்டும். குடும்பத்தில் ''மூன்று வார்த்தைகள் பயன்படுத்தப்படவேண்டும். நான் இதை மீண்டும் கூற விரும்புகிறேன்! மூன்று வார்த்தைகள்: 'தயவு செய்து', 'நன்றி', 'வருந்துகிறேன்'. மூன்று இன்றியமையாத வார்த்தைகள்''[132] ''நம் குடும்பங்களில் நாம் அதிகாரம் செய்யாமல் ''நான் செய்யட்டுமா?'' என்று கேட்கின்றபோதும், நம் குடும்பங்களில் நாம் சுயநலமற்றவர்களாய் ''நன்றி!'' என்று சொல்கின்ற போதும், நம் குடும்பங்களில் எவரேனும் தான் செய்தது தவறு என்பதை உணர்ந்து அதற்காக 'வருந்துகிறேன்' என்று சொல்கின்றபோதும், நமது குடும்பம் அமைதியையும் மகிழ்வையும் அனுபவிக்கும்.''[133] இந்த வார்த்தைகளைப் பயன்படுத்துவதில் நாம் கஞ்சத்தனமாக இல்லாமல், ஒவ்வொரு நாளும் மீண்டும் மீண்டும் அவற்றைப் பயன்படுத்துவோமாக. ஏனெனில்

''சில மௌனங்கள் சில வேளைகளில் குடும்பங்களில்கூட கணவன்-மனைவியிடையேயும், பெற்றோர்-பிள்ளைகளிடையேயும், உடன்பிறந்தோரிடையேயும் அடக்குமுறையாக அமைகின்றன.''[134] சரியான

நேரத்தில் பேசப்படுகின்ற சரியான வார்த்தைகள், அனுதினமும் அன்பைப் பாதுகாக்கின்றன; மேலும் பேணிவளர்க்கின்றன.

134. இவை அனைத்தும் ஒரு தொடர் வளர்ச்சியின் இயக்கப் போக்கினால் நிகழ்கின்றன. திருமணம் என்கிற அன்பின் தனிப்பட்ட வடிவமானது, புனித அக்குயின் தாமஸ் அன்பைப் பற்றிப் பொதுவாகக் கூறியிருப்பதற்கு உருக்கொடுக்க அழைக்கப்படுகிறது. ‘‘அதன் இயல்பாலேயே அன்பின் வளர்ச்சிக்கு எல்லை இல்லை; ஏனெனில் அது தூய ஆவி என்ற முடிவில்லாத அன்பில் பங்கேற்பதாகும்... அன்பு செய்யும் ஆள்களைப் பொறுத்தவரையிலும் கூட அன்புக்கான எல்லையை வரையறுக்க முடியாது. ஏனெனில், அன்பு வளரவளர, அது மேன்மெலும் அதிகரிப்பதற்கான அதனுடைய ஆற்றலும் வளர்கிறது’’.[135] புனித பவுலும் இவ்வாறு மன்றாடுகிறார்: ‘‘உங்கள் மீது நாங்கள் கொண்ட அன்பு வளர்ந்து பெருகுவது போல, நீங்கள் ஒருவர் ஒருவருக்காகவும் எல்லோருக்காகவும் கொண்டுள்ள அன்பையும் ஆண்டவர் வளர்த்துப் பெருகச் செய்வாராக’’ (1தெச 3:12) மேலும், ‘‘சகோதர அன்பைப்பற்றி... அன்பர்களே! இதில் இன்னும் முன்னேறவேண்டுமென்று உங்களிடம் கேட்டுக் கொள்கிறோம்’’ (1தெ 4:9-10). ஆம், அதிகமதிகமாக! முறிவுபடாமையை ஒரு கடமையாக முன்னிறுத்துவதன் வழியாகவோ, கோட்பாடுகளை மீண்டும் மீண்டும் எடுத்துரைப்பதன் வழியாகவோ திருமண அன்பு முதன்மையாகக் காக்கப்படுவதில்லை; மாறாக அது காக்கப்படுவது அருளின் உந்துதலால் அது மேலும் உறுதியாக வளர்வதற்கு உதவுவதன் வழியாகவே. வளரத் தவறுகின்ற அன்பு ஆபத்துக்கு ஆளாகக் கூடும். நமது தொடர்ந்த அன்புச் செயல்கள் மற்றும் இரக்கச் செயல்கள் வழியாக நாம் கடவுளின் அருளுக்குப் பதிலிறுக்கின்றபோதுதான் அன்பில் வளர்ச்சி ஏற்படும்; அச்செயல்கள் அடிக்கடியும், தாராள மனத்தோடும், செறிவோடும், கனிவோடும், மகிழ்வோடும் செய்யப்பட வேண்டும். கணவர்களும் மனைவியரும் ‘‘நாளுக்கு நாள் தங்கள் ஒன்றிப்பை உணர்ந்து அதிக ஆழமாக அதை அனுபவிக்கின்றனர்’’.[136] மணமக்கள்மீது பொழியப்படுகின்ற கடவுளுடைய அன்பின் கொடையானது அவர்கள் அருளில் தொடர்ந்து வளர்வதற்கான அழைப்பாணையாகவும் இருக்கிறது.



135. வளர்ச்சிக்கான தூண்டுதல் தேவைப்படாத இலட்சியநோக்கிலான நிறைவான அன்பைக் கனவு காண்பது நமக்கு உதவாது. மண்ணக அன்பு பற்றிய விண்ணகப் புரிதல், சிறப்பானது இனிதான் வரவிருக்கிறது, நாட்கள் செல்லச் செல்லத்தான் திராட்சை மது முதிர்ச்சியடைகிறது என்பதை மறந்துவிடுகிறது. சிலி நாட்டு ஆயர்கள் சுட்டிக்காட்டுவதைப் போல, ‘‘பொய்யான நுகர்வுக் கலாச்சார பரப்புரைகள் முன்வைக்கின்ற குறைபாடற்ற குடும்பங்கள் எங்குமே இல்லை. அக்குடும்பங்களில் எவருமே முதுமை அடைவதில்லை, அங்கு நோய் இல்லை; துயரமோ இறப்போ இல்லை... குடும்பத் தலைவர்கள் அன்றாடம் எதிர்கொள்ள வேண்டிய மெய்மைகளிலிருந்து முற்றிலும் வேறுபட்ட கற்பனை சூழலை நுகர்வுக் கலாச்சாரப் பரப்புரை முன்வைக்கின்றது’’.[137] நம்முடைய வரம்புகள், குறைகள், தவறுகள் பற்றிய மெய்மை உணர்வோடு இருப்பதும், என்ன நேர்ந்தாலும் இருவருமாக இணைந்து வளர்தல், அன்பை முதிர்ச்சியடையச் செய்தல், உறவு ஒன்றிப்பை உறுதிப்படுத்துதல் என்பவற்றிற்கான அழைப்புக்குப் பதிலிறுப்புச் செய்வதும் நலவாழ்விற்கு மிகவும் உதவுவதாகும்.

## உரையாடல்

136. திருமணத்திலும் குடும்ப வாழ்விலும் அன்பை அனுபவிப்பதற்கும், வெளிப்படுத்துவதற்கும், பேணிக் காப்பதற்கும் உரையாடல் இன்றியமையாததாகிறது. இருப்பினும் அது மிகவும் நெடிய பொறுப்புமிக்க பயிற்சிக் காலத்தின் கனியாகத்தான் இருக்கமுடியும். ஆண்களும் பெண்களும், இளையோரும் முதியோரும் வெவ்வேறு முறைகளில் தகவல் பரிமாற்றம் செய்கின்றனர். அவர்கள் வெவ்வேறு மொழிகளைப் பேசுகிறார்கள்; வெவ்வேறு வகைகளில் செயல்படுகிறார்கள். நாம் கேள்வி கேட்கின்ற மற்றும் பதிலளிக்கின்ற முறைகளும் நாம் பயன்படுத்துகின்ற தொனியும், நாம் பேசுகின்ற நேரமும், இன்னும் எண்ணற்ற காரணிகளும் நாம் எவ்வளவு சிறப்பாகத் தகவல் பரிமாற்றம் செய்கிறோம் என்பதைக் கட்டுப்படுத்துகின்றன. அன்பை வெளிப்படுத்துகின்ற, உண்மையான உரையாடலை ஊக்குவிக்கின்ற சில குறிப்பிட்ட மனப்பாங்குகளை நாம் வளர்த்தெடுத்தாக வேண்டும்.

137. நேரம் எடுத்துக்கொள்ளுங்கள், நேர்த்தியான நேரம். இதற்கு, அடுத்தவர் சொல்ல விரும்புகின்ற அனைத்திற்கும் பொறுமையாகவும் கவனமாகவும் செவிமடுப்பது என்பது அர்த்தமாகும். சரியான நேரம் வரும் வரை எதையும் பேசாதிருக்கும் தற்கட்டுப்பாடு இதற்குத் தேவைப்படுகிறது. ஒரு கருத்தையோ அறிவுரையையோ அளிப்பதற்குப் பதிலாக, மற்றவர் சொல்ல வேண்டிய அனைத்தையும் நாம் முழுமையாகக் கேட்டுவிட்டோம் என்பதை நாம் உறுதி செய்யவேண்டும். இதற்கு, மனம்சார் அல்லது உணர்வுசார் கவனச் சிதறல்களைத் தவிர்த்துவிட்டு, அடுத்தவருக்கு முழுமையாகச் செவிமடுப்பதற்கு நமக்கு உதவுகின்ற அக அமைதியை நாம் வளர்த்தெடுக்க வேண்டும். அவசரப்படாமல், உங்களுடைய சொந்தத் தேவைகளையும் கவலையையும் ஒதுக்கிவைத்து விட்டு, அடுத்தவருக்கு இடம் கொடுங்கள். பெரும்பாலும் கணவனோ மனைவியோ தம் பிரச்சினைகளுக்குத் தீர்வை எதிர்ப்பார்ப்பதில்லை; மாறாகத் தாங்கள் சொல்வதைக் கேட்பதற்கு ஒருவர் இருக்கிறார், தம்முடைய வலியையும் ஏமாற்றங்களையும் பயத்தையும் கோபத்தையும் நம்பிக்கைகளையும் கனவுகளையும் ஒருவர் புரிந்து ஏற்றுக்கொண்டிருக்கிறார் என்பதையே எதிர்பார்க்கிறார்கள். நாம் எத்தனை முறை பின்வருவன போன்ற குற்றச்சாட்டுக்களைக் கேட்டிருக்கிறோம்: ''அவர் எனக்குச் செவிமடுப்பதே இல்லை.'' ''நான் சொல்வதைக் கேட்பதுபோல் இருந்தாலும், உண்மையில் நீங்கள் வேறு எதையாவதுதான் செய்து கொண்டிருக்கிறீர்கள்.'' ''நான் அவளோடு பேசும்போது, நான் பேசி முடிக்கும்வரை அவளால் காத்திருக்க முடியவில்லை என்றே உணருகிறேன்.'' ''நான் அவளோடு பேசும்போது, நான் பேசவந்த காரியத்தை மாற்ற முயலுகிறாள், அல்லது உரையாடலை முறிப்பதுபோல சுருக்கென்று ஏதாவது பதிலளிக்கிறாள்.''

138. அடுத்தவருக்கு உண்மையான முக்கியத்துவத்தைக் கொடுக்கிற பழக்கத்தை வளர்த்துக் கொள்ளுங்கள். அவர்களைப் பாராட்டுவது, வாழ்வதற்கும், விரும்புவதுபோலச் சிந்திப்பதற்கும் செயல்படுவதற்கும் மகிழ்ச்சியாயிருப்பதற்குமான அவர்களது உரிமையை ஏற்றுக்கொள்வது என்பது இதன் பொருள். நீங்கள் உங்களுடைய கருத்தை வெளிப்படுத்த வேண்டிய அவசியமிருப்பினும் ஒருபோதும் அவர்கள் எண்ணுவதையும் சொல்லுவதையும் மட்டந்தட்டாதீர்கள். ஒவ்வொருவரிடமும் பங்களிப்புச்



செய்வதற்கு ஏதாவது ஒன்று இருக்கின்றது; ஏனெனில் அவர்களுக்குத் தங்களின் வாழ்வு அனுபவங்கள் இருக்கின்றன; வேறுபட்ட தளத்திலிருந்து அவர்கள் கண்ணோக்குகின்றனர்; மேலும் அவர்களுக்கே உரிய கவலைகளும் திறமைகளும் நுண்நோக்குகளும் உள்ளன. மற்றவர் சொல்வதில் இருக்கின்ற உண்மையை அவர்களுடைய ஆழ்ந்த கவலைகளின் முக்கியத்துத்தை அவர்கள் எவ்வளவு ஆத்திரமாகப் பேசினாலும் அதன்வழி அவர்கள் சொல்ல முனைந்ததை நாம் ஏற்றுக் கொண்டாக வேண்டும். நம்மை அவர்களுடைய இடத்திலே வைத்து, அவர்களது உள்ளத்தை ஊடுருவி நோக்கி, அவர்களுடைய ஆழ்ந்த கவலைகளைக் கண்டுணர்ந்து கொண்டு, அவற்றிலிருந்து உரையாடலைத் தொடர முயலவேண்டும்.

139. திறந்த மனதோடு இருங்கள். உங்களுடைய குறுகிய எண்ணங்களுக்குள்ளும் கருத்துகளுக்குள்ளும் முடங்கிப்போய் விடாமல் அவற்றை மாற்றவும் விரிவுபடுத்தவும் தயாராக இருங்கள். இருவேறுபட்ட எண்ண ஓட்டங்களின் இணைப்பு, அவை இரண்டையும் வளப்படுத்துகின்ற வேறொரு கூட்டு எண்ண ஓட்டத்திற்கு இட்டுச் செல்ல முடியும். நாம் விரும்புகின்ற ஒற்றுமை என்பது ஒரே சீர்மை அல்ல. மாறாக அது ''வேற்றுமையில் ஒற்றுமை'' அல்லது ''நட்புறவான வேற்றுமை'' என்பதாகும். பொது நலனை முன்னெடுத்துச் செல்லும் முழுமையான நோக்கோடு வேற்றுமைகளை மதிப்பதும் பாராட்டுவதும் சகோதர அன்புறவை வளம்பெறச் செய்கிறது. நாம் எல்லோருமே ஒரே மாதிரியாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்திலிருந்து நம்மை நாம் விடுவித்துக் கொள்ள வேண்டும். உரையாடலின் போக்கில் குறுக்கிடும் ஒரு ''தேக்க நிலை'' ஏற்படுவதைத் தடுக்க ஒருவித நுண் திறமை தேவைப்படுகிறது. உதாரணமாக, கசப்புணர்வுகள் தோன்றத் தொடங்கும்போது அவற்றைப் புரிந்துணர்வோடு கையாள வேண்டும். இல்லையேல், அது உரையாடலின் ஓட்டத்தைத் தடைசெய்துவிடும். அடுத்தவரைப் புண்படுத்தாமல், நாம் எண்ணுகிறதைச் சொல்லுகின்ற திறமையும் மிகவும் முக்கியம். குறிப்பாகச் சிக்கலான காரியங்களை விவாதிக்கின்றபோது, அடுத்தவரைக் காயப்படுத்தாமலிருக்கும் வகையில், கவனமாக வார்த்தைகளைக் கையாள வேண்டும். ஒரு கருத்தை வலியுறுத்த விரும்புவதென்பது கோபத்தைக் கொட்டித் தீர்ப்பதாகவோ

அல்லது பிறர் மனதைப் புண்படுத்துவதாகவோ ஒருபோதும் இருக்கக் கூடாது, பிறரைக் கீழானோராகக் கருதி அவர்களுக்குக் கருணை காட்டுவதுபோல நடந்துகொள்கின்ற பாங்கானது, அவர்களைப் புண்படுத்துவதாகவும், கேலிக்குள்ளாக்குவதாகவும், குற்றப்படுத்துவதாகவும், காயப்படுத்துவதாகவுமே அமையும். மணத்துணைவர்களிடையே ஏற்படுகின்ற பல்வேறு கருத்து வேறுபாடுகள் முக்கியமான காரியங்களைப் பற்றியதாக இருக்காது. பெரும்பாலும் அவை சின்னஞ்சிறிய காரியங்களைப் பற்றியதாக இருக்கும். எவ்வாறெனினும், உணர்வு நிலையை மாற்றுவது ஒரு காரியம் எவ்வாறு சொல்லப்படுகிறது எந்த மனப்பாங்கோடு சொல்லப்படுகிறது என்பதைச் சார்ந்ததே.

140. அடுத்தவருக்கு அன்பையும் அக்கறையையும் காட்டுங்கள். அன்பு மிகவும் மோசமான தடைகளையும் வெற்றிகொள்கிறது. நாம் ஒருவரை அன்பு செய்கின்றபோது, அல்லது அன்பு செய்யப்படுவதை நாம் அனுபவித்து உணரும்போது, அவர்கள் என்ன சொல்ல முற்படுகிறார்கள் என்பதை நம்மால் நன்கு புரிந்துகொள்ளமுடியும். அடுத்தவரை ‘‘எதிரி’’யாகப் பார்த்து அச்சம் கொள்வது பலவீனத்தின் அடையாளமாகும்; அதை நாம் வெல்ல வேண்டும். ஒருவருடைய நிலைப்பாடு உறுதியான தெரிவுகள், நம்பிக்கைகள் அல்லது மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டு அமைய வேண்டுமேயொழிய, விவாதத்தில் வெற்றிபெற வேண்டும் அல்லது தான் சொல்வதுதான் சரி என்று எண்பிக்க வேண்டும் என்பதை அடிப்படையாகக் கொண்டு அமையக் கூடாது.

141. இறுதியாக, உரையாடல் பயனுள்ளதாக அமைய நம்மிடம் சொல்வதற்கு ஏதாவது இருக்க வேண்டும் என்பதை ஏற்றுக்கொண்டாக வேண்டும். இதை உள்ளார்ந்த வளமையால் மட்டுமே பெறமுடியும்; இந்த உள்ளார்ந்த வளமையை வாசித்தல், சிந்தித்தல், மன்றாடுதல் மற்றும் நம்மைச் சுற்றி நடப்பவற்றைத் திறந்த உள்ளத்தோடு பார்த்தல் என்பவற்றின் வழியாகத்தான் பேணிவளர்க்க முடியும். இல்லையேல், உரையாடல் சலிப்பூட்டுவதாகவும், சாரமற்றதாகவும் ஆகிவிடும். மணத்துணைவர்கள் இருவருள் எவருமே இதற்கான முயற்சியை மேற்கொள்ளாமலும், பிறரோடு அதிகத் தொடர்பு இல்லாமலும் இருக்கும்போது குடும்ப வாழ்வு வளர்ச்சி பெறாது; உரையாடல் உரமற்றது ஆகிவிடும்.



## உணர்ச்சி ததும்பும் அன்பு

142. இரண்டாம் வத்திக்கான் சங்கம் இவ்வாறு படிப்பிக்கிறது: திருமண அன்பு ‘‘முழு ஆளின் நன்மையையும் தன்னகத்தே உள்ளடக்கியிருக்கிறது; எனவே உள்ளத்து உணர்வுகளுக்கும் உடல் சார்ந்த செயல்களுக்கும் ஒரு தனிப்பட்ட மாண்பை அளிக்கும் திறன் இவ்வன்புக்கு உண்டு; அஃதோடு கூட மேற்கூறிய வெளிப்பாடுகளைத் திருமண நட்பின் கூறுகளாகவும் தனிப்பட்ட அடையாளங்களாகவும் மேன்மைப்படுத்தவும் இவ்வன்பால் முடிகிறது.’’[138] இதனால்தான், இன்பத்திலோ அல்லது உணர்ச்சியார்வத்திலோ குறைபாடுடைய அன்பினால் மனித இதயம் இறைவனோடு கொண்டுள்ள ஒன்றிப்பைப் போதிய அளவில் அடையாளப்படுத்த முடியாது: ‘‘எல்லா இறை ஒன்றிப்பு நெறியாளர்களும் தெய்வீக அன்பு மற்றும் விண்ணக அன்பைப் பற்றி விளக்குவதற்கான அடையாளங்களைத் திருமண அன்பில்தான் தேடியிருக்கிறார்களேயொழிய, நண்பர்களுக்கிடையேயான நட்புறவிலோ பெற்றோர் பிள்ளைகளுக்கிடையேயான அன்பிலோ ஒரு கொள்கையின் மீது கொண்டுள்ள பற்றிலோ அல்ல. இதற்குக் காரணத்தைத் திருமண அன்பின் முழுமைப் பண்பில்தான் காணமுடியும்.’’[139] அப்படியென்றால் திருமணத்தில் பாலுணர்வு மற்றும் உணர்ச்சிகள் பற்றி நாம் ஏன் பேசக்கூடாது?

## உணர்ச்சிகளின் உலகம்

143. ஆசைகள், உணர்வுகள், உணர்ச்சிகள், என்பவற்றை முன்னோர்கள் ‘‘உணர்ச்சியார்வங்கள்’’ எனக் குறிப்பிட்டுள்ளனர். இவை அனைத்தும் திருமண வாழ்வில் முக்கிய இடம் பெறுகின்றன. இவையனைத்தும் ‘மற்றவர்’ உடனிருக்கும்போதும், அவர் வாழ்வின் ஒரு பகுதியாக மாறிப்போகும்போதும் தூண்டியெழுப்பப்படுகின்றன. அடுத்தவரைச் சென்றுசேர வேண்டும் என்பது எல்லா உயிரினங்களிடமும் காணப்படும் பொதுவான பண்பாகும்; இந்த மனப்போக்கு இன்பம் அல்லது துன்பம், மகிழ்ச்சி அல்லது துயரம், கனிவு அல்லது அச்சம் எனும் அடிப்படை உணர்ச்சிசார் குறியீடுகளை எப்போதும் கொண்டிருக்கும். அவை மிக ஆரம்பநிலை உளவியல் செயல்பாடுகளுக்கு அடித்தளமாய் அமைகின்றன. மனிதர்கள் இவ்வுலகில் வாழுகின்றார்கள்; அவர்கள் செய்வது, தேடுவது அனைத்தும் உணர்ச்சிசார் சம்பவங்களால் நிறைந்தவையே.

144. முழு மனிதர் என்ற வகையில் இயேசு தம் உணர்ச்சிகளை வெளிப்படுத்தினார். எருசலேமால் புறக்கணிக்கப்பட்ட போது அவர் பாதிக்கப்பட்டார் (காண் மத் 23:27); இது அவரை கண்ணீர் வடிக்கச் செய்தது (காண் லூக் 19:41). மற்றவர்களுடைய துன்பங்களைக் கண்டு அவர் மிகவும் மனம் உருகினார் (காண் மாற் 6:34). அவர்களுடைய துயரைக் கண்டு உள்ளங்குமுறிக் கலங்கினார் (காண் யோவா 11:33), மேலும் நண்பனின் இறப்பைக் குறித்து கண்ணீர் விட்டு அழுதார் (காண் யோவா 11:35). இந்த எடுத்துக்காட்டுகள் இயேசு எவ்வாறு மற்றவர்களுடைய உணர்ச்சிகளைப் புரிந்து பகிர்ந்து கொண்டார், மேலும் எந்த அளவு அவருடைய மனித இதயம் மற்றவர்களின் உணர்ச்சிகளைப் புரிந்து செயல்படக் கூடியதாக இருந்தது என்பதை எடுத்துக்காட்டுகின்றன.

145. ஓர் உணர்ச்சியை அனுபவிப்பது என்பது தன்னிலேயே நன்மையானதோ தீமையானதோ அல்ல.[140] ஆசை அல்லது வெறுப்பு எழுவதென்பது பாவச் செயலோ அல்லது குற்றச் செயலோ அல்ல. ஆனால் ஓர் உணர்ச்சியின் அடிப்படையில் அல்லது அந்த உணர்ச்சியின் தாக்கத்தில் நாம் எதைச் செய்கிறோம் என்பதுதான் அறநெறி அடிப்படையில் நன்மையாகவோ அல்லது தீமையாகவோ இருக்கும். உணர்ச்சிகள் கிளர்ந்தெழுந்து, அதன் விளைவாகத் தீய செயல்களைச் செய்கின்றபோது, அந்த உணர்ச்சிகளை வளரத் தூண்டுகின்ற நமது முடிவிலும், அதனால் விளைகின்ற தீய செயல்களிலும் தாம் தீமை அடங்கியிருக்கிறது. அதே வகையில், ஒருவர்பால் நான் ஈர்க்கப்படுவது தானாகவே நன்மையானது ஆகிவிடாது. அந்த ஆள்மீதான ஈர்ப்பானது நான் அந்த ஆள்மீது ஆதிக்கம் செலுத்தச் செய்யுமானால், என்னுடைய உணர்ச்சி எனது சுயநலத்திற்குத்தான் பயன்படுகிறது. நாம் நன்றாக இருக்கிறோம் என உணர்வதாலேயே, நாம் நல்லவர்கள் போல உணர்வதாலேயே நாம் நல்லவர்கள் என நம்புவது மிகப் பெரிய மாயையாகும், அன்புக்கான தேவை தங்களுக்கு இருப்பதாலேயே, தாங்கள் அன்பு செய்யும் ஆற்றல்படைத்தவர்கள் என எண்ணுபவர்கள் இருக்கிறார்கள்; ஆயினும் மற்றவர்களுக்கு மகிழ்ச்சியைக் கொணருவதற்கான முயற்சியை மேற்கொள்ள ஆற்றலற்றவர்களாக இருக்கிறார்கள். தங்களுடைய ஆசைகளுக்குள்ளும் தேவைகளுக்குள்ளுமே அவர்கள் முடங்கிக் கிடக்கிறார்கள். இத்தகைய சூழல்களில், உணர்ச்சிகள்



ஒருவரை உயரிய மதிப்பீடுகளிலிருந்து திசைதிருப்பி, தம்மைப்பற்றி மட்டுமே சிந்திக்க வைத்து நலமான மகிழ்ச்சியான குடும்ப வாழ்வைக் கட்டியெழுப்ப இயலாதவராக ஆக்கும் அவரது தன்னலப் போக்கினை மறைத்துவிடுகின்றன.

146. அது அவ்வாறு இருக்க, ஒரு சுதந்திரமான செயல்பாட்டைத் தொடர்ந்துவரும் உணர்ச்சி, அந்தச் செயல்பாட்டின் ஆழத்தை வெளிப்படுத்த முடியும். ஒருவருடைய முழு உணர்ச்சி வாழ்வு ஒட்டுமொத்தக் குடும்பத்திற்கும் பலனளிப்பதாகவும், பொதுநலனுக்குப் பயன்படுவதாகவும் இருப்பதை உறுதிசெய்ய திருமண அன்பு முயற்சிசெய்கிறது. ஒரு குடும்பமானது, அதன் உறுப்பினர்களின் உணர்ச்சி வாழ்வு என்பது மென்உணர்வுத் திறன் எனும் வடிவத்தை எடுக்கும் போது அது முதிர்ச்சியடைந்த குடும்பமாக மாறுகிறது; இத்தகைய புரிந்து கொள்ளும் உணர்திறன், முக்கிய முடிவுகளையும் விழுமியங்களையும் மழுங்கடித்து விடாது. மாறாக, அது ஒருவர் மற்றவருடைய சுதந்திரத்தை மதித்துச் செயல்படும்,[141] மேலும் அது அந்தச் சுதந்திரத்திலிருந்து தோன்றி அதை வளப்படுத்தி, நிறைவாக்கி அதனை பிறர்பணியில் ஒருங்கிணைக்கிறது.

## தம் பிள்ளைகளின் மகிழ்வை நேசிக்கும் கடவுள்

147. இதற்குத் தன்னலத் துறவை உள்ளடக்கிய பயிற்று முறை தேவைப்படுகிறது. திருஅவையின் இந்த உறுதிப்பாடானது மனித மகிழ்ச்சிக்கு எதிரானதாக எண்ணப்பட்டு, ஏற்க மறுக்கப்பட்டு வந்திருக்கிறது. திருத்தந்தை 16-ம் பெனடிக்ட் இந்தக் குற்றச்சாட்டை மிகுந்த தெளிவுடன் சுருக்கமாக சுட்டிக் காட்டியிருக்கிறார்: ''திருச்சபை, தனது பல்வேறு கட்டளைகளாலும் தடைகளாலும், வாழ்வின் விலைமதிப்பற்ற ஒன்றைக் கசப்பானதாக மாற்றவில்லையா? படைத்தவருடைய கொடையான மகிழ்வு அளிக்கின்ற இன்பத்தை, ஒருவகையில் தெய்வீகத்தின் முன்சுவையான அந்த இன்பத்தைத் தவறு என்று சொன்னதில்லையா?''[142] மேற்கண்ட குற்றச்சாட்டுக்கு அவரே பின்வருமாறு பதிலளிக்கிறார்: கிறிஸ்தவத்தில் மிகைப்படுத்தப்பட்ட தடம்புரண்ட கடுந்தவம் இருந்து வந்திருந்தாலும், திருச்சபையின் அதிகாரப்பூர்வப் படிப்பினையானது விவிலியப் போதனைக்கு பிரமாணிக்கமாயிருந்து, ''காமத்தை ஒருபோதும் ஒதுக்கித்தள்ளவில்லை;

மாறாக அதனுடைய நெறிதவறிய அழிவுக்குரிய போக்கிற்கு எதிராகத்தான் போர் தொடுத்திருக்கிறது; ஏனெனில் இந்தப் போலியான தெய்வீகப்படுத்தப்பட்ட பாலுறவன்பானது... உண்மையில் அதன் தெய்வீகத் தன்மையையும் மனித இயல்பையம் இழக்கச் செய்திருக்கிறது.''[143]

148. உணர்ச்சி மற்றும் இயல்புணர்ச்சிசார் பயிற்சி அவசியமாகும். சில வேளைகளில் அவற்றிற்கு வரம்புகட்டுதல் வேண்டும். மிகைப்படுத்தல், கட்டுப்பாடு இன்மை அல்லது ஒரு தனிப்பட்ட வகையான இன்பத்தைப் பற்றி மட்டுமே ஓயாது எண்ணிக்கொண்டிருப்பது போன்றவை அந்த இன்பத்தையே வலுக்குறையச்செய்து களங்கப்படுத்திடவும்[144] மேலும் அவை குடும்ப வாழ்வையே சீரழித்திடவும் கூடும், நிச்சயமாக ஒருவரால் தன் உணர்ச்சிகளை ஆக்கப்பூர்வமான நலவாழ்வுக்கேற்ற வழியில் நெறிப்படுத்த முடியும்; அதாவது அடுத்தவருடைய நலனை மையப்படுத்தி, குடும்பத்தின் மையத்தில் ஒருவர் மற்றவரிடையேயான உறவினை வளப்படுத்துகின்ற ஒருங்கிணைந்த ஒரு தன்னிறைவாக்கத்தை நோக்கி உணர்ச்சிகளை நெறிப்படுத்த முடியும். இதற்கு ஆழமான நெருக்கமான மகிழ்வின் தருணங்களைத் துறக்க வேண்டும் என்பதல்ல, மாறாக, அந்த மகிழ்வின் தருணங்களை ஏனைய தருணங்களோடு, அதாவது தாராளமான அர்ப்பணிப்பு, பொறுமையோடான காத்திருப்பு, இலட்சியத்தை அடைவதற்கான தவிர்க்கமுடியாத களைப்பு மற்றும் போராட்டம் போன்ற தருணங்களோடு ஒன்றிணைத்துக் கொள்ளவேண்டும் என்பதாகும். குடும்ப வாழ்வு என்பது இதுதான்; அது முழுமையாக வாழப்படத் தகுதியுடையதாகும்.

149. சில ஆன்மீக நெறிமுறைகள் துன்பத்திலிருந்து விடுதலைபெற ஆசை அகற்றப்பட்டாக வேண்டும் என்று கற்பிக்கின்றன. இருப்பினும் மனிதர்கள் இன்பத்தை அனுபவிப்பதை இறைவன் விரும்புகிறார் என்று நாம் நம்புகிறோம்: அதற்கெனக் கடவுள் நம்மைப் படைத்து, ''நம்முடைய இன்பத்திற்காகவே எல்லாவற்றையும் நிறைவாக அளிக்கின்றார்'' (1திமோ 6:17). மிகுந்த அன்போடு நம்மைப்பார்த்து அவர் இவ்வாறு கூறும்போது நாம் அகமகிழ்வோமாக: ''குழந்தாய், உள்ளதைக்கொண்டு உன்னையே பேணிக்கொள்... ஒவ்வொரு நாளும் உனக்குக் கிடைக்கும் நன்மைகளைப் பயன்படுத்து; உன் வாழ்வின் இன்பங்களைத் துய்க்காமல் விட்டுவிடாதே'' (சீஞா 14:11-14). மணமுடித்த வாழ்க்கைத் துணைவர்களும் பின்வரும்



விவிலியக் கட்டளையைக் கடைப்பிடிக்கின்றபோது அவர்கள் கடவுளின் விருப்பத்திற்குப் பதிலிறுக்கிறார்கள்: ''வாழ்க்கை இன்பமாய் இருக்கும்போது மகிழ்ச்சியோடிரு'' (சஉ 7:14). ஒருவர் ஒருவருக்கான அன்பின் தேவைக்கேற்ப இன்பம் வாழ்வின் வெவ்வேறு தருணங்களில் வெவ்வேறு வடிவங்களில் வெளிப்படும் என்பதை அறிந்துணர்வதற்கான தன்னுரிமையைக் கொண்டிருப்பது மிகவும் முக்கியம். அந்த வகையில், சில கிழக்கத்திய ஆசிரியர்களின் அறிவுரையை நாம் பாராட்டலாம். நம்முடைய பரந்துபட்ட பார்வையை மறைக்கும் ஒரு வரம்புள்ள அனுபவத்திற்குள் நம்மை நாமே சிறைப்படுத்திக் கொள்ளாமலிருக்க நமது உணர்வு விழிப்பு நிலையை நாம் விரிவுபடுத்த வேண்டுமென அவர்கள் அறிவுறுத்துகிறார்கள். உணர்வுவிழிப்புநிலையில் இந்த விரிவாக்கம் என்பது ஆசையை மறுப்பதோ அழிப்பதோ அல்ல, மாறாக அதை அகலப்படுத்துவதும் முழுமையாக்குவதும் ஆகும்.

## அன்பின் காமப் பரிமாணம்

150. இவையனைத்தும் திருமணத்தின் பாலுறவுப் பரிமாணத்திற்கு நம்மைக் கொண்டு வருகின்றன. கடவுளே பாலியல்பைப் படைத்தவர்; அது அவருடைய படைப்புகளுக்கு ஒரு வியப்பரும் கொடையாகும். இந்தக் கொடை வளர்த்தெடுக்கப்படவும் நெறிப்படுத்தப்படவும் வேண்டுமெனில், ''உண்மையான பாலியல்பின் மாண்பைக் குன்றச் செய்தல்''[146] தடுத்து நிறுத்தப்பட வேண்டும். திருஅவையின் படிப்பினை ''மனிதப் பாலியலன்பின் மாண்பை மறுக்கிறது,'' அல்லது ''குழந்தைப் பேற்றுக்கு அவசியமென்பதால்''[147] திருஅவை அதனைப் பொறுத்துக் கொள்கிறது என்கிற வாதத்தைப் புனித இரண்டாம் ஜான் பால் அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. பாலுறவுக்கான ஆசை இழிவாகப் பார்க்கப்பட வேண்டிய ஒன்றல்ல; மேலும் ''பாலுறவுக்கான அவசியத்தை கேள்விக்குட்படுத்துவதற்கான எந்தவொரு முயற்சியும் ஒருபோதும் கூடாது.''[148]

151. உணர்ச்சிகளையும் பாலுணர்வையும் பயிற்றுவிப்பது பாலுறவு அன்பின் இயல்புத்தன்மையிலிருந்து நம்மை திசைமாற்றிவிடுகிறது எனச் சிலர் அஞ்சுவதுண்டு. இதற்கு புனித இரண்டாம் ஜான்பால் இவ்வாறு

பதிலளித்திருக்கிறார்: மனிதர்கள் "தங்களுடைய அன்புறவில் முழுமையான மற்றும் முதிர்ச்சியான தன்னியல்புப் பண்பை அடைய அழைக்கப்பட்டிருக்கிறார்கள்"; அந்த முதிர்ச்சி "ஒருவரது இதயத்தின் உந்துதல்களை ஆய்ந்தறிவதன் விளைவாகப் படிப்படியாக வருகின்ற கனியாகும்."[149] இதற்குக் கட்டுப்பாடும் தன்மேலாண்மையும் தேவைப்படுகின்றன; ஏனெனில் "ஒவ்வொரு மனிதரும் அவனது அல்லது அவளது உடலின் பொருளைப் பொறுமையாகவும் சீராகவும் கற்றறிந்து கொள்ள வேண்டும்."[150] பாலுறவு என்பது திருப்தி அடைவதற்கான அல்லது பொழுதுபோக்கிற்கான ஒரு வழிமுறை அல்ல; அது இருவருக்கிடையேயான உறவின் மொழியாகும்; இங்கு அடுத்தவர் முக்கியம் பெறவேண்டும்; அவரது புனிதமானதும் மீறக் கூடாதுமான மாண்பு போற்றப்படவேண்டும். அப்படிப்பார்க்கும்போது, "மனித இதயம் வேறொரு வகையான தன்னியல்புப் பண்பில் பங்கெடுக்கிறது எனலாம்."[151] இந்தச் சூழலில், காமம் பாலியல்பின் தனிப்பட்ட மானுட வெளிப்பாடாகத் தோன்றுகிறது. இது "உடலின் திருமணம்சார் அர்த்தத்தையும், அந்தக் கொடையின் உண்மையான மாண்பையும்"[152] நாம் கண்டுகொள்ள வைக்கிறது. உடலின் இறையியல் பற்றிய தமது மறைக்கல்வியில் புனித இரண்டாம் ஜான் பால் இவ்வாறு போதிக்கிறார்: பாலின வேறுபாடு "நற்பயனையும் பிள்ளைப்பேற்றையும் தரும் மூலம்" மட்டுமல்ல; மாறாக அது அன்பை வெளிப்படுத்துவதற்கான ஆற்றலையும் தன்னகத்தே கொண்டுள்ளது; அத்தகைய அன்பில்தான் ஓர் ஆள் முழுமையான கொடையாக மாறிவிடுகிறார்."[153] நலமான பாலுறவு ஆசை, இன்பத்தைத் தேடுவதாக இருந்தாலும், எப்போதுமே ஒரு வியப்புணர்வை உள்ளடக்கியதாக இருக்கிறது; இதன் காரணமாகவே அது நமது உள்ளூக்கங்களை மனிதத் தன்மையுடையதாக மாற்ற முடிகிறது.

152. அன்பின் காமப் பரிமாணத்தை ஏதோ அனுமதிக்கப்படக் கூடிய தீமையாகவோ அல்லது குடும்ப நலனுக்காகச் சகித்துக்கொள்ளக் கூடிய சுமையாகவோ கருதுவதற்கு ஒருபோதும் இடமில்லை. மாறாக மணத்துணைவர்களின் அன்புறவை வளப்படுத்துவதற்காகக் கடவுளால் அருளப்பட்ட கொடையாக நாம் அதைப் பார்க்கவேண்டும். அடுத்தவரது மாண்பை மதிக்கின்ற அன்பினால் உணர்ச்சி உயர்வாக்கப்படுகின்றபோது,



அது "தூய்மையான, கலப்படமற்ற உறுதிப்படுத்துதலாக" உருவாகிறது; அது மனித இதயம் ஆற்றக்கூடிய அற்புதங்களை வெளிப்படுத்துகிறது. இந்த வகையில் "வாழ்வு நன்மை நிறைந்ததாகவும் மகிழ்ச்சியானதாகவும் மாறியிருக்கிறது"[154] என்பதை கணப்பொழுதில்கூட நம்மால் உணர முடியும்.

## வன்முறையும் தன்னல நோக்கோடு கையாளுதலும்

153. பாலியல்பு பற்றிய இத்தகைய நேர்மறையான கண்ணோட்டத்தின் அடிப்படையில், அதை முழுமையாக ஒரு நலமான மெய்மை நோக்குடன் நாம் அணுகிட முடியும். பல நேரங்களில் பாலுறவு ஆள்தன்மையற்றதும் நலமற்றதாகவும் இருக்கிறது என்பது உண்மையே; இதன் விளைவாக, "பாலுறவானது தனது ஆளுமையை நிலைநிறுத்தவும் தனிப்பட்ட ஆசைகளையும் இயல்புணர்ச்சிகளையும் தன்னலநோக்கில் நிறைவுசெய்யவும் ஏற்ற வாய்ப்பாகவும் கருவியாகவும் ஆகிவிடுகிறது."[155] இன்றைய நமது காலகட்டத்தில், "பயன்படுத்திவிட்டுத் தூக்கியெறிகின்ற" மனநிலையால் நச்சுப்படுத்தப்படும் இடரையும் பாலுறவு எதிர்நோக்கியிருக்கிறது. அடுத்தவரது உடலானது திருப்தியளிக்கின்றவரை பயன்படுத்திக் கொள்ளப்பட வேண்டியதும், எப்போது கவர்ச்சியை இழக்கிறதோ அப்போது தூக்கியெறியப்பட வேண்டியதுமான பொருளாகப் பார்க்கப்படுகின்றது. பாலுறவு பற்றிய திரிக்கப்பட்ட தவறான புரிதலின் விளைவாக இன்று தொடர்கின்ற அடக்கியாளுதல், ஆணவம், இழிவுபடுத்துதல், பாலியல் தகாஒழுக்கம் மற்றும் வன்முறை போன்ற வடிவங்களை நாம் பொருள்படுத்தாமலோ கண்டுகொள்ளாமலோ இருக்க முடியுமா?

154. திருமணத்திற்குள்ளேயே பாலுறவு, துன்பத்திற்கும் மற்றும் தன்நலத்தோடு அடுத்தவரைப் பயன்படுத்துவதற்கும் ஊற்றாக ஆகலாம் என்பதையும் நாம் அறிவோம். எனவே "இல்லறப் பாலுறவுச் செயல் துணைவருடைய நிலைமையையும், அதுபற்றிய அவருடைய தனிப்பட்ட நியாயமான விருப்பத்தையும் கருத்தில் கொள்ளாமல், அடுத்தவர் மீது திணிக்கப்படும்போது, அது உண்மையான அன்புச் செயலாக இருக்கமுடியாது; எனவே அத்தகைய செயல் கணவன் மனைவியினுடைய நெருங்கிய உறவுசார்ந்த அறநெறி ஒழுங்கமைப்பை மீறுவதாக

இருக்கிறது''[156] என்பது தெளிவாக மீண்டும் எடுத்துரைக்கப்பட வேண்டும். கணவன் மனைவிக்கான பாலுறவு ஒன்றிப்பிற்கே உரித்தான செயல்கள் ''மனித இயல்புக்குரிய முறையில்''[157] செய்யப்படும்போது இறைவனால் தீர்மானிக்கப்பட்ட பாலியல்பின் தன்மையோடு ஒத்துப்போகிறது. ''இதில் எவரும் தவறிழைத்துத் தம் சகோதரரை வஞ்சிக்கக்கூடாது'' (1தெச 4:6) என்று புனித பவுல் வலியுறுத்துகிறார். அவர் எழுதியது பெண்கள் முழுமையாக ஆண்களுக்குக் கீழானவர்களாகக் கருதப்பட்ட ஆணாதிக்கக் கலாச்சாரச் சூழலில் என்றாலும், அவர் பாலுறவு மணத்துணைவர்களிடையே தகவல் பரிமாற்றத்தை உள்ளடக்கியதாக இருக்கவேண்டுமென உறுதிபடப் போதித்தார்: ''இருவரும் ஒத்துக்கொண்டால்'' (1கொரி 7:5) பாலுறவுச் செயலை சிறிதுகாலம் ஒத்திப்போடுவதற்கான வாய்ப்பைப் பற்றி அவர் பேசுகிறார்.

155. ''மணத்துணைவர்கள் திருப்தியடையாமையால் அச்சுறுத்தப்படலாம்''[155] என்று புனித இரண்டாம் ஜான்பால் நுட்பமாக எச்சரித்திருக்கிறார். வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், மணத்துணைவர்கள் தொடர்ந்து வளருகின்ற உள்ளார்ந்த ஒன்றிப்புக்கு அழைக்கப்பட்டிருக்கும் பொழுது, அவர்கள் தங்களது வேற்றுமைகளையும் இருவருக்குமிடையேயான நியாயமான இடைவெளியையும் அழித்துவிடும் இடருக்கு வரலாம். ஏனெனில் ஒவ்வொருவரும் அவனுக்கே அல்லது அவளுக்கே உரித்தான பறிக்கப்பட முடியாத மாண்பைக் கொண்டிருக்கிறார்கள். ஒருவருக்கொருவர் உடைமையாயிருப்பது ஆதிக்கமாக மாறுகின்றபொழுது, ''ஒருவர் மற்றவருக்கிடையேயான உறவில் உள்ள ஒன்றிப்பின் அமைப்பு முறை அடிப்படையிலேயே மாறிவிடுகிறது.''[159] ஆதிக்கம் செலுத்துபவர்கள் இறுதியில் தங்களது சொந்த மாண்பையே மறுப்பவர்களாகிறார்கள் என்பது ஆதிக்க மனநிலையின் ஒர் அங்கமாக இருக்கிறது.[160] இறுதியில், அவர்கள் ''தங்களது சொந்த உடலோடு கூட உள்ளுணர்வார்ந்த வகையில் தங்களை ஒன்றுபடுத்திக் கொள்வதில்லை,''[161] ஏனெனில் அவர்கள் அதன் உள்ளார்ந்த பொருளைக் களைந்து விடுகிறார்கள். அவர்கள் பாலுறவைத் தப்பிச்செல்லும் ஒரு வழியாகப் பயன்படுத்துபவர்களாகிவிடுகிறார்கள்; இல்லற ஒன்றிப்பின் அழகையும் துறந்துவிடுகிறார்கள்.



156. எந்தவொரு வடிவிலான பாலுறவு அடிபணிதலும் தெளிவாக நிராகரிக்கப்பட வேண்டும். எபேசியருக்கு எழுதிய கடிதத்தில் பவுல் ''உங்கள் கணவருக்கு நீங்கள் பணிந்திருங்கள்'' (எபே 5:22) என்று பெண்களுக்கு அறிவுறுத்துவது பற்றிய தவறான விளக்கங்கள் அனைத்தும் இதில் அடங்கும். இந்தப் பகுதி அக்காலத்திய கலாச்சாரக் கூறுகளைப் பிரதிபலிக்கிறது; ஆனால் நமது கவலை அதன் கலாச்சாரச் சூழல் பற்றியல்ல, மாறாக அது தெரிவிக்கின்ற வெளிப்படுத்தப்பட்ட செய்தியைப் பற்றியதாகும். புனித இரண்டாம் ஜான்பால் மெய்யறிவோடு இப்படிக் குறிப்பிட்டுள்ளார்: ''மனைவியை கணவனுக்குப் பணியாளாகவோ அடிமையாகவோ ஆக்குகின்ற அனைத்து வகையான அடிபணியச் செய்தலையும் அன்பு ஒதுக்கித் தள்ளுகிறது. திருமணத்தின் வாயிலாக அவர்கள் கட்டியெழுப்ப வேண்டிய உறவும் ஒன்றிப்பும் ஒருவர் ஒருவருக்கான தற்கையளிப்பால் கட்டமைக்கப்படுகிறது; அந்தத் தற்கையளிப்பு ஒருவர் ஒருவருக்குத் தம்மையே கீழ்ப்படுத்திக் கொள்வதாகவும் அமைகிறது.''[162] எனவேதான் ''கணவர்களும் மனைவியரைத் தம் சொந்த உடல் எனக் கருதி அன்பு செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறார்கள்'' (எபே 5:28) என்று பவுல் தொடர்ந்து கூறுகிறார். இந்த விவிலியப் பகுதி, தன்னிலையில் செயல்படுவதில் எளிதில் நிறைவடையும் மனநிலையை வெற்றிகொள்ளவும் எப்போதும் அடுத்தவர் நலனைப் பற்றி அக்கறையோடிருக்கவும் ஒவ்வொருவரையும் ஊக்குவிப்பதைப் பற்றியதாக இருக்கிறது: ''ஒருவருக்கொருவர் பணிந்திருங்கள்'' (எபே 5:21). திருமணத்தில், இந்த ஒருவரொருவருக்கான ''அடிபணிதல்'' சிறப்புப் பொருளைப் பெறுகிறது; நம்பிக்கையுடைமை, கண்ணியம், நலம்பேணுதல் ஆகியவற்றை அடையாளமாகக் கொண்ட சுதந்திரமாகத் தெரிவுசெய்யப்பட்ட ஒருவரொருவருக்கு உரியவராகயிருத்தலாக இது பார்க்கப்படுகிறது. பாலியல்பு பிரிக்க முடியாத வகையில் பாலுறவு நட்புக்குத் துணை புரிவதாக இருக்கிறது; ஏனெனில் அடுத்தவரின் நிறைவுக்குத் துணை புரிவதற்காகவே இது இருக்கிறது.

157. அதேவேளையில், பாலியல்பு மற்றும் காம உணர்வு பற்றிய தவறான புரிதல்களைப் புறந்தள்ளுவது என்பது நம்மை ஒருபோதும், பாலியல்பு மற்றும் காமம் இவற்றிற்கு உரித்தான இடத்தை நாம் மறுப்பதற்கோ குறைத்து மதிப்பிடுவதற்கோ இட்டுச் செல்லக் கூடாது.

மணத்துணைவர் ஒவ்வொருவரும் தங்கள் சொந்தத் தேவைகளையும் ஆசைகளையும் அறவே துறந்து, தங்கள் சொந்த மனநிறைவைப்பற்றிக் கவலை கொள்ளாமல், அடுத்தவருடைய நலனை மட்டுமே நாடுகின்ற இடமாகத் திருமணத்தை தாராளமான நன்கொடையாகவும், சுயதியாகமாகவும் மட்டுமே பார்ப்பது திருமணத்தின் உயரிய நோக்கம் எனக் கருதமுடியாது. உண்மை அன்பானது அடுத்தவரை ஏற்றுக்கொள்ளக் கூடியதாகவும், தனது சொந்த குறைகளையும் தேவைகளையும் ஒப்புக் கொள்ளக் கூடியதாகவும் கொஞ்சல், ஆரத்தழுவல், முத்தம், பாலுறவு ஒன்றிப்பு ஆகிய உடல்சார் அன்பின் வெளிப்பாடுகளை உண்மையோடும் மகிழ்வான நன்றியுணர்வோடும் வரவேற்பதாகவும் இருக்க வேண்டும் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். பதினாறாம் பெனடிக்ட் இதைத் தெளிவாகக் கூறியுள்ளார்: ''மனிதன் உடலைத் தனது மிருக இயல்புக்கு மட்டுமே உரியதாக எண்ணி அதை ஒதுக்கவும், முழுமையாக ஆன்மாவாக மட்டுமே இருக்கவும் விரும்பினானென்றால், அப்போது ஆன்மா மற்றும் உடல் இரண்டுமே தங்களது மாண்பை இழந்து விடும்.''[163] எனவேதான், ''மனிதர்'' தன்னர்ப்பண இறங்குமுக அன்பால் மட்டுமே வாழமுடியாது. அவர் எப்போதுமே கொடுப்பவராக மட்டுமேயல்ல, பெற்றுக் கொள்பவராகவும் இருக்க வேண்டும். அன்பைக் கொடுக்க விரும்புகிற எவரும், அன்பைக் கொடையாகப் பெற்றுக் கொள்ளவும் வேண்டும்.''[164] இருப்பினும், மனித சமநிலை எளிதில் மாறுவது என்பதை நாம் ஒருபோதும் மறந்துவிடக்கூடாது; நம்மில் ஒருபகுதி உண்மையான மனித வளர்ச்சியைத் தடுப்பதாகவும் எந்த நேரத்திலும் மிகவும் பண்பாடற்ற தன்னலப் போக்குகளைக் கட்டவிழ்த்துவிடக் கூடியதாகவும் இருக்கிறது.

## திருமணமும் கன்னிமையும்

158. ''மணமுடிக்காத பலபேர் தங்களது சொந்தக் குடும்பத்திற்கு அர்ப்பணிப்புள்ளவர்களாக இருப்பது மட்டுமல்ல, பல நேரங்களில் தங்கள் நண்பர்கள் குழுவிலும், திருஅவைச் சமூகத்திலும், தங்களது தொழில்சார்ந்த துறைகளிலும் அளப்பரிய சேவையை அளிப்பவர்களாக இருக்கிறார்கள். சில நேரங்களில் அவர்களது உடனிருப்பும் பங்களிப்பும் கண்டுகொள்ளப்படுவதில்லை; இது ஒருவிதமான தனிமையுணர்வை



அவர்களுக்குள் ஏற்படுத்திவிடுகிறது. பிறரன்புப் பணி மற்றும் தன்னார்வப் பணிகள் மூலமாகப் பலர் தங்களது திறமைகளைக் கிறிஸ்தவ சமூகத்திற்காகப் பயன்படுத்துகிறார்கள். மற்றவர்கள் தங்களது வாழ்வை கிறிஸ்துவின் அன்புக்காகவும் அயலாரின் அன்புக்காகவும் அர்ப்பணிப்பதால், அவர்கள் மணமுடிக்காதவர்களாக இருக்கிறார்கள். அவர்களது அர்ப்பணிப்பு குடும்பத்தையும் திருஅவையையும் சமூகத்தையும் மிகவும் வளப்படுத்துகிறது.''[15]

159. கன்னிமை அன்பின் ஒரு வடிவாகும். அடையாளம் என்ற வகையில், அது இறையாட்சியின் வருகையைப் பற்றியும் நற்செய்திக்காக முழுமையாக அர்ப்பணிக்கப்பட வேண்டியதன் அவசியத்தைப் பற்றியும் நமக்குக் கூறுகிறது (காண் 1கொரி 7:32). மேலும் அது விண்ணக முழுமையின் பிரதிபலிப்பாகவும் இருக்கிறது; அங்கு ''யாரும் திருமணம் செய்து கொள்வதில்லை'' (மத் 22:30). இயேசுவின் நிறைவருகை உடனடியாக நிகழும் என்று எதிர்பார்த்ததாலும், மேலும் எல்லோரும் நற்செய்தியைப் பரப்புவதில் மட்டுமே முழுக்கவனம் செலுத்த வேண்டும் என விரும்பியதாலும் புனித பவுல் கன்னிமையை (மணத்துறவை) பரிந்துரைத்தார்: ''இனியுள்ள காலம் குறுகியதே'' (1கொரி 7:29). இருந்தபோதிலும், இது அவரது தனிப்பட்ட கருத்தும் விருப்பமுமே அன்றி (காண் 1கொரி 7:6-9), கிறிஸ்துவால் கேட்கப்படுவது அல்ல என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளார்: ''ஆண்டவரின் கட்டளை எதுவும் என்னிடமில்லை'' (1கொரி 7:25). அதேவேளையில், பலவகைப்பட்ட அழைத்தல்களின் மதிப்பை அவர் அடையாளங்கண்டிருந்தார்: ''ஒவ்வொருவருக்கும் கடவுள் தரும் தனிப்பட்ட அருள்கொடை உண்டு. இது ஒருவருக்கு ஒருவகையாகவும், வேறொருவருக்கு வேறுவகையாகவும் இருக்கிறது'' (1கொரி 7:7). இதைப் பற்றிய சிந்தனையாக, விவிலியப் பகுதிகள் கூட ''திருமணத்தின் 'தாழ்வையோ', கன்னிமை அல்லது மணத்துறவின் 'உயர்வையோ' உறுதிப்படுத்தும் வகையில் எந்தவொரு காரணத்தையும் கொடுக்கவில்லை''[166] என்று புனித இரண்டாம் ஜான்பால் குறிப்பிட்டிருக்கிறார். கன்னிமையின் உயர்வு பற்றி அறுதியாகப் பேசுவதற்குப் பதிலாக, வெவ்வேறு வாழ்வு நிலைகள் ஒன்றையொன்று நிறைவாக்குவதாகவும், அதன் விளைவாக ஒன்று மற்றொன்றை விட ஏதாவது ஒரு வழியில் அதிக நிறைவுள்ளதாகவும்

இருக்கமுடியும் என்று சுட்டிக்காட்டுவதே போதுமானது. எடுத்துக்காட்டாக ஹேல்ஸ் நகர அலெக்சாண்டர் இவ்வாறு கூறியுள்ளார் "திருச்சபையோடு கொண்ட கிறிஸ்துவின் ஒன்றிப்பு, அல்லது கிறிஸ்துவினுடைய தெய்வீக மற்றும் மனித இயல்புகளின் ஒன்றிப்பு"[167] என்னும் உயரிய மெய்மையை அடையாளப்படுத்துகிறது என்னும் அடிப்படையில் திருமணம் ஒருவகையில் ஏனைய அருட்சாதனங்களைவிட மேலானது எனக் கருதப்படலாம்.

160. எனவே, "கற்பைப் போற்றுவதற்காக திருமணத்தின் மதிப்பைக் குறைப்பது சரியானது அல்ல."[168] "ஒன்றை இன்னொன்றிற்கு எதிராக முதன்மைப்படுத்த எந்தவிதக் காரணமும் இல்லை... ஒருவேளை, ஏதாவதொரு இறையியல் மரபைப் பின்பற்றி, ஒருவர் "நிறைவு நிலை"யைப் பற்றிப் பேசுவாரெனில், அது தன்னிலேயே ஏதோ பாலுறவைத் தவிர்ப்பதைப் பற்றியதாக மட்டுமல்ல, மாறாக நற்செய்தி அறிவுரையின் அடிப்படையிலான ஒட்டுமொத்த வாழ்வைப் பற்றியதாக இருக்கிறது."[169] மணமுடித்த ஒருவரால் அன்பின் உயரிய நிலையை அனுபவிக்க இயலும்; இவ்வாறு நற்செய்தி அறிவுரைகளின் உள்மதிப்பீடுகளுக்கு உண்மையுள்ளவராக இருப்பதன் வழியாக, அன்பிலிருந்து வழிந்தோடும் நிறைவை அவர் அடைந்திட முடியும். அத்தகைய நிறைவு ஒவ்வொரு ஆணுக்கும் பெண்ணுக்கும் இயன்றதாகவும் அடையக்கூடியதாகவும் இருக்கிறது."[170]

161. கன்னிமையின் மதிப்பு அடுத்தவரை உடமையாக்கிக் கொள்வதற்குத் தேவையில்லாத ஒரு அன்பை அடையாளப்படுத்துவதில் அடங்கியிருக்கிறது; இந்த வகையில், இது விண்ணக அரசின் சுதந்திரத்தைப் பிரதிபலிக்கிறது. கன்னிமை மணமுடித்த வாழ்க்கைத் துணைவர்கள் தங்கள் இல்லற அன்பைக் கிறிஸ்துவின் உறுதியான அன்பின் பின்னணியில் வாழ்ந்திடவும், இறையாட்சியின் முழுமையை நோக்கி இணைந்து பயணிக்கவும் ஊக்குவிக்கிறது. மறுபுறம் இல்லற அன்பு, மற்ற விழுமியங்களைக் குறித்துக் காட்டுகிறது. இது மூவொரு இறைவனில் காணக் கிடக்கின்ற தனித்துவத்தில் முழுமையான ஒற்றுமையின் தனிப்பட்ட பிரதிபலிப்பாகும். குடும்பம் கிறிஸ்துவின் அடையாளமாகவும் இருக்கிறது. ஒவ்வொரு மனித வாழ்வின் அங்கமாக இருக்கின்ற கடவுளின் நெருக்கத்தை அது வெளிப்படுத்துகிறது; ஏனெனில் தமது மனிதராதல், இறப்பு, மற்றும் உயிர்ப்பின் வழியாக அவர் நம்மோடு ஒன்றாகிவிட்டார். ஒவ்வொரு



மணத்துணைவரும், இறப்புவரை அவனோடு அல்லது அவளோடு அனைத்தையும் பகிர்ந்து கொள்ளத் தயாராக இருப்பதன் அடையாளமாக, அடுத்தவரோடு "ஒரே உடல்" ஆகிவிடுகின்றார். கன்னிமை உயிர்த்த கிறிஸ்துவின் "நிறைவுக்கால" அடையாளமாக இருக்கையில், திருமணம் இவ்வுலகில் வாழும் நமக்கான "வரலாற்றுக் கால" அடையாளமாக இருக்கிறது; இது நம்முள் ஒருவராகி, நமக்காகத் தமது இரத்தத்தையே சிந்தும் அளவுக்குத் தம்மையே முழுமையாகக் கையளிக்கத் திருவுளம் கொண்ட மண்ணகக் கிறிஸ்துவின் அடையாளமாக இருக்கிறது. கன்னிமையும் திருமணமும் அன்பு செய்வதற்கான வெவ்வேறு வழிகளாக இருக்கின்றன, மேலும் அவ்வாறு தான் அவை இருக்க வேண்டும். ஏனெனில் "அன்பு இல்லாமல் மனிதரால் வாழ முடியாது. தன்னாலேயே புரிந்துகொள்ள முடியாத உயிருருவாக அவர் இருக்கிறார்; அன்பு அவருக்கு வெளிப்படுத்தப்படவில்லையெனில், அவரது வாழ்வு அர்த்தமற்றதாகும்."[171]

162. தற்சார்புடன் இருப்பது, ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு அல்லது ஒரு வேலையிலிருந்து வேறொரு வேலைக்கு எளிதாக மாறிக் கொள்வது, தன்விருப்பம்போல் பணத்தைச் செலவிடுவது, தான் விரும்பியவாறு மற்றவர்களோடு நேரத்தைச் செலவிடுவது ஆகியவற்றுக்கான சுதந்திரத்தைக் கொடுக்கக் கூடிய சொகுசான தனி வாழ்வாக மாறிவிடும் இடருக்கு மணத்துறவு ஆளாகலாம். இதுபோன்ற சமயங்களில், மணமுடித்தவர்களுடைய சாட்சிய வாழ்வானது மிகவும் ஓங்கி ஒலிக்கிறது. தங்கள் உடன்படிக்கைக்குக் கடவுளது தாராளமான மற்றும் உறுதியான பிரமாணிக்கத்தின் தெளிவான அடையாளத்தைச் சில திருமணங்களில் கன்னிமைக்கு அழைக்கப்பட்டவர்கள் கண்டுகொள்ள முடியும்; இது அவர்கள் தங்களை மற்றவர்களுக்கு முழுமையாகக் கொடுப்பதற்கும், மற்றவர்கள் தங்களை எப்போதும் எளிதில் அணுகுவதற்கு ஏற்றவாறு இருப்பதற்கும் அவர்களை இட்டுச்செல்லலாம். மணமுடித்த வாழ்க்கைத் துணைவர்கள் உண்மையுள்ளவராய் இருக்கிறார்கள்; ஒருவர் உடல்சார் கவர்ச்சியை இழந்துவிட்ட பொழுதிலும் அல்லது ஒருவர் மற்றவரது ஆசையைத் திருப்திப்படுத்தத் தவறுகின்ற பொழுதிலும் கூட அவர்கள் உண்மையாய் இருக்கிறார்கள்; உண்மையின்றி இருப்பதையும், பிரிந்து போவதையும் ஊக்குவிக்கின்ற குரல்கள் சமூகத்தில் ஓங்கி ஒலிக்கின்ற பொழுதிலும் கூட

அவர்கள் உண்மையாயிருக்கிறார்கள். ஒரு மனைவி நோய்வாய்ப்பட்ட தன் கணவனை அக்கறையோடு கவனித்துக் கொள்வதன் மூலம், சிலுவைக்கு நெருக்கமாக வருகிறார்; வாழ்நாளின் இறுதிவரை அன்பு செய்வதற்கான தமது அர்ப்பணத்தைப் புதுப்பித்துக் கொள்கிறார். இத்தகைய அன்பில், உண்மைக் காதலரின் மாண்பு ஒளிவீசுகிறது; எவ்வாறெனில், அன்பு செய்யப்படுவதைவிட அன்பு செய்வதே உண்மை அன்புக்கு உரித்தானது என்பதன் அடிப்படையில்.[172] பிள்ளைகள் பிரச்சினைக்குரியவர்களாகவும் நன்றிமறந்தவர்களாகவும் இருக்கின்ற வேளையிலும் தன்னலமற்ற அன்புப் பணிக்கான ஆற்றல் இருப்பதைப் பல குடும்பங்களில் காண முடிவதைக் குறிப்பிட்டாக வேண்டும். இச்செயலானது அப்பெற்றோர்களை இயேசுவினுடைய தன்னியல்பான மற்றும் தன்னலமில்லாத அன்பின் அடையாளமாக மாற்றுகிறது. இது போன்ற நிகழ்வுகள் மணத்துறவு மேற்கொண்டவர்களை இறையாட்சிக்கான தங்களது அர்ப்பணத்தை இன்னும் அதிகமான தாராள மனத்தோடும் திறந்த உள்ளத்தோடும் வாழ்வதற்கு ஊக்குவிக்கின்றன. இன்றையச் சூழலில், உலகியமயமாதல் வாழ்நாள் முழுவதும் நீடிக்கும் உறவு ஒன்றிப்பின் மாண்பையும், திருமணத்திற்கான அழைத்தலின் அழகையும் மங்கச் செய்துவிட்டது. இந்தக் காரணத்தினால், “இல்லற அன்பின் நேர்மறைக் கூறுகளை பற்றிய புரிதலை ஆழப்படுத்துவது அவசியமாகிறது.”[173]

## அன்பின் உருநிலை மாற்றம்

163. நீண்ட வாழ்வுக் காலம் என்பது இப்போது நெருக்கமான, மற்றும் ஒருவர் ஒருவருக்கே எனும் உறவுகள் நான்கு, ஐந்து அல்லது ஆறு பத்தாண்டுகள் நீடிக்க வேண்டும் என்று பொருள்படும்; இதன் விளைவாக, துவக்கநிலையில் எடுக்கப்பட்ட முடிவு அடிக்கடி புதுப்பிக்கப்பட வேண்டும். மணத்துணைவரில் ஒருவருக்கு மற்றவர்பால் முன்புபோல் முனைப்பான பாலுறவு நாட்டம் இல்லாத பொழுதும் ஒருவரொருவருக்கு உரியவராக இருப்பதன் மகிழ்வை இன்னும் அனுபவிக்க முடியும்; மேலும் இருவரில் எவரும் தனியாக இல்லை, மாறாக வாழ்வின் அனைத்தையும் பகிர்ந்துகொள்வதற்கென ஒரு “துணைவர்” இருக்கின்றார் என்ற அறிதலையும் அனுபவித்திட முடியும். அவனோ அவளோ நமது வாழ்வுப்



பயணத்தில் உடனிருக்கும் ஒரு நபர்; அவரோடு வாழ்வின் பிரச்சினைகளைச் சந்திக்கவும், வாழ்வின் இன்பங்களை அனுபவிக்கவும் முடியும். இந்த மனநிறைவானது பாலுறவு அன்புக்கே உரித்தான பாசத்தின் ஒரு பகுதியாகும். இப்போது உணர்வது போலவே வாழ்நாள் முழுவதும் உணர்வோம் என்பதற்கு எவ்வித உத்தரவாதமும் இல்லை. இருப்பினும், தம்பதியர், பகிரப்பட்ட மற்றும் நீடித்த வாழ்வுத் திட்டத்தோடு வருகின்றபோது அவர்களால் ஒருவர் மற்றவரை அன்பு செய்ய முடியும்; மேலும் வளப்படுத்துகின்ற உள்ளார்ந்த உறவு நெருக்கத்தை அனுபவித்தவர்களாய் மரணம் அவர்கள் இருவரையும் பிரிக்கும்வரை இருவரும் ஒருவராக வாழ்ந்திட முடியும். அவர்கள் வாக்களிக்கின்ற அன்பு எந்தவோர் உணர்வையும், உணர்ச்சியையும் அல்லது மனநிலையையும் விட மிகவும் மேலானது; அவர்கள் வாக்களித்த அன்பு மேற்குறிப்பிட்ட அனைத்தையும் ஒருவகையில் உள்ளடக்கியதாக இருந்தாலும், அவையனைத்தையும் விட அது மேலானது. அது ஆழமான அன்பு; வாழ்நாள் முழுவதற்குமான இதயத்தின் முடிவு அது. தீர்க்கப்படாத சிக்கல்கள் மற்றும் குழப்பமான உணர்வுப்பூர்வமான சூழல்கள் இவற்றிற்கு மத்தியிலும், அவர்கள் அன்பு செய்வதற்கான, ஒருவர் மற்றவருக்கு உடைமையாயிருப்பதற்கான, ஒருவர் மற்றவரோடு வாழ்வைப் பகர்வதற்கான, தொடர்ந்து அன்புசெய்யவும் மன்னிப்பதற்குமான தங்களது முடிவை ஒவ்வொரு நாளும் மறுஉறுதி செய்து கொள்கிறார்கள். ஒவ்வொருவரும் தனிப்பட்ட வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்தின் பாதையில் முன்னேறுகிறார்கள். இந்தப் பயணத்தில், ஒவ்வொரு படியிலும் மற்றும் ஒவ்வொரு புதிய நிலையிலும் அன்பு அகமகிழ்கிறது.

164. ஒவ்வொரு திருமணத்தின் காலப்போக்கில் உடல் தோற்றங்கள் மாறுகின்றன; இதனால் அன்பும் ஈர்ப்பும் குறையவேண்டும் என்பதல்ல. நாம் அடுத்தவரை அவரது உடலுக்காக அல்ல மாறாக அவர் என்னவாக இருக்கிறாரோ அதற்காகவே நாம் அன்பு செய்கிறோம். உடல் முதுமையடைந்தாலும், நமது இதயத்தை முதலில் வென்றெடுத்த அந்தத் தனிப்பட்ட அடையாளத்தை அது இன்னும் தொடர்ந்து வெளிப்படுத்துகிறது; அன்பின் கண்கொண்டு மணத்துணைவர் அதைத் தொடர்ந்து பார்க்கிறார்; எனவே அவரது அன்பு குறைவது இல்லை. அவனோ அல்லது அவளோ அடுத்தவருக்கு உடமையாயிருப்பதற்கான தெரிவை மறுஉறுதி செய்கிறார்;

மேலும் தமது அந்தத் தெரிவைப் பிரமாணிக்கமான அன்பின் நெருக்கத்தில் வெளிப்படுத்துகிறார். இந்த முடிவின் மேன்மை, அதன் ஆழத்திலும் அழுத்தத்திலும், தம்பதியர் தங்கள் இல்லறக் கடமைகளை நிறைவு செய்வதில் ஒரு புதுவகையான உணர்ச்சியைப் பிறப்பிக்கச் செய்கிறது. ஏனெனில் "ஓர் ஆள் என்ற வகையில் இன்னொரு மனிதரால் உண்டாக்கப்படுகின்ற உணர்ச்சியானது... தன்னிலேயே இல்லறப் பாலுறவுச் செயலுக்கு இட்டுச் செல்வதில்லை."[174] வேறு சில அர்த்தமுள்ள உணர்ச்சி வெளிப்படுத்தல்களை அது கண்டுபிடித்துக் கொள்கிறது. உண்மையில், அன்பானது "பல்வேறுபட்ட பரிமாணங்களைக் கொண்ட ஒரு தனிப்பட்ட மெய்ம்மை ஆகும்; வெவ்வேறு தருணங்களில் ஒன்று அல்லது வேறொரு பரிமாணம் தெளிவாகக் கிளம்பியெழும்."[175] திருமண உடன்பாடு புதிய செயல்வடிவங்களைக் காண்பதாகவும், மேலும் உறுதியில் வளர்வதற்கான புதிய வழிகளைத் தொடர்ந்து நாடுவதாகவும் இருக்கிறது. இவை இரண்டும் அந்த உடன்பாட்டைப் பாதுகாக்கின்றன, மேலும் உறுதிப்படுத்துகின்றன. இதற்கு ஒவ்வொரு நாளும் முயற்சியெடுப்பது அவசியமாகும். எவ்வாறெனினும், ஒவ்வொரு புதிய சூழலிலும் நமது அன்பை உறுதிப்படுத்தவும், நெறிப்படுத்தவும் மேலும் உருமாற்றவும் ஆவியானவருடைய அருட்பொழிவையும் அவரது வல்லமையையும் இறைஞ்சி வேண்டாமல் இவற்றில் எதுவுமே சாத்தியமில்லை.



# அலகு – 5

## நற்பயன் தரும் அன்பு

165. அன்பு எப்போதும் வாழ்வை வழங்குகின்றது. இல்லற அன்பு "மணத்துணைவர்களோடு முற்றுப்பெறுவதில்லை... மணத்துணைவர்கள் ஒருவர் ஒருவருக்குத் தங்களை வழங்குகின்றபோது, வெறுமனே தங்களை மட்டுமே வழங்காது, தங்கள் பிள்ளைகள் என்ற மெய்ம்மையையும் அவர்கள் ஒருவர் மற்றவருக்கு வழங்குகின்றனர். அப்பிள்ளைகள் அவர்களது அன்பின் உயிருள்ள பிரதிபலிப்பும், அவர்களது இல்லற ஒன்றிப்பின் நிலையான அடையாளமும், ஒரு தந்தை மற்றும் தாயாக அவர்கள் இருப்பதன் உயிருள்ள மற்றும் பிரிக்கமுடியாத கூட்டிணைப்புமாகத் திகழ்கின்றனர்."[176]

### ஒரு புதிய உயிரை வரவேற்றல்

166. புதிய உயிர் ஒன்று தோன்றுவதும், அது இறைவனின் பரிசாக வரவேற்கப்படுவதும் குடும்பம் என்ற தளத்திலேயே. ஒவ்வொரு புதிய உயிரும், "நம்மை எப்போதும் வியப்பில் ஆழ்த்தும், அன்பின் முற்றிலும் கொடையாகிய பரிமாணத்தை நாம் பாராட்ட நமக்குக் கற்றுக்கொடுக்கின்றது. இந்த உலகில் தோன்றுவதற்கு முன்னரே குழந்தைகள் அன்பு செய்யப்படுகின்றனர் என்பதுவே, முதலில் அன்பு செய்யப்படுதலின் அழகு."[177] இதில் எப்போதும் முதல் முயற்சியை எடுக்கும் இறைவனது அன்பினுடைய முதன்மையின் பிரதிபலிப்பைக் காண்கின்றோம்; ஏனென்றால் குழந்தைகள் "தாங்கள் அன்பு செய்யப்படுவதற்குத் தகுதிபெற எதையும் செய்யும் முன்னரே, அன்பைப் பெறுகின்றனர்."[178] எனினும், தங்கள் "வாழ்வின் முதல் கணத்திலிருந்தே, பல குழந்தைகள் புறக்கணிக்கவும் கைவிடவும்பட்டு, தங்கள் குழந்தைப்பருவத்தையும் எதிர்காலத்தையும் பறிகொடுத்து நிற்கின்றனர். தங்கள் செயலை நியாயப்படுத்துவதற்கு என்பதுபோல, இக்குழந்தைகளை இந்த உலகில் பிறக்கச் செய்ததே ஒரு தவறு என சொல்லத் துணிவோரும் உண்டு. இது ஒரு வெட்கக்கேடு!... வயது முதிர்ந்தோரின் தவறுகளுக்காக நாம் குழந்தைகளைத் தண்டித்தோம் என்றால், மனித உரிமைகள் மற்றும் குழந்தைகளின் உரிமைகள் பற்றியச் சிறப்புமிகு அறிக்கைகளை நாம் எவ்வாறு வெளியிட

முடியும்?"[179] விரும்பத்தகாத சூழலில் ஒரு குழந்தை இந்த உலகில் பிறக்கின்றதென்றால், அக்குழந்தையின் பெற்றோர் மற்றும் குடும்ப உறுப்பினர்கள், அக்குழந்தையை இறைவன் தரும் பரிசெனக் கருதி, திறந்த மனதோடும் பாசத்தோடும் ஏற்றுக்கொள்வதற்கு என்னென்ன தேவையோ அவற்றையெல்லாம் செய்யவேண்டிய பொறுப்பைக் கொண்டுள்ளனர். ஏனென்றால் "ஒரு குழந்தை இவ்வுலகில் பிறப்பதைப்பற்றிப் பேசும்போது, அக்குழந்தை ஒருபோதும் தான் தவறுதலாக இந்த உலகில் பிறந்துவிட்டதாகவோ, அல்லது தகுதியற்றதாகவோ, அல்லது நான்கு திசைகளுக்கும் மனிதனின் ஆணவத்திற்கும் தான் கைவிடப்பட்டதாகவோ உணராமல் இருப்பதற்காக, பெரியவர்கள் மேற்கொள்ளும் எந்தவிதமான தியாகமும், மிக விலையேறப்பெற்றதாகவோ, மிக மதிப்பிற்குரியதாகவோ கருதப்பட வேண்டிய ஒன்றல்ல."[180] ஒரு தந்தை மற்றும் தாயிடம் இறைவனால் ஒப்படைக்கப்படும் புதியதோர் குழந்தை என்னும் பரிசு, ஏற்றுக்கொள்ளுதலில் தொடங்குகின்றது, வாழ்நாள் முழுவதும் நீடிக்கும் பாதுகாப்பில் தொடர்கின்றது, நிலைவாழ்வின் மகிழ்ச்சி என்பதனைத் தன் இறுதி இலக்காகக் கொண்டுள்ளது. ஒவ்வொரு மனித ஆளும் தன் இறுதிநிறைவைப்பற்றி ஆழ்ந்து சிந்திக்கும்போது, பெற்றோர் தங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பரிசின் விலைமதிக்க இயலாத் தன்மையை இன்னும் அதிகமாக உணர்வர். ஏனென்றால் ஒருவரை எக்காலமும் அழைப்பதற்கு இறைவனே பயன்படுத்தவிருக்கின்ற அவரது பெயரைத் தேர்வுசெய்ய பெற்றோரை அவர் அனுமதிக்கின்றார்.[181]

167. பெரிய குடும்பங்கள் திருஅவைக்கு ஒரு மகிழ்வே. அன்பினுடைய கனிமிகுதியின் வெளிப்பாடுகளே அக்குடும்பங்கள். அதே நேரத்தில், புனித இரண்டாம் யோவான் பவுல் சரியாகத் தெளிவுபடுத்தியிருப்பதுபோல, பொறுப்புள்ள பெற்றோர் பணி "வரம்பற்ற இனப்பெருக்கம் செய்தல் அல்லது குழந்தைகளை வளர்த்தல் எத்தகைய பொறுப்புகளை உள்ளடக்கியது என்பதைப் பற்றிய அறியாமை என்றல்ல; மாறாக, அது மணத்துணைவர்கள் சமூக மற்றும் மக்கள்தொகை மெய்ம்மைகளையும், தங்கள் வாழ்க்கைச் சூழ்நிலைகளையும், நியாயமான விருப்பங்களையும் கருத்தில்கொண்டு, தங்களது மீற இயலாச் சுதந்திரத்தை மெய்யறிவுடனும் பொறுப்புணர்வுடனும் பயன்படுத்த அவர்களை ஆற்றுப்படுத்துவது என்றே பொருள்படும்."[182]



## அன்பும் கருவுற்றிருத்தலும்

168. கருவுற்றிருத்தல் ஒரு கடினமான ஆனால் இனிமைமிகு காலம். ஒரு புதிய உயிர் என்னும் அரும்அடையாளம் தோன்றச் செய்வதில் இறைவனோடு ஒரு தாயும் இணைகின்றார். தாய்மை என்பது "கருவுற்று ஒரு புதிய உயிரை தோன்றச் செய்வதற்காக பெண்களின் உடலில் இருக்கும் தனிச்சிறப்பான படைப்புத்திறனுள்ள ஆற்றலின்"[183] கனியே. ஒவ்வொரு பெண்ணும் "ஒவ்வொரு பிறப்பின் மூலமும் புதுப்பிக்கப்படுகின்ற, படைப்பு என்னும் மறைபொருளில்"[184] பங்குபெறுகின்றார். திருப்பாடல் ஆசிரியர் இதையே "என் தாயின் கருவில் எனக்கு உருதந்தவர் நீரே" (திபா 139:13) என்கின்றார். தாயின் கருவில் உருவாகும் ஒவ்வொரு குழந்தையும், தந்தை இறைவனின் என்றுமுள்ள அன்புத் திட்டத்தில் பங்கு பெறுகின்றது: "தாய் வயிற்றில் உன்னை நான் உருவாக்குமுன்பே அறிந்திருந்தேன்; நீ பிறக்குமுன்பே உன்னைத் திருநிலைப்படுத்தினேன்" (எரே 1:5). ஒவ்வொரு குழந்தைக்கும் இறைவனின் இதயத்தில் எக்காலத்திலும் ஓர் இடம் உண்டு; ஆணோ பெண்ணோ, ஒரு குழந்தை கருவில் உருவானதிலிருந்தே, படைத்தவரின் என்றுமுள்ள கனவு நனவாகின்றது. கருவான கணத்திலிருந்தே, அந்த இளங்கருவின் உயர்மதிப்பை நாம் சற்று எண்ணிப்பார்ப்போம். எப்போதும் புறத்தோற்றங்களைக் கடந்து எதையும் உற்றுநோக்கும் இறைவனின் பார்வையில், நாம் அதனைக் காண வேண்டும்.

169. கருவுற்றிருக்கும் ஒரு பெண் தனது குழந்தையைக் குறித்துக் கனவு காண்பதன் மூலம் இறைத்திட்டத்தில் பங்கு பெறுகின்றார். "ஏனென்றால் ஒன்பது மாதங்கள் ஒவ்வொரு தாயும் தந்தையும் தங்கள் குழந்தையைக் குறித்துக் கனவு காண்கின்றனர்... கனவுகள் இன்றி ஒரு குடும்பத்தை அமைக்க இயலாது. கனவு காணும் ஆற்றலை ஒரு குடும்பம் இழக்கும் போது, அங்கே குழந்தைகள் வளர்வதில்லை, அன்பு வளர்வதில்லை, வாழ்வு நலிவுற்று, இறப்பைத் தழுவுகின்றது."[185] மணமான கிறிஸ்தவ மணத்துணைவர்களுக்கு, திருமுழுக்கு என்பது மேற்குறிப்பிடப்பட்ட கனவின் ஓர் அங்கமாகவே தென்படுகின்றது. தங்கள் இறைவேண்டல்களின் மூலம், தங்கள் குழந்தை பிறக்கும் முன்னரே அதனை இயேசுவிடம் ஒப்படைத்து, திருமுழுக்கிற்காகப் பெற்றோர் தயார்செய்கின்றனர்.

170. இன்றைய அறிவியல் வளர்ச்சியானது, கருவிலிருக்கும் ஒரு குழந்தையின் தலைமுடி எத்தகைய நிறத்தை உடையது, அல்லது அக்குழந்தை பிற்காலத்தில் எத்தகைய உடல்நோய்களால் துன்புறும் என்பதனைக் கணித்துக் கூற வல்லது. ஏனெனில், ஓர் ஆளின் உடலியற்கூறுகள் அனைத்தும், அவர் குழந்தையாக இளங்கரு நிலையில் இருக்கும்போதே, அக்கருவின் மரபணுத் தொகுப்பில் எழுதப்பட்டிருக்கின்றன. எனினும் படைத்தவரான இறைத்தந்தை மட்டுமே அக்குழந்தையை முழுவதும் அறிந்தவர். அவர் மட்டுமே அவனது அல்லது அவளது ஆழமான தான்மையையும் மதிப்பையும் தெரிந்து வைத்திருப்பவர். குழந்தைப் பிறப்பை எதிர்நோக்கும் அன்னையர், தங்கள் குழந்தைகளைப்பற்றி முழுமையாக அறியவும், அவர்கள் இருப்பதுபோல அவர்களை ஏற்றுக்கொள்ளவும் வேண்டிய ஞானத்தை இறைவனிடம் கேட்க வேண்டும். சில பெற்றோர், தங்கள் குழந்தை மிகப் பொருத்தமான நேரத்தில் இவ்வுலகில் பிறப்பதாக உணர்வதில்லை. தங்கள் குழந்தையை முழு இதயத்தோடு ஏற்றுக்கொள்ளும் வகையில், தங்களை இறைவன் நலமாக்கவும், திடப்படுத்தவும் அவரை அவர்கள் கேட்க வேண்டும். விரும்பப்படுவது அக்குழந்தைக்கு இன்றியமையாதது. அவன் அல்லது அவள் ஒரு பிற்சேர்க்கையோ அல்லது சில தனிப்பட்ட தேவைக்கான ஒரு தீர்வோ அல்ல. ஒரு குழந்தை மிகப் பெரும் மதிப்பிற்குரிய ஒரு மனிதர். எனவே அக்குழந்தை எவருடைய தனிப்பட்ட நலனுக்காகவும் பயன்படுத்தப்படலாகாது. ஒரு புதிய உயிர் நமக்குச் சாதகமாக உள்ளதா, நம்மைத் திருப்திப்படுத்தும் தோற்றக்கூறுகள் அதனிடம் உண்டா, அல்லது நம் திட்டங்களுக்கும் எதிர்பார்ப்புகளுக்கும் அது ஏற்புடையதா என்பது முக்கியமல்ல; ஏனென்றால், “குழந்தைகள் ஒரு கொடை. ஒவ்வொரு குழந்தையும் தனித்தன்மையும் மாற்றீடு செய்ய இயலாத பண்பும் கொண்டது... நாம் நம் குழந்தைகளை அன்பு செய்வது அவர்கள் குழந்தைகள் என்பதற்காகவேயன்றி, அவர்கள் அழகாக உள்ளனர் என்பதற்காகவோ, நம்மைப்போன்ற தோற்றத்தையோ சிந்தனையையோ கொண்டுள்ளனர் என்பதற்காகவோ, நமது கனவுகளைத் தாங்கியுள்ளனர் என்பதற்காகவோ அல்ல; அவர்கள் குழந்தைகள் என்பதற்காகவே நாம் அவர்களை அன்பு செய்கின்றோம். ஒரு குழந்தை ஒரு குழந்தையே.”[186]



பெற்றோரின் அன்பின் மூலம் நம் இறைத்தந்தை தமது அன்பையே வெளிப்படுத்துகின்றார். அவர் ஒவ்வொரு குழந்தையின் பிறப்புக்காகவும் காத்திருக்கின்றார்; அக்குழந்தையை நிபந்தனையின்றி ஏற்றுக்கொள்கின்றார்; அவனை அல்லது அவளைத் தடையின்றி வரவேற்கின்றார்.

171. ஆழ்ந்த அன்புணர்வோடு நான் எல்லா எதிர்கால அன்னையரையும் வேண்டுகின்றேன். நீங்கள் மகிழ்வோடிருங்கள்; தாய்மையின் உள்ளார்ந்த மகிழ்வை எதுவும் உங்களிடமிருந்து பறித்துவிடாதபடியும் பார்த்துக்கொள்ளுங்கள். உங்கள் குழந்தை உங்கள் மனமகிழ்ச்சிக்குத் தகுதியுடையது. பயமோ, கவலையோ, பிறரது விமர்சனங்களோ, பிரச்சனைகளோ, இவ்வுலகிற்கு ஒரு புதிய உயிரைக் கொண்டு வரும் கடவுளின் கருவியாகச் செயல்படும் உங்கள் மகிழ்வைக் குறைக்கவிடாதீர்கள். உங்கள் குழந்தையின் பிறப்புக்காக உங்களைத் தயார்படுத்துங்கள். ஆனால் மிகையுணர்விற்கு ஆளாகாமல், மரியாவின் மகிழ்வின் பாடலில் இணைந்துகொள்ளுங்கள்: “ஆண்டவரை எனது உள்ளம் போற்றிப் பெருமைப்படுத்துகின்றது. என் மீட்பராம் கடவுளை நினைத்து எனது மனம் பேருவகை கொள்கின்றது. ஏனெனில் அவர் தம் அடிமையின் தாழ்நிலையைக் கண்ணோக்கினார்” (லூக் 1:46-48). உங்களின் அனைத்து வகையான அக்கறைகளுக்கு நடுவிலும், இந்த நிறைஅமைதியின் எழுச்சியை அனுபவிக்க முயன்று, உங்களது மகிழ்வைக் காத்திட வேண்டுமென்று ஆண்டவரிடம் கேளுங்கள். இதனால் அம்மகிழ்வை உங்கள் குழந்தைக்கும் உங்களால் அளித்திட இயலும்.

## தாய், தந்தையின் அன்பு

172. “குழந்தைகள் தாங்கள் பிறந்தவுடன், உணவூட்டம் மற்றும் கவனிப்புடன், தாங்கள் அன்பு செய்யவும்படுகின்றோம் என உறுதியாக அறியும் ஆன்மீகக் கொடையையும் பெறத் தொடங்குகின்றனர். இந்த அன்பு, அவர்களுடைய தனிப்பட்ட பெயர் என்னும் கொடை, மொழிப் பகிர்வு, அன்பு நிறை பார்வைகள், மற்றும் புன்னகையின் தண்ணொளி போன்றவற்றின் மூலம் அவர்களுக்கு வெளிப்படுத்தப்படுகின்றது. இவ்வாறு, மனித

உறவுகளின் அழகு நமது ஆன்மாவைத் தொடுகின்றது, நமது தன்னுரிமையை வளர்க்கின்றது, பிறரின் வேறுபாடுகளை ஏற்றுக்கொள்ளச் செய்கின்றது, அவர்களை உரையாடலில் பங்காளர்களாக ஏற்று மதிக்கச் செய்கின்றது எனக் குழந்தைகள் கற்றுக்கொள்கின்றனர்... இத்தகையதே அன்பு, இவ்வன்பு இறையன்பின் ஒரு சிறுபொறியைத் தன்னகத்தே கொண்டுள்ளது!''[187] ஒவ்வொரு குழந்தைக்கும் ஒரு தாய் மற்றும் தந்தையிடமிருந்து அன்பைப் பெறுவதற்கான உரிமை உண்டு; ஒரு குழந்தையின் ஒருங்கிணைந்த மற்றும் ஒத்திசைவான உருவாக்கத்திற்கு, அவர்கள் இருவரும் தேவையானவர்கள். ஆஸ்திரேலியாவின் ஆயர்கள் கூறுவதைப்போல, மணத்துணைவர்கள் ஒவ்வொருவரும் ''தனி ஒரு வகையில் குழந்தையின் வளர்ப்புக்குப் பங்களிக்கின்றனர். ஒரு குழந்தையின் மாண்பை மதிப்பதென்பது, ஒரு தாய் மற்றும் தந்தையை அக்குழந்தை கொண்டிருப்பதற்கான தேவையையும் இயற்கையான உரிமையையும் உறுதிப்படுத்துவதாகும்.''[188] நாம் இங்கே தந்தை மற்றும் தாய் என்னும் தனி ஆள்களின் அன்பைப்பற்றி மட்டும் பேசவில்லை, மாறாக, ஒருவரின் வாழ்வுக்கு ஊற்றும், குடும்பத்தின் உறுதியான அடித்தளமுமாகக் கருதப்படும் மணத்துணைவர்களிடையே நிலவவேண்டிய இருவரையும் சார்ந்த அன்பைக் குறித்தும் பேசுகின்றோம். இது இல்லையென்றால், குழந்தை வெறும் விளையாட்டுப் பொருளாக மாறிவிடக்கூடும். கணவன் மற்றும் மனைவி, தந்தை மற்றும் தாய் இருவரும் ''படைத்தவராகிய கடவுளின் அன்போடு ஒத்துழைத்து, ஒருவிதத்தில் அவரின் பொருள்விளக்குநர்களாக விளங்குகின்றனர்.''[189] தங்கள் குழந்தைகளுக்கு, இறைவனின் தாய் மற்றும் தந்தைக்குரிய முகத்தை அவர்கள் காட்டுகின்றனர். இருவரும் இணைந்து சம பரிமாற்ற அன்பின் சிறப்பை, வேற்றுமையைப் போற்றும் பண்பை, கொடுக்கவும் பெறுவதற்குமான ஆற்றலைக் கற்றுக்கொடுக்கின்றனர். சில தவிர்க்க இயலாக் காரணங்களுக்காக, பெற்றோருள் ஒருவர் இல்லையெனில், முதிர்ச்சி நோக்கிய குழந்தையின் நலமான வளர்ச்சிக்காக, இவ்விழப்பை ஈடுசெய்வதும் முக்கியமானது.

173. பெற்றோரை இழந்துள்ள உணர்வு, நாம் நினைப்பதைவிட மிகவும் ஆழமாகக் குழந்தைகளையும் இளம்வயதினரையும் இன்று பாதிக்கின்றது. பெண்கள் படிப்பதையும், வேலைக்குச் செல்வதையும், தங்கள் திறமைகளை வளர்த்து, தங்களுக்கெனத் தனிப்பட்ட இலக்குகளை உருவாக்கிக் கொள்வதையும் நாம் இன்று முறையானது, மற்றும் ஏற்கத்தக்கது என்றே கருதுகின்றோம். ஆனால் அதே நேரம், குழந்தைகளுக்குத் தங்கள் அன்னையரின் உடனிருப்பு, குறிப்பாக அவர்கள் வாழ்வின் முதல் மாதங்களில் தேவை என்பதனை நாம் மறுக்க இயலாது. உண்மையில், ''ஆணைவிடப் பெண்ணே ஓர் அன்னையாக, புதிய உயிர் ஒன்றைக் கருவுற்று, அதனைத் தன்னில் வளர்த்தெடுத்து, பின்னர் உலகிற்கு அளிக்கும் செயலில் சிறப்பிடம் பெறுகின்றார்.''[190] பெண்மைக்குரிய சிறப்பியல்புகளோடு, தாயின் இந்த உடனிருப்பு மனிதர்களுக்குக் குறைவுபடுகின்றபோது, இவ்வுலகு ஒரு பேரிடரை எதிர்கொள்கின்றது. நான் பெண்மையைப் போற்றுகின்றேன் என்பது உறுதி; ஆனால் அது சீரொருமையை முன்வைக்காத, மற்றும் தாய்மையை மறுக்காத பெண்மையே. ஏனென்றால் பெண்களின் உயர்பெருமை, அவர்களின் மறுக்க இயலா மனித மாண்பிலிருந்து பிறக்கும் அனைத்துவிதமான உரிமைகளையும், சமூகத்திற்கு மிகவும் இன்றியமையாத அவர்களது பெண்மைக்கே உரிய தனிச்சிறப்பியல்புகளையும் தன்னகத்தே கொண்டது. அவர்களின், பெண்களுக்குரிய தனி ஆற்றல்கள், அதிலும் குறிப்பாகத் தாய்மைநிலை சில கடமைகளையும் முன்வைக்கின்றது. ஏனென்றால் பெண்மை என்பது இவ்வுலகில் தனி ஒரு பணியைக் கொண்டது. அனைவரின் நலனுக்காகவும் சமூகம் அப்பணியைக் காத்து வளர்த்திட வேண்டும்.[191]

174. ''தன்னை மையப்படுத்திய தனிஆள்கொள்கை விரிவடைவதற்கு வலிமைமிகு எதிர்மருந்தாக அமைவது அன்னையரே... அவர்கள்தாம் வாழ்வின் அழகிற்குச் சான்று பகர்பவர்களாகத் திகழ்கின்றனர்.''[192] உண்மையில், ''அன்னையர் இல்லாத ஒரு சமூகம் மனிதத்தை இழந்ததே; ஏனென்றால் அன்னையர் எப்போதும், மிகச் சீர்குறை நேரங்களிலும்கூட, மென்மை, அர்ப்பணம், அறநெறி ஆற்றல் போன்றவற்றிற்குச் சிறந்த சாட்சிகளாகத் திகழ்கின்றனர். பெரும்பாலும் அன்னையர்தாம் சமயச் செயல்பாடுகளின் ஆழமான அர்த்தங்களை, தங்கள் குழந்தைகளுக்குக் கற்றுக்கொடுக்கும் முதல் மன்றாட்டுக்கள் மற்றும் பக்தி முயற்சிகள் மூலம் அவர்களுக்கு ஊட்டுகின்றனர்... அன்னையர் இல்லையென்றால் புதிய நம்பிக்கையாளர்கள் உருவாகாமல் போவது மட்டுமல்ல, இறைநம்பிக்கையே

அதன் எளிய மற்றும் ஆழமான உணர்வு நிலைகளின் பெரும் பகுதியை இழக்க நேரிடும்... அன்பான அன்னையரே, உங்களுக்கு நன்றி! உங்கள் குடும்பங்களில் நீங்கள் ஆற்றும் பணிகளுக்கும், திருச்சபை மற்றும் உலகிற்கு நீங்கள் ஆற்றும் பங்களிப்பிற்கும் உங்களுக்கு நன்றி நவில்கின்றேன்.''[193]

175. மென்மை மற்றும் கனிவோடு தன் குழந்தையைப் பராமரிக்கும் ஓர் அன்னை, அக்குழந்தை நம்பிக்கையில் வளரவும், இவ்வுலகம் ஒரு நல்ல மற்றும் தன்னை வரவேற்கும் இடம் என்ற உணர்வைப் பெறவும் உதவுகின்றார். இச்செயலானது, ஒரு குழந்தை தன் மதிப்பில் வளர்ந்திடவும், அதன் பயனாக உறவு நெருக்கம் மற்றும் புரிந்துணர்விற்கான ஆற்றலை மேம்படுத்தவும் உதவுகின்றது. ஒரு தந்தை, தமது பங்களிப்பாக, ஒரு குழந்தை தன் வாழ்வின் வரம்புகளை அறியவும், பரந்த உலகின் சவால்களுக்குத் திறந்த மனம் கொண்டிருக்கவும், கடின உழைப்பு மற்றும் விடாமுயற்சியின் தேவையை உணரவும் உதவுகின்றார். தன் மனைவிக்கு அன்பு மற்றும் அக்கறையை வெளிப்படுத்தும், ஆண்மையின் தான்மைப் பண்புகளைக் கொண்ட ஒரு தெளிவான மற்றும் அமைதியான தந்தை, அன்பு அக்கறையைக் காட்டும் ஓர் அன்னையைப் போல் முக்கியத்துவம் வாய்ந்தவர். ஒவ்வொரு தனிப்பட்ட குடும்பச் சூழலையும் பொறுத்து, அவர்களுடைய கடமைகள் மற்றும் பொறுப்புகளில் ஒருவித நெகிழ்வுத்தன்மை இருக்கலாம்; ஆனால் தெளிவாக நன்கு வரையறுக்கப்பட்ட தாய், தந்தை என்னும் இரு ஆளுருவங்களின் இருத்தல், ஒரு குழந்தையின் சிறந்த வளர்ச்சிக்கான சூழலை உருவாக்குகின்றது.

176. நமது சமூகம் ''தந்தையர் இல்லா ஒரு சமூகம்'' என நாம் அடிக்கடி கேள்விப்படுகின்றோம். மேற்கத்திய பண்பாட்டில், தந்தை என்னும் ஆளுருவம், அடையாள முறையில் இல்லாத, தொலைந்துபோன, மறைந்துவிட்ட ஒன்றாகவே மாறிவிட்டது. ஆண்மையே கேள்விக்குள்ளாக்கப்படுவதைப் போல் தோன்றுகின்றது. இதன் விளைவு, ஒருவிதக் குழப்பமே என்று தான் கருதப்படவேண்டும். ''முதலில், தந்தையர் இல்லா நிலை, ஒரு சுதந்திரம் என்றே கருதப்பட்டது; ஒரு மேலாளர், புறமிருந்து திணிக்கப்படும் சட்டங்களின் பிரதிநிதி, குழந்தைகளின் மகிழ்வைத் தீர்மானிப்பவர், இளையோரின் விடுதலை மற்றும் தன்னுரிமைக்குத் தடைக்கல் என்றெல்லாம் தந்தை பார்க்கப்பட்டதால், அந்நிலை



சுதந்திரமாகவே கருதப்பட்டது. ஒரு காலத்தில் சில இல்லங்களில் அதிகாரப்போக்கும் அடக்குமுறையும் அரங்கேறின.''[194] எனினும், ''அடிக்கடி நிகழ்வதைப்போல, ஒரு எல்லையிலிருந்து மறு எல்லைக்கு நாம் சென்றுவிடுகின்றோம். நாம் வாழும் இந்நாட்களில், தந்தை தம் குழந்தைகளோடு உடனிருக்காமல் இருப்பதே பெரிய சவாலேயன்றி, அவரது அடக்கி ஆளும் உடனிருப்பு அல்ல. தந்தையர் அதிகம் தங்களுக்கு உள்ளேயே மூழ்கி, தங்கள் பணிகளிலும், தனிப்பட்ட விருப்பங்களை நிறைவேற்றுவதிலும் ஈடுபடுவதால், அவர்கள் தங்கள் குடும்பங்களைப் புறக்கணிக்கும் நிலைகூடத் தோன்றுகின்றது. தங்கள் குடும்பத்தில் உள்ள மழலையரையும் இளமைப்பருவத்தினரையும் தனியே விட்டுவிடுகின்றனர்.''[195] சமூகத்தொடர்பு மற்றும் பொழுதுபோக்கு ஊடகங்களில் தந்தை செலவிடும் அதிக நேரமும், அவரது உடனிருப்பையும் அதிகாரத்தையும் பாதிக்கின்றது. இன்றைய காலகட்டத்தில், அதிகாரம் பலவேளைகளில் சந்தேகத்தோடு பார்க்கப்படுகின்றது. மேலும் வயதானோர் மதிப்பின்றி நடத்தப்படுகின்றனர். அவர்கள் தங்களைப்பற்றித் தெளிவின்றி இருப்பதால், தங்கள் பிள்ளைகளுக்குத் தெளிவான மற்றும் உறுதியான வழிகாட்டுதலைத் தர அவர்கள் தவறிவிடுகின்றனர். பெற்றோர் மற்றும் குழந்தைகளின் பொறுப்புகள் நேர்மாறானவையாக மாறுவது நலமானதல்ல; ஏனென்றால் அது பிள்ளைகள் அனுபவிக்க வேண்டிய, சரியான வளர்ச்சிமுறையைத் தடைசெய்து, அவர்கள் முதிர்ச்சி அடைவதற்குத் தேவையான அன்பு மற்றும் வழிகாட்டுதலை மறுக்கின்றது.[196]

177. இறைவன் ஒரு குடும்பத்திற்குத் தந்தையைத் தந்திருப்பது, அத்தந்தை தன் ஆண்மைசார் கொடைகளால், தன் ''மனைவியோடு நெருக்கமாக இருந்து, அவருடன் தம் இன்பம் மற்றும் துன்பம், நம்பிக்கை மற்றும் வாழ்க்கைச் சவால்கள் அனைத்தையும் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவே. அதோடு, தம் பிள்ளைகள் விளையாடும்போதும் வேலைசெய்யும்போதும், அவர்கள் கவலையற்றிருக்கும்போதும் அல்லல்படும்போதும், அவர்கள் அதிகம் பேசும்போதும் அமைதியாய் இருக்கும்போதும், அவர்கள் துணிச்சலோடு இருக்கும்போதும் அச்சப்படும்போதும், அவர்கள் வழிமாறிப்போகும் போதும் சரியான பாதைக்குத் திரும்பும்போதும், அவர் அவர்களுடன் உடனிருக்க வேண்டும்.

“உடனிருத்தல்” என நான் குறிப்பிடுவது “கட்டுப்படுத்துதலை” அல்ல. தங்கள் குழந்தைகளை அதிகம் கட்டுப்படுத்தும் தந்தையர், அவர்களுக்கு ஒளிமறைப்புச்செய்து, அவர்கள் வளர்ந்திட அனுமதிப்பதில்லை.”[197] சில தந்தையர் தாங்கள் பயனற்றவர்கள், தேவைப்படாதவர்கள் என உணர்கின்றனர். ஆனால் உண்மை என்னவென்றால், “குழந்தைகள் தங்கள் பிரச்சனைகளோடு தங்கள் வீடு திரும்பும்போது, தங்களுக்காகக் காத்திருக்கும் ஒரு தந்தையைக் காண்பது அவசியம். குழந்தைகள் இத்தேவையை ஏற்றுக்கொள்ளாமலும், வெளிப்படுத்தாமலும் இருக்க அதிகம் முயலலாம். ஆனாலும், அவர்களுக்கு அது தேவை.”[198] குழந்தைகள் ஒரு தந்தை இல்லாமல் இருப்பதும், தங்கள் நிலையைத் தாண்டிய வளர்ச்சியை அடைவதும், அவர்களுக்கு நல்லதல்ல.

## விரிவடையும் பயனுடைமை

178. சில மணத்துணைவர்களால் குழந்தைகளைப் பெற்றுக்கொள்ள இயலவில்லை. இது அவர்களுடைய உண்மையான மனத்துயருக்கு ஒரு காரணம் என்பது நமக்குத் தெரியும். ஆனால் அதே நேரம், நாம் அறிந்துள்ளதுபோலத் “திருமணம் என்பது பிள்ளைப்பேற்றிற்காக மட்டுமே உருவாக்கப்படவில்லை... மணத்துணைவர்களின் முனைப்பான விருப்பத்திற்குப் பிறகும், பிள்ளைப்பேறு இல்லாமல் போனால் கூட, திருமணம் அதன் முழுமைத்தன்மையையும், வாழ்வின் உறவுஒன்றிப்பு எனும் பண்பையும் இழப்பதில்லை; அதன் மதிப்பும், முறிவுபடாத்தன்மையும் மேற்குறிப்பிடப்பட்ட சூழலிலும் காக்கப்படுகின்றது.”[199] அது போலவே, “தாய்மையும் வெறுமனே ஓர் உடல்சார் மெய்ம்மையல்ல; மாறாக அது வேறுபல வழிகளிலும் வெளிப்படுத்தப்படுகின்றது.”[200]

179. மகவேற்பு என்பது பெற்றோர் ஆவதற்கான ஒரு பெருந்தன்மை நிறைந்த வழிமுறை. குழந்தைகளைப் பெற்றுக்கொள்ள இயலாதவர்கள், ஒரு முறையான குடும்பச் சூழல் அமையப்பெறாதவர்களை ஏற்று, அவர்களை அரவணைப்பதன் மூலம், தங்கள் திருமண அன்பை விரிவாக்கிக் கொள்ள வேண்டும் என நான் விரும்பிக் கேட்டுக்கொள்கின்றேன். தாங்கள் தாராள உள்ளத்தோடு செயல்பட்டதை எண்ணி இத்தகையோர் ஒருபோதும் வருத்தமுறமாட்டார்கள். மகவேற்பு ஓர் அன்புச்செயல்; அது குடும்பம்



அமையப்பெறாத ஒருவருக்கு அதைக் கொடையென வழங்குகின்றது. மகவேற்பு வழிமுறைகள், சட்டங்கள் மூலம் முறைப்படுத்தப்பட வேண்டும்; குறிப்பாக, குழந்தைகளின் பிறப்பு விரும்பப்படாத சூழலில், அவர்கள் கருவிலேயே கலைக்கப்படுவதையும் புறக்கணிக்கப்படுவதையும் தடுக்க அச்சட்டங்கள் உதவும். ஒருவரை நிபந்தனையற்ற விதமாகவும் தாராள உள்ளத்தோடும் மகவேற்புச் செய்து ஏற்றுக்கொள்ளும் சவாலைச் சந்தித்தவர்கள், இறைஅன்பின் வாய்க்காலாகவே மாறுகின்றனர். ஏனெனில், இறைவன் கூறுகின்றார், “உன் அன்னை உன்னை மறந்தாலும், நான் உன்னை மறக்கவே மாட்டேன்” (எசா 49:15).

180. “மகவேற்பு மற்றும் வளர்ப்புப் பெற்றோர் நிலைக்கான முடிவு, இனப்பெருக்க வளம் இல்லாத நிலையில் மட்டுமல்ல, மாறாக, திருமண அனுபவத்திற்கே ஒரு தனிச்சிறப்பான பயனுடைமையைக் கொண்டுவருகின்றது. தனது தன்நிறைவுக்கான ஓர் உரிமையாக, எப்படியாவது ஒரு குழந்தை வேண்டும் என விரும்புகின்ற சூழல்களில், மகவேற்பு மற்றும் வளர்ப்புப் பெற்றோர் நிலை என்பது, சரியாகப் புரிந்துகொள்ளப்பட்டால், அது பிள்ளைகளைப் பெற்று வளர்க்கும் பணியின் ஒரு முக்கிய பரிமாணத்தையே வெளிப்படுத்துகின்றது. இயற்கையாகவோ, மகவேற்பு மூலமோ, அல்லது வளர்ப்புப் பெற்றோர் நிலையிலோ பெறப்பட்ட பிள்ளைகள், வெறுமனே இவ்வுலகில் பிறந்தவர்கள் அல்ல, மாறாக, அவர்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அன்புசெய்யப்பட்டு, பராமரிக்கப்பட உரிமை பெற்றவர்கள் என்பதனை அப்பெற்றோர் மக்களுக்கு உணர்த்துகின்றனர். குழந்தையின் சிறந்த நலனே மகவேற்புச் செய்ய மற்றும் வளர்ப்புப் பெற்றோர் ஆக எடுக்கப்படும் ஒவ்வொரு முடிவின் அடிப்படையாகவும் விளங்க வேண்டும்.”[201] மறுபுறம், “குழந்தைகளைக் கடத்தி, அவர்களை நாடுகள் மற்றும் கண்டங்களுக்கிடையே விற்றுவிடுவது, பொருத்தமான சட்ட நடைமுறைகளாலும், அரசுகளின் கட்டுப்பாடுகளாலும் தடுக்கப்பட வேண்டும்.”[202]

181. இனப்பெருக்கம் மற்றும் மகவேற்பு ஆகியவை மட்டுமே அன்பின் பயனை அனுபவிப்பதற்கான வழியல்ல என்பதனை நாம் நினைவில் கொள்வது நல்லது. பெரிய குடும்பங்கள் கூட, தங்களைத் தாங்கிப்பிடிக்கும் அன்பை, ஏதாவது ஒரு வகையில் நீட்டிக்கும் பயனுடைமையின் வேறு

வெளிப்பாடுகளைக் கண்டுபிடித்து, சமூகத்தில் தங்கள் முத்திரையைப் பதிக்க அழைக்கப்பட்டுள்ளனர். "இறைநம்பிக்கையானது இவ்வுலகிலிருந்து நம்மைப் பிரித்துவிடுவதல்ல; மாறாக, ஆழமாக அதில் ஈடுபாடு கொள்ள நம்மை இட்டுச்செல்வது... இறையாட்சி இம்மண்ணில் மலரச் செய்ய, நம் ஒவ்வொருவருக்கும் தனி ஒரு பணி உண்டு"[203] என்பதனைக் கிறிஸ்தவக் குடும்பங்கள் ஒருபோதும் மறந்துவிடக் கூடாது. குடும்பங்கள் சமூகத்திலிருந்து ஒதுங்கி வாழ்வதற்கான புகலிடங்கள் போலத் தங்களைக் கருதக்கூடாது; மாறாக, பிறரோடு கூட்டொருமை உணர்வோடு, தங்கள் இல்லங்களிலிருந்து அவை வெளியேறிச் செல்லவேண்டியவையே. இங்ஙனம், குடும்பங்கள் தனிமனிதர்களைச் சமூகத்தோடு ஒருங்கிணைக்கும் மையமாகவும், பொது மற்றும் தனிப்பட்ட தளங்கள் சந்திக்கும் இடமாகவும் மாறும். திருமணமான துணைவர்கள் தங்கள் சமூகக் கடமைகள் பற்றிய தெளிவான விழிப்புணர்வு கொள்ள வேண்டும். இதனால் அவர்களுடைய அன்புணர்வு குறைவுபடாது, மாறாக, அது புது ஒளி பெறும். கவிஞர் கூறுவது போல,

"உன் கைகள் என் சீராட்டுகள்,
என் வாழ்வை அவை நல்லிணக்கத்தால் நிறைக்க வல்லன.
நான் உன்னை அன்பு செய்வது ஏனென்றால்,
உன் கைகள் நீதிக்காக உழைக்கின்றன.

நான் உன்னை அன்பு செய்வது ஏனென்றால்,
நீயே என் அன்பும், வழித்துணையும், அனைத்தும் ஆனதால்,
எனினும், வீதியில் நாம் அருகருகே செல்லும் போது,
நாம் இருவரைவிட அதிகமானவர்கள்."[204]

182. முற்றிலும் தன்னை வேறுபட்டதாக அல்லது "ஒதுக்கிவைக்கப்பட்டதாகக்" கருதும் எந்தக் குடும்பமும் பலன்தராது. இவ்விதச் சிக்கலைத் தவிர்ப்பதற்கு, அருளிலும் ஞானத்திலும் நிறைந்திருந்த இயேசுவின் சொந்தக் குடும்பம் கூட, வழக்கத்திற்கு மாறானதாகவோ, ஏனையவற்றிலிருந்து வேறுபட்டதாகவோ தன்னைக் காட்டிக்கொள்ளவில்லை என்பதனை நாம் நினைவில் கொள்ள வேண்டும். எனவேதான், இயேசுவின் ஞானத்தை ஏற்றுக்கொள்வது மக்களுக்குக்



கடினமாக இருந்தது: "இவருக்கு இவையெல்லாம் எங்கிருந்து வந்தன? இவர் தச்சர் அல்லவா! மரியாவின் மகன்தானே! (மாற் 6:2-3). "இவர் தச்சருடைய மகன் அல்லவா?" (மத் 13: 55). இக்கேள்விகள், இயேசுவின் குடும்பம் ஒரு சாதாரணமான, பிறரோடு நெருக்கமாக வாழ்ந்த, சமூகத்தின் ஓர் இயல்பான அங்கமாகத் திகழ்ந்த ஒன்று என்பதையே தெளிவுபடுத்துகின்றன. மரியா மற்றும் யோசேப்புடன் இயேசு ஒரு குறுகிய மற்றும் இறுக்கமான உறவுநிலையில் வளரவில்லை, மாறாக, அவருடைய பெற்றோரின் உறவினர் மற்றும் நண்பர்களுடனான பரந்து விரிந்த குடும்பத்தோடு எப்போதும் அவர் உறவாடினார். எருசலேமிலிருந்து திரும்பிவரும்போது, பன்னிரு வயது நிரம்பிய இயேசு, பயணம் செய்தவர்களோடு ஒரு நாள் முழுவதும் இருந்து, அவர்களின் கதைகளையும் வாழ்க்கை அனுபவங்களையும் பகிர்ந்திடக் கேட்டுக் கொண்டிருந்திருப்பார் என்று மரியாவும் யோசேப்பும் எண்ணியது ஏன் என்பதனை இது தெளிவுபடுத்துகின்றது: "பயணிகள் கூட்டத்தில் அவர் இருப்பார் என்று எண்ணினர். ஒருநாள் பயணம் முடிந்தபின்பு உறவினரிடையேயும் அறிமுகமானவர்களிடையேயும் அவரைத் தேடினர்" (லூக் 2:44). இன்னமும் சில கிறிஸ்தவக் குடும்பங்கள், அவர்கள் பயன்படுத்துகின்ற மொழியின் காரணமாகவோ, அவர்களுடைய செயல்பாடு மற்றும் பிறரோடு நடந்துகொள்ளும் முறையின் பொருட்டோ, தொடர்ந்து ஏதாவது இரண்டு அல்லது மூன்று பிரச்சனைகளைக் குறித்து மட்டுமே மனச்சோர்வைக் கொண்டுவரும் வண்ணம் எப்போதும் பேசிக் கொண்டிருப்பதாலோ, பிறரிடமிருந்து விலகியிருப்பவர்களாகவோ, சமூகத்தின் உண்மையான அங்கமாக இல்லாதவர்களாகவோ ஆகிவிடுகின்றனர். இவர்களின் உறவினர்கள் கூட இவர்களால் மதிப்பின்றி நடத்தப்படுவதாக அல்லது தீர்ப்பிடப்படுவதாக எண்ணுகின்றனர்.

183. அன்பின் ஆற்றலை உணரும் திருமணமான துணைவர்கள், இவ்வன்பு, புறந்தள்ளப்பட்டோரின் காயங்களைக் கட்டவும், உறவுச்சந்திப்பின் பண்பாட்டை உருவாக்கவும், நீதிக்காகப் போராடவும் அழைக்கப்பட்டுள்ளது என்பதனை அறிவர். உலகையே "இல்லம் என்றாக்கும்"[205] தமக்கு அடுத்திருப்பவர்களைச் சகோதர சகோதரிகளாக ஏற்று வாழச் செய்யும் பணியை, குடும்பங்களுக்கு இறைவன் தந்திருக்கின்றார். "இன்றைய ஆண்கள் மற்றும் பெண்களின் அன்றாட வாழ்க்கையைக் கூர்ந்து

கவனித்தால், நலமான குடும்ப உணர்வை இவர்கள் அனைவருக்குள்ளும் செலுத்த வேண்டிய தேவை எங்கும் இருப்பது உடனடியாகத் தெரியவரும். சாதாரண வாழ்வின் ஒழுங்கமைப்பு, அடிப்படையான மனிதப் பிணைப்புகளிலிருந்து முற்றிலும் வேறுபட்ட அதிகார அமைப்புகளால் அதிகமதிகமாக நிலைகுலையச் செய்யப்பட்டுள்ளது மட்டுமன்றி, சமூக, அரசியல் அமைப்புகள் கூட இன்று அழிவிற்குள்ளாவதன் அறிகுறிகள் தெரிகின்றன.''[206] அதற்கு மாறாக, திறந்தமனமும், அன்பு அக்கறையும் கொண்டுள்ள குடும்பங்கள், ஏழைகளுக்கும் தங்களைவிட வாழ்வின் தாழ்நிலையில் இருப்போருடன் உள்ள நட்புறவுக்கும், தங்கள் வாழ்வில் ஒரு சிறப்பான இடத்தை உருவாக்கிக்கொள்கின்றன. நற்செய்தியின்படி வாழ அவர்கள் எடுக்கும் முயற்சியில், இயேசுவின் பின்வரும் வார்த்தைகளை அவை தங்கள் கவனத்தில் கொண்டிருக்கின்றன: ''மிகச் சிறியோராகிய என் சகோதரர் சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்ததையெல்லாம் எனக்கே செய்தீர்கள்'' (மத் 25:40). மிக உண்மையான முறையில் நாம் அனைவரும் எதைச் செய்ய கோரப்படுகின்றோமோ அதையே அவை பிரதிபலிக்கின்றன: ''நீர் பகல் உணவோ இரவு உணவோ அளிக்கும்போது, உம் நண்பர்களையோ, சகோதரர் சகோதரிகளையோ, உறவினர்களையோ, செல்வம் படைத்த அண்டை வீட்டாரையோ அழைக்க வேண்டாம். அவ்வாறு அழைத்தால் அவர்களும் உம்மைத் திரும்ப அழைக்கலாம். அப்பொழுது அதுவே உமக்குக் கைம்மாறு ஆகிவிடும். மாறாக, நீர் விருந்து அளிக்கும்போது ஏழைகளையும் உடல் ஊனமுற்றோரையும் கால் ஊனமுற்றோரையும் பார்வையற்றோரையும் அழையும். அப்போது நீர் பேறுபெற்றவர் ஆவீர் (லூக் 14: 12-14). நீர் பேறுபெற்றவர் ஆவீர்! இதுவே ஒரு மகிழ்வான குடும்பத்தை அமைப்பதற்கான இரகசியம்.

184. தங்களின் சான்று வாழ்வாலும் வார்த்தைகளாலும், குடும்பங்கள் அடுத்தவர்களுக்கு இயேசுவைப் பற்றி எடுத்துரைக்கின்றன. அவை இறைநம்பிக்கையை அளித்து, இறைவன்பால் உள்ள ஆவலைத் தூண்டி எழுப்பி, தங்கள் வாழ்வுகளில் அவை நற்செய்தியின் அழகையும், அதன் வாழ்க்கை முறையையும் பிரதிபலிக்கின்றன. இவ்வாறு, கிறிஸ்தவத் திருமணங்கள், சகோதரத்துவம், சமூக அக்கறை, தாழ்நிலையினருக்காக உரக்கக் குரல்கொடுத்தல், அவர்களது ஒளிரும் நம்பிக்கை, செயல்திறனுள்ள



எதிர்நோக்கு போன்றவற்றால் சமூகத்திற்கு உயிரூட்டுகின்றன. அத்திருமணங்களின் பலன்தரும் பண்பு, பரந்து விரிந்து, எண்ணற்ற வழிகளில் இறையன்பை இச்சமூகத்தில் உடனிருக்கச் செய்கின்றன.

## உடலை ஆய்ந்தறிதல்

185. மேற்கூறிய வகையில் அமைந்த ஒரு விவிலியப் பகுதியை நாம் இங்கு ஆழ்ந்து நோக்குவது நல்லது. இப்பகுதி வழக்கமாக அதன் உடனடியாகவும் தெளிவாகச் சமூகச் செய்தியை உணர்த்தும் நேர்பொருளிலும் அன்றி, அதன் சூழமைவுக்குப் புறம்பாகவும் மற்றும் பொதுவான பொருளிலும்தான் விளக்கப்படுகின்றது. புனித பவுல் தான் வாழ்ந்த குழுமத்தில் சந்தித்த வெட்கத்திற்குரிய சூழல் ஒன்றைப் படம்பிடித்துக் காட்டும் 1 கொரி 11:17-34 குறித்தே நான் இங்குப் பேசுகின்றேன். செல்வர்களான உறுப்பினர்கள், ஏழைகள் மட்டில் பாகுபாடு காட்டினர், அது நற்கருணைக் கொண்டாட்டத்தோடு இணைந்திருந்த அன்பு விருந்துவரை சென்றது. செல்வர்கள் தங்கள் உணவை உண்டு இன்புற்றிருக்க, ஏழைகள் அதனை ஏக்கத்தோடு பார்த்து, பசியோடு சென்றனர்: ''சிலர் பசியாய் இருக்க, வேறு சிலர் குடிவெறியில் இருக்கிறார்கள். உண்பதற்கும் குடிப்பதற்கும் உங்களுக்கு வீடுகள் இல்லையா? அல்லது கடவுளின் திருச்சபையை இழிவுபடுத்தி, இல்லாதவர்களை வெட்கப்படுத்துகிறீர்களா?'' (வச. 21-22).

186. நாம் அனைவரும் திருஅவை என்னும் ஒரே உடலின் உறுப்புகளாக வாழ்வதையே நற்கருணை நம்மிடம் எதிர்பார்க்கின்றது. இயேசுவின் உடலையும் இரத்தத்தையும் அருந்துவோர், அவ்வுடலின் உறுப்புகள் மத்தியில் இடறலை வருவிக்கும் பிரிவுகள் மற்றும் பிளவுகளைத் தோற்றுவித்து, அவ்வுடலைக் காயப்படுத்தலாகாது. ஆண்டவரின் உடலை ''ஆய்ந்தறிதல்'' என்பதன் பொருள், அதனை அருளடையாளக் குறியீடுகளிலும் குழுமத்திலும் நம்பிக்கையுடனும் அன்புடனும் கண்டறிவதே. இதனைச் செய்யத் தவறுவோர், தங்களுக்கு எதிரான தண்டனைத் தீர்ப்பையே உண்டு பருகுகின்றனர் (காண் வச. 29). இவ்வாறு, நற்கருணைக் கொண்டாட்டம் ஒவ்வொருவரும் தம்மையே சோதித்தறியவும் (வச. 28), குடும்பத்தின் கதவுகளை நலிந்தோருடன் அதிக உறவு கொள்ளும் பொருட்டுத் திறந்திடவும், இத்தகைய வழிகளில் நம்மை ஒருடலாக்கும் நற்கருணை அன்பு

என்னும் அருளடையாளத்தை நாம் அனைவரும் பெற்றிடவும், அது ஒவ்வொருவருக்கும் தரப்பட்ட ஒரு தொடர் அழைப்பாணை. ‘‘அருளடையாளத்தின் ‘இறைஒன்றிப்பு’ நெறியானது, சமூகப் பண்பை உடையது என்பதனை நாம் மறத்தலாகாது.’’[207] நற்கருணையைப் பெறுவோர், ஏழைகள் மற்றும் துன்புறுவோரைக் கண்டுகொள்ளாமல் இருக்கும்போது, அல்லது பிரிவினை, வெறுப்பு, மற்றும் உயர்வுதாழ்வின் வெவ்வேறு வடிவங்களை ஏற்றுக்கொள்ளும்போது, நற்கருணை தகுதியற்ற முறையிலேயே பெறப்படுகின்றது. மறுபுறம், தகுந்த மனநிலையோடு நற்கருணையை அடிக்கடி அருந்தும் குடும்பங்கள், சகோதரத்துவம், சமூக விழிப்புணர்வு, மற்றும் தேவையிலிருப்போருக்காகத் தங்களை அர்ப்பணித்தல் போன்றவற்றிற்கான ஆர்வத்தை உறுதிப்படுத்துகின்றன.

### பரந்த குடும்பத்தில் வாழ்வு

187. தனிக் குடும்பம், பெற்றோர், பெற்றோரின் உடன்பிறந்தோர், அவர்களின் வாழ்க்கைத் துணைவர்கள், துணைவியர்கள், பெற்றோரின் உடன்பிறந்தவர்களின் பிள்ளைகள், மற்றும் அடுத்து வாழ்வோர் போன்றோரை உள்ளடக்கிய பரந்த குடும்பத்தோடு உறவாட வேண்டும். இப்பரந்த குடும்பத்தில் உதவியோ, அல்லது குறைந்தபட்சம் உடனிருப்போ, பரிவோ, அல்லது துன்பத்தில் ஆறுதலோ தேவைப்படும் உறுப்பினர்கள் இருக்கலாம். இன்று அதிகம் பரவலாகக் காணப்படும் தனிஆள்கொள்கை, பிறரைத் தொல்லையாகவோ அச்சுறுத்தலாகவோ கருதி, தமக்கெனச் சிறிய பாதுகாப்புக் கூடுகளை அமைத்துக் கொள்ளும் நிலைக்குத் தள்ளிவிடக்கூடும். இத்தகைய ஒதுக்கநிலை, ஆழ்ந்த அமைதியையோ, மகிழ்ச்சியையோ வழங்க இயலாது. மாறாக, அது ஒரு குடும்பத்தின் இதயத்தை இடுக்கலாக்கி, அதன் வாழ்வை மேலும் குறுகியதாக்கிவிடும்.

### மகன்கள் மற்றும் மகள்களாயிருத்தல்

188. முதலில் நாம் நம் பெற்றோரைப் பற்றி எண்ணிப் பார்ப்போம். இயேசு பரிசேயரிடம், ஒருவர் தன் பெற்றோரைக் கைவிடுவது, இறைவனின் சட்டத்திற்கு முரணானது எனக் கூறினார் (காண் மாற் 7:8-13). நாம்



ஒவ்வொருவருமே ஒரு மகன் அல்லது மகள் என்பதை நினைவுகூர்வது நல்லது. ‘‘ஒருவர் வயதுவந்தோர் அல்லது முதிர்வயதினர் ஆனாலோ, பெற்றோர் ஆனாலோ, உயர் பொறுப்பை நிறைவேற்றும் பதவிக்கு வந்தாலோ, அவை அனைத்திற்கும் அடியிலும் அவருக்கு ஒரு குழந்தையின் தான்மை உண்டு. நாம் அனைவரும் மகன்கள் மற்றும் மகள்களே. இந்நிலையானது, நாமாக நமக்கு வாழ்வைத் தரவில்லை, மாறாக, நாம் அதைப் பெற்றுக்கொண்டிருக்கின்றோம் என்ற உண்மைக்கு நம்மை மீண்டும் அழைத்துச் செல்கின்றது. வாழ்வு என்னும் மிக உயர்ந்த பரிசே, முதன்முதலில் நாம் பெற்ற பரிசாகும்.’’[209]

189. எனவே, ‘‘நான்காம் கட்டளை, தங்கள் தந்தையையும் தாயையும் மதிக்குமாறு (காண் விப 20:12) பிள்ளைகளைக் கேட்கின்றது. இக்கட்டளை, இறைவனைப் பற்றிப் பேசும் கட்டளைகளைத் தொடர்ந்து உடனே வருகின்றது. உண்மையில் இக்கட்டளை, புனிதமான ஒன்றை, இறைத்தன்மையுடைய ஒன்றை, அனைத்துவிதமான மனித மாண்பிற்கும் அடிப்படையான ஒன்றைப் பற்றியது. நான்காம் கட்டளை பற்றிய விவிலிய வாய்பாடு பின்வருமாறு குறிப்பிடுகின்றது: ‘உன் கடவுளாகிய ஆண்டவர் உனக்களிக்கும் நாட்டில் உன் வாழ்நாட்கள் நீடிக்கும்படி.’ தலைமுறைகளுக்கிடையே காணப்படும் நற்பண்புமிகு பிணைப்பே, எதிர்காலம் பற்றிய பொறுப்புறுதியைத் தருகின்றது; அதுவே ஓர் உண்மையான மனிதநேயச் சமூகத்திற்குரிய பொறுப்புறுதியாகவும் உள்ளது. பெற்றோரை மதிக்காத பிள்ளைகளைக் கொண்ட ஒரு சமூகம், ஒரு மதிப்பிழந்த சமூகமே; அது பண்புநயமற்ற, பேராசை நிறைந்த இளம்வயதினரால் நிறையப்பெற்ற ஒரு சமூகம் என ஆகப்போவது உறுதி.’’[210]

190. எனினும், நாணயத்திற்கு மற்றொரு பக்கமும் உண்டு. இறைவார்த்தை நமக்குச் சொல்வதைப்போல, ‘‘கணவன் தன் தாய் தந்தையை விட்டுவிடுகின்றான்’’ (தொநூ 2:24). ஆனால், அங்ஙனம் விட்டுவிடுவது எப்போதும் நிகழ்வதில்லை; அத்தகைய இன்றியமையாத தியாகம் மற்றும் விட்டுக்கொடுத்தலைச் செயல்படுத்த இயலாத நிலையிலேயே இன்று திருமணங்கள் இடருக்கு உள்ளாகின்றன. பெற்றோர் கைவிடப்படவோ அல்லது புறக்கணிக்கப்படவோ கூடாது; எனினும் திருமணமானது, பெற்றோர் ‘‘விடப்படுவதைக்’’ கோருகின்றது; இதன்மூலம் புதிய இல்லம், ஓர்

உண்மையான குடும்பமாகவும், பாதுகாப்பு, எதிர்நோக்கு, மற்றும் எதிர்காலத் திட்டங்களின் இடமாகவும் ஆகும். மணத்துணைவர்கள் உண்மையில் ''ஓருடலாக'' மாற்றம் பெற்றிட முடியும் (மேற்குறிப்பிடப்பட்டபடி). சில திருமணங்களில், வாழ்க்கைத் துணைவர் ஒருவர் மற்றவரிடம் இரகசியங்களை வெளியிடாது, அவற்றைத் தம் பெற்றோரிடம் வெளிப்படுத்துவதையும் காண்கின்றோம். இதன் விளைவாக, தங்கள் வாழ்க்கைத் துணைவரின் உணர்வுகள் மற்றும் கருத்துக்களைவிடத் தங்கள் பெற்றோரின் கருத்துக்களே முக்கியத்துவம் பெறுகின்றன. இத்தகைய நிலை நீடிக்க இயலாது. சற்று அதிக காலம் எடுத்துக் கொண்டாலும், மணத்துணைவர்கள் இருவரும் நம்பிக்கை மற்றும் தகவல் பரிமாற்றத்தை உருவாக்க முயல வேண்டும். திருமணம் என்பது, கணவர்களும் மனைவியரும் புதிய வழிகளில் மகன்களாக மற்றும் மகள்களாக வாழும் சவாலை முன்வைக்கின்றது.

## முதியோர்

191. ''முதிர் வயதில் என்னைத் தள்ளிவிடாதேயும்; என் ஆற்றல் குன்றும் நாளில் என்னைக் கைவிடாதேயும்'' (திபா 71:9). மறக்கப்பட்டு, புறக்கணிக்கப்பட்டு விடுவோமோ என எண்ணும் முதிர்வயதினரின் வேண்டுதல் இதுவாகவே இருக்கின்றது. ஏழைகளின் அழுகுரலைக் கேட்கும் இறைவனின் கருவிகளாக நாம் இருக்க வேண்டும் என இறைவன் எப்படி நம்மைக் கேட்கின்றாரோ, அதுபோலவே நாம் முதியோரின் அழுகுரலையும் கேட்க வேண்டும் என்றும் அவர் நம்மிடம் எதிர்பார்க்கின்றார்.[211] இது குடும்பங்களுக்கும் குழுமங்களுக்கும் ஒரு சவாலை முன்வைக்கின்றது. ஏனெனில், ''முதுமையின் மட்டில் பொறுமையின்மை, அக்கறையின்மை, மற்றும் அவமதிப்பு போன்றவற்றைக் காட்டும் மனப்பாங்குகளோடு திருஅவை ஒத்துப்போக முடியாது, ஒத்துப்போக விரும்புவதுமில்லை. முதியோர் தாங்கள் இந்த சமூகத்தின் உயிருள்ள அங்கம் என்ற உணர்வைப் பெற்றிட உதவும் குழும நன்றியுணர்வு, பாராட்டு, விருந்தோம்பல் போன்ற பண்புகளை நாம் நம்மில் மீண்டும் எழுச்சியடையச் செய்ய வேண்டும். நம் முதியோர், நமது பாதையில், நம் இல்லத்தில், மாண்போடு வாழ்வதற்கான நமது போராட்டத்தில், நமக்கு முன்வந்த ஆண்கள் மற்றும் பெண்கள், தந்தையர்



மற்றும் அன்னையர் ஆவர்.''[212] உண்மையில் ''இளையோர் மற்றும் முதியோருக்கிடையே நிகழும் புதியதோர் உறவுப் பரிமாற்றத்தினால் பொங்கி வழியும் மகிழ்வின் மூலம், இன்றைய தூக்கிஎறியும் பண்பாட்டிற்குச் சவால் விடுப்பதாக நம் திருஅவை மாறவேண்டும் என நான் மிகவும் விரும்புகின்றேன்.''[213]

192. புனித இரண்டாம் யோவான் பவுல், நம் குடும்பங்களில் முதியோர் ஆற்றும் பணி பற்றி நாம் கவனம் செலுத்த நம்மைக் கேட்டுள்ளார். ஏனென்றால், ''குறிப்பாக முறைப்படுத்தப்படாத தொழில்துறை மற்றும் நகர வளர்ச்சி எழுச்சியில், கடந்தகாலத்திலும் நிகழ்காலத்திலும், ஏற்றுக்கொள்ள முடியாத வழிகளில் முதியோரை ஒதுக்கி வைக்கும்''[214] பண்பாடுகள் இருக்கின்றன. ''இடைவெளியை இணைத்தல் என்னும் தங்களது தனிவரத்தின்'' மூலம் ''தலைமுறைகளின் தொடர்ச்சியை''[215] நாம் பாராட்ட முதியோர் நமக்கு உதவுகின்றனர். பலநேரங்களில், பேரப்பிள்ளைகளுக்கு நல்ல மதிப்பீடுகளைக் கற்றுக்கொடுப்பவர்கள் பெற்றோரைப் பெற்றவர்களே. ''தங்களுக்குக் கிறிஸ்தவ வாழ்வை அறிமுகப்படுத்தியதற்காக, தங்கள் பெற்றோரைப் பெற்றவர்களுக்கே தாங்கள் கடன்பட்டிருக்கின்றோம் என்பதற்குப் பலரும் சான்றுபகர்வர்.''[216] பெற்றோரைப் பெற்றவர்களின் வார்த்தைகள், அவர்களின் பாசம், அல்லது அவர்களின் உடனிருப்பு போன்றவை, வரலாறு தங்களிடமிருந்து மட்டுமே ஆரம்பமாகவில்லை என்பதனைக் குழந்தைகளுக்கு உணர்த்தி, பழம்பெரும் புனிதப்பயணம் ஒன்றில் தாங்கள் இப்போது இணைந்துள்ளோம், எனவே அப்பயணத்தில் நமக்கு முன்சென்றவர்கள் அனைவரையும் நாம் மதிக்கப் பழக வேண்டும் என்ற உணர்வை அவர்கள் பெற உதவுகின்றன. கடந்த காலத்தோடு உள்ள உறவை முற்றிலும் முறித்துக்கொள்பவர்கள், நிலையுறுதியான உறவுகளைக் கட்டி எழுப்பவும், தங்களைவிட மெய்ம்மை பெரியது என உணரவும் சிரமப்படுகின்றனர். ''முதியோர் மேல் நாம் செலுத்தும் கவனம், சமூகத்தில் ஒரு மாற்றத்தை உருவாக்குகின்றது. ஒரு சமூகம் முதியோர் மேல் அக்கறையோடிருக்கின்றதா? ஒரு சமூகம் முதியோர் வாழ்வதற்கான வழியை ஏற்படுத்துகின்றதா? முதியோரின் ஞானத்தை எந்த ஒரு சமூகம் மதிக்கின்றதோ, அது நிச்சயம் முன்னேற்றப் பாதையில் செல்லும்.''[217]

193. வரலாற்று நினைவுகள் மழுங்கடிக்கப்படுவது நமது சமூகத்திலுள்ள ஒரு மிகப் பெரிய குறைபாடு. ''நேற்று என்பது நேற்று; ஆனால் இன்று என்பது இன்று'' என்று மட்டுமே கூறமுடிந்த ஒரு மனநிலையானது, முதிர்ச்சிபெறாத மனநிலையே. கடந்த காலத்தைப் பற்றி அறிவதும், அதனைத் திறனாய்வு செய்து பார்ப்பதுமே, அர்த்தமுள்ள எதிர்காலம் ஒன்றை நாம் கட்டி எழுப்புவதற்கான ஒரே வழி. வளர்ச்சிக்கு நினைவுகள் இன்றியமையாதவை: ''முன்னைய நாள்களை நினைவு கூருங்கள்'' (எபி 10:32). முதியவர்கள் தங்கள் கடந்தகால வாழ்வைப் பற்றிச் சொல்வதைக் கேட்பது, குழந்தைகளுக்கும் இளவயதினருக்கும் நன்மை பயக்கும்; தங்கள் குடும்பம், தங்களைச் சுற்றிவாழ்வோர், மற்றும் தங்கள் நாடு போன்றவற்றின் வரலாற்றோடு தாங்கள் இணைந்திருக்கின்றோம் என்ற உணர்வை இது தரும். தங்கள் குடும்பத்தின் வாழும் நினைவாற்றலாகிய பெற்றோரைப் பெற்றவர்களை மதிக்கவும், அவர்களை நெஞ்சார நேசிக்கவும் தெரியாத ஒரு குடும்பம் வீழ்ச்சியை நோக்கிச் செல்கின்றது. ஆனால் அங்ஙனம் மதிக்கவும் நேசிக்கவும் தெரிந்த குடும்பத்திற்கு நிச்சயம் ஒரு எதிர்காலம் உண்டு. ''முதியவர்கள் வாழ்வதற்கான வழியை ஏற்படுத்தாத, அல்லது அவர்கள் பிரச்சனைகளை ஏற்படுத்துகின்றார்கள் எனக் கருதி அவர்களைப் புறக்கணிக்கும் ஒரு சமூகம், ஒருவிதக் கொடிய நச்சுத்தன்மையைத் தன்னகத்தே கொண்டுள்ளது;''[218] ''அது தன் வேர்களிலிருந்து தன்னைத் துண்டித்துக்கொண்டுள்ளது.''[219] பண்பாட்டு இடைவெளி, வேரறுந்த நிலை, மற்றும் நம் வாழ்விற்கு உருக்கொடுக்கும் உறுதிப்பாடுகளின் வீழ்ச்சி போன்றவற்றின் விளைவாக, நாம் பெற்றோரை இழந்தவர்கள் போல் இன்று உணர்கின்றோம். இந்த உணர்வு, நம் பிள்ளைகள், ஒரு குழும வரலாறு என்னும் வளமான மண்ணில் தங்களுடைய வேர்களைப் பதிக்கச் செய்யும் இடமாக நமது குடும்பங்களை மாற்றும் சவாலை நம்முன் வைக்கின்றது.

## சகோதரர்கள் மற்றும் சகோதரிகளாக இருத்தல்

194. சகோதரர்கள் மற்றும் சகோதரிகளுக்கிடையிலான உறவு, காலம் செல்லச்செல்ல ஆழப்படுகின்றது. ''குடும்பத்தில் பிள்ளைகளுக்கிடையே உருவாகும் சகோதரத்துவப் பிணைப்பானது, பிறரோடு திறந்த மனம் கொண்டு வாழுதல் என்ற வாழ்க்கைப் பாடத்தினால் உறுதிப்படுத்தப்படும்போது, சுதந்திரம் மற்றும் அமைதியின் சிறந்த கல்விக்கூடமாக மாறுகின்றது. எப்படி ஒன்றிணைந்து வாழ்வது என்பதனைக் குடும்பத்தில் நாம் கற்றுக்கொள்கின்றோம். இதை நாம் எப்போதும் நினைவில் கொண்டிருப்பதில்லை என்றாலும், குடும்பம்தான் உலகிற்குச் சகோதரத்துவத்தை அறிமுகப்படுத்துகின்றது. சகோதரத்துவத்தின் இந்த அரும்பு அனுபவம், இல்லங்களில் கிடைக்கும் பாசம் மற்றும் கல்வி போன்றவற்றால் உறுதிப்படுத்தப்படுகின்றது; இவ்வனுபவத்திலிருந்துதான் சகோதரத்துவத்தின் அழகு ஒரு வாக்குறுதிபோல சமூகம் முழுவதன்மீதும் ஒளிர்கின்றது.''[220]

195. சகோதரர்கள் மற்றும் சகோதரிகளுடன் வளர்தல் என்பது, பிறரைக் கவனித்து அவர்களுக்கு உதவுதல் என்னும் அழகிய அனுபவத்தை நம்மில் உருவாக்குகின்றது. ஏனென்றால், ''உடல் வலிமையற்ற, நோயுற்ற, அல்லது மாற்றுத்திறனாளியான நமது சிறிய சகோதரர் மற்றும் சகோதரிக்குக் குடும்பத்தில் நாம் காண்பிக்கும் அக்கறை, பொறுமை, மற்றும் பாசம் போன்றவற்றிலிருந்துதான், சகோதரத்துவம் என்பது ஒளிர்கின்றது.''[221] ''உன்னை அன்பு செய்யும் ஒரு சகோதரர் அல்லது சகோதரியைப் பெற்றிருப்பது, ஆழமான, மதிப்பிற்குரிய, மற்றும் தனிச்சிறப்புடைய ஓர் அனுபவம்''[222] என்பது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். ஒருவர் ஒருவரைச் சகோதர சகோதரிகளாக ஏற்று வாழும் முறை, பிள்ளைகளுக்குப் பொறுமையோடு கற்றுக்கொடுக்கப்பட வேண்டும். முயற்சியை அதிகம் கோரும் இப்பயிற்சியானது, சிலநேரங்களில் சமூகமயமாக்கலின் உண்மையான ஒரு கல்விக்கூடமாக இருக்க முடியும். ஒரே ஒரு பிள்ளையை மட்டுமே கொண்டிருக்கும் நடைமுறை அதிகம் காணப்படும் சில நாடுகளில், சகோதர சகோதரிகளாக வாழும் அனுபவம் இன்று மிக மிக அரிதாகிவிட்டது. ஒரே ஒரு குழந்தையை மட்டுமே கொண்டிருக்க இயலும் என்ற நிலையில், அக்குழந்தை, தனிமைப்படுத்தப்பட்ட அல்லது துணை யாரும் இல்லாச் சூழலில் வளர்க்கப்படாது என்பதற்கான வழிமுறைகள் உறுதிசெய்யப்பட வேண்டும்.

## ஒரு பெரிய இதயம்

196. மணத்துணைவர்கள் மற்றும் அவர்களின் குழந்தைகள் என்னும் சிறிய வட்டத்தோடு, நாம் கவனத்தில் கொள்ளாமல் விட்டுவிட முடியாத பரந்த குடும்பம் ஒன்றும் உண்டு. உண்மையில், ''கணவன் மனைவியிடையிலும், அதிலிருந்து பிறப்பவையும் மற்றும் பரந்த வழிகளில் தோன்றுபவையுமான பெற்றோர்-பிள்ளைகள், சகோதரர்கள்-சகோதரிகள், உறவினர்கள்-குடும்பத்தினர் என்பவர்கள் போன்ற ஒரே குடும்ப உறுப்பினர்களிடையே காணப்படும் அன்பு உண்டு. அது குடும்பத்தை எப்போதும் ஆழமான மற்றும் நெருக்கமான உறவுஒன்றிப்பிற்கு இட்டுச்செல்லும் அழியா உள்ளார்ந்த ஆற்றலால் உயிரூட்டப்பெற்று வளர்க்கப்படுகின்றது; இதுவே திருமணம் மற்றும் குடும்பம் போன்றவற்றால் உருவாகும் குழுமத்திற்கு அடிப்படையும் ஆன்மாவுமாக அமைகின்றது.''[223] நண்பர்கள், பிற குடும்பங்கள், மற்றும் தங்களுடைய கடினமான வாழ்வுச் சூழல்களிலும், சமூக அர்ப்பணத்திலும், இறைநம்பிக்கையிலும் ஒன்றிற்கு ஒன்று உதவும் குடும்பங்களின் குழுக்கள் ஆகியனவும் அந்தப் பரந்த குடும்பத்தின் உறுப்பினர்களே.

197. இளம் அன்னையர், பெற்றோர் இல்லாக் குழந்தைகள், குழந்தை வளர்ப்பில் தனித்து விடப்பட்ட அன்னையர், தனிப்பட்ட அன்பும் நெருக்கமும் தேவைப்படும் மாற்றுத்திறனாளிகள், போதைப் பழக்கத்திற்கு அடிமையாகிப் போன இளவயதினர், திருமணம் செய்துகொள்ளாதோர், பிரிந்து அல்லது கணவனை/மனைவியை இழந்த நிலையில் வாழ்வோர், தங்கள் குழந்தைகளின் ஆதரவு இல்லாமல் வாழும் முதியோர், நோயாளர்கள் போன்றோருக்கு, இந்தப் பரந்த குடும்பம் அன்பும் ஆதரவும் அளிக்க வேண்டும். ''தங்கள் வாழ்க்கையைத் தாங்களாகவே சீரழித்துக் கொண்டவர்களும்''[224] மேற்குறிப்பிடப்பட்ட குழுவில் இணைத்துக் கொள்ளப்பட வேண்டும். பெற்றோரின் தவறுகளைச் சரிசெய்ய உதவுதல், பிள்ளைகள் மேல் காட்டப்படும் வன்முறை மற்றும் அவர்களைத் தவறாக பயன்படுத்துதல் போன்ற சூழல்களை இனம்கண்டு, அவைபற்றி உரிய அதிகாரிகளிடம் முறையிடல், முழுமையான அன்பு மற்றும் குடும்பத்தின் நிலைத்த தன்மை போன்றவற்றைப் பெற்றோர் வழங்க இயலாத சூழல்களில் அதனை உறுதிசெய்தல் போன்றவையெல்லாம் பரந்த குடும்பத்தின் பணிகளே.



198. இறுதியாக, பரந்த குடும்பம் என்பது மாமனார், மாமியார், மற்றும் மணத்துணைவர்களின் உறவினர்கள் போன்றோரையெல்லாம் உள்ளடக்கியதே என்பதையும் நம்மால் மறக்க இயலாது. அன்பின் மெல்லிய கூறுகளுள் ஒன்று, உறவினர்களைப் போட்டியாளர்களாகவும், அச்சுறுத்துபவர்களாகவும், அழையாமல் நுழைபவர்களாகவும் பார்க்காமல் இருக்கக் கற்றுக்கொள்வது. திருமண ஒன்றிப்பு என்பது, அவர்களின் மரபுகள் மற்றும் நடைமுறைகளை மதித்தல், அவர்களின் மொழியைப் புரிந்துகொள்ள முயலுதல், அவர்களை விமர்சனம் செய்வதைத் தவிர்த்தல், அவர்கள் மேல் அக்கறை செலுத்துதல் மற்றும் பாராட்டல், ஆனால் அதே நேரம், மணத்துணைவர்களின் தனிஒதுக்கம் மற்றும் சுதந்திரத்தைக் காத்தல் என்பனவற்றைக் கோருகின்றது. இவற்றைச் செய்யத் தயாராக இருப்பது, தம் வாழ்க்கைத் துணைவர்மேல் ஒருவர் வெளிப்படுத்தும் தாராள அன்பின் சீர்மிகு வெளிப்பாடே.

# அலகு – 6

## சில அருட்பணிப் பார்வைகள்

199. மாமன்றத்தின் போது நடைபெற்ற உரையாடல், புதிய அருட்பணிச் செய்முறைகளுக்கான அவசியத்தைச் சுட்டிக்காட்டியுள்ளன. அவற்றுள் சிலவற்றை மிகப் பொதுவான முறையில் இங்கே குறிப்பிட விழைகின்றேன். திருஅவையின் படிப்பினையையும் அந்தந்த இடத்துப் பிரச்சனைகளையும் தேவைகளையும் கருத்தில்கொண்டு, நடைமுறைக்கு உகந்த மற்றும் செயல்திறமுடைய முதன்முயற்சிகளை வெவ்வேறு குழுமங்களும் மேற்கொள்ள வேண்டும். குடும்பத்திற்கான அருட்பணித் திட்டம் என ஒன்றை முன்வைக்காது, வேறு சில முக்கிய அருட்பணிச் சவால்களைக் குறித்து இங்கே சிந்திக்க விரும்புகின்றேன்.

### இன்று குடும்பத்தின் நற்செய்தியைப் பறைசாற்றுதல்

200. திருமணம் என்னும் அருளடையாளத்தின் மூலம் பெறும் அருளால், கிறிஸ்தவக் குடும்பங்களே, குடும்பத் திருத்தூதுப் பணியின் செயல்முதல்வர்களாகத் திகழ்கின்றன எனவும், இதனை, அனைத்திற்கும் மேலாக, "இல்லத் திருஅவைகளாக அவை தரும் மகிழ்ச்சிமிகு சாட்சியத்தால்"[225] செயல்படுத்துகின்றன எனவும் மாமன்றத் தந்தையர் வலியுறுத்தினர். இதன் விளைவாக, "குடும்பத்தின் நற்செய்தி, உள்ளங்களையும் வாழ்வையும் நிறைவாக்கும் ஓர் அகமகிழ்வு என மக்கள் இன்று உணர்வது இன்றியமையாததாகின்றது. ஏனென்றால், கிறிஸ்துவில் நாம் 'பாவம், துயர், உள்ளார்ந்த வெறுமைநிலை, மற்றும் தனிமை உணர்வு போன்றவற்றிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளோம்' (நற்செய்தியின் மகிழ்ச்சி, 1). விதைப்பவர் உவமையில் வருவதைப்போல (காண் மத் 13:3-9), நாம் விதையை விதைக்க உதவும்படி அழைக்கப்பட்டுள்ளோம், எஞ்சியவை இறைவனது பணி. குடும்பங்கள் பற்றிய தனது படிப்பினையில், திருஅவை ஒரு முரண்படும் அடையாளம் என்பதனை நாம் மறத்தலாகாது."[226] வலுவான, உறுதியான, நிலைத்து நிற்கின்ற, மற்றும் வாழ்வில் எத்தகைய சோதனைகளை அவர்கள் சந்திக்க நேர்ந்தாலும் தளராமல் அவர்களைத் தொடரச் செய்கின்ற அன்பு என்னும் உயர் இலட்சியத்தைத் தூக்கிப்பிடிக்கின்ற தங்கள் அருட்பணியாளர்களுக்கு மணத்துணைவர்கள் நன்றிக்கடன்பட்டுள்ளனர். மனத்தாழ்மையுடனும் பரிவிரக்கத்துடனும் குடும்பங்களைச் சென்றடையவும், "ஒவ்வொரு குடும்பமும் தான் சந்திக்கின்ற எத்தகைய தடைகளையும் மேற்கொள்வதற்கான சிறந்த வழியைக் கண்டுபிடிக்க உதவவும்"[227] திருஅவை விரும்புகின்றது. அருட்பணித் திட்டமிடலில், குடும்பம் குறித்த பொதுப்படையான ஓர் அக்கறையை மட்டும் வெளிப்படுத்தினால் போதாது. குடும்பத் திருத்தூதுப்பணியில் முனைப்புள்ள செயல்முதல்வர்களாகப் பணியாற்றிடக் குடும்பங்களை ஆற்றல்படுத்துவது என்பது "குடும்பத்திற்குள்ளேயே நற்செய்தி அறிவிப்பு மற்றும் நம்பிக்கை உருவாக்கம் போன்றவற்றிற்கான முயற்சிகளை"[228] மேற்கொள்ள அழைக்கின்றது.

201. "இம்முயற்சியானது, திருஅவையில் உள்ள ஒவ்வொருவரும் ஒருவித மறைத்தூதர்சார் மனமாற்றம் பெறவேண்டுமெனக் கோருகின்றது. இம்மறைத்தூதர்சார் மனமாற்றம், மக்களின் உண்மையான பிரச்சனைகளோடு எவ்விதத் தொடர்புமின்றி, வெறும் கொள்கைசார் செய்தியை மட்டும் அறிவிப்பதில் நிறைவடைவதில்லை."[229] குடும்பங்களுக்கான அருட்பணிப் பொறுப்பு என்பது, "குடும்பத்தின் நற்செய்தி மனிதரின் ஆழமான எதிர்பார்ப்புகளுக்குப் பதிலிறுக்கின்றது என்பதனைத் தெளிவுபடுத்துவது அவசியம், அதாவது, அது ஒவ்வொரு மனிதனின் மாண்பு மற்றும் சம பரிமாற்றத்தில் பெறும் நிறைவு, உறவு ஒன்றிப்பு மற்றும் நற்பயனுடைமை போன்றவற்றை உறுதிசெய்ய வேண்டும். இது வெறும் விதிமுறைகளின் தொகுப்பு ஒன்றை வழங்குவதில் அல்ல; மாறாக மிக உலகிய நாடுகளாகவே இருந்தாலும், அங்கும் இன்று தெளிவாகத் தேவைப்படுகின்ற விழுமியங்களை முன்வைப்பதிலேயே அடங்கியிருக்கின்றது."[230] மாமன்றத் தந்தையர் "நற்செய்தி அறிவிப்பு என்பது உண்மையான குடும்ப வாழ்வைத் தடைசெய்து, பாகுபாடு, வறுமை, புறந்தள்ளுதல், மற்றும் வன்முறை ஆகியவற்றிற்கு இட்டுச்செல்லும் பண்பாட்டு, சமூக, அரசியல், பொருளாதார, அதாவது சந்தை முறைமைக்கு அதிக முக்கியத்துவம் தருதல் என்பது போன்ற, காரணிகளைத் தெளிவாகக் கண்டிக்க வேண்டும் என்ற உண்மையையும் வலியுறுத்தினர். இதன்

விளைவாக, சமூக அமைப்புகளோடு உரையாடல் மற்றும் ஒத்துழைத்தலை வளர்க்க வேண்டும். மேலும், பண்பாட்டு மற்றும் சமூக–அரசியல் தளங்களில், கிறிஸ்தவர்களாகத் தங்களை அர்ப்பணிக்க முன்வரும் பொதுநிலையினரை உற்சாகப்படுத்த வேண்டும்.''[231]

202. ''குடும்பங்களுக்கான அருட்பணிப் பொறுப்பில் முக்கிய பங்களிப்புச் செய்வது சிறு குழுமங்கள், திருஅவை இயக்கங்கள், மற்றும் கழகங்கள் போன்றவை ஒன்றிணைந்து வாழும் குடும்பங்களின் குடும்பமாகிய பங்கே.''[232] இது, குடும்பங்களுக்கெனத் தெளிவாக முன்வைக்கப்படும் அருட்பணி ஈடுபாட்டுடன், ''அருட்பணியாளர்கள், திருத்தொண்டர்கள், ஆண், பெண் துறவியர், வேதியர்கள், மற்றும் அருட்பணியில் ஈடுபடும் பிறருக்கும் ஒரு தகுந்த உருவாக்கம்''[233] தேவை என்பதனை எடுத்துக்காட்டுகின்றது. உலகளவில் கலந்தாய்வு நிகழ்த்தப்பட்டபோது கிடைத்த பதிலிறுப்பில், குடும்பங்கள் தற்போது சந்திக்கின்ற குழப்பமான பிரச்சனைகளுக்கு ஏற்ற விதத்தில் பணியாற்றுகின்ற பயிற்சி திருநிலைத் திருப்பணியாளர்களுக்குப் போதிய அளவில் இல்லை என்பது தெளிவாகியது. பரந்துபட்ட கீழைமரபில் காணப்படும் மணமான திருநிலையினரின் அனுபவமும் இங்குப் பயன்படக்கூடியதே.

203. அருட்பணி மாணவர்கள், மணஉறுதிப்பாடு மற்றும் திருமணம் குறித்த வெறும் கோட்பாட்டுப் பயிற்சியை மட்டுமன்றி, விரிந்த பலஇயல்சார் உருவாக்கத்தைப் பெற வேண்டும். அவர்களின் பயிற்சி எப்போதும் அவர்களின் சொந்த உளவியல் மற்றும் உணர்ச்சிசார் பின்புலங்கள் மற்றும் அனுபவங்களைத் தன்னாய்வு செய்யும் அளவுக்கு அவர்களை உருவாக்குவதில்லை. அவர்களுள் சிலர் பெற்றோரின் உடனிருப்பு இல்லாத மற்றும் உணர்ச்சிசார் உறுதிநிலை இல்லாத குழப்பமுற்ற குடும்பங்களிலிருந்தே வருகின்றனர். அருட்பணி மாணவர்கள் தங்கள் எதிர்காலப் பணிவாழ்வுக்குத் தேவைப்படும் முதிர்ச்சி மற்றும் உளவியல் சமநிலையைப் பெற, உருவாக்க வழிமுறையானது அவர்களுக்கு உதவுவதை உறுதிசெய்ய வேண்டிய தேவையிருக்கின்றது. நலமான தன்மதிப்பை ஒருவர் பெற்றுக்கொள்வதில், குடும்பப் பிணைப்புகள் முக்கிய பங்காற்றுகின்றன. அருட்பணியாளர் பயிற்சியக வழிமுறைகளிலும் அருட்பணி வாழ்விலும்



குடும்பங்கள் பங்கேற்பது இன்றியமையாதது; ஏனென்றால், அருட்பணி மாணவர்களை உறுதிப்படுத்தி, மெய்ம்மையில் அவர்கள் வேரூன்றி நிற்கச்செய்யக் குடும்பங்கள் உதவுகின்றன. அருட்பணி மாணவர்கள் அருட்பணியாளர் பயிற்சியகத்தில் செலவிடும் தங்கள் நேரத்தைப் பங்குகளில் செலவிடும் நேரத்துடன் இணைத்துக்கொள்வது அவர்களுக்கு உதவியானது. ஏனென்றால், தங்கள் எதிர்காலப் பணிவாழ்வு பெரிதும் குடும்பங்களைச் சார்ந்ததாகவே இருக்கும் என்பதால், அவைபற்றிய நடைமுறை மெய்ம்மைகளுடன் அங்கு அவர்கள் அதிகம் தொடர்புகொள்ள முடியும். ''அருட்பணி வாழ்விற்கான பயிற்சியில் பொதுநிலையினர், குடும்பங்கள், அதிலும் குறிப்பாகப் பெண்கள் போன்றோரின் உடனிருப்பு திருஅவையின் பல்வேறு இறையழைத்தல்களின் வேறுபாடுகளையும் ஒன்றையொன்று முழுமையாக்குகின்ற தன்மையையும் பாராட்டக் கற்றுக்கொடுக்கின்றது.''[234]

204. குடும்பங்களுக்கான அருட்பணியில் உதவிட, பொதுநிலைத் தலைவர்களை உருவாக்க வேண்டியதன் தேவையையும் கலந்தாய்விற்கான பதிலிறுப்பு வலியுறுத்தியது. ஆசிரியர்கள் மற்றும் ஆற்றுப்படுத்துநர்கள், குடும்ப மற்றும் குழும மருத்துவர்கள், சமூகப்பணியாளர்கள், இளையோர் மற்றும் குடும்பங்களுக்கான வழக்குரைஞர்கள் போன்றவர்களின் துணையோடும், உளவியல், சமூகவியல், மணக்குறைநீக்கல்துறை, மற்றும் ஆற்றுப்படுத்துதல் என்பவற்றின் பங்களிப்போடும், அந்தப் பொதுநிலைத் தலைவர்கள் பணியாற்ற முடியும். நடைமுறை அனுபவம் நிறைந்த பயிற்சிபெற்ற முழுநேரத் தொழிலர்கள், அருட்பணி முயற்சிகளெல்லாம் குடும்பங்களின் உண்மையான சூழ்நிலைகளிலும் நடைமுறைசார் அக்கறைகளிலும் வேரூன்றியிருக்க உதவமுடியும். ''அருட்பணியில் ஈடுபடுகின்றவர்களுக்காக ஏற்பாடுசெய்யப்படும் பாடங்கள் மற்றும் நிகழ்வுகள், திருமண முன்தயாரிப்புப் பயிற்சித் திட்டத்தை திருஅவை வாழ்வு என்னும் பரந்த இயக்காற்றலோடு ஒன்றிணைக்க உதவ முடியும்.''[235] ''இல்லம்சார் வன்முறை மற்றும் பாலியல் கெடுசெயல் போன்றவற்றினால் எழும் சில அவசரச் சூழல்களில்,''[236] சிறந்த அருட்பணிப் பயிற்சி என்பது இன்றியமையாததாகின்றது. மேற்குறிப்பிடப்பட்டவை எதுவும் ஆன்மீக வழிகாட்டுதல், திருஅவையின் வளமான அருள்வாழ்வுச் செல்வங்கள், மற்றும் ஒப்புரவு அருளடையாளம் போன்றவற்றின் பயனை எவ்வகையிலும் குறைப்பன அல்ல; மாறாக அவையனைத்தையும் முழுமைப்படுத்துவனவே.

## மணஉறுதி செய்தவர்களைத் திருமணத்திற்குத் தயாரித்தல்

205. திருமணத்தின் மாண்பையும் அழகையும் இளையோர் ஆழமாக உணர்ந்திட, நாம் அவர்களுக்கு உதவவேண்டிய தேவை இருக்கின்றது என்று மாமன்றத் தந்தையர் பல வழிகளில் வலியுறுத்தினர்.[237] மானுட இருத்தலின் சமூகப் பரிமாணத்தை உயர்வாக்கி நிறைவாக்குவதும், பாலியல்புக்கு மிக ஆழமான பொருளைத் தருவதும், குழந்தைகளின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்குச் சிறந்த சூழமைவை உருவாக்கப் பெரிதும் உதவுவதுமான முழுமையான ஒன்றிப்பின் கவர்ச்சியை இளையோர் உணர்ந்தறிந்திட நாம் அவர்களுக்கு உதவ வேண்டும்.

206. ''இன்றைய சிக்கலான சமூகச்சூழலும் குடும்பங்கள் சந்திக்கின்ற சவால்களும், புதிதாகத் திருமணம் செய்துகொள்ள இருப்பவர்களைத் தயாரிப்பதில், ஒட்டுமொத்தக் கிறிஸ்தவக் குழுமமும் அதிக அக்கறை எடுத்துக்கொள்வதை அவசியமாக்குகின்றன. அதில் நற்பண்புகளின் முக்கியத்துவம் தெளிவுபடுத்தப்பட வேண்டியுள்ளது. அவற்றுள், ஆள்களிடையே அன்பு உண்மையாக வளரக் கற்பு அளப்பரிய ஆற்றல் ஆகின்றது. இது தொடர்பாக, குடும்பங்களின் சான்று வாழ்வை வலியுறுத்தியும், திருமணம், திருமுழுக்கு, மற்றும் ஏனைய அருளடையாளங்களுக்கிடையே உள்ள இணைப்பை எடுத்துக்காட்டி கிறிஸ்தவப் புகுநிலைப்படுத்தலில் திருமணத் தயாரிப்பை வேரூன்றச் செய்தும், ஒட்டுமொத்தக் குழுமத்தையும் பரவலாக ஈடுபடச் செய்வதன் தேவையை மாமன்றத் தந்தையர் ஏற்றுக்கொண்டனர். திருஅவை வாழ்வில் பங்கேற்கும் ஓர் உண்மையான அனுபவத்தை மணத்துணைவர்கள் பெறவும், குடும்ப வாழ்வின் வெவ்வேறு பரிமாணங்களைப் பற்றிய ஒரு முழுமையான அறிமுகத்தை அவர்கள் பெற்றுக்கொள்ளவும் உதவிசெய்யும் சில சிறப்புத் திருமணத் தயாரிப்புத் திட்டங்களுக்கான தேவை பற்றியும் தந்தையர் பேசியுள்ளனர்.''[238]

207. மணஉறுதி செய்தவர்கள் தங்கள் அன்பில் வளரத் துணைசெய்வதன் மூலம் கிறிஸ்தவக் குழுமங்கள் பெற்றுக்கொள்ளும் மாபெரும் நலன் என்னவென்று உணர்ந்திட, அக்குழுமங்களை நான் ஊக்கப்படுத்துகின்றேன். இத்தாலியின் ஆயர்கள் கூறியிருப்பதைப்போல, அம்மணத்துணைவர்கள் ''ஒரு மதிப்புநிறை வளம்; ஏனென்றால், அன்பிலும் தற்கையளிப்பிலும் வளர அவர்கள் தங்களை நேர்மையாக அர்ப்பணிப்பதன் மூலம், ஒட்டுமொத்தத் திருஅவை எனும் உடலின் முழு அமைப்பைப் புதுப்பிக்க உதவ முடியும். அவர்களிடையே நிலவும் தனிச்சிறப்பான நட்புறவு, அவர்கள் அங்கங்களாக இருக்கும் கிறிஸ்தவக் குழுமத்திலும் பரவி, அக்குழுமத்தில் நட்புறவு மற்றும் சகோதரத்துவம் வளர உதவ முடியும்.''[239] திருமணத் தயாரிப்புப் பயிற்சிகளை ஏற்பாடு செய்வதில், சட்டமுறையான மிகப் பல வழிகளைப் பின்பற்ற முடியும். எனவே ஒவ்வொரு இடத்துத் திருஅவையும், இளையோர் இவ்வருளடையாளத்திலிருந்து விலகிச் செல்லாமலிருக்க, எவ்வளவு சிறந்த பயிற்சிகளை அளிக்க முடியும் என்பதனைத் தெளிந்து தேர்ந்துகொள்ள வேண்டும். மறைக்கல்விப் பாடங்கள் அனைத்தையும் அவர்களுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டுமென்றோ அல்லது மிகையான தகவல்களைத் தந்து அவர்களைத் திணறடிக்கச் செய்ய வேண்டுமென்றோ தேவை இல்லை. இங்கும் ''உயர்ந்த அறிவு அல்ல, மாறாக, காரியங்களை உணர்ந்து உள்ளூரச் சுவைத்துப் பார்க்கும் ஆற்றலே உள்ளத்தை நிறைவுபடுத்தி அமைதியை அளிக்கின்றது.''[240] ஒரு பொருளின் அளவைவிட அதன் பண்பே மிகவும் முக்கியமானது. எனவே, புதுப்பிக்கப்பட்ட தொடக்க நம்பிக்கை அறிவிப்பின் ஒளியில் ''அதிகத் துணிவோடும் தாராள உள்ளத்தோடும்''[241] மணத்துணைவர்கள் தங்கள் வாழ்வின் எஞ்சிய நாட்களை இணைந்து வாழ்ந்திடும் வகையில், தகவல்கள் கவர்ச்சியாகவும் உதவுவனவாகவும் முன்வைக்கப்படுவதற்கு முக்கியத்துவம் தரப்பட வேண்டும். திருமணத் தயாரிப்பு என்பது திருமண அருளடையாளத்திற்கான ஒருவிதப் ''புகுநிலைப்படுத்தலாகவும்,'' மணத்துணைவர்கள் அருளடையாளத்தைத் தகுதியோடு பெற்றிட உதவியை அளிப்பதாகவும், குடும்பமாக வாழ்வைத் தொடங்குவதற்கு ஒரு நல்ல தொடக்கமாகவும் அமைந்திட வேண்டும்.

208. மறைத்தூதுக் குடும்பங்கள், மணத்துணைவர்களின் சொந்தக் குடும்பங்கள், மற்றும் பல்வேறு விதமான அருட்பணி வளங்கள் போன்றவற்றின் உதவியுடன், எடுத்துக்காட்டு மற்றும் நல்ல ஆலோசனை போன்றவற்றை வழங்கி, மணத்துணைவர்களின் அன்பு வளர்ந்து முதிர்ச்சியடைய உதவுகின்ற தொலைநோக்குத் தயாரிப்பிற்கான வழிகள் கண்டுபிடிக்கப்பட வேண்டும். இளையோர் வாழ்விற்கு உண்மையாக உதவும்

வகையில், பல்வேறு தலைப்புகளில் குழுக் கலந்துரையாடல்கள் மற்றும் விருப்ப உரைகள் ஏற்பாடு செய்யப்படுவதும் பயனளிக்கும். ஆனால் அதே நேரம், சில நேருக்கு நேர் சந்திப்புகளும் இன்றியமையாதவை; ஏனென்றால், யாருடன் தன் முழுவாழ்வையும் பகிர்ந்துகொள்ள வேண்டுமென்று ஒருவர் திட்டமிடுகின்றாரோ, அந்நபரை அன்பு செய்யக் கற்றுக்கொள்ள உதவி செய்வதே அடிப்படை நோக்கம். ஒருவரை அன்பு செய்யக் கற்றுக்கொள்வதென்பது தானாக நடைபெறுகின்ற ஒன்றல்ல; அதுபோலவே திருமணக் கொண்டாட்டத்திற்குச் சற்று முன்னர் பயிற்சிப் பட்டறை ஒன்றை நடத்தி அதனைக் கற்றுத் தருவதும் இயலாத ஒன்று. ஒவ்வொரு மணத்துணைவருக்கும் திருமணத் தயாரிப்பு என்பது அவர்களது பிறப்பின்போதே ஆரம்பமாகின்றது. தங்கள் குடும்பங்களிலிருந்து அவர்கள் பெற்றுக்கொண்டது, அவர்கள் தங்களைப்பற்றி அறியவும், ஒரு முழுமையான மற்றும் உறுதியான அர்ப்பணத்தை மேற்கொள்ளவும் அவர்களைத் தயார்படுத்த வேண்டும். ஒருவர் ஒருவரை நிபந்தனையின்றித் தேர்வுசெய்து, அம்முடிவை தினமும் புதுப்பித்து வாழும் தங்கள் பெற்றோரிடமிருந்து, கிறிஸ்தவத் திருமணம் என்றால் என்ன என கற்றுக்கொண்டவர்களே திருமணத்திற்காக நன்கு தயாரிக்கப்பட்டவர்களாக இருக்கக்கூடும். இங்ஙனம் சிந்திக்கின்ற போது, மணத்துணைவர்கள் அன்பிலும் குடும்பத்தின் நற்செய்தியிலும் வளரும் நோக்கில் செய்யப்படும் அருட்பணி முயற்சிகள் அனைத்தும் அவர்களுடைய குழந்தைகளின் எதிர்காலத் திருமண வாழ்விற்கும் அவர்களைத் தயார்செய்கின்றன எனும் வகையில் அக்குழந்தைகளுக்கும் உதவுவனவே. மரபுசார் சமயச் செயல்பாடுகளின் அருட்பணிப் பயனையும் நாம் குறைத்து மதிப்பிடக்கூடாது. எடுத்துக்காட்டாக, புனித வலந்தீன் நாளை இங்கு நினைவுகூர்கின்றேன்; சில நாடுகளில் இதனைக் கொண்டாடுவதால் விளையும் பயன்களைக் கண்டுகொள்வதில், திருஅவையில் உள்ள நம்மைவிட, வணிக நோக்கு உடையவர்கள் முந்திவிடுகின்றார்கள்.

209. மணஉறுதி செய்தவர்களுக்கு பங்குக் குழுமம் வழங்கும் காலப் பொருத்தமான தயாரிப்பானது, அவர்கள் பின்னர் எதிர்கொள்ளவிருக்கும் பிரச்சனைகள் மற்றும் இடர்கள் பற்றி அறிந்திட உதவி செய்ய வேண்டும். இங்ஙனம், ஓர் உறவின் தோல்வியையும் அதன் துன்பமிகு பின்விளைவுகளையும்



முன்னுணர முடியும்போது, அவ்வுறவை முறித்துக் கொள்வதில் உள்ள ஞானத்தை அவர்கள் கண்டுணர முடியும். ஒருவரோடொருவர் கவர்ச்சியும் மகிழ்ச்சியும் கொள்ளும் தொடக்க நாட்களில், மணத்துணைவர்கள் சிலவற்றை வெளிப்படுத்தாமலிருக்கவும், அல்லது சிலவற்றிற்கு உரிய முக்கியத்துவம் தராமலிருக்கவும், மற்றும் கருத்து வேறுபாடுகளைத் தவிர்க்கவும் முயற்சிசெய்யலாம்; ஆனால் பின்னரே பிரச்சனைகள் தலைதூக்குகின்றன. எனவே, திருமணத்திலிருந்து அவர்கள் ஒவ்வொருவரும் எதிர்பார்ப்பது என்ன, அன்பு மற்றும் அர்ப்பணம் என்பவற்றை அவர்கள் எப்படிப் புரிந்துகொள்ளுகின்றனர், ஒருவர் மற்றவரிடம் என்னென்ன எதிர்பார்க்கின்றனர், இருவரும் இணைந்து எத்தகைய வாழ்வைக் கட்டியெழுப்ப விரும்புகின்றனர் என்பவற்றைப்பற்றியெல்லாம் அவர்கள் கலந்துரையாட ஊக்கப்படுத்தப்பட வேண்டும். இத்தகைய கலந்துரையாடல்கள், அவர்கள் இருவருக்குமிடையே பொதுமைகள் குறைவாக இருந்தால் அதனைக் கண்டுகொள்ளவும், இருவருக்கிடையிலான கவர்ச்சி மட்டுமே அவர்களை இணைத்துவைக்க இயலாதது என்பதனை அறிந்துகொள்ளவும் உதவுகின்றன. ஆசையைப்போல் விரைந்து மாறுகின்ற, நிலையுறுதியற்ற, முன்னுணர்ந்து சொல்ல இயலாத ஒன்று வேறு எதுவுமில்லை. உண்மையான உறுதியான அர்ப்பணத்தைத் தங்களில் உருவாக்குவதற்கான ஆழமான காரணங்களை மணத்துணைவர்கள் ஆழ்ந்துணர்ந்தாலன்றி, திருமணம் செய்துகொள்ளும் முடிவெடுக்க அவர்களை ஒருபோதும் ஊக்கப்படுத்தலாகாது.

210. எவ்வாறெனினும், மணத்துணைவர்களுள் ஒருவர் மற்றவரின் குறைபாடுகளைத் தெளிவாகக் கண்டுணரும்போது, அக்குறைபாடுகளைச் சமன்செய்யும் நற்பண்புகளையும், அவற்றின் வழியாக இருவருக்கும் இடையிலான உறவை வளர்த்தெடுக்கும் வாய்ப்பு உள்ளது எனும் மெய்ம்மைசார் நம்பிக்கையையும் அவன் அல்லது அவள் கொண்டிருக்க வேண்டும். இந்த மெய்ம்மைசார் நம்பிக்கை பின்னர் வரக்கூடிய தியாகங்கள், பிரச்சனைகள், மற்றும் சண்டை சச்சரவுக்கான சூழல்கள் போன்றவற்றை எதிர்கொள்ள வேண்டிய உடன்பாட்டை உள்ளடக்கியது; அவற்றை ஏற்கும் உறுதியான மனத்துணிவையும் அது கோருகின்றது. மணத்துணைவர்கள் தங்கள் உறவில் உள்ள அபாய அறிகுறிகளைக் கண்டுணரவும், திருமணத்திற்கு முன்னரே அவற்றிற்குப் பதிலிறுக்கும் செயல்திறனுடைய

வழிகளைக் கண்டுபிடிக்கவும் வேண்டும். மணத்துணைவர்களுள் பலர், ஒருவர் மற்றவரைப்பற்றி அறிந்து கொள்ளாமலேயே திருமணம் செய்துகொள்கின்றனர் என்பதே வருந்தத்தக்க மெய்ம்மை. அவர்கள் தங்களை வெளிப்படுத்தும் சவாலைச் சந்திக்காமலும், உண்மையில் அடுத்தவர் யார் என்பதை அறிந்துகொள்ளாமலுமே, ஒருவர் மற்றவரின் தோழமையை அனுபவிக்கவும் இணைந்து செயலாற்றவும் செய்துள்ளனர்.

211. திருமணச் சடங்கைத் தங்கள் பயணத்தின் இறுதிநிலையாக மணத்துணைவர்கள் பார்க்காமல் இருப்பதை, குறுகிய கால மற்றும் நீண்ட காலத் திருமணத் தயாரிப்பு உறுதிசெய்ய வேண்டும்; மாறாக, வாழ்வில் எழுகின்ற எல்லாச் சோதனைகளையும் கடினமான நேரங்களையும், இருவரும் இணைந்து உறுதியான மற்றும் நடைமுறைக்கு உகந்த முடிவுகள் மூலம் எதிர்கொள்ளும் பொருட்டு, வாழ்நாள் முழுமைக்குமாகத் தரப்படும் அழைப்பே திருமணம் என்னும் பார்வை அவர்களுக்குத் தரப்பட வேண்டும். மணஉறுதி செய்தவர்கள் மற்றும் மணத்துணைவர்கள் ஆகியோருக்கான அருட்பணி என்பது அவர்களின் திருமணப் பிணைப்பை மையப்படுத்தியதாக இருக்க வேண்டும்; அது அவர்களின் அன்பை ஆழப்படுத்துவதாக மட்டும் இருந்துவிடாமல், அவர்களின் பிரச்சனைகள் மற்றும் துன்பங்களைத் துணிவோடு எதிர்கொள்ளவும் உதவ வேண்டும்; அது திருஅவையின் படிப்பினைகளை ஏற்றுக்கொள்ள உதவுவதாவும், அதன் பயன்மிகு வளங்களின் துணைநாடிச் செல்வதாகவும் மட்டுமன்றி, நடைமுறைத் திட்டங்கள், சிறந்த அறிவுரைகள், பயன் எண்பிக்கப்பட்ட வழிமுறைகள், மற்றும் உளவியல் ஆற்றுப்படுத்தல் என்பவற்றை உள்ளடக்கியதாகவும் அமைதல் வேண்டும். இவையனைத்தும், இளையோரின் உணர்வுகள் மற்றும் தேவைகளோடு இயைந்தும், அவர்களின் உள்ளார்ந்த வளர்ச்சிக்கு உதவுகின்றதுமான ஓர் அன்புப் பயிற்றுமுறைக்கு அழைப்புவிடுக்கின்றன. பிரச்சனைகள் எழும்போது, மணத்துணைவர்கள் உதவிநாடிச் செல்லக்கூடிய இடங்கள், ஆள்கள், பணிகள் போன்றவற்றின் பெயர்களும் திருமணத் தயாரிப்பின்போது தரப்பட வேண்டும். தங்கள் குற்றங்கள், கடந்தகாலத் தவறுகள், மற்றும் தங்கள் உறவையுமே இறைவன் திருமுன் கொண்டுவந்து, அவரின் இரக்கம்நிறை மன்னிப்பையும் நலமாக்கும் ஆற்றலையும் பெற உதவுகின்ற ஒப்புரவு அருளடையாளம் தரப்பட்டிருப்பதைக் குறித்தும் அவர்களுக்கு நினைவூட்டுவது இன்றியமையாதது.



## கொண்டாட்டத்திற்கான தயாரிப்பு

212. திருமணத்திற்கான குறுகிய காலத் தயாரிப்பு என்பது அழைப்பிதழ்கள், ஆடைகள், விருந்து, மற்றும் பற்பல நுணுக்கமான தயாரிப்புகள் போன்றவற்றில் கவனத்தைத் திரும்பச் செய்கின்றது; இதனால் அவற்றிற்கான நிதி மட்டுமல்ல, ஆற்றலும் மகிழ்ச்சியும் கூடக் கரைந்து போகலாம். திருமணம் செய்துகொள்ள இருப்பவர்கள், தங்களின் திருமணச் சடங்கிற்கு, களைப்புற்று, அல்லல்பட்டு வருகின்றார்களேயன்றி, தாங்கள் அடியெடுத்து வைக்கவிருக்கும் புதிய பயணத்தின் மீது கவனத்தைச் செலுத்தியவர்களாகவும் அதற்குத் தயாரானவர்களாகவும் அல்ல. திருமணக் கொண்டாட்டத்தை வெகுவிமரிசையாக நடத்த வேண்டும் என்பது போன்ற மிகைஅக்கறை, ஏற்கெனவே கூடி வாழ்கின்றவர்களின் ஒன்றிப்பையும் பாதிக்கின்றது; அனைத்திற்கும் மேலாக, அவர்கள் தங்கள் அன்பையும், பிறர் முன்னிலையில் அதனைச் சிறப்பிப்பதையும் விட்டுவிட்டு, திருமணச் செலவினங்களைக் கருத்தில் கொண்டு, மணமுடிக்காமலேயே இருந்துவிடுகின்றனர். மணஉறுதி செய்துள்ளவர்களுக்கு இங்கு நான் ஒரு வார்த்தை சொல்ல வேண்டும். வேறுபட்டவர்களாக இருப்பதற்கான துணிவைக் கொண்டிருங்கள். நுகர்வுச் சமூகமும் வெறுமையான தோற்றங்களும் உங்களை விழுங்கிவிட அனுமதிக்காதீர்கள். அருளால் உறுதிப்படுத்தப்பட்டு, புனிதப்படுத்தப்பட்டு, நீங்கள் பகிர்ந்துகொள்ளும் அன்பே முக்கியமானது. அனைத்தையும்விட அன்பு முன்னிலை வகிக்கும், மிகைப்பாடு அற்ற எளிமையான கொண்டாட்டத்தை நீங்கள் விரும்பித் தேர்ந்தெடுக்க இயலும். அருட்பணியில் ஈடுபடுவோரும், ஒட்டுமொத்தக் குழுமமும் இம்முதன்மையை விதிவிலக்கான ஒன்று என்றில்லாமல், ஒழுங்குமுறையாக்க உதவ வேண்டும்.

213. திருமண வழிபாட்டுக் கொண்டாட்டத்தை ஓர் ஆழமான ஆள்சார்ந்த அனுபவமாக்கவும், அக்கொண்டாட்டத்தில் பயன்படுத்தப்படும் ஒவ்வோர் அடையாளத்தின் பொருளையும் உணர்ந்து பாராட்டவும், திருமணம் செய்துகொள்ள இருப்பவர்கள் திருமணத்திற்கான தயாரிப்பின் போது, ஊக்கப்படுத்தப்பட வேண்டும். இருவரும் திருமுழுக்குப் பெற்றவர்களாக இருக்கின்றபோது, உடன்பாட்டு வார்த்தைகளால் வெளிப்படுத்தப்படுகின்ற அர்ப்பணமும், திருமண உறவை நிறைவாக்கும் உடல் ஒன்றிப்பும், மனிதரான

இறைமகன் மற்றும் அவரது திருஅவைக்கு இடையே உள்ள உடன்படிக்கைசார் அன்பு மற்றும் ஒன்றிப்பு ஆகியவற்றின் அடையாளங்களாக மட்டுமே பார்க்கப்பட முடியும். திருமுழுக்குப் பெற்றவர்களில், வார்த்தைகளும் அடையாளங்களும் நம்பிக்கையை வெளிப்படுத்தும் சொல்திறமிக்க மொழியாக மாறுகின்றன. இறைவன் தந்த அர்த்தத்தோடு படைக்கப்பட்ட உடலானது, ''அருளடையாளங்களை நிறைவேற்றும் திருப்பணியாளர்களின் மொழியாக மாறுகின்றது. அது, இறைவனிலிருந்து ஊற்றெடுக்கின்ற மறைபொருள், இல்லற உடன்படிக்கையின் மூலம் வெளிப்படுத்தப்பட்டு நிறைவாக்கப்படுகின்றது எனும் புரிதலையும் கொண்டது.''[242]

214. பின்னர் வரும் அனைத்து விதமான அடையாளங்களின் பொருளை ஒளிர்விக்கின்ற உடன்பாட்டு வார்த்தைகளின் இறையியல் மற்றும் அருள்வாழ்வுசார் முக்கியத்துவத்தைச் சில நேரங்களில் மணத்துணைவர்கள் புரிந்துகொள்வதில்லை. இவ்வார்த்தைகள் நிகழ்காலத்தோடு மட்டும் நின்றுவிடுவன அல்ல என்பது அழுத்தியுரைக்கப்பட வேண்டும்; அவை எதிர்காலத்தையும் உள்ளடக்கிய ஒரு முழுமைத்தன்மை உடையன: ''இறப்புவரை நாங்கள் பிரிந்துவிடாமல் இருக்கச் செய்யும்.'' உடன்பாட்டு வார்த்தைகளின் உள்ளீடானது பின்வருவதைத் தெளிவுபடுத்துகின்றது: ''தன்னுரிமையும் நம்பிக்கையுடைமையும் ஒன்றுக்கொன்று முரணானவை அல்ல; மாறாக, அவை ஆளாள் மற்றும் சமூகம்சார் உறவுகளில் ஒன்றுக்கொன்று உதவிசெய்வன. நமது உலகளாவிய சமூகத்தொடர்புப் பண்பாட்டில் காப்பாற்றப்படாத வாக்குறுதிகளின் அதிகரிப்பால் எவ்வளவு பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்பதனை நாம் எண்ணிப் பார்ப்போம்... தான் கொடுத்த வாக்கை நிறைவேற்றுதல், தன் வாக்குறுதிகளுக்குப் பற்றுறுதியோடு இருத்தல் என்பன வாங்கவும் விற்கவும் முடியாதன. வலிமையின் மூலம் கட்டாயப்படுத்தப்படவோ, தியாகங்கள் இன்றி நிறைவேற்றப்படவோ அவை இயலாதன.''[243]

215. கென்யாவின் ஆயர்கள் கூறியுள்ளதுபோல ''பலர் (இளையோர்) தங்கள் திருமண நாளின்மேல் மட்டுமே கவனம் செலுத்தி, தாங்கள் நுழையவிருக்கின்ற வாழ்நாள் முழுமைக்குமான அர்ப்பணத்தைப் பற்றி மறந்துவிடுகின்றனர்.''[244] அருளடையாளம் ஒரே ஒரு கணம் மட்டுமே



நிறைவேறி, பின்னர் அது கடந்த காலம் மற்றும் அதன் நினைவுகளின் அங்கமாக மாறிவிடுவதல்ல; மாறாக, திருமண வாழ்வு முழுவதையும் அது நிரந்தரமான தாக்கத்திற்கு உட்படுத்துவது என்று பார்க்க அவர்கள் ஊக்கப்படுத்தப்பட வேண்டும்.[245] பாலியல்பின் மக்கட்பேறு அர்த்தம், உடலின் மொழி, திருமண வாழ்வு முழுவதும் வெளிப்படுத்தப்படும் அன்பின் அடையாளங்கள் என்பன அனைத்தும் ''வழிபாட்டு மொழியின் தடையற்ற தொடர்ச்சியாகவும்'' மற்றும் ''இல்லற வாழ்வு ஒரு குறிப்பிட்ட பொருளில் வழிபாட்டுத்தன்மை உடையது'' என்பதை உணர்த்துவதாகவும் மாறுகின்றன.[246]

216. விவிலிய வாசகங்கள், தாங்கள் மாற்றிக்கொள்ளும் மோதிரங்கள், மற்றும் சடங்கில் பயன்படுத்தப்படும் பிற அடையாளங்கள் போன்றவை பற்றியும் மணத்துணைவர்கள் அருட்சிந்தனை செய்யவேண்டும். அவர்கள் இருவரும் இணைந்தும் ஒருவர் ஒருவருக்காகவும் வேண்டாமலும், நம்பிக்கையுடையவர்களாகவும் தாராளமனம் படைத்தவர்களாகவும் நீடிக்க இறைவனின் துணையைத் தேடாமலும், ஆண்டவர் அவர்களிடம் எதிர்பார்ப்பதென்ன என்பதனை அவரிடம் கேட்டறியாமலும், கன்னிமரியாவின் ஒரு திருவுருவம் முன்பு தங்கள் அன்பை அர்ப்பணம் செய்யாமலும், திருமணச் சடங்கிற்கு வருவது நன்றன்று. திருமணச் சடங்கிற்கு மணத்துணைவர்களைத் தயார்செய்ய உதவுகின்றவர்கள், மிகுந்த பயன்தரும் மேற்குறிப்பிடப்பட்ட இறைவேண்டல் தருணங்களை, மணத்துணைவர்கள் உள்ளூர உணர உதவிட வேண்டும். ''திருமண வழிபாடானது ஒரு குடும்ப மற்றும் குழுமக் கொண்டாட்டமாகிய ஒரு தனித்தன்மை வாய்ந்த நிகழ்வு. இயேசு செய்த முதல் அருங்குறிகள் கானாவில் நடைபெற்ற திருமண விழாவிலேயே அரங்கேறின. ஒரு புதிய குடும்பத்தின் தொடக்கத்திற்கு மகிழ்வைக் கொண்டுவந்த, ஆண்டவரின் அருள்வியப்புச் செயலிலிருந்து பிறந்த நல்ல இரசமே, கிறிஸ்து எக்கால ஆண்கள் மற்றும் பெண்களோடு செய்துகொள்ளும் உடன்படிக்கையின் புதிய இரசம்... பல நேரங்களில் திருமண வழிபாட்டின்போது திருப்பணியாளர் திருஅவையின் வாழ்வில் அரிதாகவே பங்குபெறுகின்ற அல்லது பிற கிறிஸ்தவ அவைகள் மற்றும் பிற சமயக் குழுமங்களில் உறுப்பினராயிருக்கின்ற பலரைக் கொண்ட திருக்குழுமத்திற்கே பேசுகின்றார். எனவே இந்நிகழ்வானது கிறிஸ்துவின் நற்செய்தியைப் பறைசாற்றுகின்ற பயனுள்ள ஒரு வாய்ப்பாக அமைகின்றது.''[247]

## திருமண வாழ்வின் முதல் ஆண்டுகளில் உடன்பயணித்தல்

217. திருமணத்தின் சாரம் அன்பே எனப் பார்ப்பது இன்றியமையாதது; எனவே முழுத் தன்னுரிமையுடன் தேர்வுசெய்பவர்களும், ஒருவரை ஒருவர் அன்பு செய்கின்றவர்களும் மட்டுமே திருமணம் செய்துகொள்ளலாம். அன்பு வெறும் உடல் கவர்ச்சியாகவோ அல்லது மேலோட்டமான உணர்ச்சியாகவோ மட்டும் இருந்தால், அந்த உணர்ச்சியும் உடல் கவர்ச்சியும் குறைவுபடும்போது, மணத்துணைவர்கள் புண்படும் நிலைக்கு ஆளாகின்றனர். இது எவ்வளவு அடிக்கடி நிகழ்கின்றது என்பதனைப் பொறுத்து, தங்கள் திருமண வாழ்வின் முதல் ஆண்டுகளில், ஒருவரையொருவர் தமக்குரியவராகக் கொண்டிருக்கவும் பற்றிக்கொள்ளவும் வாழ்வு முழுவதும் அன்புசெய்யவும், தாங்கள் தன்னறிவோடும் தன்னுரிமையோடும் எடுத்த முடிவை வளப்படுத்தவும் ஆழப்படுத்தவும் மணத்துணைவர்களுக்கு உதவுவது முக்கியமானது. பல நேரங்களில் மணஉறுதிக்காலம் போதுமானதாக இருப்பதில்லை; பல்வேறு காரணங்களுக்காக முடிவு அவசரமாக எடுக்கப்படுகின்றது; அதில், மிகவும் பிரச்சனைக்குரியது மணமுடித்துக்கொள்ள இருப்போரே போதிய முதிர்ச்சியின்றி இருப்பதுதான். இதன் விளைவாக, தங்கள் மணஉறுதிக்காலத்திலேயே நடந்து முடிந்திருக்க வேண்டியதொரு நடைமுறைக்கு, புதிதாய் மணமுடித்த மணத்துணைவர்கள் உட்படவேண்டியதாகின்றது.

218. திருமணத் தயாரிப்பின் மற்றொரு பெரிய சவால், திருமணம் ஒரே நாளில் நடந்து முடிந்துவிடுகின்ற ஒன்றல்ல என மணத்துணைவர்கள் உணர உதவுவது. அவர்களின் ஒன்றிப்பு உண்மையானதும் பின்வாங்க முடியாததும், திருமணம் என்னும் அருளடையாளத்தால் உறுதிப்படுத்தப்பட்டதும் புனிதப்படுத்தப்பட்டதும் ஆகும். எனினும் தங்கள் வாழ்வுகளை மணத்துணைவர்கள் இணைத்துக்கொள்ளும்போது, வாழ்வுக்காலம் முழுவதும் தொடரும் ஒரு திட்டத்தில் செயல்ஈடுபாட்டுடனும் படைப்பாற்றலுடனும் பங்கேற்க முன்வருகின்றனர். இப்போது அவர்களின் பார்வை, இறைஅருளின் துணையோடு, தினமும் கட்டியெழுப்ப அவர்கள் அழைக்கப்பட்டுள்ள எதிர்காலத்தை நோக்கியதாகவே இருக்கவேண்டும். இக்காரணத்திற்காகவே, மணத்துணைவருள் எவரும் அடுத்தவரை எக்குறையுமில்லாதவராக இருக்க வேண்டும் என எதிர்பார்த்தலாகாது.



ஒவ்வொருவரும் அனைத்து வகையான போலி எதிர்பார்ப்புகளையும் ஒதுக்கிவிட்டு, தம் துணைவர் உண்மையில் இருப்பது போல அவரை ஏற்றுக்கொள்ள வேண்டும். அதாவது, இன்னும் முடிக்கப்படாத, வளர்ச்சி தேவைப்படுகின்ற, பணி தொடர்ந்து நடைபெறுகின்ற ஒன்றாகக் கருதவேண்டும். ஒரு துணைவர்மீது மற்றவர் எப்போதும் குற்றம் காண்கின்ற போக்கு, இருவரும் இணைந்து பொறுமை, புரிதல், சகிப்புத்தன்மை, மற்றும் தாராள மனம் ஆகியவற்றைக் கொண்டு முழுமை செய்யப்படவேண்டியதொரு செயல்திட்டமாகத் திருமணம் தொடங்கப்படவில்லை என்பதன் அடையாளமே. அந்நிலையில் அன்பு படிப்படியாக ஆனால் உறுதியாக, தொடர் கேள்விகளுக்கும், குறைக்கூற்றுக்கும், ஒருவர் மற்றவருடைய நல்ல மற்றும் தீய குணங்களைப் பற்றியே பேசிக்கொண்டிருப்பதற்கும், இறுதி எச்சரிக்கைகள் விடுப்பதற்கும், போட்டி மற்றும் தம்மை நியாயப்படுத்துதல் போன்றவற்றில் இறங்குவதற்கும் வழிவகுக்கும். அதனால், மணத்துணைவர்கள் தங்களுக்கிடையே ஒரு முதிர்ச்சியான ஒன்றிப்பை ஏற்படுத்த, ஒருவருக்கொருவர் உதவ இயலாது போகின்றது. இந்த மெய்ம்மை புதிதாய் மணமுடித்தவர்களுக்குத் தொடக்கத்திலிருந்தே சரியாக எடுத்துக்காட்டப்பட வேண்டும்; அப்போதுதான் திருமணம் என்பது ‘‘வெறும் தொடக்கமே’’ என்பதனை அவர்கள் உணர்ந்துகொள்வர். ‘‘நான் ஏற்றுக்கொள்கிறேன்’’ எனச் சொல்வதன் மூலம், தங்கள் இலக்கை அடைவதற்கான வழியில் எழும் எல்லாவிதத் தடைகளையும் வெற்றி கொள்ளவேண்டிய ஒரு பயணத்தையே மணத்துணைவர்கள் தொடங்குகின்றனர்; அவர்கள் பெறும் திருமண ஆசி இப்பயணத்திற்கான ஓர் அருளும் ஒரு செயல்தூண்டுதலும் ஆகும். அவர்கள் இணைந்து அமர்ந்து ஒருவர் ஒருவருடன் பேசி, நடைமுறையில் எவ்வாறு தங்கள் குறிக்கோளை அடைவது எனத் திட்டமிடுவது அவர்களுக்குப் பயனளிக்கும்.

219. பழையதோர் கூற்றை நினைவுகூர்கின்றேன்: ஓடாத நீர் தேங்கிநின்று ஒன்றுக்கும் உதவாமல் போகின்றது. திருமணமான முதல் ஆண்டுகளில், மணத்துணைவர்களின் அன்பு அனுபவம் தேக்கம் அடையத் தொடங்கினால், அதனை முன்னோக்கிச் செலுத்துகின்ற ஆற்றலான மன எழுச்சி இல்லாமல் போகின்றது. இளம் அன்பு, எதிர்காலத்தைக் குறித்து, மிகுந்த எதிர்நோக்கோடு நடனமாடிக்கொண்டிருக்க வேண்டும். மணஉறுதி

செய்யப்பட்ட மற்றும் திருமணமான முதல் ஆண்டுகளில், வாக்குவாதங்கள், மோதல்கள், மற்றும் பிரச்சனைகள் போன்றவற்றைக் கடந்து, அனைத்தையும் ஒரு பரந்த பார்வையில் பார்க்கச் செய்வது எதிர்நோக்கு என்னும் புளிக்காரமே. அது வளர்ச்சியை நோக்கி நம் உறுதியின்மைகள் மற்றும் அக்கறைகள் என்பவற்றை இணைத்து இயக்கும். நம்மிடமுள்ள அனைத்தையும் குடும்பத்தின் நலனுக்காக வழங்கி, நிகழ்காலத்தில் முழுமையாக நாம் வாழ்ந்திட எதிர்நோக்கு நமக்குக் கட்டளையிடுகின்றது; ஏனென்றால், உறுதியான எதிர்காலம் ஒன்றிற்கு முன்னேற்பாடு செய்யச் சிறந்த வழி நிகழ்காலத்தில் நன்கு வாழ்வதே.

220. மேற்கூறப்பட்ட நடைமுறையானது, தாராளப் பண்பு மற்றும் தியாகம் போன்றவற்றை உள்ளடக்கிய பல கட்டங்களில் நிகழ்கின்றது. கவர்ச்சியின் வலுவான முதல் உணர்ச்சிகள், அடுத்தவர் இப்போது எனது வாழ்வில் ஓர் அங்கம் என்ற தெளிவான புரிதலுக்கு வழிவகுக்கின்றன. ஒருவர் ஒருவருக்கு உரியவர் என ஆவதால் ஏற்படும் இன்பம் என்பது வாழ்வை ஒரு பொதுத்திட்டமாகப் பார்க்கச்செய்து, எனது மகிழ்வை விட அடுத்தவரின் மகிழ்வை முன்னிலைப்படுத்தவும், திருமணம் சமூகத்தை வளமாக்குகின்றது என்ற புரிதலில் மகிழ்வுறவும் வழிவகுக்கின்றது. அன்பு முதிர்ச்சி அடையும்போது, அது ‘‘கலந்துபேசி முடிவுசெய்யவும்’’ கற்றுக்கொள்கின்றது. கலந்துபேசி முடிவுசெய்வதென்பது தன்னலத்தையும் கணக்குப் பார்த்துச் செயல்புரிதலையும் சார்ந்தது அல்ல; மாறாக, அது ஒருவர் ஒருவருக்கான அன்புச் செயல்பாடு, குடும்ப நலனுக்காகக் கொடுப்பது மற்றும் பெறுவது ஆகியவற்றின் இடைவிளைவு. திருமண வாழ்வின் ஒவ்வொரு புதிய கட்டத்திலும், இருவரும் இணைந்து அமர்ந்து முன்னைய உடன்பாடுகள்பற்றி மீண்டும் கலந்துபேசி முடிவெடுக்க வேண்டும்; இதில் ஒருவருக்கு வெற்றி, அடுத்தவருக்குத் தோல்வி என்று இல்லை. மாறாக, இருவருக்கும் வெற்றியே. மணத்துணைவர் ஒவ்வொருவரும் இல்லத்திற்கான பொறுப்பைப் பகிர்ந்து கொள்வதால், ஒருவராகவே முடிவு எடுத்தல் ஆகாது. எனினும், ஒவ்வோர் இல்லமும் தனித்தன்மை உடையது. ஒவ்வொரு திருமணமும் தனக்கு நல்லது எனத் தெரிகின்ற தீர்வுகளைக் கண்டுகொள்ளும்.

221. இல்லற வாழ்வு பற்றிய முறையற்ற மிகை எதிர்பார்ப்புகள், திருமணங்கள் முறிவுறுவதற்கான காரணங்களுள் ஒன்று. தான் கற்பனை



செய்திருந்ததைவிட, மெய்ம்மை அதிக வரம்புகளுக்கு உட்பட்டது, மற்றும் சவால் நிறைந்தது எனத் தெரியவரும்போது, தீர்வு என்பது விரைவாகவும் பொறுப்பற்றவிதமாகவும் பிரிந்துவிட எண்ணுவதல்ல; மாறாக, மணவாழ்வு என்பது தன் மணத்துணைவர் முதிர்ச்சி அடைய உதவும் பொருட்டு, தான் இறைவன் பயன்படுத்துகின்ற ஒரு கருவியே என அறிவுத்தெளிவுடைய புரிதலுக்கு வருவதே. மாற்றம், முன்னேற்றம், ஒவ்வொருவரிலுமுள்ள நற்பண்புகளை மலரச்செய்தல் என்பவையெல்லாம் இயன்றனவே. ஒவ்வொரு திருமணமும் ஒரு வகையான ‘‘மீட்பின் வரலாறே.’’ அது வலுவற்ற தொடக்கங்களிலிருந்து, இறைவனின் அருட்கொடையாலும் நமது படைப்பாற்றலும் தாராளத்தன்மையும் கொண்ட பதிலிறுப்பாலும், காலப் போக்கில் மதிப்புமிக்கதும் நிலைத்திருப்பதுமாக வளர்ச்சிபெறுகின்றது. அன்புறவில் வாழும் இரு ஆள்களின் சிறந்த மறைத்தூதுப் பணி, ஆண் அதிகம் ஆணாகவும், பெண் அதிகம் பெண்ணாகவும் உருவாக ஒருவருக்கொருவர் உதவுவதே என்பதனை நாம் சொல்லவும் வேண்டுமோ? வளர்ச்சிக்குத் துணைசெய்வதென்பது ஒருவரின் தான்மையை வடிவமைக்க உதவுவதே. எனவே அன்பு என்பது ஒருவிதக் கைவினைஞர் கலை போன்றது. விவிலியத்தில் ஆண் மற்றும் பெண்ணின் படைப்புப்பற்றி நாம் வாசிக்கும் போது, கடவுள் முதலில் ஆதாமை உருவாக்கியதைக் காண்கின்றோம் (காண் தொநூ 2:7); பின்னர் முக்கியமான ஒன்று குறைவுபடுவதைக் கண்டு, ஏவாளை அவர் உருவாக்கினார்; உடனே ‘‘ஆம், இவர் எனக்குப் பொருத்தமானவர்!’’ என மனிதன் வியந்துரைப்பதையும் இறைவன் கேட்டார். ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர் முதன்முதலில் சந்திக்கின்றபோது, முன்னர் நடைபெற்றிருக்கக்கூடிய வியப்பூட்டும் உரையாடலை நாமும் பெரும்பாலும் கேட்க இயலும். மணத்துணைவர்களின் வாழ்வில், கடினமான நேரங்களில் கூட, ஒருவர் மற்றவருக்கு எப்போதும் வியப்பூட்ட முடியும்; முதன்முதலாகச் சந்திப்பதைப் போல, அவர்கள் உறவுக்கெனப் புதிய கதவுகள் திறக்கக்கூடும். ஒவ்வொரு புதிய கட்டத்திலும், அவர்கள் ஒருவரை ஒருவர் ‘‘உருவாக்க’’ இயலும். ஒரு கைவினைஞருக்குரிய பொறுமையோடு, இறைவனிடமிருந்து வருகின்ற பொறுமையோடு, அன்பு ஒவ்வொருவரையும் அடுத்தவருக்காகக் காத்திருக்கப் பணிக்கின்றது.

222. புதிதாய் மணமான மணத்துணைவர்களுக்கான அருட்பணி என்பது வாழ்வை வழங்குவதில் தாராள உள்ளத்தோடு செயல்படுமாறு அவர்களை ஊக்கப்படுத்துவதாகவும் அமைய வேண்டும். ‘‘இல்லற அன்பின் ஆள்சார் மற்றும் முழுமையான மனிதம்சார் பண்பை கருத்தில் கொண்டு நோக்கும்போது, மணத்துணைவர்களுக்கு இடையே நிகழும் ஒத்தியைந்த உரையாடல், சூழ்நிலைகளைக் கருத்தில் கொள்ளுதல், மணத்துணைவரின் மாண்பை மதித்தல் என்பவற்றின் விளைவாகவே குடும்பக்கட்டுப்பாடு மிகப் பொருத்தமாக நிகழும். இங்ஙனம் காண்கின்றபோது, *மானுட வாழ்வு* என்ற சுற்றுமடல் (காண் 1014) மற்றும் *குடும்ப வாழ்வு* என்ற திருத்தூது ஊக்கவுரை (காண் 14; 2835) ஆகியவற்றின் படிப்பினைகள் மீண்டும் புதிதாய் எடுத்துரைக்கப்பட வேண்டும்; இதன்மூலம் வாழ்வுக்கு எதிரான மனநிலைகளை நாம் எதிர்க்க முடியும். பொறுப்புள்ள பெற்றோர் நிலையைச் சார்ந்த முடிவுகளை எடுக்க, மனச்சான்று உருவாக்கம் அவசியமாகின்றது. இம்மனச்சான்று ‘ஒரு மனிதரின் மிகவும் உள்ளார்ந்த மையமும் புனித இடமும் ஆகும். அங்கு ஒவ்வொருவரும் இறைவனோடு தனித்திருக்கின்றனர்; அந்த இறைவனின் குரல் உள்ளத்தின் ஆழத்தில் ஒலிக்கின்றது’ (*இன்றைய உலகில் திருச்சபை*, 16). எந்த அளவுக்கு அதிகமாக மணத்துணைவர்கள் தங்கள் மனச்சான்றில் இறைவனுக்கும் அவரது கட்டளைகளுக்கும் செவிமடுக்கவும் (காண் உரோ 2:15), ஆன்மீக உடன்பயணிப்பைப் பெறவும் செய்கின்றார்களோ, அந்த அளவுக்கு அதிகமாக அவர்களுடைய முடிவுகள், அவர்களுடைய கட்டற்ற தற்போக்குகள், மற்றும் நடைமுறையில் உள்ள சமூகப் பழக்கவழக்கங்களுக்கு ஒத்துப்போதல் என்பவற்றிலிருந்து ஆழமான விடுதலை பெற்றவையாக அமையும்.’’[248] இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் தெளிவான போதனை இன்னமும் பொருத்தமானதே: ‘‘(மணத்துணைவர்கள்) பொது ஆலோசனையோடும் முயற்சியோடும் முடிவு எடுக்க வேண்டும். அவர்கள் தங்களின் நலனையும், தங்களுக்கு ஏற்கெனவே பிறந்துள்ள மற்றும் வருங்காலத்தில் பிறக்கக்கூடிய குழந்தைகளின் நலனையும் கருத்துடன் கவனத்தில் கொள்ள வேண்டும். இதற்கு அவர்கள் தங்கள் வாழ்க்கை நிலையையும் தங்கள் காலத்துப் பொருள்சார், ஆன்மீகம்சார் சூழ்நிலைகளையும் கருத்தில் கொள்ள வேண்டும்; முடிவாக, தங்களின் குடும்பக் குழுமம், உலகிய சமூகம், திருஅவை என்பவற்றின்



நலன்மட்டில் கவனம் செலுத்த வேண்டும். இந்த முடிவைக் கடவுளின் முன்னிலையில் பெற்றோர்கள் தாங்கள் மட்டுமே எடுக்கவேண்டுமே அன்றி, வேறு எவரும் அல்ல.’’[249] மேலும் ‘‘இயற்கைச் சட்டங்களையும் இனப்பெருக்க வளக் கூடுநிலையையும் (*மானுட வாழ்வு*, 11) அடிப்படையாகக் கொண்ட செய்முறைகள் ஊக்குவிக்கப்பட வேண்டும்; ஏனென்றால், ‘இத்தகைய செய்முறைகள், மணத்துணைவர்களின் உடல்களை மதித்து, அவர்களுக்கிடையே மென்மைப் பண்பை வளர்த்து, உண்மைச் சுதந்திரத்திற்கான கல்விக்குத் துணையாய் இருக்கின்றன.’ (*கத்தோலிக்கத் திருஅவையின் மறைக்கல்வி*, 2370). குழந்தைகள் இறைவன் தருகின்ற ஒரு வியப்பரும் பரிசு, பெற்றோருக்கும் திருஅவைக்கும் அவர்கள் ஒரு மகிழ்வு என்பது மிகவும் அழுத்தம் பெற வேண்டும். அவர்கள் வழியாக, இறைவன் இவ்வுலகைப் புதுப்பிக்கின்றார்.’’[250]

### சில மூல வளங்கள்

223. மாமன்றத் தந்தையர் குறிப்பிட்டுள்ளதுபோல, ‘‘திருமணத்தின் தொடக்க ஆண்டுகள் மிக முக்கியமானவையும் மென்உணர்வு மிகுந்தவையும் ஆகும்; ஏனென்றால், இக்காலத்தில்தான் மணத்துணைவர்கள் திருமண வாழ்வில் எழும் சவால்கள் மற்றும் அவ்வாழ்வின் அர்த்தம் ஆகியவற்றைப் பற்றி அதிகமாக அறிய வருகின்றனர். எனவே அருட்பணிசார் உடன்பயணித்தல் என்பது உண்மையான அருளடையாளக் கொண்டாட்ட நிகழ்வைக் கடந்து தொடரவேண்டிய ஒன்று (*குடும்ப வாழ்வு*, பாகம் III). இதில் அனுபவம் நிறைந்த மணத்துணைவர்கள் ஆற்ற வேண்டிய முக்கியமான பங்கு ஒன்று உண்டு. கழகங்கள், திருஅவைசார் இயக்கங்கள், மற்றும் புதிய குழுமங்கள் ஆகியவற்றின் ஒத்துழைப்போடு, அவர்கள் இளம் மணத்துணைவர்களுக்கு உதவக்கூடிய ஒரு சிறந்த இடம் பங்கு. குழந்தைகள் என்ற மிகப் பெரும் கொடைக்கு, அடிப்படையில் திறந்த மனம் கொண்டிருக்குமாறு, இளம் மணத்துணைவர்கள் உற்சாகப்படுத்தப்பட வேண்டும். குடும்ப அருள்வாழ்வு, இறைவேண்டல், ஞாயிறு திருப்பலியில் பங்கேற்றல், தங்கள் அருள்வாழ்வில் வளர்ச்சியைக் கொண்டுவரவும் நடைமுறைசார் சவால்களுக்கு நடுவில் கூட்டொருமையை வெளிப்படுத்தவும் வழக்கமாக ஒன்றுகூடுவது போன்றவற்றின்

முக்கியத்துவத்திற்கும் அழுத்தம் தரப்பட வேண்டும். திருவழிபாடுகள், பக்திச் செயல்பாடுகள், குடும்பங்களுக்காகவும் சிறப்பாகத் திருமண ஆண்டுவிழாவின்போதும், கொண்டாடப்படும் நற்கருணை என்பவை குடும்பங்கள் வழியாக நிகழும் நற்செய்தி அறிவிப்பை ஊக்குவிக்கும் இன்றியமையாக் கூறுகள் என்பதும் குறிப்பிடப்பட்டது.''[251]

224. இந்தச் செயல்முறைக்குக் கால நீட்சி அவசியமாகின்றது. அன்பிற்கு நேரமும் இடமும் தேவை; மற்றவையனைத்தும் இரண்டாம் நிலையானவையே. பலவற்றைப் பற்றிப் பேசவும், நிதானமாக அரவணைக்கவும், திட்டங்களைப் பகிர்ந்து கொள்ளவும், ஒருவருக்கொருவர் செவிமடுக்கவும், ஒருவரொருவரின் கண்களை ஆழ்ந்து நோக்கவும், ஒருவரை ஒருவர் பாராட்டவும், மற்றும் வலுவான உறவைக் கட்டியெழுப்பவும் நேரம் தேவைப்படுகின்றது. நமது சமூகத்தின் வெறித்தனமான வேகமும் பணிசெய்யும் இடங்களில் உள்ள அழுத்தங்களும் சில நேரங்களில் பிரச்சனைகளை உருவாக்குகின்றன. பிற தருணங்களில், இணைந்திருப்பதற்கேற்ற நன்னய நேரமின்மையும், ஒரே அறையைப் பகிர்ந்துகொண்டாலும் ஒருவரை ஒருவர் கவனிக்காமலேயே இருக்கின்ற நிலையும் பிரச்சனை ஆகின்றன. இளவயது மற்றும் பிரச்சனைகளுக்கு ஆளாகும் நிலையில் உள்ள மணத்துணைவர்கள், தங்கள் நேரங்களை நன்கு பயன்படுத்தவும், அர்த்தமுள்ள அமைதி நேரங்களைப் பகிர்ந்து கொண்டுகூட ஒருவர் ஒருவரோடு உடனிருக்கவும் உதவும் வழிகளை அருட்பணியில் ஈடுபடுவோரும் மணத்துணைவர்கள் குழுக்களும் கண்டறிய வேண்டும்.

225. இதை எப்படி நன்கு செயல்படுத்த முடியும் எனக் கற்றுக்கொண்ட மணத்துணைவர்கள், தாங்கள் பயனுள்ளவையாகக் கருதும் சில நடைமுறைப் பரிந்துரைகளைப் பிறருடன் பகிர்ந்துகொள்ளலாம். ஓய்வு நேரத்தைச் செலவிடுவது பற்றி இணைந்து திட்டமிடல், குழந்தைகளோடு பொழுதுபோக்க நேரம் ஒதுக்குதல், முக்கிய நிகழ்வுகளைக் கொண்டாடும் பல்வேறு முறைகள், அருள்வாழ்வு வளர்ச்சிக்கென வாய்ப்புகளைப் பகிர்ந்துகொள்ளுதல் என்பவைபற்றி அவர்களது அனுபவப் பகிர்வு அமையலாம். இளவயது மணத்துணைவர்கள் மேற்கூறப்பட்ட நேரங்களை அர்த்தமுள்ள மற்றும் அன்புநிறை தருணங்களாக மாற்றி, அவற்றின்



பயனாக, தங்களிடையே உள்ள தொடர்புப் பரிமாற்றத்தை வளர்த்துக்கொள்ள உதவிடும் வழிமுறைகளை அனுபவமிக்க மணத்துணைவர்கள் அவர்களுக்கு வழங்க வேண்டும். திருமணத்தின் புதுமைத்தன்மை நலிவுற்றுப் போகின்ற கட்டத்தில், இது மிகவும் முக்கியமானது. நேரத்தை இணைந்து செலவிடுவது எப்படி என்று மணத்துணைவர்களுக்கு எப்போது தெரியாமல் போய்விடுகின்றதோ, அப்போது அவர்களில் ஒருவர் அல்லது இருவருமே மின்னணுக் கருவிகளில் தஞ்சம் புக, பிற ஈடுபாடுகளைத் தேர்ந்துகொள்ள, இன்னொருவரின் அரவணைப்பைத் தேட, அல்லது மகிழ்வற்றதாக மாறிவிட்ட தங்களுடைய நெருக்கத்திலிருந்து தப்பி ஓடுவதற்கான வழிவகைகளைத் தேடத் தொடங்குவர்.

226. இருவரும் இணைந்து ஆற்றும் சில அன்றாட அன்பு அடையாளச் செயல்முறைகள் வழியாக, நலமான நெருக்க உணர்வு மற்றும் உறுதிநிலையைத் தங்களிடையே கொண்டுவரும் வழக்கத்தை உருவாக்கிட, திருமணமான இளம் மணத்துணைவர்கள் ஊக்கவிக்கப்பட வேண்டும். காலையில் ஒரு முத்தம், மாலையில் ஓர் ஆசி, ஒருவரை ஒருவர் வீட்டிற்கு வரவேற்க வாயிலில் காத்திருத்தல், இணைந்து பயணங்கள் செய்தல், மற்றும் வீட்டு வேலைகளைப் பகிர்ந்துகொள்ளுதல் ஆகியவை இதில் அடங்கும். அவற்றோடு, வாடிக்கையை மாற்ற ஒரு விருந்து, ஆண்டு நிறைவு நாட்களின் குடும்பக் கொண்டாட்டங்கள், மற்றும் சிறப்பு நிகழ்வுகள் ஆகியவற்றில் மகிழ்ந்திருத்தல் ஆகியவையும் உதவும். இறைவனின் கொடைகளை நினைத்து போற்றவும் வாழ்வுக்கான நமது ஆர்வத்தைப் புதுப்பிக்கவும் இத்தகைய தருணங்கள் நமக்குத் தேவை. கொண்டாட நம்மால் இயலும் காலம்வரை, நமது அன்பை நாம் புதிதாகத் தூண்டி எழுப்ப முடியும்; ஒரே பாணியின் சலிப்பிலிருந்து அதை விடுவிக்க முடியும்; நமது அன்றாட வாடிக்கைக்கு எதிர்நோக்கால் வண்ணம்பூச முடியும்.

227. நம்பிக்கையில் வளருமாறு அருட்பணியாளர்களாகிய நாம் குடும்பங்களை ஊக்கப்படுத்த வேண்டும்; ஒப்புரவு அருளடையாளத்தில் அடிக்கடி பங்கெடுக்கவும், அருள்வாழ்வு வழிகாட்டுதலைப் பெறவும், அவ்வப்போது அருட்சிந்தனை ஒதுக்கங்களில் பங்கேற்கவும் தூண்டுதல் என்பது இதன் பொருள்; ''கூடி இறைவேண்டல் செய்யும் குடும்பம் குலைந்துபோகாது'' என்பதற்கிணங்க, வாரம் முழுவதும் குடும்ப

இறைவேண்டல் செய்யுமாறு உற்சாகப்படுத்துவதும் இதன் பொருளே. நாம் நம் மக்களின் இல்லங்களைச் சந்திக்கின்ற போது, குடும்பத்தின் எல்லா உறுப்பினர்களையும் ஒன்றுகூட்டி, குடும்பத்தை ஆண்டவரின் கைகளில் ஒப்புவித்து, ஒருவர் ஒருவருக்காகச் சுருக்கமாக இறைவேண்டல் செய்ய வேண்டும். மணத்துணைவர்கள் ஒவ்வொருவரும் தாங்கிக்கொள்ள வேண்டிய மறைவான சிலுவைகள் உண்டென்பதால், அவர்கள் இறைவனோடு தனித்திருந்து இறைவேண்டல் செய்வதற்கான நேரத்தைக் கண்டுபிடிக்கும்படி தூண்டுவதும் உதவியானது. நம் பிரச்சனைகளை இறைவனிடம் எடுத்துச்சொல்லி, நம்பிக்கைக்குரியவர்களாக நாம் நிலைத்திருக்கத் தேவைப்படுகின்ற நலப்படுத்தலையும் உதவியையும் நமக்கு அருளுமாறு அவரை நாம் கேட்டால் என்ன? மாமன்றத் தந்தையர் குறிப்பிட்டபடி, ‘‘இறைவார்த்தையே குடும்பத்தின் வாழ்விற்கும் ஆன்மீகத்திற்கும் ஊற்று. குடும்பத்திற்கான அனைத்து அருட்பணிகளும், இல்லத் திருஅவையின் உறுப்பினர்களாக உள்ளார்ந்தவிதமாக மக்களைப் பண்படுத்தி உருவாக்க, திருநூலைத் திருஅவையின் இறைவேண்டல் நோக்கில் வாசிப்பதன்மூலம் வாய்ப்பளிக்க வேண்டும். இறைவார்த்தை ஒரு மனிதரின் தனிப்பட்ட வாழ்வில் தரப்பட்ட நற்செய்தி மட்டுமல்ல; மாறாக, அது தீர்ப்பிடுவதற்கான ஓர் அளவுகோலும் திருமணமான மணத்துணைவர்களும் குடும்பங்களும் சந்திக்கின்ற பல்வேறு சவால்களைத் தெளிந்து தேர்வதற்கான ஓர் ஒளியும் ஆகும்.’’[252]

228. சில தருணங்களில், மணத்துணைவர்களுள் ஒருவர் திருமுழுக்குப் பெறாதவராக அல்லது நம்பிக்கைக்கு ஏற்ப நடைமுறையில் வாழ்ந்திட விருப்பமில்லாதவராக இருக்கின்றார். கிறிஸ்தவ வாழ்வில் வாழவும் வளரவும் அடுத்தவருக்கு உள்ள ஆர்வத்திற்கு இது தடைபோடுவதாகவும், சிலநேரங்களில் மனவருத்தம் தருவதாகவும் இருக்கக்கூடும். எனினும், அவர்கள் தங்களுக்குப் பொதுவான சில விழுமியங்களை இனம்கண்டு, அவற்றைப் பகிர்ந்து இன்பம் காணலாம். எச்சூழலிலும், நம்பிக்கையாளரல்லாத மணத்துணைவர் ஒருவருக்கு அன்புகாட்டுவதும், அவருக்கு மகிழ்ச்சியை வழங்குவதும், அவர் காயங்களை ஆற்றுவதும், அவரோடு இணைந்து வாழ்வைப் பகிர்ந்துகொள்வதும் புனிதமடைவதற்கான உண்மையான வழியே. அன்பு என்பது எப்போதும் இறைவனின் கொடையே. எங்கெல்லாம்



அது பொழியப்படுகின்றதோ, அங்கெல்லாம் அது தனது புதுப்பிக்கும் உடனிருப்பைப் பலநேரங்களில் புரிந்துகொள்ள இயலாத வழிகளில் உணரச் செய்கின்றது. ‘‘நம்பிக்கை கொள்ளாத கணவர், நம்பிக்கை கொண்ட தம் மனைவியால் தூயவராகிறார். அப்படியே, நம்பிக்கை கொள்ளாத மனைவி, நம்பிக்கை கொண்ட கணவரால் தூயவராகிறார்’’ (1 கொரி 7:14) எனும் அளவுக்குக்கூட அதன் செயல்பாடு அமையலாம்.

229. பங்குகள், இயக்கங்கள், கல்விக்கூடங்கள், மற்றும் திருஅவையின் பிற நிறுவனங்கள் என்பன பல்வேறு வழிகளில் குடும்பங்களுக்குத் துணைசெய்யவும் அவற்றின் வளர்ச்சிக்கு உதவவும் முடியும். அவை பின்வரும் செயல்பாடுகளை உள்ளடக்கலாம்: ஒரே சுற்றுப்புறத்தில் வாழும் மணத்துணைவர்களின் கூட்டங்கள், மணத்துணைவர்களுக்கான குறுகிய கால அருட்சிந்தனை ஒதுக்கங்கள், குடும்பங்கள் சந்திக்கின்ற நடைமுறைப் பிரச்சனைகள் குறித்து வல்லுநர்களால் வழங்கப்படும் கருத்துரைகள், திருமண ஆற்றுப்படுத்துதல், மணத்துணைவர்களுடைய சிக்கல்கள் மற்றும் விருப்பங்கள் குறித்து அவர்களின் இல்லத்திற்கே சென்று கலந்துரையாடும் மறைத்தூதுப் பணியாளர்கள், போதைப் பழக்கம், கூடாஒழுக்கம், மற்றும் இல்ல வன்முறை போன்ற குடும்பப் பிரச்சனைகளைச் சார்ந்த சமூகப்பணிகள், அருள்வாழ்வு வளர்ச்சிக்கான திட்டச் செயல்பாடுகள், பிரச்சனைகளுக்கு ஆளாகியுள்ள பிள்ளைகளின் பெற்றோருக்கான பயிற்சிப் பட்டறைகள், மற்றும் குடும்பங்களின் கூட்டங்கள். குடும்பங்களுக்கான தேவைகளில் உதவும் முறையில் உணர்வுத்திறனோடு ஈடுபடவும், தேவைப்படுகின்றபோது உதவிசெய்கின்றவர்களைச் சுட்டிக்காட்டவும் பங்கு அலுவலகங்கள் தயாராக இருக்க வேண்டும். பணி, இறைவேண்டல், உருவாக்கம், ஒருவர் ஒருவருக்கான உதவி என்பன சார்ந்த தங்கள் அர்ப்பணத்தின் ஒரு பகுதியாக, உதவி செய்ய முன்வருகின்ற திருமணமான மணத்துணைவர்களின் குழுக்கள் செய்யும் பங்களிப்பும் உண்டு. அத்தகைய குழுக்கள், தாராள மனதோடு வாழ்ந்திட மணத்துணைவர்களை ஆற்றல்படுத்துகின்றன; பிற குடும்பங்களுக்கு உதவிசெய்து, அவர்கள் நம்பிக்கையைப் பகிர்ந்திடவும் செய்கின்றன; அதே வேளையில், அவை திருமணங்களை வலுப்படுத்தி அவற்றை வளரச் செய்யவும் உதவுகின்றன.

230. திருமணமானதும் பல மணத்துணைவர்கள் கிறிஸ்தவக் குழுமத்தைவிட்டு வெளியேறிவிடுகின்றனர் என்பது மெய்ம்மையே. எனினும், அவர்கள் திரும்பிவருகின்ற தருணங்களைப் பயன்படுத்திக்கொண்டு, கிறிஸ்தவத் திருமணம் என்னும் அழகிய இலக்கைக் குறித்தும், நம் பங்குகள் அவர்களுக்கு நல்கும் உதவிகளைப்பற்றியும் அவர்களுக்கு நினைவூட்ட நாம் தவறிவிடுகின்றோம். இதற்கு எடுத்துக்காட்டாக, குழந்தைகளின் திருமுழுக்கு மற்றும் முதல் திருவிருந்து, அல்லது அவர்களின் உறவினர்கள் மற்றும் நண்பர்களின் அடக்கங்கள் மற்றும் திருமணங்கள் போன்றவற்றை நான் எண்ணிப்பார்க்கின்றேன். இத்தகைய தருணங்களில் ஏறக்குறைய எல்லா மணத்துணைவர்களுமே மீண்டும் வருகின்றனர். அவற்றை நாம் நன்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அவர்களை நெருங்கிச் செல்வதற்கான மற்றொரு வழி இல்லங்களுக்கு ஆசி வழங்குதல் அல்லது அன்னை மரியாவின் திருப்பயணி உருவத்தைச் சுற்றுவட்டாரத்திலுள்ள வீடுகளுக்கு எடுத்துச் செல்லுதல்; குடும்பச் சூழ்நிலையைக் குறித்து அருட்பணி உரையாடல் ஒன்றை நிகழ்த்துவதற்கான வாய்ப்பை இது தருகின்றது. ஒரு சுற்றுவட்டாரத்தில் வாழும் வயதில் மூத்த திருமணமான மணத்துணைவர்களை, அப்பகுதியில் வாழும் இளம் மணத்துணைவர்களை, அவர்களது மணவாழ்வின் தொடக்க ஆண்டுகளில் சந்தித்து அவர்களுக்கு வழிகாட்டக் கேட்டுக்கொள்வதும் நலம் பயக்கும். இன்றைய வாழ்க்கைமுறையின் வேகத்தின் பின்னணியில், பெரும்பான்மையான மணத்துணைவர்களால் அடிக்கடி நடத்தப்படும் கூட்டங்களில் கலந்துகொள்ள இயல்வதில்லை; எனினும், நமது அருட்பணி எல்லையைச் சிறிய மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட குழுக்களுடன் குறுக்கிக்கொள்ள இயலாது. இன்றைய காலகட்டத்தில், குடும்பங்களுக்கான அருட்பணி என்பது மக்கள் இருக்கின்ற இடம்நோக்கிச் செல்லும் வகையில் அடிப்படையிலேயே மறைத்தூதுப் பண்பு கொண்டதாக இருக்கவேண்டும். அதிகக் கவனம் செலுத்தப்படாமலேயே, தன் அமைப்பு இயக்கப் போக்கிலேயே சென்று கொண்டிருக்கும் ஒரு தொழிற்சாலைபோல் நாம் இனிமேலும் இருக்க இயலாது.



## நெருக்கடிகள், கவலைகள், மற்றும் சிக்கல்கள்மீது ஒளிவீசுதல்

231. நல்ல திராட்சை மதுவைப் போல, தங்களது அன்பில் உண்மையான முதிர்நிலையை அடைந்துள்ளவர்களைப்பற்றி ஒரு வார்த்தை சொல்ல வேண்டும். நல்ல திராட்சை மது காலப்போக்கில் ‘‘மணம்பரப்புவதைப்போல்’’ நம்பிக்கையுடைமையின் அன்றாட அனுபவம், திருமண வாழ்விற்குச் செழுமையும் ‘‘செறிவும்’’ தருகின்றது. நம்பிக்கையுடைமை என்பது பொறுமை, எதிர்நோக்கியிருத்தல் ஆகியவற்றைச் சார்ந்தது. அதன் மகிழ்வுகளும் தியாகங்களும் ஆண்டுகள் செல்லச் செல்லக் கனி கொடுக்கின்றன; மணத்துணைவர்கள் தங்கள் பேரப்பிள்ளைகளைக் கண்டு அகமகிழ்கின்றனர். நாளுக்கு நாள், ஆண்டுக்கு ஆண்டு மணத்துணைவர்கள் ஒருவர் மற்றவரைப் புதிதாகக் கண்டறியும்போது, தொடக்கத்திலிருந்தே அவர்களுக்கு இடையில் நிலவும் அன்பு, அதிக உணர்வுநிலை, உறுதிப்பாடு, மற்றும் முதிர்ச்சி என்பவற்றைக் கொண்டதாக மாறுகின்றது. புனித சிலுவை யோவான் நமக்குச் சொல்வதுபோல ‘‘பழைமை வாய்ந்த காதலர்கள் அறிந்துணரப்பட்டவர்களும் உண்மையானவர்களும் ஆவர்.’’ அவர்கள் ‘‘வெளிப்படையாக ஆற்றல்மிகு உணர்ச்சிகளாலும் உள்தூண்டுதல்களினாலும் இப்போது பற்றி எரிவதில்லை; ஆனால் நன்கு முதிர்ந்த, தங்கள் உள்ளங்களின் ஆழத்தில் பாதுகாத்து வைக்கப்பட்ட அன்பு என்ற திராட்சை மதுவின் இனிமையை இப்போது சுவைக்கின்றனர்.’’[253] அத்தகைய மணத்துணைவர்கள், சவால்களிலிருந்து பின்வாங்காமல், பிரச்சனைகளை மறைக்காமல், நெருக்கடிகளையும் இன்னல்களையும் வெற்றிகரமாகக் கடந்து வந்துள்ளனர்.

## நெருக்கடிகள் தரும் சவால்

232. ஒவ்வொரு குடும்பத்தின் வாழ்வும் அனைத்துவிதமான நெருக்கடிகளின் தாக்குதல்களுக்கும் ஆளாகின்றன; எனினும் இவை அக்குடும்பத்தின் வியப்பிற்குரிய அழகின் அங்கங்களே. நெருக்கடிகளை மேற்கொள்வதால் தங்கள் உறவு வலுக்குறைய வேண்டிய அவசியமில்லை என்பதனை உணர மணத்துணைவர்களுக்கு உதவ வேண்டும்; அதற்குப் பதிலாக, அவர்களது ஒன்றிப்பு எனும் திராட்சை மதுவை அது மேம்படுத்தி,

நிலைநிறுத்தி, முதிர்ச்சியடையச் செய்ய முடியும். இணைந்த வாழ்வு அவர்களது மனநிறைவைக் குறைக்கக் கூடாது, மாறாக, அதிகரிக்க வேண்டும்; மணத்துணைவர்கள் எடுத்துவைக்கும் ஒவ்வொரு புதிய அடியும், மகிழ்வுக்கான புதிய வழிகளை அவர்கள் கண்டடைய உதவ முடியும். ஒவ்வொரு நெருக்கடியும் இன்னும் நெருக்கமாக இணைந்து வருவதற்கான, மணமுடித்திருப்பதன் பொருள் என்ன என இன்னும் சற்று அதிகம் அறிந்து கொள்வதற்கான பயிற்சி நிலையாகவும் மாறுகின்றது. மணத்துணைவர்கள் தவிர்க்க இயலாத, தரம் குறைகின்ற சுருள்வட்டத்திற்குள்ளோ, தாங்கிக்கொள்ளக்கூடிய சராசரித்தனத்திற்குள்ளோ, அதுவே தங்களுக்கு வாய்த்தது என அமைந்தடங்கத் தேவையில்லை. மாறாக, திருமணம் என்பது தடைகளை வெற்றிகொள்வதை உள்ளடக்கிய ஒரு சவால் எனப் பார்க்கப்படும்போது, ஒவ்வொரு நெருக்கடியும் அவர்களின் உறவு எனும் திராட்சை மது பண்பாட்டு மேம்படுவதற்கான வாய்ப்பாக அமைகின்றது. நெருக்கடிகளை எதிர்கொள்ளவும், சவால்களைச் சந்திக்கவும், அவை குடும்ப வாழ்வின் அங்கம் என ஏற்றுக்கொள்ளவும் மணத்துணைவர்கள் பெறுகின்ற உதவி அவர்களுக்குப் பயன் அளிக்கும். இந்நெருக்கடிகளினால் மணத்துணைவர்கள் மனத்தளர்ச்சி அடையாதிருக்கவும், அல்லது அவசர முடிவுகள் என்ற சோதனைக்கு ஆளாகாமல் இருக்கவும் வழிகாட்டுதல் வழங்க, அனுபவமும் பயிற்சியும் பெற்ற மணத்துணைவர்கள் திறந்த மனம் கொண்டிருக்க வேண்டும்; ஒவ்வொரு நெருக்கடியும் நமக்குக் கற்றுக்கொடுக்கக்கூடிய பாடம் ஒன்று உண்டு; இதயத்தின் காதினைக் கொண்டு அதற்கு எவ்வாறு செவிமடுப்பது என்பதனை நாம் கற்றுக்கொள்ள வேண்டும்.

233. நெருக்கடி ஒன்றைச் சந்திக்கும்போது, தற்காப்பு முறையில் எதிர்மறையாகச் செயல்படவே நாம் முற்படுகின்றோம்; ஏனென்றால், நாம் கட்டுப்பாட்டை இழக்கின்றோம் அல்லது ஏதாவது ஒரு வகையில் நம் பக்கம் தவறு உள்ளது என உணர்கின்றோம். அந்த உணர்ச்சி நம்மை அமைதி இழக்கச் செய்கின்றது. பிரச்சனை தானே மறைந்துவிடும் என்ற எதிர்நோக்கில், நாம் அதனை மறுக்க, மறைக்க, அல்லது சிறிதெனக் கருத முயல்கின்றோம். ஆனால் அது பயனளிப்பதில்லை; மாறாக, அது காரியங்களை இன்னும் மோசமாக்கி, ஆற்றலை வீணடித்து,தீர்வைத்



தள்ளிப்போடுகின்றது. இதனால் மணத்துணைவர்களுக்கு இடையே உள்ள இடைவெளி விரிந்து, அவர்கள் தொடர்புப் பரிமாற்ற ஆற்றலை இழக்கின்றனர். பிரச்சனைகளுக்குத் தீர்வு தேடப்படவில்லையென்றால், முதலில் முடிவுக்கு வருவது தொடர்புப் பரிமாற்றமே. சிறிது சிறிதாக, “நான் அன்பு செய்யும் ஆள்,” மெல்ல மெல்ல “என் துணைவராக,” பின்னர் “என் குழந்தைகளின் தந்தை அல்லது தாய் மட்டுமே” என்றும், இறுதியில் ஓர் அந்நியராகவும் மாறுகின்றார்.

234. நெருக்கடிகள் இணைந்து சந்திக்கப்பட வேண்டியன. இது கடினமானது, ஏனென்றால், தாங்கள் என்ன உணர்கின்றனர் என்பதனைச் சொல்வதைத் தவிர்ப்பதற்காக, மனிதர்கள் சில நேரங்களில் தனித்தொதுங்குகின்றனர்; கோழைத்தனமான அமைதிக்குள் அவர்கள் புகலிடம் தேடுகின்றனர். இத்தகைய நேரங்களில் இதயத்தோடு இதயம் உரையாடுவதற்கான வாய்ப்புகளை உருவாக்குவது மிகவும் இன்றியமையாதது. இதைச் செய்வதற்கு மணத்துணைவர்கள் கற்றுக்கொள்ளவில்லையென்றால், காலம் செல்லச் செல்ல, அது அவர்களுக்கு இன்னும் அதிகக் கடினமானதாக மாறுவதை உணர்வர். தொடர்புப் பரிமாற்றம் என்பது இக்கட்டான தருணங்களில் கடைப்பிடிப்பதற்காக, அமைதியான தருணங்களில் கற்றுக்கொள்ளப்படும் ஒரு கலை. தங்கள் ஆழமான எண்ணங்களையும், உணர்வுகளையும் கண்டறியவும், அவற்றை வெளிப்படுத்தவும், மணத்துணைவர்களுக்கு உதவி தேவை. குழந்தைப் பிறப்பைப் போல, புதிய செல்வம் ஒன்றைக் கொண்டுவரும், ஒரு துன்ப நடைமுறை இது. மாமன்றத்திற்கு முந்தைய கருத்துக்கேட்டலில் தரப்பட்ட பதில்கள், பலர் தங்களுடைய கடினமான அல்லது நெருக்கடியான தருணங்களில், அருட்பணி உதவியைத் தேடுவதில்லை என்பதனைச் சுட்டிக்காட்டின; ஏனென்றால், அது ஒத்துணர்வு உடையதாக, மெய்ம்மைநோக்குக் கொண்டதாக, தனிப்பட்ட நபர்களின் பிரச்சனைகள் பற்றி அக்கறைப்படுவதாக அவர்களால் காணப்படவில்லை. இது, திருமண நெருக்கடிகளை, அவர்களின் காயம் மற்றும் கவலையின் சுமையை அதிக மென்உணர்வுத் திறனுடன் அணுக முயன்றிட நமக்கு உந்துதல் தரவேண்டும்.

235. சில நெருக்கடிகள் ஏறக்குறைய அனைத்துத் திருமணங்களுக்கும் பொதுவானவை. புதிதாய்த் திருமணமான மணத்துணைவர்கள், தங்கள் வேற்றுமைகளை ஏற்றுக்கொள்வது மற்றும் தங்கள் பெற்றோருடன் உள்ள பிணைப்பிலிருந்து தளர்ந்திடுவது எவ்வாறு எனக் கற்றுக்கொள்ள வேண்டும். குழந்தையின் பிறப்பு, புதிய, உணர்வு சார்ந்த சவால்களை முன்வைக்கின்றது. சிறு குழந்தைகளை வளர்ப்பதென்பது வாழ்வுமுறை மாற்றத்தை அவசியமாக்குகின்றது; அதுபோல், வளரிளமையின் தொடக்கம் சிரமத்தை, செயற்குலைவை, மற்றும் பெற்றோருக்கிடையேகூட அமைதியற்ற நிலையை உருவாக்குகின்றது. ஒரு ‘‘காலியான வீடு’’ மணத்துணைவர்கள் தங்கள் உறவை மறுவரையறை செய்துகொள்வதைக் கட்டாயமாக்குகின்றது; அதே நேரம், முதிர்வயதுப் பெற்றோரை கவனித்துக்கொள்வதென்பது, அவர்கள் பற்றிய சில கடினமான முடிவுகளை எடுப்பதையும் உள்ளடக்குகின்றது. இவையெல்லாம் திருமணத்தின்மீது மிக முக்கிய எதிரதிர்வுகளுடன் அச்சம், குற்ற உணர்வு, மனத் தளர்ச்சி, மற்றும் சோர்வு போன்றவற்றையும் உருவாக்குகின்றன.

236. மணத்துணைவர்களின் வாழ்வைப் பாதிக்கின்ற ஆள்சார் நெருக்கடிகளும் உண்டு. இவை பலவேளைகளில் நிதி, பணியிடப் பிரச்சனைகள், உணர்வுசார், சமூக, மற்றும் அருள்வாழ்வுச் சிக்கல்கள் போன்றவற்றை உள்ளடக்குகின்றன. எதிர்பாராச் சூழ்நிலைகள் முன்வந்து குடும்பவாழ்வைக் குலைத்து, மன்னிப்பு மற்றும் ஒப்புரவு போன்றவற்றிற்கான தேவையை ஏற்படுத்துகின்றன. அடுத்தவரை உண்மையிலேயே மன்னிக்கத் துணியும்போது, அடுத்தவர் இத்தவறைச் செய்வதற்கான சூழலை ஏதாவது ஒரு வகையில் தான் உருவாக்கவில்லையா என ஒவ்வொருவரும் அமைதியோடும் தாழ்மையோடும் தம்மையே கேட்க வேண்டும். மணத்துணைவர்கள் ஒருவர் மற்றவர்மீதான குற்றச்சாட்டுகளில் இறங்கும்போது, சில குடும்பங்கள் பிளவுபடுகின்றன. ஆனால் ‘‘சரியான வழிகாட்டுதல் மற்றும் ஒப்புரவுச் செயல்களால், அருளின் வழியாக, குழப்பத்திற்குள்ளான திருமணங்களில் பெரும் விழுக்காடு, நிறைவளிக்கும் முறையில் ஒரு தீர்வைக் கண்டுகொள்கின்றனர் என்பதையே அனுபவம் உணர்த்துகின்றது. மன்னிக்கத் தெரிந்திருப்பதும், மன்னிக்கப்பட்டதை உணர்வதும் குடும்ப வாழ்வின் ஓர் அடிப்படை அனுபவம்.’’[254] ‘‘அருளின் உதவி அவசியப்படும் ஒப்புரவு என்னும் கடினமான கலைக்கு, உறவினர்கள் மற்றும் நண்பர்களிடமிருந்து மட்டுமல்ல, சில நேரங்களில் வெளி உதவி மற்றும் வல்லுநர் வழிகாட்டுதல் போன்றவற்றின் தாராளமான ஒத்துழைப்பும் தேவைப்படுகின்றன.’’[255]



237. மணத்துணைவர்களுள் ஒருவர் அல்லது இருவருமே நிறைவை உணராதபோது, அல்லது அவர்கள் விரும்பிய வண்ணம் திருமண வாழ்வு அமையாதபோது, திருமணத்தை முடித்துக் கொள்வதற்கான போதிய காரணம் இருப்பதாக எண்ணுவது இன்று சாதாரணமாகி வருகின்றது. இது சரி என்றால், எந்தத் திருமணமும் நிலைத்து நிற்க முடியாது. சில நேரங்களில், எல்லாம் முடிந்துவிட்டது என்ற முடிவுக்கு வருவதற்கு, நிறைவைத் தராத ஒரு சிறு நிகழ்வு, மிகவும் தேவைப்பட்ட நேரத்தில் அடுத்தவர் இல்லாமல் போனது, புண்படுத்தப்பட்ட தற்பெருமை, அல்லது தெளிவற்ற அச்சம் ஆகியவை காரணமாகிவிடுகின்றன. பாதிக்கப்பட்ட உணர்வில் ஒருவரை மூழ்கடிக்கக்கூடிய சில சூழ்நிலைகள், மனித வலுவின்மை காரணமாக ஏற்படுவது தவிர்க்க இயலாதது. தாம் நன்கு பாராட்டப்படவில்லை அல்லது அடுத்தவர்பால் தமக்கு ஈர்ப்பு இல்லை என மணத்துணைவர்களுள் ஒருவர் உணரலாம். பொறாமையும் மனஅழுத்தங்களும் ஏற்படலாம், அல்லது தம் நேரத்தையும் கவனத்தையும் முற்றிலும் செலவிடத் தேவைப்படுகின்ற அடுத்தவரின் புதிய ஈடுபாடுகள் எழலாம். உடல்சார்ந்த மாற்றங்கள் இயற்கையாகவே ஒவ்வொருவரிலும் ஏற்படுகின்றன. இவையும் மற்றும் பலவும், அன்பிற்கு ஊறு விளைவிப்பதற்கு மாறாக, அதற்கு உயிரூட்டவும், அதை புதுப்பிக்கவும் எழும் பல வாய்ப்புக்களே.

238. அத்தகைய தருணங்களில், உறவில் குறைகள் இருந்தாலும், தங்கள் வாழ்க்கைப் பயணத்தில் அடுத்தவரைத் துணைவராகத் தேர்ந்தெடுத்ததை மீண்டும் உறுதிப்படுத்துகின்ற முதிர்ச்சி சிலரிடம் உள்ளது. தாங்கள் போற்றி வளர்த்த கனவுகள் அனைத்தையும் அடுத்தவரால் நிறைவேற்ற முடியாது என்பதனை அவர்கள் உண்மையில் ஏற்றுக்கொள்கின்றனர். இத்தகையோர் தங்களை புனிதத் தியாகிகள் எனக் கருதுவதைத் தவிர்க்கின்றனர்; குடும்ப வாழ்வு தங்களுக்குத் தருகின்ற வாய்ப்புகளை, அவர்கள் மிகுந்த அளவுக்குப் பயன்படுத்திக் கொள்கின்றனர். மேலும் திருமணப் பிணைப்பை உறுதிப்படுத்த அவர்கள் பொறுமையோடு

உழைக்கின்றனர். ஒவ்வொரு நெருக்கடியும், அன்பு புதுப்பிக்கப்படுவதற்கும், ஆழப்படுத்தப்படுவதற்கும், உள்ளூர உறுதிப்படுத்தப்படுவதற்கும் ஆற்றல்படுத்தும் ஒரு புதிய ‘‘ஆம்’’ என்று அவர்கள் உணர்கின்றனர். நெருக்கடிகள் எழுகின்றபோது, அதன் வேரைத் தேடிச் செல்லவும், அடிப்படை விதிமுறைகளை மீண்டும் கலந்து பேசி முடிவுசெய்யவும், ஒரு புதிய அமைதிச் சமநிலையை ஏற்படுத்தவும், இணைந்து முன்னேறிச் செல்லவும் அவர்கள் அஞ்சுவதில்லை. இத்தகைய தொடர் திறந்த மனநிலையால், எத்துணைக் கடினமான சூழ்நிலைகள் வந்தாலும், அவற்றை அவர்களால் எதிர்கொள்ள முடிகின்றது. எந்த நிகழ்விலும் ஒப்புரவுக்கான வாய்ப்பு உள்ளது என்பதைத் தெரிந்துகொள்கின்ற அதே நேரத்தில், ‘‘யாருடைய மணஉறவு முறிந்து போயிருக்கின்றதோ, அவர்களைக் கவனிக்கும் திருப்பணியே இன்று அவசரமாகத் தேவைப்படுவது’’[256] என்பதையும் நாம் காண்கின்றோம்.

## பழைய மனப்புண்கள்

239 குடும்ப உறுப்பினர்களுள் ஒருவர், முன்னைய அனுபவங்களின் வடுக்களைத் தாங்கிக் கொண்டிருப்பதனால், உணர்ச்சிசார்ந்த முதிர்ச்சியின்றி இருக்கும்போது, குடும்பங்கள் பிரச்சனைகளைச் சந்திக்கின்றன என்பது புரிந்துகொள்ளக்கூடியதே. ஒரு மகிழ்ச்சியற்ற குழந்தைப்பருவம் அல்லது வளரிளமைப் பருவம் ஒருவரின் திருமணத்தைப் பாதிக்கின்ற ஆள்சார்ந்த நெருக்கடிகளை உருவாக்க இயலும். எல்லோரும் முதிர்ச்சியானவர்களாகவும் இயல்பானவர்களாகவும் இருந்தால், நெருக்கடிகள் அடிக்கடி எழாமல் அல்லது அதிகம் வலியைத் தராமல் இருக்கும். எனினும் மெய்ம்மை என்னவென்றால், வளரிளமைப் பருவத்தின் இறுதியில் பெற்றிருக்க வேண்டிய முதிர்ச்சியை, சிலர் தங்கள் நாற்பதுகள் வயதில்தான் பெறுகின்றனர். சிலர் தன்னல, மனம்போலான, தன்னையே மையப்படுத்திய குழந்தைத்தன முறையில்தான் அன்பு செய்கின்றனர்: தான் வேண்டியது கிடைக்காதபோது அலறுகின்ற அல்லது அழுகின்ற திருப்திப்படுத்த இயலாத அன்பு அது. வேறு சிலர் பகைமை, கசப்பான குறைகூறல், அடுத்தவர்களைக் குற்றப்படுத்தும் அவசியம் போன்றவற்றைக் கொண்ட வளரிளமைப் பருவப் பாணியிலேயே அன்பு செய்கின்றனர்; தங்கள் உணர்வுகள் மற்றும் கனவுகளுக்குள் சிக்கி, அடுத்தவர்கள் தங்கள் வெறுமையை நிறைவாக்க



வேண்டும், தங்கள் ஒவ்வொரு விருப்பத்தையும் திருப்திப்படுத்த வேண்டும் என அவர்கள் எதிர்பார்க்கின்றனர்.

240. நிபந்தனையற்ற அன்பை அனுபவித்த உணர்வு ஒருபோதும் இல்லாமலேயே, பலர் குழந்தைப் பருவத்தைக் கடந்துவருகின்றனர்; நம்புகின்றவர்களாகவும் அடுத்தவர்களுடன் திறந்த மனம் கொண்டவர்களாகவும் இருப்பதற்கான அவர்களின் ஆற்றலை இது பாதிக்கின்றது. ஒருவரின் பெற்றோர் மற்றும் உடன்பிறந்தவர்களுடன் அவர் கொண்டுள்ள குறைபட்ட உறவு, நலமாக்கப்படாமல் விடப்பட்டால், அது மீண்டும் எழுந்து, திருமணத்திற்கு ஊறு விளைவிக்கலாம். தீர்க்கப்படாத பிரச்சனைகள் எதிர்கொள்ளப்பட்டு விடுதலை அளிக்கும் செயல்முறை நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். முக்கிய முடிவுகளை எடுப்பதற்கு முன்பு திருமணத்தில் பிரச்சனைகள் எழுகின்றபோது, ஒவ்வொரு மணத்துணைவரும் தமது வரலாற்றை மேலாண்மை செய்வதை உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும். நலமடைவதற்கான அவசியத்தை அறிந்துணர்தல், மன்னிக்கவும் மன்னிக்கப்படவும் வேண்டிய அருளைப் பெறுவதற்கான தொடர் இறைவேண்டல், உதவியை ஏற்றுக்கொள்ளும் மனநிலை, விட்டுவிடாமல் தொடர்ந்து முயற்சி செய்வதற்கான மனஉறுதி போன்றவை அதில் உள்ளடங்குகின்றன. தன்னுடைய குறைகளும் முதிர்ச்சியின்மையும் எப்படி உறவை பாதிக்கின்றன என்பதனைக் கண்டுகொள்ள, ஓர் உண்மையான தன்ஆய்வு வாய்ப்பளிக்கின்றது. தவறு அடுத்தவர் பக்கமே உள்ளது என்பது தெளிவாகத் தெரிந்தாலும், அவர் மாறவேண்டும் என எதிர்பார்ப்பதால் மட்டுமே ஒரு நெருக்கடி ஒருபோதும் முடிவுக்கு வந்துவிடாது. பிரச்சனை முடிவுக்கு வரவேண்டும் என்றால், நமது வாழ்வில் எது வளர வேண்டியுள்ளது, நலமாக வேண்டியுள்ளது என நாம் கேட்டுப்பார்க்கவும் வேண்டும்.

## மணமுறிவு மற்றும் மணவிலக்கிற்குப்பின் உடன்பயணித்தல்

241. சில நிகழ்வுகளில், தமது மாண்பையும் குழந்தைகளின் நலனையும் மதித்தல் என்பது, மிகையான கோரிக்கைகளுக்கு இணங்க மறுப்பது, ஒரு பெரும் அநீதி, வன்முறை, அல்லது தொடர் கொடுமைப்படுத்துதலைத் தடுத்தல் ஆகியவற்றைக் கட்டாயம் ஆக்குகின்றது. இந்நிகழ்வுகளில், ‘‘பிரிந்திருத்தல் தவிர்க்க இயலாததாகின்றது.

சிலவேளைகளில், குறிப்பாகக் கெடுவழக்கம், வன்முறை, இழிவுபடுத்தல், சுரண்டல், கவனிப்பின்மை, மற்றும் அக்கறையின்மை என்பவற்றால் ஆழமாகப் புண்படுவதிலிருந்து வலுக் குறைந்த மணத்துணைவர் அல்லது சிறாரை இடம் மாற்றும் நிலை ஏற்படும்போது, பிரிந்திருத்தல் என்பது அறநெறிசார் தேவை என்றாகின்றது.''[257] அந்நிலையில்கூட ''பிரிந்திருத்தல் என்பது, ஒப்புரவிற்கான அனைத்து நியாயமான முயற்சிகளும் பலனின்றிப் போனபின்பு கருதப்பட வேண்டிய இறுதி வழிமுறையே.''[258]

242. மாமன்றத் தந்தையர் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளனர்: ''பிரிந்து, மணவிலக்குப் பெற்று, அல்லது கைவிடப்பட்டு வாழ்வோர் என்போருக்கான அருட்பணியில், சிறப்பான தெளிந்து தேர்தல் இன்றியமையாதது. அநீத முறையில் பிரிவு, மணவிலக்கு அல்லது கைவிடப்படல், அல்லது கணவன் அல்லது மனைவியின் துன்புறுத்துதலால் இணைந்த வாழ்வில் எழும் இடைப்பிரிவு போன்றவற்றிற்குத் தள்ளப்பட்டவர்களின் துன்பங்களுக்கு மதிப்பு அளிக்கப்பட வேண்டும். துன்பம் இழைத்த இத்தகைய அநீதியை மன்னிப்பதென்பது எளிதானதல்ல, எனினும் இப்பயணத்தை அருள் இயன்றதாக்குகின்றது. அருட்பணிப் பொறுப்பு என்பது மறைமாவட்டங்களில் அமைக்கப்படும் சிறந்த ஆற்றுப்படுத்துதல் மையங்கள் மூலமாக, ஒப்புரவு மற்றும் இடைநிலைப் பணிக்கான முயற்சிகளைக் கட்டாயம் உள்ளடக்க வேண்டும்.''[259] அதே நேரம், ''மறுமணம் செய்யாத மணவிலக்காளர்கள் பல வேளைகளில் திருமண நம்பிக்கையுடைமைக்குச் சான்று பகர்கின்றவர்களாக இருக்கின்றனர். அத்தகைய வாழ்வில் நிலைத்திருக்கத் தேவையான ஊட்டத்தை நற்கருணையிலிருந்து பெற்றுக்கொள்ளுமாறு அவர்கள் உற்சாகப்படுத்தப்பட வேண்டும். அந்தந்த இடத்துக் குழுமமும் அருள்மேய்ப்பர்களும் இத்தகையோருடன், குறிப்பாக அவர்களுக்குப் பிள்ளைகள் இருக்கும்போது அல்லது அவர்கள் தீவிரப் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கும்போது, அக்கறையோடு உடன்பயணிக்க வேண்டும்.''[260] குடும்பம் பிளவுபடுவது ஏழைகளைப் பொறுத்த வரையில் அதிகக் கலக்கத்தையும் வலியையும் ஏற்படுத்துவதாக ஆகின்றது. ஏனென்றால், ஒரு புதிய வாழ்வைத் தொடங்குவதற்கான வளங்கள் மிகக் குறைவாகவே அவர்களிடம் உள்ளன. பாதுகாப்பான குடும்பச் சூழலிலிருந்து



வெளியேற்றப்பட்டவர் வறியவர் என்றால், அவர் கைவிடப்படுதல், நிகழக்கூடிய தீங்குகள் என்பவற்றிற்கு இலக்காகும் வாய்ப்புகள் இரட்டிப்பாகின்றன.

243. மணவிலக்குப் பெற்று புதிய ஒன்றிப்பு ஒன்றில் புகுந்தவர்கள், தாங்களும் திருஅவையின் அங்கங்களே என உணரச்செய்ய வேண்டும். ''அவர்கள் திருஅவை விலக்குக்கு ஆளானவர்கள் அல்ல;'' அவர்கள் திருஅவைக் குழுமத்தின் அங்கமாகவே தொடர்வதால் அவ்வாறு அவர்கள் நடத்தப்படவும் கூடாது.[261] இத்தகைய தருணங்களில், ''கவனமான தெளிந்து தேர்தலும் மதிப்புநிறை உடன்பயணித்தலும் அவசியமாகின்றன. தாங்கள் பாகுபாடுடன் நடத்தப்படுவதாக அவர்களை உணரச்செய்யும் பேச்சோ, செயலோ தவிர்க்கப்பட வேண்டியன. குழுமத்தின் வாழ்வில் பங்கேற்குமாறு அவர்கள் உற்சாகப்படுத்தப்பட வேண்டும். கிறிஸ்தவக் குழுமம் இத்தகையோர் மேல் வெளிப்படுத்தும் அக்கறையானது, அதன் நம்பிக்கையையும் திருமணத்தின் முறிவுபடாத் தன்மைக்கு அது பகரும் சான்றையும் வலுக்குறையச் செய்வது அல்ல; மாறாக, அத்தகைய அக்கறை அதன் பிறரன்பின் ஒரு தனிப்பட்ட வெளிப்பாடே.''[262]

244. ''திருமணங்களின் செல்லா நிலை வழக்குகளின் செயல்முறையானது அதிக அணுகும் தன்மை உடையதாகவும், குறைந்த நேரம் எடுப்பதாகவும், முடிந்தால் கட்டணம் ஏதுமின்றியும் இருக்கவேண்டிய தேவையை''[263] மாமன்றத் தந்தையர் பலர் வலியுறுத்தினர். நடைமுறைகளின் தாமதம், கட்சிக்காரர்களுக்கு இன்னலையும் தளர்வையும் தருகின்றன. இதுபற்றிப் பேசும் எனது அண்மைக்கால இரண்டு மடல்கள்,[264] திருமணச் செல்லா நிலை அறிவிப்பிற்கான நடைமுறையை எளிதாக்கியுள்ளன. இவற்றோடு, ''ஒரு திருஅவையின் வழிநடத்துநராகவும் தலைவராகவும் நியமிக்கப்பட்டுள்ள ஆயர், அதனாலேயே, தம் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டுள்ள மக்களுக்கு நீதித்தலைவராகவும் உள்ளார் என்பதைத் தெளிவுபடுத்தவும்''[265] நான் விரும்பினேன். இதனால் ''இம்மடல்களை நடைமுறைப்படுத்தும் பெரிய பொறுப்பு மறைமாவட்டங்களின் ஆயர்களுக்கு உரியது. சில வழக்குகளில் தீர்வைத் தாங்களே வழங்கவும், எல்லா வழக்குகளிலும் நம்பிக்கையாளர்களுக்கு நீதி கிடைப்பதற்கான எளிய அணுகுமுறையை உறுதிசெய்யவும் ஆயர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

இத்தகைய திருஅவைசார் பணியை முக்கியமாக ஆற்றும் செயலுரிமை பெற்றுள்ள திருநிலையினரையும் பொதுநிலையினரையும் உள்ளடக்கிய போதிய எண்ணிக்கையிலான பணியாளர் குழுவை உருவாக்குவதையும் இது உள்ளடக்குகின்றது. குடும்பத் திருத்தூதுப் பணியோடு தொடர்புடைய தகவல்கள் தருதல், உளநல ஆற்றுப்படுத்துதல், இடைநிலையாளர் எனும் பணிகள், பிரிந்து வாழுகின்ற அல்லது நெருக்கடிக்கு ஆளாகியுள்ள மணத்துணைவர்கள் ஒவ்வொருவருக்கும் கிடைக்கும்படி செய்ய வேண்டும். திருமண நடைமுறைக்கான தொடக்கக் கட்ட ஆய்வை மேற்கொள்ளும் வண்ணம், தனிநபர்களைச் சந்திப்பதையும் இப்பணிகள் உள்ளடக்கலாம் (காண் *கனிவுடைய நீதித்தலைவர்*, கட்டுரை 2-3).''[266]

245. மாமன்றத் தந்தையர் பின்வருமாறும் குறிப்பிட்டுள்ளனர்: ''பிரிந்து வாழ்தல், மணவிலக்கு என எதுவாக இருந்தாலும், அதன் பின்விளைவு குற்றமற்ற பிள்ளைகள் பலியாட்கள் ஆவதுதான்.''[267] ஏனைய நோக்கங்கள் அனைத்தையும் தவிர்த்து, பிள்ளைகளின் நலனே முதன்மையான அக்கறையாக இருத்தல் வேண்டும். உள்மறைவான வேறு எந்த அக்கறையோ நோக்கமோ அதனை ஒளிமறைப்புச் செய்துவிடக் கூடாது. பிரிந்துள்ள பெற்றோருக்கு நான் இந்த வேண்டுகோளை விடுக்கின்றேன்: ''உங்கள் பிள்ளையை ஒருபோதும் பிணையாக நிறுத்தாதீர்கள்! நீங்கள் பல்வேறு பிரச்சனைகள் மற்றும் காரணங்களுக்காகப் பிரிந்தீர்கள். வாழ்வு உங்களுக்கு இந்தச் சோதனையைத் தந்தது. ஆனால், உங்கள் பிள்ளைகள் அப்பிரிதலின் பாரத்தைத் தாங்க வைக்கப்படுவதோ, அல்லது அடுத்த மணத்துணைவருக்கெதிராகப் பிணையாகப் பயன்படுத்தப்படுவதோ கூடாது. தங்கள் பெற்றோர் இணைந்திருக்கவில்லையென்றாலும், தங்கள் தந்தையைப்பற்றி நல்லவற்றையே தங்கள் தாய் பேசுவதையும், தங்கள் தாயைப்பற்றி நல்லவற்றையே தங்கள் தந்தை பேசுவதையும் கேட்டே அவர்கள் வளர வேண்டும்.''[268] குழந்தையின் பாசத்தைப் பெறும் ஒரு வழியாக, அல்லது பழிவாங்கும் எண்ணம், அல்லது தன்னை நியாயப்படுத்துதல் என்பவற்றின் வெளிப்பாடாக, பெற்றோருள் ஒருவர் அடுத்தவரைப் பழித்துரைப்பது பொறுப்பற்ற செயல். அவ்வாறு செய்வது குழந்தையின் உள்ளாந்த அமைதியைப் பாதித்து, நலப்படுத்தக் கடினமான மனப்புண்களை ஏற்படுத்தும்.



246. சச்சரவுச் சூழல்கள் திருமண வாழ்வின் ஒரு பகுதி என்றே திருஅவை கருதுகின்றது; அதே வேளையில், அதிகம் புண்படுதன்மை கொண்டுள்ளதால் அமைதியாகத் துன்பங்களை அனுபவிக்கின்றவர்களாகிய பிள்ளைகள் சார்பாக அது பேசாமல் இருக்க இயலாது; இன்று ''நம் உணர்வுத் திறன்களும் நுட்பமான உளவியல் ஆய்வுகளும் அதிகம் வளர்ந்திருப்பதாகத் தோன்றினாலும், குழந்தைகளின் உள்ளங்களில் ஏற்படும் காயத்திற்கு நாம் உணர்வற்றவர்களாக மாறிவிடவில்லையா என்று நான் என்னையே கேட்கின்றேன்... திருமண நம்பிக்கையுடைமையின் பிணைப்பே முறிந்துபோகின்ற அளவுக்குக் குடும்ப உறுப்பினர்கள் ஒருவரை ஒருவர் தவறாக நடத்துவதாலும் காயப்படுத்துவதாலும், பிள்ளைகள் சுமக்கின்ற மிகப் பெரும் உளவியல் பாரத்தை நாம் உணர்கின்றோமா?''[269] புண்படுத்தும் இத்தகைய அனுபவங்கள் அறுதியான பொறுப்புகளை மேற்கொள்ளத் தேவையான முதிர்ச்சியில் வளரக் குழந்தைகளுக்கு உதவுவதில்லை. இக்காரணத்திற்காக, மணவிலக்குப் பெற்று, புதிய ஒன்றிப்பில் ஈடுபட்டுள்ள பெற்றோரைக் கிறிஸ்தவக் குழுமங்கள் கைவிட்டுவிடக்கூடாது; மாறாக, அவர்கள் தங்கள் குழந்தைகளை வளர்த்தெடுக்க மேற்கொள்ளும் முயற்சிகளில் தங்களை இணைத்துக் கொண்டு, அவர்களுக்கு உதவவேண்டும். ''அத்தகைய பெற்றோரைத் திருஅவை விலக்கிற்கு ஆளானவர்களைப் போலக் குழும வாழ்விலிருந்து தள்ளி வைத்திருந்தால், கிறிஸ்தவ வாழ்வில் தங்கள் பிள்ளைகளை வளர்ப்பதற்கு இயன்றவை அனைத்தையும் செய்யவும், அர்ப்பண உணர்வும், நடைமுறைச் சார்பும் உள்ள நம்பிக்கைக்கு எடுத்துக்காட்டாகத் திகழவும் அவர்களை எவ்வாறு நாம் ஊக்கப்படுத்த இயலும்? இத்தகைய சூழ்நிலைகளில், பிள்ளைகள் ஏற்கெனவே தாங்கிக்கொண்டிருக்கும் சுமையை, இன்னமும் அதிகமாக்குகின்ற செயல்பாடுகளிலிருந்து நாம் விலகியிருக்க வேண்டும்!''[270] பெற்றோரின் மனக்காயங்களை நலமாக்க உதவுவதும், அவர்களுக்கு அருள்வாழ்வுசார் ஆதரவு தருவதும், அதிர்ச்சி அனுபவத்தைக் கடந்துவரப் பிள்ளைகளுக்கும் பயனளிக்கும் என்பதால், பழக்கப்பட்ட திருஅவையின் முகத்தை அவர்கள் காண்பது அவசியம். மணவிலக்கு என்பது ஒரு தீமை; அது எண்ணிக்கையில் அதிகரித்து வருவது பெரும் கவலைக்குரியது. எனவே, குடும்பங்களுக்கு நாம் ஆற்றும் மிக முக்கிய அருட்பணிசார்

பணியானது, அவர்களின் அன்பை வலுப்படுத்தி, மனக் காயங்களை ஆற்ற உதவிசெய்து, நமது காலத்து இந்நாடகம் பரவாமல் தடுக்க உழைப்பதுவே.

## சில குழப்பமானச் சூழ்நிலைகள்

247. ''சபைகள்சார் கலப்புத் திருமணங்களைச் சார்ந்த பிரச்சனைகள் பற்றித் தனிப்பட்ட கவனம் தேவைப்படுகின்றது. கத்தோலிக்கர்களுக்கும் திருமுழுக்குப் பெற்ற பிறருக்கும் இடையே நிகழும் திருமணங்களுக்கு, 'அவற்றிற்கே உரிய தனிப்பட்ட இயல்பு உண்டு; ஆனால் நன்கு பயன்படுத்தி வளர்த்தெடுக்கக்கூடிய மிகப் பல கூறுகள் அத்திருமணங்களில் உள்ளன; அவை அத்திருமணங்களின் உள்ளார்ந்த நலனுக்கும் கிறிஸ்தவ ஒன்றிப்பு இயக்கத்திற்கும் பங்களிப்புச் செய்யக்கூடியவை. இந்நோக்கத்திற்காக, 'திருமணத்திற்கும் திருமணச் சடங்கிற்குமான தயாரிப்புகள் தொடங்கிய நேரத்திலிருந்தே, கத்தோலிக்க மற்றும் கத்தோலிக்கரல்லாத திருப்பணியாளர்களுக்கிடையே மனமார்ந்த ஒத்துழைப்பை ஏற்படுத்துவதற்கான முயற்சி எடுக்கப்பட வேண்டும்' (*குடும்ப வாழ்வு*, 78). நற்கருணைப் பகிர்வைப் பொறுத்தவரை, 'மணமக்களுள் கத்தோலிக்கரல்லாதவரை நற்கருணை விருந்தில் கலந்து கொள்ள அனுமதிக்கலாமா என்பது பற்றிய முடிவு, இது குறித்துக் கீழைக் கிறிஸ்தவர்களிடையேயும் பிற கிறிஸ்தவர்களிடையேயும் நடைமுறையில் இருக்கின்ற பொதுவான ஒழுங்குமுறைகளுக்கு ஏற்பவும் மற்றும் திருமண அருளடையாளத்தை இரு திருமுழுக்குப் பெற்ற கிறிஸ்தவர்கள் பெறுகின்ற தனிப்பட்ட சூழல் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டும் செய்யப்பட வேண்டும். சபைகள்சார் கலப்புத் திருமணங்களில், மணமக்கள் திருமுழுக்கு மற்றும் திருமணம் என்னும் அருளடையாளங்களைப் பகிர்ந்து கொண்டாலும், நற்கருணைப் பகிர்வு என்பது விதிவிலக்கானதாகவும் ஒவ்வொரு நேர்விலும், குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு உகந்ததாகவும் மட்டுமே இருக்க இயலும்'' (கிறிஸ்தவ ஒன்றிப்பிற்கான திருத்தந்தையின் அறிவுரைக் குழாம், *கிறிஸ்தவ ஒன்றிப்புப் பற்றிய மூலக்கோட்பாடுகளையும் ஒழுங்குமுறைகளையும் நடைமுறைப்படுத்துவதற்கான விதிமுறை ஏடு*, 25 மார்ச் 1993, 159-160).''[271]



248. ''சமய வேறுபாட்டை உள்ளடக்கிய திருமணங்கள், அன்றாட வாழ்வில் பல்சமய உரையாடலுக்கான ஒரு தனிச்சிறப்பான இடத்தை முன்வைக்கின்றன... குடும்பத்தின் கிறிஸ்தவத் தான்மையையும் குழந்தைகளின் சமயம்சார் உருவாக்கத்தையும் பொறுத்தவரை, இத்தகைய திருமணங்கள் சில முக்கியமான சிக்கல்களைக் கொண்டுள்ளன... சமய வேறுபாட்டுடன் திருமணம் செய்த மணத்துணைவர்களைக் கொண்ட இல்லங்களின் எண்ணிக்கை, மறைத்தூதுப் பணிப்பகுதிகளில் மட்டுமல்ல, நீண்ட கிறிஸ்தவ மரபைக் கொண்ட நாடுகளில்கூட அதிகரித்துக் கொண்டிருக்கின்றது. இது, பல்வேறு சமூக, பண்பாட்டுச் சூழமைவுகளுக்கேற்ற, வேறுபடுத்தப்பட்ட அருட்பணிச் செயல்பாடுகளை ஆற்றுவதை அவசரத் தேவை ஆக்குகின்றது. சமயச் சுதந்திரம் இல்லாத சில நாடுகளில், திருமணம் செய்வதற்காக கிறிஸ்தவ மணத்துணைவர் ஒருவர் மற்றொரு சமயத்திற்கு மாற வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாக்கப்படுகின்றார். இதனால், அவர் சமய வேறுபாட்டை உள்ளடக்கிய திருஅவைச்சட்ட முறையிலான திருமணத்தைக் கொண்டாடவோ, அல்லது குழந்தைகளுக்குத் திருமுழுக்குக் கொடுக்கவோ இயலாதவர் ஆகின்றார். எனவே, அனைவரின் சமயச் சுதந்திரமும் மதிக்கப்படுவதற்கான தேவையை நாம் வலியுறுத்த வேண்டும்.''[272] ''இத்தகைய திருமணங்களைச் செய்வோர்மீது, திருமணத்திற்கு முந்திய காலத்தில் மட்டும் கவனம் செலுத்துதல் போதாது. மணத்துணைவர்களுள் ஒருவர் கத்தோலிக்கராகவும், மற்றவர் சமய நம்பிக்கை இல்லாதவராகவும் உள்ள நிலையில், அவர்களும் அவர்களுடைய குடும்ப உறுப்பினர்களும் தனித்தன்மை வாய்ந்த சவால்களைச் சந்திக்கின்றனர். அந்நிலையில், இத்தகைய சூழ்நிலைகளில் தன்னையே ஆழமாக ஈடுபடுத்த வல்ல நற்செய்தியின் ஆற்றலுக்குச் சான்று பகர்வது, கிறிஸ்தவ நம்பிக்கையில் அவர்களின் குழந்தைகளை வளர்த்தெடுப்பதை இயன்றதாக்கும்.''[273]

249. ''குழப்பமான ஒரு திருமணச் சூழலில் உள்ளவர்கள், திருமுழுக்குப் பெற விழைகின்றபோது, தனித்தன்மையுடைய பிரச்சனைகள் எழுகின்றன. இத்தகையோர், ஒரு காலத்தில், அவர்களுள் ஒருவராவது கிறிஸ்தவ நம்பிக்கையை அறியாமல் இருந்தபோது, நிலையான திருமண உடன்பாட்டைச் செய்துகொண்டவர்கள். இத்தகைய நிலைகளில், அவர்களின்

அருள்வாழ்வுசார் நலனுக்கு உகந்த அருட்பணிசார் தெளிந்து தேர்தல் ஒன்றை நடைமுறைப்படுத்த ஆயர்கள் அழைக்கப்படுகின்றனர்.''[274]

250. தனது அளவற்ற அன்பை விதிவிலக்கின்றி ஒவ்வொருவருக்கும் வழங்கும் ஆண்டவர் இயேசுவின் மனநிலையைத் திருஅவை தனதாக்குகின்றது.[275] மாமன்றத்தின் போது, ஒரே பாலின ஈர்ப்பைக் கொண்ட உறுப்பினர்களை உள்ளடக்கிய குடும்பங்களின் சூழ்நிலைபற்றி நாங்கள் கலந்துரையாடல் செய்தோம். இது பெற்றோருக்கும் குழந்தைகளுக்கும் எளிதான சூழ்நிலை அல்ல. ஏனைய அனைத்திற்கும் முன்னதாக, நாங்கள் மீண்டும் வலியுறுத்த விரும்புவது, பாலினப் போக்கு வேறுபாடின்றி ஒவ்வொரு ஆளும் அவனது அல்லது அவளது மாண்புடன் மதிக்கப்பட்டுப் பரிவுடன் நடத்தப்பட வேண்டும் என்பதே. அதே வேளையில், 'நீதியற்ற பாகுபாட்டின் ஒவ்வோர் அடையாளமும்,'[276] குறிப்பாக, வலியத்தாக்குதல் மற்றும் வன்முறை ஆகியவற்றின் எவ்வித வடிவமும் கவனமாகத் தவிர்க்கப்பட வேண்டும். அத்தகைய குடும்பங்களுக்கு, மதிப்புமிகு அருட்பணி வழிகாட்டுதல் வழங்கப்பட வேண்டும். அதன் பலனாக, தன் பாலினச்சேர்க்கை நோக்குநிலை உடையவர்கள் இறைவனின் திருவுளத்தை தங்கள் வாழ்வில் முழுமையாக நிறைவேற்றத் தேவைப்படுகின்ற உதவியைப் பெறமுடியும்.[277]

251. குடும்பத்தின் மாண்பு மற்றும் மறைத்தூதுப் பணியைப் பற்றி கலந்துரையாடும் போது, ''தன் பாலினச்சேர்க்கை ஆள்களுக்கிடையேயான ஒன்றிப்புக்களை, திருமணத்திற்கு உரிய அதே நிலையைக் கொண்டவையாகக் கருதவேண்டும் என்பது பற்றிய பரிந்துரைகளுக்கு, தன் பாலினச்சேர்க்கை ஒன்றிப்புக்கள் திருமணம் மற்றும் குடும்பம் பற்றிய இறைவனின் திட்டத்துக்கு ஒத்தவை அல்லது அவற்றுடன் சிறிதளவுகூட ஒப்புமையுடையவை எனக் கருதப்பட அறவே எவ்வித அடிப்படையும் இல்லாதன'' என்றே மாமன்றத் தந்தையர் கருதினர். இதுபற்றி இடத்துத் திருஅவைகளுக்கு அழுத்தம் தரப்படுவதும், வறுமைநிலையில் உள்ள நாடுகள் ஒரே பாலின ஆள்களுக்கிடையே நிகழும் 'திருமணத்தை' நடைமுறையாக்குவதற்கான சட்டங்களைப் புகுத்துவதைப் பொறுத்து, பன்னாட்டு அமைப்புகள் அவர்களுக்கு நிதியுதவி அளிப்பதும்''[278] ஏற்றுக்கொள்ள இயலாதன.



252. ''உடல்சார் அன்னையர் அல்லது தந்தையர், குடும்பத்தின் உறுப்பினர் ஆக விருப்பமின்றிருப்பது; பெற்றோர் ஒருவர் தன் குழந்தைகளுடன் தப்பி ஓட வேண்டிய நிலைக்குத் தள்ளப்படும் வன்முறைச் சூழல்கள்; பெற்றோருள் ஒருவரின் இறப்பு; பெற்றோருள் ஒருவர் குடும்பத்தைக் கைவிடுவது, மற்றும் பிற சூழ்நிலைகள் என்பவற்றால்தான் ஒரு-பெற்றோர் குடும்பங்கள் பெரும்பாலும் உருவாகின்றன. எது காரணமாக இருந்தாலும், ஒரு பெற்றோராக உள்ளவர்கள் கிறிஸ்தவக் குழுமத்திலுள்ள பிற குடும்பங்களிலிருந்தும் பங்கின் அருட்பணி நீட்சியிலிருந்தும் ஊக்கமும் உதவியும் கட்டாயம் பெற வேண்டும். இத்தகைய குடும்பங்கள், பொருளாதாரச் சிக்கல்கள், வேலைவாய்ப்புக்கான உறுதியற்ற நிலை, குழந்தை வளர்ப்பில் ஆதரவின்மை, வீடு இன்மை என்பன போன்ற வேறு பல இன்னல்களுக்கும் ஆளாகின்றன.''[279]

## சாவு தன் கொடுக்கை நாம் உணரச் செய்கின்றபோது

253. அன்பு செய்யப்பட்ட ஒருவரின் இறப்பால், சில வேளைகளில் குடும்ப வாழ்வு சவாலுக்கு உள்ளாகின்றது. இத்தகைய அனுபவத்திற்கு உள்ளாகின்ற குடும்பங்களுக்கு, நம்பிக்கையின் ஒளியை ஒரு துணையாக நாம் அளிக்காமல் இருக்க இயலாது.[280] துயரில் ஆழ்ந்துள்ள ஒரு குடும்பத்தை நாம் கண்டுகொள்ளாதிருப்பது, பரிவு இன்மையையும் அருட்பணி வாய்ப்பு ஒன்று இழக்கப்படுவதையும், நற்செய்தி அறிவிப்பிற்கான பிற முயற்சிகளுக்குக் கதவு அடைக்கப்படுவதையுமே எடுத்துக்காட்டுகின்றது.

254. தம்மால் மிகவும் அன்பு செய்யப்பட்ட ஓர் ஆளை, தாம் மிகப் பலவற்றை உடன் பகிர்ந்துகொண்ட தம் மணத்துணைவரை இழந்தவர்கள் அனுபவிக்கின்ற ஆழ்ந்த துயரத்தை என்னால் புரிந்துகொள்ள முடிகின்றது. தம் நண்பர் ஒருவரின் இறப்பால், இயேசுவே ஆழமான மனத்துயருக்கு உள்ளாகிக் கண்ணீர்விட்டு அழத் தொடங்கினர் (காண் யோவா 11:33,35). மேலும், தங்கள் பிள்ளையை இழந்த பெற்றோரின் துயரத்தை எவ்வாறுதான் புரிந்துகொள்ளத் தொடங்க முடியும்? ''காலம் ஒட்டுமொத்தமாக நின்று போவதைப் போன்றதும், கடந்த காலத்தையும் எதிர்காலத்தையும் விழுங்கும் ஒரு பெரும் பிளவு ஏற்படுவதைப் போன்றதும் அது.'' ''சில நேரங்களில்

இறைவன்மேல் பழியைச் சுமத்துகின்ற அளவுக்குக்கூட நாம் செல்கின்றோம். எத்தனை மக்கள் இறைவன்மேல் சினம்கொள்கின்றனர். அவர்களை என்னால் புரிந்துகொள்ள முடிகின்றது.''[281] ''ஒருவரின் மணத்துணைவரை இழப்பதென்பது தனியொரு வகையில் கடினமானது... அந்த இழப்பைத் தாங்குகின்ற கணத்திலிருந்து, சிலர் தங்கள் ஆற்றல்கள் அனைத்தையும் ஒன்றுதிரட்டி, பிள்ளைகள் மற்றும் பேரப்பிள்ளைகளுக்காக அதிகம் அர்ப்பணிக்கும் திறமையை வெளிப்படுத்துகின்றனர். இந்த அன்பு அனுபவத்தின் மூலம், தங்கள் குழந்தைகளை வளர்க்கின்ற ஒரு புதுப்பிக்கப்பட்ட மறைத்தூதுப் பணி உணர்வாற்றலை அவர்கள் பெறுகின்றனர். இணைந்து நேரத்தைச் செலவிடவும், பாசத்தைத் தங்களுக்குத் தரவும் உறவினர்கள் இல்லாதவர்களுக்கு, முக்கியமாக அவர்கள் வறுமைப்பட்டவர்கள் என்றால், அவர்களுக்குக் கிறிஸ்தவக் குழுமத்திலிருந்து தனிச்சிறப்பான கவனமும் உடனிருப்பும் கிடைக்க வேண்டும்.''[282]

255. வழக்கமாக, துயர் களையும் நடைமுறைகள் அதிக நாட்கள் எடுக்கின்றன. அந்த நடைமுறைகளில் ஓர் அருட்பணியாளர் கட்டாயம் உடன்பயணிக்க வேண்டும்; அதன் ஒவ்வொரு கட்டத்திலும் எழுகின்ற தேவைகளுக்கு ஏற்ப, அவர் தம்மையே தகவமைத்துக்கொள்ள வேண்டும். அந்த நடைமுறை முழுவதுமே, அன்பு செய்யப்பட்டவர் இறக்க நேரிட்டதற்கான காரணங்கள், என்னென்ன செய்யப்பட்டிருக்க வேண்டும், இறக்கும் கணத்தில் ஒரு மனிதர் என்ன உணர்கின்றார் என்பன பற்றிய கேள்விகளால் நிறைந்தது. உண்மையான மற்றும் பொறுமையான இறைவேண்டல் மற்றும் அகவிடுதலைச் செயல்முறையின் மூலம், அமைதி திரும்புகின்றது. சில குறிப்பிட்ட நேரங்களில், அன்பு செய்யப்பட்டவரின் இழப்பிற்குப் பிறகு, நாம் இன்னமும் செய்யவேண்டிய மறைத்தூதுப் பணி உண்டு. துயரிலேயே தொடருவது இறந்தோருக்குப் பெருமை என எண்ணி அதை நீட்டிப்பதால் எந்த நன்மையும் விளைவதில்லை என உணர்ந்திட, துயருறும் நபருக்கு நாம் உதவ வேண்டும். நம்மால் அன்பு செய்யப்பட்டவர்களுக்கு நமது துயரம் தேவைப்படுவதில்லை; நமது வாழ்வை நாம் பாழ்படுத்துவதால் அவர்கள் மிகையான புகழ்பெறப் போவதுமில்லை; அதுபோலவே, அவர்களையே நினைத்துக் கொண்டிருப்பதும், அவர்கள்



பெயரை அடிக்கடி சொல்லிக் கொண்டிருப்பதும், அன்பின் சிறந்த வெளிப்பாடு அல்ல. ஏனென்றால், இவ்வாறு செய்வது, தற்போது இன்னோர் இடத்தில் இருக்கும் அவர்களைத் தொடர்ந்து அன்பு செய்வதற்குப் பதிலாக, கடந்த காலத்தையே சார்ந்திருப்பதாக ஆகும். அவர்கள் நம்மோடு உடலளவில் இனி உடனிருக்க முடியாது, எனினும், சாவு எவ்வளவு ஆற்றல் உடையது என்றாலும், ''அன்பு சாவைப்போல் வலிமைமிக்கது'' (இபா 8:6). அன்பு என்பது, ஒலிகள் இன்றியே கேட்கவும், பார்க்க இயலாததைப் பார்க்கவும் நம்மை ஆற்றல்படுத்தும் ஓர் உள்ளுணர்வைத் தன்னகத்தே கொண்டுள்ளது. இதன் பொருள், நாம் அன்பு செய்தவர்களை அவர்கள் முன்னர் இருந்ததைப்போலக் கற்பனை செய்து பார்ப்பதல்ல, மாறாக, மாற்றம் பெற்றவர்களாக, அவர்கள் தற்போது இருப்பதுபோல அவர்களை ஏற்றுக்கொள்வதே. உயிர்த்த இயேசு, அவரது நண்பர் மரியா அவரைப் பற்றிக்கொள்ள விழைந்தபோது, அவரிடம் தம்மைப் பற்றிக்கொள்ள வேண்டாம் என்று கூறினார் (காண் யோவா 20:17). இது ஒரு மாறுபட்ட வகையான சந்திப்பிற்கு அவரை வழிநடத்தவே.

256. இறக்கின்றவர்கள் முற்றிலுமாகக் கடந்து சென்றுவிடுவதில்லை என அறிவது நம்மைத் தேற்றுகின்றது; மேலும், உயிர்த்த ஆண்டவர் நம்மை ஒருபோதும் கைவிடமாட்டார் என்ற நம்பிக்கையும் நம்மை உறுதிப்படுத்துகின்றது. இவ்வாறு நாம் ''சாவு வாழ்வை நஞ்சாக்குவதையும், நமது அன்பை வீணாக்குவதையும், நம்மை இருள்மிகுந்த பாழ்கிடங்கில் தள்ளிவிடுவதையும் தடுக்க''[283] முடியும். அன்பால் இறைவன் நம்மைப் படைத்தார் என்றும், நமது வாழ்வு இறப்போடு முடிந்துவிடாத வகையில் அவர் நம்மை உருவாக்கினார் என்றும் விவிலியம் நமக்குச் சொல்கின்றது (காண் சாஞா 3:23). இறந்தவுடன், கிறிஸ்துவை நாம் எதிர்கொள்வதைப் பற்றி தூய பவுல் நமக்கு கூறுகின்றார்: ''உயிர் நீத்துக் கிறிஸ்துவோடு இருக்க வேண்டும் என்பதே எனது ஆவல்'' (பிலி 1:23). இறப்பிற்குப் பிறகு, கிறிஸ்துவோடு நமக்காகக் காத்திருப்பது ''தம்மிடம் அன்பு கொள்ளுகிறவர்களுக்கென்று கடவுள் ஏற்பாடு செய்தவை'' (1 கொரி 2:9). இறந்தோர்க்கான திருவழிபாட்டின் தொடக்கவுரை இதை அழகுற எடுத்துரைக்கின்றது: ''சாவது திண்ணம் என்ற நியதி எங்களை வருத்தத்தில் ஆழ்த்தினாலும், முடிவில்லா வாழ்வு ஒன்று உண்டு என்ற வாக்குறுதி எங்களுக்கு ஆறுதல் அளிக்கின்றது. ஏனென்றால்

ஆண்டவரே, உம் நம்பிக்கையாளர்களுக்கு வாழ்வு மாறுபடுகிறதேயன்றி அழிக்கப்படுவதில்லை.'' உண்மையில் ''நம்மால் அன்பு செய்யப்பட்டவர்கள் வெறுமையின் நிழலுக்குள் தொலைந்து போகவில்லை. மாறாக, அவர்கள் இறைவனின் நன்மை நிறைந்த, வலுவான கைகளில் இருக்கின்றனர் என்றே எதிர்நோக்கு நமக்கு உறுதியளிக்கின்றது.''[284]

257. நாம் அன்புசெய்தவர்களுடன் நட்புறவைத் தொடர்வதற்கான ஒரு வழி, அவர்களுக்காக இறைவேண்டல் செய்வது.[285] ''இறந்தோருக்காக இறைவேண்டல் புரிவது'' தூயதும் இறைப்பற்றை உணர்த்துவதும்'' ஆகும் என்று விவிலியம் நமக்குச் சொல்கின்றது (2 மக் 12:44-45). ''அவர்களுக்கான நமது இறைவேண்டல், அவர்களுக்கு உதவிசெய்ய வல்லது மட்டுமல்ல, நமக்கான அவர்களது பரிந்துரையைச் செயல்விளைவுள்ளதாக ஆக்கவும் வல்லது.''[286] இவ்வுலகோடும் அதன் வரலாற்றோடும் கொண்டுள்ள கூட்டொருமையினால், அநீதியின் பொருட்டு இவ்வுலகில் துன்புறுத்தப்படுகின்றவர்களுக்காக, மறைசாட்சியர் பரிந்துரை செய்வதை திருவெளிப்பாடு நூல் குறிப்பிடுகின்றது (காண் திவெ 6:9-11). சில புனிதர்கள், இறப்பதற்கு முன்னர், தங்கள் அன்புக்குரியவர்களிடம், எப்போதும் தாங்கள் அவர்களுக்கு உதவிசெய்ய அருகிலிருப்பதாக உறுதிமொழி தந்து அவர்களைத் தேற்றினர். புனித லிசியு தெரசா விண்ணிலிருந்து நன்மை செய்வதைத் தொடர விரும்பினார்.[287] புனித தோமினிக்கு, ''இறப்பிற்குப் பிறகு அவர் அதிகம் உதவிசெய்பவராக இருப்பார் எனவும்... அருளைப் பெற்றுத்தருவதில் மிகுந்த ஆற்றல் மிக்கவராக இருப்பார் எனவும்''[288] கூறினார். இவையெல்லாம் உண்மையில் ''அன்பின் பிணைப்புகளே,''[289] ஏனென்றால், ''ஆண்டவரில் துயில் கொள்ளும் சகோதரர்களுடன் வழிப்போக்கர்கள் கொள்கின்ற ஒன்றிப்பானது எவ்வகையிலும் தடைசெய்யப்படுவதில்லை... (மாறாக) அருள்வாழ்வுசார் நலன்களின் பரிமாற்றத்தினால் அது உறுதிப்படுத்தப்படுகின்றது.''[290]

258. இறப்பை நாம் ஏற்றுக்கொண்டோம் என்றால், நம்மையே நாம் அதற்கெனத் தயாரிக்க இயலும். அதற்கான வழி ''சாவு இனிமேல் இல்லாத, துயரம், அழுகை, துன்பம் எதுவும் இனி இல்லாத'' (திவெ 21:4) அந்த நாள் வரை, நமதருகே நடந்து வருவோருடன் அன்பில் வளர்வதே. இங்ஙனம், நம்மால் அன்பு செய்யப்பட்ட இறந்தோரை மீண்டும் ஒருமுறை காண



நம்மையே நாம் தயாரிக்க முடியும். இறந்த அவருடைய மகனை, ''அவருடைய தாயிடம் ஒப்படைத்த'' (காண் லூக் 7:15) இயேசுவின் செயலைப் போல, நமக்கும் நிகழும். தொலைவில் கடந்து சென்றுவிட்ட காலத்தைப் பற்றி எண்ணி, நமது ஆற்றலை நாம் வீணாக்க வேண்டாம். இம்மண்ணுலகில் நாம் நன்கு வாழ்வதைப் பொறுத்தே, நாம் அன்பு செய்தவர்களுடன் விண்ணகத்தில் அதிக மகிழ்ச்சியைப் பகிர்ந்துகொள்ள இயலும். இவ்வுலகில் நாம் அதிகம் முதிர்ச்சியடைந்து, வளர்ச்சிபெற இயன்றால், விண்ணக விருந்திற்கு நம்மால் அதிகக் கொடைகளைக் கொண்டு சேர்க்க முடியும்.

# அலகு – 7

## பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டை நோக்கி

259. பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் அறநெறி வாழ்வுக்கு எப்பொழுதும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றனர்; அது மேம்படுவதனாலும் சரி, தாழ்வடைவதனாலும் சரி அவர்களுடைய தாக்கம் அங்கு இருக்கிறது. எனவே பெற்றோர் இந்த அடிப்படைக் கடமையை ஏற்றுக்கொண்டு, அதை மனமாரவும், பற்றார்வத்துடனும், நியாயமான முறையிலும், பொருத்தமான வகையிலும் நிறைவேற்றவேண்டும் என்பது பொருளாகிறது. குடும்பங்களின் கல்வி புகட்டும் பணி மிகவும் இன்றியமையாததாக இருப்பதாலும், அது தற்காலத்தில் சிக்கல் நிறைந்ததாக மாறிவருவதாலும் அதைப்பற்றி விரிவாக விவாதிக்க விரும்புகிறேன்.

### நம்முடைய பிள்ளைகள் எங்கே இருக்கின்றார்கள்?

260. குடும்பங்கள் ஆதரவுதருகிற, வழிகாட்டுகிற, நெறிப்படுத்துகிற இடங்களாகக் கட்டாயம் இருந்தாக வேண்டும். எவ்வளவுக்குக் குடும்பத்தினர் தங்களுடைய வழிமுறைகளை மறுஆய்வு செய்ய வேண்டியிருந்தாலும், புதிய கருத்தாக்கங்களைக் கண்டுபிடிக்க வேண்டியிருந்தாலும் மேற்சொன்ன நிலை கட்டாயமே. பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் எதற்கு வெளிப்படவேண்டும் என்பதில் கவனம் செலுத்த வேண்டும்; அதாவது, யார் அவர்களுக்குப் பொழுதுபோக்குக் காட்சிகளைத் தருகின்றனர்; தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், மின்னணுக் கருவிகள் வழியாக யார் அவர்களுடைய அறையில் நுழைகின்றனர்; யாரோடு அவர்கள் தங்கள் ஓய்வு நேரத்தைச் செலவிடுகின்றனர் என்பவற்றில் கவனம் செலுத்துவது மிகவும் அவசியம். நம்முடைய நேரத்தைப் பிள்ளைகளோடு செலவிடுவதாலும், முக்கியமானவற்றைக் குறித்து எளிய விதத்திலும் அக்கறையோடும் பேசுவதாலும் அவர்களுடைய நேரத்தைச் செலவிட நலமான வழிகளைக் கண்டுபிடிப்பதாலுமே நாம் அவர்களைத் தீங்கிலிருந்து காக்கமுடியும். விழிப்புடன் செயல்படுதல் எப்பொழுதும் தேவையானது; இதில் தவறுவது ஒருபோதும் பயனுள்ளதாகாது. குழந்தைகளும், வளரிளம் பருவத்தினரும்



தீங்குகளை எதிர்த்துநிற்பதற்குப் பெற்றோர்கள் அவர்களைப் பக்குவப்படுத்த வேண்டும்; எடுத்துக்காட்டாக, வன்முறை, கெட்ட வார்த்தை பேசுதல், போதைப்பழக்கத்திற்கு அடிமையாதல் ஆகியவற்றிலிருந்து விடுபட அவர்களைப் பக்குவப்படுத்த வேண்டும்.

261. இருப்பினும் மிகுந்த கட்டுப்பாடு விதிப்பது ஒருபோதும் கல்வியாகாது. குழந்தையின் ஒவ்வொரு சூழலையும் நாம் கட்டுப்படுத்த முடியாது. இங்கே, “காலம் பிரபஞ்சத்தைவிடப் பெரியது”[291] என்பது உண்மையாகிறது. வேறு வார்த்தைகளில் கூறவேண்டுமெனில், பிரபஞ்சத்தைக் கட்டுப்படுத்துவதைவிடக் குழந்தைகளின் அறநெறிக் கல்விக்கான நடைமுறை வழிகளைத் தொடங்குவது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். குழந்தைகள் எங்கிருக்கிறார்கள் என்பதை அறிந்துகொள்வதிலும், அவர்களுடைய எல்லா இயக்கத்தையும் கட்டுப்படுத்துவதிலுமே எப்போதும் குறியாய் இருந்தார்களேயானால், அவர்கள் பிரபஞ்சத்தைக் கட்டுப்படுத்த முயல்கிறார்கள். ஆனால், இது குழந்தைகளுக்குக் கல்விபுகட்டும் வழிமுறையாகவோ, அவர்கள் சவால்களைச் சந்திப்பதற்கு அவர்களுக்கு வலுவூட்டி அவர்களைத் தயார்படுத்தும் வழிமுறையாகவோ ஒருபோதும் அமையாது. எது முக்கியம் என்றால் அவர்கள் தன்னுரிமையில், முதிர்ச்சியில், ஒட்டுமொத்த ஒழுக்கத்தில், உண்மையான தன்னாட்சி உரிமையில் வளர்வதற்கு அன்போடு உதவுவதற்கான திறமையே. இத்தகைய வழியில் மட்டுமே, குழந்தைகள் இடர்ப்பாடுகளைச் சந்திக்கின்ற வேளைகளில் அவற்றிலிருந்து தங்களையே தள்ளிவைத்துக்கொள்ள, அறிவோடும் விவேகத்தோடும் செயல்படத் தேவையான இன்றியமையாச் சாதனங்களைக் கொண்டவர்களாக மாறுகின்றனர். எங்குக் குழந்தைகள் உடலளவில் இருக்கின்றார்கள் அல்லது கொடுக்கப்பட்ட நேரத்தில் யாரோடு இருக்கின்றார்கள் என்பது உண்மையான கேள்வியல்ல. மாறாக, அவர்கள் எங்கு வாழ்கிறார்கள், அவர்கள் தங்களுடைய உறுதிப்பாடுகளில், இலக்குகளில், விருப்பங்களில் கனவுகளில் எங்கு நிற்கின்றார்கள் என்பதே முக்கியம். பெற்றோர்களுக்கு நான் தொடுக்கும் கேள்விகள் இவையே: நம்முடைய குழந்தைகள் அவர்களுடைய வாழ்வுப் பயணத்தில் ‘எங்கு’ இருக்கின்றார்கள் என்பதைப் புரிந்துகொள்ள நாம் முயல்கிறோமா? அவர்களுடைய உள்ளம் எங்கே இருக்கிறது என்பதை

நாம் உண்மையிலேயே அறிந்திருக்கிறோமா? எல்லாவற்றிற்கும் மேலாக, அதை அறிந்துகொள்ள விரும்புகிறோமா?''[292]

262. ஒருவருடைய முதிர்ச்சி என்பது அவரது மரபணுவில் இருந்தால் அதைக் குறித்து நாம் எதுவும் செய்ய இயலாது. ஆனால் விவேகம், சரியான பார்வை, பொது அறிவு ஆகியவை ஒருவர் பலநிலைகளில் வளர்வதில் அமைவதில்லை. மாறாக, ஒருவருடைய உள்ளாழத்தில் ஒன்றிணையும் பலவற்றின் அடிப்படையிலும், அதற்கும் மேலாக, ஒருவருடைய உள் சுதந்திரத்தின் அடிப்படையிலும் அது அமைகிறது. ஒவ்வொரு குழந்தையும் இச்சுதந்திரத்தின் அடிப்படையில் உருவாகும் தன் எண்ணங்களையும் திட்டங்களையும் வெளிப்படுத்தி நம்மை வியப்பில் ஆழ்த்தும்போது, அவை நம்முடைய கருத்துகளை மறுஆய்வு செய்திட உண்மையிலேயே நமக்குச் சவால் விடுகின்றன. இது ஒரு நல்ல செயலே! கல்வி என்பது நிகழ்வுகளை நல்லுணர்வோடும் அறிவோடும் எதிர்கொள்வதில் பொறுப்பான முறையில் சுதந்திரத்தைப் பயன்படுத்துவதையும் ஊக்கப்படுத்துவதையும் உள்ளடக்கியதாகும். கல்வி என்பது தங்களுடைய தனிப்பட்ட வாழ்வும், குழும வாழ்வும் தங்கள் கையிலேயே உள்ளன என்பதையும், தன்னுரிமை என்பது கடவுளின் கொடை என்பதையும் மனமாரப் புரிந்துகொள்ளும் ஆள்களை உருவாக்குவதை உள்ளடக்கியதாகும்.

### பிள்ளைகளின் நன்னெறி உருவாக்கம்

263. பெற்றோர் தங்கள் குழந்தைகள் அடிப்படை அறிவைப் பெற்றுக்கொள்ளப் பள்ளிகளைச் சார்ந்து இருக்கலாம்; ஆனால் தங்களுடைய பிள்ளைகளின் அறநெறி உருவாக்கத்திற்கான பொறுப்பை ஒருபோதும் அடுத்தவரிடம் முழுமையாக விட இயலாது. ஒருவருடைய உணர்வுசார்ந்த, அறநெறி சார்ந்த வளர்ச்சி என்பது அடிப்படையில் ஒரு குறிப்பிட்ட அனுபவத்தில் ஊன்றப்படுகிறது. அதாவது, அவருடைய பெற்றோர் நம்பத்தக்கவர் என்பதே அது. எனவே பெற்றோர் கல்விபுகட்டுபவர்கள் என்னும் முறையில், தங்களுடைய அன்பாலும் எடுத்துக்காட்டாலும் பிள்ளைகளிடம் நம்பிக்கையையும் அன்பான மரியாதையையும் வளர்த்தெடுக்க வேண்டும். தாங்கள் எவ்வளவுக்குத் தவறு செய்துவிட்டாலும், பெற்றோருக்குத் தாங்கள் முக்கியமானவர்கள் என்பதைப்



பிள்ளைகள் உணராதபோது, அல்லது தங்கள் பெற்றோர் உண்மையிலேயே தங்களைக் குறித்து அக்கறை கொண்டுள்ளார்கள் என உணராதபோது ஆழமான காயம் ஏற்படுகிறது; அவர்களுடைய முதிர்ச்சி நோக்கிய பாதையில் பல இன்னல்கள் ஏற்படுகின்றன. இத்தகு உடல் அல்லது உள நெருக்கமின்மை, ஒரு குழந்தை தவறு செய்து திட்டு வாங்கும்போது பெறும் காயத்தைவிடப் பெரிதான காயத்தை ஏற்படுத்திவிடுகிறது.

264. தங்கள் குழந்தைகள் நன்மையைத் தேடவும், நல்ல பழக்க வழக்கங்களை உருவாக்கிக் கொள்ளவும் வேண்டிய விருப்பத்தை உருவாக்குவதில் பெற்றோர் பொறுப்புக் கொண்டுள்ளார்கள். இவ்வாறு செயல்படுவது படிப்படியான வளர்ச்சியில் சிறந்த, மதிப்பிற்குரியவற்றைச் சிந்திக்கவும் அதன்படி நடக்கவும் ஒருவிதப் பார்வையைத் தருகிறது. சமூகத்தில் பொருந்திப் போக விரும்புதல், அல்லது பொதுவில் மேம்பட்ட, ஒழுங்கமைதியுடைய வாழ்விற்காக உடனடி இன்பத்தைத் துறக்கும் பழக்கம் ஒரு நல்ல விழுமியமாகும்; அது பெரிய விழுமியங்களுக்குத் திறந்த மனத்துடன் விளங்க வழிவகுக்கும். அறநெறி உருவாக்கம் என்பது செயலூக்கம் மிகுந்த ஆக்கமுறை மற்றும் உரையாடல் வழியாக ஏற்படுகிறது. அது உணர்வுப் பூர்வமாகக் குழந்தைகள் புரிந்துகொள்ளும் முறையில் கற்றுக்கொடுக்கிறது. குழந்தைகள் தாங்களாகவே சில விழுமியங்கள், கொள்கைகள், நெறிமுறைகள் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை அறிந்துகொள்ள வேண்டும். கேள்விக்குட்படுத்த முடியாத இறுதியான உண்மைகளாக அவற்றைப் புகுத்தக்கூடாது.

265. நல்லது செய்வது என்பது ஒன்றைச் சிறந்ததெனத் தோன்றுவதாகத் தீர்மானிப்பதைவிட மேலானது; அல்லது அதைப்போல் முக்கியத்துவம் வாய்ந்த காரியமாகிய, என்ன செய்யவேண்டும் என்பதைத் தெளிவாக அறிவதை விடவும் மேலானதாகும். ஆனால் நம்முடைய உறுதிப்பாடுகள் சரியானவையாக இருந்தாலும், பல வேளைகளில் நாம் உறுதியற்றவர்களாய் இருக்கிறோம்; நம்முடைய மனச்சான்று சரியாக நமக்கு ஒரு தீர்மானத்தைக் காட்டினாலும், வேறு காரணிகள் நமக்கு ஈர்ப்புள்ளனவாகவும் வலிமை வாய்ந்தனவாகவும் தோன்றுகின்றன. மற்ற ஈர்ப்புகளைவிட நன்மைக்கான தாகம் வலிமையாக உள்ளது. அது நன்மையாக நாம் கருதுவது, நமக்கு இங்கேயே, இப்போதே நன்மையாக

இருக்கிறது என உணரத் துணைசெய்கிறது. அதனால், நமது புத்தி புரிந்துகொள்கிற நன்மை நம்மில் ஆழமாக வேரூன்றும் நிலைக்கு நாம் வரவேண்டும். நன்னெறிக் கல்வியானது ஒருவர் நல்லது செய்வதில் ஆர்வமாய் இருக்கிறார் என்பதை உள்ளடக்கியதாக இருக்கவேண்டும். நன்மைகளைக் கொண்டு வருபவற்றைத் தெளிவாக விளக்காமல், ஒருவரை முயற்சிசெய்வதற்கும் தியாகம் செய்வதற்கும் அழைப்பது இன்று அதிகம் பயனளிப்பதில்லை.

266. நல்ல பழக்க வழக்கங்கள் வளர்த்தெடுக்கப்பட வேண்டும். குழந்தைப் பருவப் பழக்கவழக்கங்கள் கூட உள்வாங்கப்பட்ட முக்கியமான விழுமியங்களைச் சரியான முறையில் செயல்படுத்திட உதவுகின்றன. ஒருவர் நன்கு பழகுபவராகவும், மற்றவர் மட்டில் திறந்த மனம் உள்ளவராகவும் இருக்கலாம். ஆனால் அவர், ''தயவு செய்து'', ''நன்றி'', ''மன்னிக்கவும்'' என்பன போன்றவற்றைச் சொல்வதற்கு மூத்தவர்களால் பயிற்றுவிக்கப்பட வில்லையென்றால் அவருடைய உள்ளார்ந்த நன்னிலை எளிதாக வெளிப்பட்டுவிடாது. விருப்ப மனநிலை உறுதிபெறுவதும், குறிப்பிட்ட செயல்கள் மீண்டும் மீண்டும் செய்யப்படுவதும் அறநெறிக் கட்டடம் உருவாவதற்கான செங்கற்களாகும். மனப்பூர்வமாகவும், சுதந்திரமாகவும், மதிப்பீடுகளோடும் நன்னடத்தையின் சில வழிமுறைகளைத் தொடர்ந்து கடைப்பிடிக்கவில்லையெனின் அறநெறிக் கல்வி உருவாவதில்லை. வெறுமனே விரும்புவதாலோ, சில விழுமியங்கள்பால் ஈர்ப்புக் கொள்வதாலோ சரியான நோக்கம் கொண்ட செயல்கள் இல்லாமல் ஒரு பண்புநலனை உருவாக்க இயலாது.

267. தன்னுரிமை என்பது மகத்துவமானதுதான். ஆயினும் அது சிதறிவிடவும் தொலைந்துவிடவும் வாய்ப்பு உள்ளது. அறநெறிக் கல்வி என்பது கருத்துகள், ஊக்கம், நடைமுறைச் செயல்பாடுகள், புறத் தூண்டுதல்கள், பரிசுகள், எடுத்துக்காட்டுகள், மாதிரிகள், அடையாளங்கள், கருத்துரைகள், பாராட்டுகள், உரையாடல், நாம் செய்யும் முறைகளைத் தொடர்ந்து மறுசிந்தனை செய்தல் ஆகியவற்றின் வழியாக தன்னுரிமையை வளர்த்தெடுப்பதுடன் தொடர்பு கொண்டது. இவை யாவும் உள்ளார்ந்த முறையில் நிலையாக இருக்கும் கொள்கைகளை வளர்த்து, இயல்பாகவே நன்மை செய்திட இட்டுச்செல்லும். நற்பண்பு என்பது செயலைச்



செய்வதற்கான உள்ளார்ந்த உறுதிப்பாடு. நற்பண்புடைய வாழ்வு இவ்வாறு தன்னுரிமையைக் கட்டியெழுப்பி, உறுதிப்படுத்தி வடிவமைக்கிறது. இல்லாவிடில் நாம் மனிதத் தன்மையற்ற சமூக விரோத ஈர்ப்புகளுக்கு அடிமையாவோம். ஏனெனில், மனித மாண்பு என்பது நாம் ஒவ்வொருவரும் நாமாகச் செயலாற்றுவதை, ''அதாவது உள்ளிருந்து இயக்கப்பட்டும் தூண்டப்பட்டும், அறிவோடும் சுதந்திரத்தோடும் செயலாற்றுவதை''[293] எதிர்பார்க்கிறது.

## செயல்படத் தூண்டும் திருத்துதல்

268. தவறான நடத்தை பின்விளைவுகளைக் கொண்டுவருவது என்பதைக் குழந்தைகளும் வளரிளம் பருவத்தினரும் உணரச் செய்திட உதவுவது இன்றியமையாததாகும். அவர்கள் அடுத்தவர் நிலைக்கு இறங்கிச் சென்று, தாங்கள் அவர்களைக் காயப்படுத்தியதை ஏற்றுக்கொள்ள ஊக்குவிக்கப்பட வேண்டும். வலியச் சண்டைக்குச் செல்லுதல், சமூக விரோதச் செயல் ஆகியவற்றிற்குக் கொடுக்கும் சில தண்டனைகள் இத்தகு நோக்கிற்கு ஓரளவு உதவிபுரியும். குழந்தைகள் அடுத்தவர்களுக்குச் செய்த தீங்கிற்காக மன்னிப்பு கேட்கவும், அதைச் சரிசெய்யவும் பழக்கப்படுத்தப்பட வேண்டியது முக்கியமானதாகும். கல்விமுறை குழந்தைகளின் தன்னுரிமை வளர்ச்சிக்குப் பயனளிக்கும்போது, குடும்பத்தில் வளர்வதும், ஒவ்வொரு பயிற்சியிலும் எதிர்பார்க்கப்படும் தியாகத்தை ஏற்றுக்கொள்ளுதலும் நல்லது என்பதை அவர்கள் புரிந்துகொள்வார்கள்.

269. குழந்தைகளின் முயற்சிகள் பாராட்டப்படும்போதும் ஏற்றுக் கொள்ளப்படும்போதும் திருத்தம் என்பது தூண்டுதல் தருவதாக அமைகிறது; அப்போது தங்கள் பெற்றோர் தங்களிடத்தில் வைத்திருக்கிற நீடித்த, பொறுமையான நம்பிக்கையை அவர்கள் உணர்ந்துகொள்கிறார்கள். அன்புடன் திருத்தப்படும் குழந்தைகள் தாங்கள் பராமரிக்கப்படுவதை உணர்கிறார்கள்; தனித்தன்மை வாய்ந்த தங்களுடைய ஆற்றல்கள் ஏற்றுக்கொள்ளப்படுவதை அவர்கள் உணர்கிறார்கள். இதற்குப் பெற்றோர்கள் முழுநிறைவு உடையவர்களாக இருந்திட வேண்டிய தேவையில்லை; மாறாக, அவர்கள் தங்களுடைய குறைபாடுகளை

ஏற்றுக்கொண்டு அவற்றைச் சரிசெய்திட முயற்சி எடுத்தாலே போதும். எனினும், சினத்தால் ஆட்கொள்ளப்படாதிருத்தல் என்பது குழந்தைகள் தங்கள் பெற்றோரிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்களுள் ஒன்றாகும். தவறுசெய்யும் குழந்தை திருத்தப்பட வேண்டும். ஆனால் அக்குழந்தை எதிரியாக நடத்தப்படக்கூடாது; பெற்றோர் தங்களுடைய விரக்தியை வெளிப்படுத்தும் பொருளாக அவர்கள் நடத்தப்படக் கூடாது. வளர்ந்தவர்கள் புரிந்துகொள்ள வேண்டியதும் உண்டு; தவறான நடத்தைகளில் சிலவகை இளைஞருக்கே உரிய வலுக்குறைவினாலும் குறைபாடுகளாலும் வருபவை என்பதை அவர்கள் புரிந்துகொள்ளவேண்டும். எப்போதுமே தண்டனை வழங்கும் மனப்பாங்கு தீங்கு செய்வதாகும்; சில செயல்கள் மற்றவற்றைவிடக் கவலைக்குரியவை என்பதைக் குழந்தைகள் உணர்வதற்கு இது உதவாது. இது ஊக்கமிழத்தலுக்கும் எதிர்ப்புணர்வுக்குமே இட்டுச்செல்லும்: ‘‘தந்தையரே, உங்கள் பிள்ளைகளுக்கு எரிச்சல் மூட்டாதீர்கள்’’ (எரே 6:4; காண் கொலோ 3:21)

270. கட்டுப்பாடு என்பது ஊக்கமிழத்தலுக்கு இட்டுச்செல்லாதவாறு பார்த்துக்கொள்ள வேண்டியது இன்றியமையாததாகும்; மாறாக, அது கூடுதல் வளர்ச்சிக்குத் தூண்டுதலாக இருக்க வேண்டும். கட்டுப்பாட்டை ஒருவர் எவ்வாறு தன்வயப்படுத்த முடியும்? கட்டுப்பாடு என்பது குழந்தையின் செயல்களுக்கு வைக்கக்கூடிய ஆக்கப் பூர்வமான எல்லை என்பதையும், அது குழந்தையின் வளர்ச்சிப்பாதையில் நிற்கும் தடையன்று என்பதையும் எவ்வாறு உறுதிசெய்வது? தீங்குகளின் இரு சமமான துருவங்களுக்கு இடையே ஒரு சமநிலை கண்டுபிடிக்கப்பட வேண்டும். ஒன்று, எல்லாமே குழந்தையின் விருப்பத்தைச் சுற்றி அமைந்திருக்குமாறு முயற்சிசெய்தல்; இத்தகு குழந்தைகள் தங்கள் பொறுப்புகளை உணராமல் தங்கள் உரிமைகளை மட்டுமே கருத்தில் கொண்டு வளர்வார்கள். இன்னொன்று, குழந்தை தன்னுடைய மாண்பையும், தனிப்பட்ட அடையாளத்தையும், உரிமைகளையும் குறித்த விழிப்புணர்வை இழந்திடச் செய்தல்; இத்தகு குழந்தைகள் தங்கள் கடமைகளில் மூழ்கடிக்கப்படுவதோடு, மற்றவர்களுடைய விருப்பங்களை நிறைவேற்றும் தேவையினாலும் அழுத்தப்படுகிறார்கள்.



**பொறுமையான செயல்பாடு**

271. அறநெறிக்கல்வி என்பது ஒரு குழந்தையிடமோ இளவயதுள்ளவரிடமோ அளவொவ்வாத தியாகத்தை உள்ளடக்காத செயல்களை மட்டுமே எதிர்பார்ப்பது ஆகும்; கடுஞ்சினத்தை எதிர்க்கும் மனநிலையை உருவாக்காத அளவுக்கும் தேவையில்லாமல் கட்டாயப்படுத்தாத அளவுக்குகே அவர்களைச் செயல்படத் தூண்டலாம். இது பொதுவாக, புரிந்துகொள்ளக்கூடியவையும் ஏற்றுக்கொள்ளக்கூடியவையும் பாராட்டப்படக்கூடியவையும் ஆன சிறிய வழிகளில் நிகழ்ந்தேறுகின்றன; அதில் அளவொத்த தியாகமும் பரிந்துரைக்கப்படலாம். அளவுக்கு அதிகமாக எதிர்பார்க்கும்போது நாம் ஒன்றையும் பெறுவதில்லை. குழந்தை நமது அதிகாரத்திலிருந்து விடுபடும்போது நல்லது செய்வதை நிறுத்திவிட வாய்ப்பு உள்ளது.

272. சில வேளைகளில் அறநெறி உருவாக்கம் முகச்சுழிப்பை ஏற்படுத்திவிடுகிறது. இது புறக்கணிப்பினாலோ, ஏமாற்றத்தினாலோ, பாசமின்மையாலோ, தவறான வளர்ப்பினாலோ ஏற்படும் அனுபவத்தால் வருகிறது. அறநெறி விழுமியங்கள் பெற்றோர் குறித்த எதிர்மறையான கருத்துருவங்களோடு அல்லது பெரியவர்களின் குறைபாடுகளோடு தொடர்பு கொண்டவையாகும். இந்தக் காரணத்தினால் வளரிளம்பருவத்தினர் ஒப்புமைகளை உருவாக்கிக்கொள்ள உதவி தேவை. அதாவது, சிறந்த மனிதர்கள் சிலரிடம் விழுமியங்கள் சிறந்தோங்குகின்றன என்பதையும், அவை மற்ற சில மனிதர்களில் முழுமையற்ற முறையிலும் வெவ்வேறு அளவிலும் உள்ளன என்பதையும் ஏற்றுக்கொள்ள அவர்களுக்கு உதவ வேண்டும். அதேவேளையில், அவர்களின் தயக்கம் தவறான அனுபவங்களினால் வருவது என்பதால், அவர்களின் உள்மனக் குணமாக்கல் வழிமுறையில் உதவி தேவைப்படுகிறது. இதன் வழியாகவே அவர்கள் புரிந்துகொள்வதற்கான ஆற்றலிலும், மற்றவர்களோடும் பெரிய குழுமத்திலும் அமைதியில் வாழும் ஆற்றலிலும் வளர்ச்சி பெறுகிறார்கள்.

273. விழுமியங்களை முன்வைக்கும்பொழுது நாம் மெதுவாகவே செல்லவேண்டும்; குழந்தையின் வயதையும் திறமைகளையும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும்; கடுமையான மற்றும் நெகிழ்வில்லாத வழிமுறைகளைக் கையாளத் துணியலாகாது. குழந்தைகளின் பழக்கவழக்க

மாறுபாடுகள் படிப்படியாகவே நிகழும் என உளவியல் மற்றும் கல்வி அறிவியல்களின் கண்டுபிடிப்புகள் தெரிவிக்கின்றன. சுதந்திரம் என்பது தானாகவே முதிர்ச்சியில் வளர்ச்சியை உறுதிப்படுத்துவதில்லை என்பதால், அது நெறிப்படுத்தப்பட்டுத் தூண்டப்படவேண்டும். குறிப்பிட்ட சூழலில் அமைந்துள்ள சுதந்திரம், அதாவது உண்மையான சுதந்திரம் எல்லைகள் கொண்டதும், நிபந்தனைகளுக்கு உட்பட்டதுமாகும். சுதந்திரம் என்பது வெறுமனே முழுமையான தன்னிச்சையோடு நல்லவற்றைத் தேர்ந்துகொள்வதன்று. ''தன்விருப்பச்'' செயல்களுக்கும் ''தன்னுரிமையான'' செயல்களுக்கும் இடையே உள்ள வேறுபாடு தெளிவாக வரையறுக்கப்படவில்லை. ஓர் ஆள் தெளிவாகவும், விருப்பத்தோடும் தீமையைத் தேர்ந்தெடுக்கலாம்; அதை எதிர்த்து வெல்லமுடியாப் பேரார்வத்தினாலும் தவறான வளர்ப்பினாலும் அவர் செய்கிறார். இப்படிப்பட்ட சூழல்களில், தீமையைச் செய்வதற்கான அவரது தீர்மானம் தன்விருப்பமானது என்றாலும், நடைமுறையில் அவரால் தீமையைத் தவிர்ப்பது இயலாதாகையால் இச்செயல் சுதந்திரமானதன்று. இதை நாம் மாற்றம் பெறமுடியாப் போதை அடிமைகளிடம் காணலாம். ஒரு மயக்கநிலை அவர்களுக்குத் தேவைப்படும்போது அது முழுவதும் கிடைக்கவேண்டும் என விரும்புகிறார்கள்; இருப்பினும் அந்தச் சூழலில் இந்த முடிவை எடுப்பதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலையால் அவர்கள் கட்டாயத்திற்கு உட்படுத்தப்படுகிறார்கள். அவர்களின் முடிவு தன்விருப்பமானது; ஆனால் அது தன்னுரிமையானதன்று. ''அவர்கள் சுதந்திரத்துடன் தேர்ந்தெடுத்துக் கொள்ளட்டும்'' எனச் சொல்வதில் எப்பொருளுமில்லை; ஏனெனில், உண்மையிலே அவர்களால் தேர்ந்தெடுக்க முடியாது; போதைப் பொருள்களை அவர்கள் எளிதில் அணுகும் வகைசெய்வது அவர்களிடம் இப்பழக்கம் அதிகரிக்கவே வகைசெய்யும். இவர்களுக்கு மற்றவர்களின் உதவியும் புனரமைப்பும் தேவைப்படுகின்றன.

## குடும்பவாழ்வு ஒரு கல்விச்சாலை

274. குடும்பம் மனித விழுமியங்களின் முதல் கல்விக்கூடம். இங்குத்தான் நாம் தன்னுரிமையை அறிவோடு பயன்படுத்தக் கற்றுக்கொள்கின்றோம். குழந்தைப் பருவத்தில் மனச்சார்புகள் சில வளர்ச்சி



பெறுகின்றன; அவை ஆழமாக வேரூன்றிவிடுவதால் நம்முடைய வாழ்வு முழுவதும் பதிந்துவிடுகின்றன; அவை குறிப்பிட்டதொரு விழுமியத்தின்பால் கொண்ட ஈர்ப்பாகவோ, சிலவகைச் செயல்பாடுகளுக்கு எதிரான உணர்வாகவோ இருந்துகொள்கின்றன. ஒருசிலர் ஒருவகையான முறையில் சிந்தித்துச் செயல்படுகிறார்கள்; ஏனெனில், ''நான் இப்படித்தான் கற்றுக்கொடுக்கப்பட்டேன்'' என்னும் சிந்தனையின் ஊடுருவலால், தாங்கள் அவ்வாறு சிந்தித்துச் செயல்படுவதைச் சரியென அவர்கள் எண்ணுகிறார்கள். குடும்பங்களில் பல்வேறு தொலைத்தொடர்பு சாதனங்கள் வழியாக வரும் செய்திகளை விமர்சனப் பார்வையோடு அணுகக் கற்றுக்கொள்ள வேண்டும். சில தொலைக்காட்சி நிகழ்வுகள் அல்லது விளம்பர உத்திகள் பெரும்பாலும் குடும்பங்களில் கற்றுக்கொடுக்கப்பட்ட விழுமியங்களுக்கு எதிராக எதிர்மறைத் தாக்கத்தையும் விழுமியச் சிதைவுகளையும் ஏற்படுத்துகின்றன என்பது வருந்தத்தக்க ஒன்றாகும்.

275. மன அழுத்தத்தாலும் தொழில்நுட்ப வளர்ச்சியின் வேகத்தாலும் ஆதிக்கம் செய்யப்படுகின்ற நமது காலச்சூழலில் நம்பிக்கைக் கல்வியைத் தருவது குடும்பங்களின் முக்கியப் பணிகளுள் ஒன்று. இது, குழந்தைகளை மின்னணுப் பொருட்களோடு விளையாடுவதிலிருந்து தடுப்பது எனப் பொருளாகாது; மாறாக, அவர்களுடைய விமர்சனப் பார்வை வளர்ச்சியடையவும், வாழ்வின் எல்லாவற்றிற்கும் காணொளி நிகழ்ச்சிகளை நடைமுறைப்படுத்த முடியும் என அவர்கள் எண்ணாமலிருக்கவும் அவர்களுக்கு உதவுவதற்கான வழிமுறைகளைக் கண்டுபிடிப்பதாகும். ஒருவருடைய விருப்பங்களைத் தள்ளிவைப்பதென்பது அவற்றை முற்றிலும் மறுப்பதன்று; மாறாக, அவற்றின் நிறைவேற்றத்தைத் தள்ளிப்போடுவதாகும். எப்பொழுது குழந்தைகள் அல்லது வளரிளம்பருவத்தினர் ஒருசிலவற்றிற்காகத் காத்திருக்க வேண்டும் என உணர்ந்துகொள்ளக் கற்றுக்கொடுக்கப்படவில்லையோ, அப்பொழுது அவர்கள் தங்கள் உடனடித் தேவைகளை நிறைவேற்றுவதிலேயே குறியாயிருப்பார்கள்; ''இப்பொழுதே எல்லாம் வேண்டும்'' என்னும் தீய பண்பை வளர்த்துக்கொள்வார்கள். இது ஒருவகை மருட்சியாகும். இது தன்னுரிமையை வளர்ப்பதில்லை; மாறாக, அதை வல்லமையிழக்கச் செய்கிறது. மறுபுறம், நாம் சரியான தருணம் வரை ஒருசிலவற்றைத் தள்ளிவைக்கக் கற்றுக்கொள்ளும்போது நாம் நம்மையே

வெற்றிகொள்ளும் நிலையைக் கற்றுக்கொள்கின்றோம்; நம்முடைய மனத்தூண்டுதல்களிலிருந்து விடுபட்டவர்களாகிறோம். தங்கள் வாழ்க்கைக்குத் தாங்களே பொறுப்பு என எப்பொழுது குழந்தைகள் உணர்கிறார்களோ அப்பொழுது அவர்களுடைய தன்மதிப்பு உயர்கிறது. மேலும் இது மற்றவர்களின் தன்னுரிமையை மதிக்கவும் அவர்களுக்குக் கற்றுக்கொடுக்கிறது. இது, குழந்தைகள் வயது முதிர்ந்தவர்கள்போல் நடக்கவேண்டும் என எதிர்பார்ப்பதாகப் பொருளாகாது; இது, அவர்கள் பொறுப்புள்ள தன்னுரிமையில் வளர்வதற்கான அவர்களுடைய ஆற்றலைக் குறைத்து மதிப்பிடுவதும் ஆகாது. நலமான குடும்பத்தில் இவ்வாறு கற்றுக்கொள்ளும் நடைமுறையானது பொதுவாகவே வாழ்வு நம் எல்லாருக்கும் வைக்கும் கோரிக்கைகள் வழியாகச் செயல்படுகிறது.

276. குடும்பமே சமுதாயம் சார்ந்த செயல்பாடுகளுக்கான முதன்மைக் களமாகும். ஏனெனில், இங்குத்தான் நாம் முதன்முதலாக மற்றவரோடு உறவுகொள்ளக் கற்றுக்கொள்கிறோம்; இங்குத்தான் ஒருவர் ஒருவருக்குச் செவிமடுத்துப் பகிர்ந்துகொள்ளவும், பொறுமையாக இருந்து மற்றவரை மதிக்கவும், ஒருவர் ஒருவருக்கு உதவிசெய்து ஒன்றாக வாழவும் கற்றுக்கொள்கிறோம். உலகமும் சமூகமும் நம்முடைய இல்லங்கள் என நாம் உணரவைப்பதே கல்வியின் கடமையாகும். இந்த மிகப்பெரிய குடும்பத்தில் எப்படி நாம் ஒன்றாக வாழ்வது என்பதற்கான பயிற்சியைக் கல்வி நமக்கு வழங்குகிறது. அடுத்தவரின் நெருக்கத்தையும், அடுத்தவரைக் கவனித்துக்கொள்வதையும், அடுத்தவரை மதித்தலையும் குடும்பத்தில் கற்றுக்கொள்கிறோம். நமக்குள்ளேயே மூழ்கிக்கிடக்கும் அழிவுக்குரிய நிலையை நாம் உடைத்துக்கொண்டு, நம்முடைய அக்கறைக்கும், கனிவுக்கும், பாசத்திற்கும் உரியவர்களோடு நாம் வாழ்கின்றோம் என்னும் மனநிலையைக் குடும்பத்தில்தான் நாம் பெறுகின்றோம். அருகருகே வாழ்தல் என்னும் இந்த அடிப்படையான, அன்றாட, நுட்பமான நிலையின்றி சமூகப் பிணைப்பு அமைவதில்லை. இல்வாழ்வுமுறை ஒருநாளின் பல கட்டங்களில் நம் வழக்கமான பாதைகளைக் கடந்து செல்லுதலாகும், இது நம்மைப் பாதிக்கும் எல்லாவற்றையும் குறித்து அக்கறைகொண்ட வாழ்வு முறையாகும்; இது சாதாரண, சிறிய செயல்களைக் கொண்டு ஒருவர் ஒருவருக்குக் குடும்பத்தில் உதவிசெய்து வாழ்தலாகும். ஒவ்வொரு நாளும் குடும்பம் தன் உறுப்பினர்களைப் புதிய வழிகளில் பாராட்டவும் அவர்களை ஏற்றுக்கொள்ளவும் செய்ய வேண்டும்.



277. நம்முடைய நுகர்வுப் பழக்கங்களை மறுசிந்தனை செய்யவும், சுற்றுச் சூழலை நம்முடைய பொது இல்லமாகக் கருதி அதனைப் பாதுகாக்கவும் நாம் நம்முடைய குடும்பங்களில்தான் கற்றுக்கொள்கிறோம். “குடும்பம்தான் ஒருங்கிணைந்த வாழ்க்கைச் சூழலின் முதன்மையான செயலியாகும்; ஏனெனில் அதுவே தோழமை, இனப்பெருக்கம் ஆகிய இரு மெய்ம்மைகளின் அடிப்படையாக உள்ளது.”[294] அதுபோலவே, குடும்ப வாழ்வில் ஏற்படும் இடுக்கண்களும் சிக்கல்களும் முக்கியமான படிப்பினையை நமக்குக் கற்றுத்தரலாம். எடுத்துக்காட்டாக, இது நோயுறும் வேளையில் நடைபெறுகிறது; ஏனெனில் குடும்பங்களில்கூட நோய் வந்துற்றால் மனித வலுக்குறைவின் காரணமாகச் சிக்கல்கள் ஏற்படுகின்றன. ஆனால் பொதுவாக, “குடும்ப உறுப்பினர் நோயுறும் தருணங்கள் குடும்பப் பிணைப்பு உறுதிபடத் துணைநிற்கின்றன... மனிதருக்கு ஏற்படும் நோய் குறித்து ஒருவரிடம் பரிவுணர்வை ஏற்படுத்துவதற்குக் கல்வி தவறுமானால் அது இதயத்தைக் கடினப்படுத்துகிறது; அது அடுத்தவரின் துன்பம் குறித்து இளைஞர்களை உணர்ச்சியற்றவர்களாக மாற்றுகிறது; அது துன்பத்தைச் சந்திப்பதற்கும், மனிதக் குறைபாடுகளுடன் வாழும் அனுபவத்தைக் கொள்வதற்கும் அவர்களை வல்லமையற்றவர்களாக அது மாற்றுகிறது.”[295]

278. தொலைத் தொடர்பு மற்றும் பொழுது போக்கு ஊடகத்தின் செயற்கையான வளர்ச்சியானது பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் இடையேயான கல்வி முறைக்கு உதவியாகவோ தடையாகவோ அமையலாம். ஊடகத்தைச் சரியான முறையில் பயன்படுத்தினால், அது தொலைவில் வாழும் குடும்ப உறுப்பினர்கள் இணைந்திருப்பதற்கு உதவலாம். அடிக்கடி கொள்ளும் உறவுகள் சிக்கல்களை வெற்றிகொள்ள உதவுகின்றன.[296] எனினும் உடனிருப்பு, அடுத்தவர் குரலை நேரடியாகக் கேட்டல் ஆகியன தேவைப்படும் ஆள்சார்ந்த நேரடி உரையாடலுக்கு ஊடகம் மாற்றாக அமையாது என்பது தெளிவு. ஊடகச் சாதனங்கள் சிலநேரம் குடும்ப உறுப்பினர்களை ஒன்றுசேர்ப்பதற்குப் பதிலாகப் பிரித்து வைக்கலாம் என்பதை நாமறிவோம். இரவு உணவின்போது ஒவ்வொருவரும் ஓர் அலைபேசியில் முழ்கியிருந்தாலோ, தம்பதிகளில் ஒருவர் மின்னணுக்

கருவியில் வெகுநேரம் மூழ்கியிருக்க மற்றவர் காத்திருந்து, பின் தூங்கிவிட்டாலோ இத்தகு நிலை ஏற்படுகிறது. குடும்பங்கள் உரையாடலை ஊக்கப்படுத்தும் வகையில் கலந்தாய்வு செய்து இச்சிக்கலுக்குத் தீர்வு காணவேண்டும். ஆயினும் இதில் நடைமுறைக்கு ஒவ்வாத தடைகளை விதித்தலாகாது. எப்படியும், ஊடகத்தின் இத்தகு புதிய வடிவங்களால் குழந்தைகளுக்கும் வளரிளம் பருவத்தினருக்கும் வரும் ஆபத்தை நாம் கவனியாது இருத்தலாகாது; சிலநேரம் அவை அவர்களில் உணர்ச்சியின்மையை ஏற்படுத்தி, நடைமுறை உலகிலிருந்து அவர்களைப் பிரித்துவிடுகின்றன. தொழில்நுட்ப முறையிலான இத்தகு பிரித்தல் என்பது, அவர்களுடைய தனிப்பட்ட வாழ்வில் தன்னல நோக்குடன் நுழைந்து அவர்களைச் சூழ்ச்சியாய்க் கையாளுகிறவர்களிடம் ஒப்படைத்துவிடுகிறது.

279. பெற்றோர் மேலாதிக்கம் செய்வது நல்லதன்று. பெற்றோரை மட்டுமே நம்பமுடியும் எனப் பிள்ளைகள உணரவைக்கப்படும் போது, சமூக ஈடுபாடு போதிய அளவு ஏற்படவும், உணர்வுப் பூர்வமான முதிர்ச்சி ஏற்படவும் தடை ஏற்படுகிறது. பரந்துபட்ட காரியங்களில் பெற்றோருக்கு இருக்கவேண்டிய தொடர்பு வளமாக்கப்பட வேண்டும். இதற்குக் ''கிறிஸ்தவச் சமூகங்கள் குடும்பங்களின் கல்விப் பணிக்கு உதவிசெய்திடுமாறு அழைக்கப்படுகின்றன.''[297] குறிப்பாக, கிறிஸ்தவப் புகுமுகச் சடங்குகளுடன் தொடர்புடைய மறைக்கல்வி வழியாக இந்த உதவி செய்யப்பட வேண்டும். ஒருங்கிணைந்த கல்வியை ஊக்கப்படுத்துவதற்கு நாம், ''குடும்பத்திற்கும் கிறிஸ்தவச் சமூகத்திற்கும் இடையேயான உடன்படிக்கையைப் புதுப்பிக்க வேண்டும்.''[298] கத்தோலிக்கப் பள்ளிகளின் பங்கை ஆயர்பேரவை வலியுறுத்திக் கூற விழைந்துள்ளது. ''அவை பெற்றோர் தங்கள் பிள்ளைகளை வளர்ப்பதற்கு முக்கிய பங்கை ஆற்றுகின்றன... மாணவர்கள் முதிர்ச்சியடைந்த மனிதர்களாய் வளர்ந்தோங்குவதற்குப் பொறுப்பு கொண்ட பள்ளிகளின் பணி ஊக்கப்படுத்தப்பட வேண்டும். இதன்மூலம் மாணவர்கள் இயேசுவின் அன்பு வழியாக உலகைப் பார்க்கவும், வாழ்வு என்பது கடவுளுக்குத் தொண்டாற்றுவதற்கான அழைப்பு என்பதைப் புரிந்துகொள்ளவும் வேண்டும்.''[299] இதனால்தான், ''திருஅவை தனது ஆசிரியத்தைச் செயல்படுத்துவதற்கான தன்னுரிமையையும், கல்வியளிப்போர் மனப்பூர்வமாக எதிர்ப்பதற்கு உள்ள உரிமையையும் உறுதிசெய்கிறது.''[300]



## பாலியல் கல்வியின் தேவை

280. குழந்தைகளும் வளரிளம் பருவத்தினரும் வயதில் வளர வளர, ''ஆக்கப்பூர்வமாகவும் கவனத்தோடும் அளிக்கப்படும் பாலியல் கல்வியினைப்'' பெறவேண்டியதன் தேவையினை இரண்டாம் வத்திக்கான் சங்கம் எடுத்துரைக்கிறது. ''உளவியல் கல்விமுறை இயல், செயல்முறைப் போதனை இயல் ஆகியவற்றின் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கு இத்தகு கல்வி அளிக்கப்பட வேண்டும்'' எனச் சங்கம் கூறுகிறது.[301] இச்சவாலை நம்முடைய கல்வி நிறுவனங்கள் ஏற்றுக்கொண்டுள்ளனவா என நாம் நம்மையே கேட்டுக் கொள்ள வேண்டும். பாலியல்பு சிறுமைப்படுத்தப்பட்டு வலுவற்றதாக்கப்பட்டுள்ள இக்காலத்தில் பாலியல் கல்வி குறித்த சிக்கலை அணுகுவது எளிதானதன்று, அன்பு, ஒருவருக்கொருவர் தற்கையளிப்பு ஆகியவற்றிற்கான கல்வி என்னும் பரந்துபட்ட வட்டத்தில்தான் இதனைக் காணமுடியும். இத்தகு முறையால் பாலியல் குறித்த மொழியானது வறுமையுற்ற ஒன்றாகக் கருதப்படாமல், ஒளியூட்டப் பெற்றதாகவும் வளமூட்டப் பெற்றதாகவும் ஆகிறது. பாலியல் தூண்டல் என்பது தன்னறிவு, தன்னடக்கம் ஆகியவற்றின் வளர்ச்சிக்கான பயிற்சி வழியாக இயக்கப்படலாம். அவை மகிழ்வு, அன்பான சந்திப்பு ஆகியவற்றிற்கான மதிப்புவாய்ந்த ஆற்றல்களை வளர்க்கும் வல்லமை கொண்டவையாகும்.

281. குழந்தைகளும் இளைஞர்களும் இன்னும் முழு முதிர்ச்சியை அடையவில்லை என்பதை மனத்தில் வைத்துப் பாலியல் கல்வி மூலம் தரவுகள் தரப்படவேண்டும். இத்தகு தரவுகள் உரிய காலக்கட்டத்தில், வயதிற்கு ஏற்ற முறையில் வழங்கப்பட வேண்டும். புதிய கருத்துகள், பரிந்துரைகள் ஆகியவற்றின் கடுந்தாக்கத்தையும், எளிதாய்க் கிடைக்கும் ஏராளமான ஆபாசப் படங்களையும், பால்தன்மையையே முடமாக்கும் ஏராளமான புறந்தூண்டுதல்களையும் அணுகும் விமர்சனப் பார்வையை உருவாக்குவதற்கு உதவாமல் அவர்களை பல்வேறு தரவுகளால் மூழ்கடிப்பது பயன்தராது. முதிர்ச்சி நோக்கிய தங்கள் வளர்ச்சிக்கு உதவாத செய்திகளால் தாங்கள் தாக்கப்படுவதை இளைஞர்கள் உணரவேண்டும். அவர்கள் தங்களுக்கு நலம்பயக்கும் ஆற்றல் கூறுகளை அடையாளம் கண்டு, அவற்றைத் தேடுவதற்கு நாம் உதவ வேண்டும்; அதே நேரம் அன்பிற்கான தங்கள் ஆற்றலை முடமாக்கும் காரியங்களை அவர்கள் தவிர்த்து

ஒதுக்குவதற்கும் உதவ வேண்டும். ''குழந்தைகளுக்கும் வளரிளம் பருவத்தினருக்கும் பாலியல் குறித்த காரியங்களை அறிமுகப்படுத்தும்போது நமக்குப் புதிய, பொருத்தமான மொழி ஒன்று'' தேவைப்படுகிறது என்பதையும் நாம் உணரவேண்டும்.[302]

282. பாலியல் கல்வி தன்னடக்கம் குறித்த நலமான உணர்வை வளர்க்கிறது; ஒரு சிலர் இன்று தன்னடக்கத்தைக் கடந்த காலத்தின் வெறும் எச்சமே என எவ்வளவுதான் கருதினாலும் இது உண்மையே. தன்னடக்கம் என்பது நாம் நம்முடைய அந்தரங்கத்தைத் தற்காத்துக்கொள்ளவும், நாம் மற்றவர்களால் பொருள்களாகப் பயன்படுத்தப்படும்படி மாறிவிடாமலிருக்க நம்மையே தடுத்துக்கொள்ளவும் உதவும் இயற்கையான வழிமுறையாகும். தன்னடக்கம் குறித்த உணர்வு இல்லையேல், பாசம் மற்றும் பாலியல்பு என்பன பிறப்புறுப்புகள் குறித்த உணர்வினால் அலைக்கழிக்கப்படுவதாகவே இருக்கும்; மேலும் அது அன்புசெலுத்துவதற்கான நம்முடைய ஆற்றலை உருச்சிதைக்கும் நலமற்ற நடத்தையாகவும் இருக்கும்; அத்துடன் அது மனிதத்தன்மையற்ற செயல்பாட்டிற்கு இட்டுச்செல்வதோடு மற்றவர்களைக் காயப்படுத்துவதற்குக் காரணமும் ஆகும் பாலியல் வன்முறையின் கூறுகளையும் கொண்டிருக்கும்.

283. பாலியல் கல்வி என்பது ''பாதுகாப்பான பாலியல் செயல்'' வழியாகக் கொண்டிருக்கும் ''பாதுகாப்பு'' என்பதையே அடிக்கடி முதன்மையாகப் பேசுகிறது. இத்தகு கருத்துப் பதிவு பால் தன்மையின் இயல்பான குழந்தைப் பேற்றைக் குறித்து எதிர்மறையான மனப்பாங்கை வெளிப்படுத்துகிறது; எதிர்பாராமல் பிறந்துவிடுகிற குழந்தை என்பது நாம் விலகியிருக்க வேண்டிய எதிரி என்பதுபோல் ஆகிவிடுகிறது. இத்தகு சிந்தனை தற்காதலையும், குழந்தையை ஏற்றுக்கொள்ளுதலுக்குப் பதிலாக அதை அழிக்கத் தேடுதலையும் ஊக்குவிக்கின்றது. வளரிளம் பருவத்தினர் திருமணத்திற்கே உரிய முதிர்ச்சியையும், விழுமியங்களையும், ஒருவர் மற்றவருக்கான அர்ப்பணத்தையும், குறிக்கோள்களையும் கொண்டிருக்கிறார்கள் என எண்ணி, அவர்களைத் தங்கள் உடல்களோடு விளையாட ஊக்குவிப்பது பொறுப்பற்ற செயலாகும். இது, அவர்கள் தங்கள் தேவைகளையும் குறைபாடுகளையும் நிறைவு செய்வதற்கு மற்றவர்களைக் கருவிகளாகப் பயன்படுத்துவதற்குக் களிப்புடன் முனைவதில் முடிகிறது. முக்கியமான



காரியம் எதுவெனில், அன்பு, ஒருவர் ஒருவருக்கான கரிசனை, அன்பான மரியாதை, ஆழமான பொருளுள்ள தொடர்பு ஆகியவற்றின் பல்வேறு வெளிப்பாடுகளைக் குறித்த உணர்வை அவர்களுக்குக் கற்றுக்கொடுப்பதே. இவையெல்லாம் அவர்களை முழுமையான, தாராளமான தற்கையளிப்பிற்குத் தயார்செய்கின்றன; அத்தற்கையளிப்பு, வெளிப்படையாக மேற்கொள்ளும் அர்ப்பணத்திற்குப்பின் தங்கள் உடல்களையே கொடையாகத் தருவதில் வெளிப்படுகிறது. இவ்வாறு, திருமணத்தில் அரங்கேறும் பாலியல் உறவு எல்லாவற்றையும் உள்ளடக்கிய அர்ப்பணத்தின், அதற்கு முந்திய எல்லாவற்றினாலும் வளமூட்டப்பட்ட அர்ப்பணத்தின் அடையாளமாக அமைகிறது.

284. இளையோர் மெய்ம்மையின் இரு குழப்பமான களங்களால் ஏமாற்றப்படலாகாது. ''பாலியல் ஈர்ப்பு என்பது, அந்த நேரத்தில், இணைந்த நிலை என்னும் மயக்கத்தை ஏற்படுத்துகிறது; இருப்பினும் அன்பு இல்லையேல், இந்த இணைவு அன்னியரை முன்பிருந்ததைவிட மேலும் அன்னியராக்குகின்றது.[303] உடலின் மொழிக்கு உண்மையான தற்கையளிப்பு குறித்த பார்வையோடு விருப்பங்களைப் பொருள்கொண்டு செயல்படுத்துவதைக் கற்றுக்கொள்ளும் பொறுமையான பயிற்சி வேண்டும். நாம் எல்லாவற்றையும் ஒரே நேரத்தில் வழங்குவதாக எண்ணிக் கொள்ளும்போது நாம் எதையுமே வழங்காதவர்களாக இருப்போம். இளையோர் எந்தளவிற்கு வலுக்குறைந்தோராயும் தடுமாறுவோராயும் இருப்பர் என்பதைப் புரிந்து கொள்வது ஒன்று; அவர்கள் அன்பை வெளிப்படுத்துவதில் தொடர்ந்து முதிர்ச்சியற்றோராய் இருப்பதை ஊக்கப்படுத்துதல் என்பது முற்றிலும் வேறானதொன்று. ஆயினும் இன்று இவற்றைக்குறித்து யார் பேசுகிறார்கள்? இளையோரை இன்று யார் ஒரு பொருட்டாய்ப் பார்க்கிறார்கள்? சிறப்பான, தாராளமான அன்பிற்கு அவர்கள் தங்களைக் கருத்தாய்த் தயாரிப்பதற்கு அவர்களுக்கு உதவுபவர்கள் யார்? பாலியல் கல்வியைப் பொறுத்தவரை, பெரும்பான்மையும் ஊசலாட்டமாகவே உள்ளது.

285. பாலியல் கல்வி என்பது வேறுபாடுகளை மதிப்பதையும், பாராட்டுவதையும் கற்றுத்தருவதை உள்ளடக்கி இருக்க வேண்டும்; இது இளையோர் தங்களுக்குள் மூழ்கிக்கிடக்காமல் வெளியேறி, மற்றவர்கள் பால் திறந்த மனத்துடன் இருந்து, அவர்களை ஏற்றுக்கொள்ளுவதற்கு உதவுவதாக

அமைய வேண்டும். தனிமனிதர்கள் சந்திக்கும் இயல்பான சிக்கல்கள் உள்ளன. அவற்றிற்கும் மேலாக, இளைஞர்கள் தங்கள் உடலை,அது படைக்கப்பட்ட முறையில் ஏற்றுக்கொள்ள உதவவேண்டும். ஏனெனில், ''நம்முடைய சொந்த உடல்களின்மேல் நமக்கு முழு வல்லமை உள்ளது என எண்ணுவது பெரும்பாலும் நமக்குப் படைப்பின்மேல் முழு வல்லமை உள்ளது என எண்ணுவதற்கு மறைமுகமாகத் தள்ளிவிடுகிறது... நம்முடைய உடல் ஆண்பாலாகவோ பெண்பாலாகவோ உள்ளது என்பதை ஏற்றுக்கொள்ளுதல் என்பது நம்மிலிருந்து மாறான வேறு ஆள்களைச் சந்திக்கும்போது நம்மைக் குறித்த தன்னறிவு கொள்வதற்குத் தேவையானதே. இதன் வழியாக, படைத்தவராம் கடவுளால் உருவாக்கப்பெற்ற அடுத்த ஆண் அல்லது பெண்ணின் சிறப்புக் கொடைகளை மகிழ்வோடு ஏற்றுக்கொண்டு, ஒருவருக்கொருவர் வளமூட்டுகிறோம்.''[304] நாம் மற்றவரிடமிருந்து வேறுபட்டிருக்கிறோமே என்னும் அச்சத்திலிருந்து விடுபட்டால்தான், நாம் நம்மையே மையப்படுத்துவதிலிருந்தும், நமக்குள் மூழ்கிக்கிடப்பதிலிருந்தும் விடுபட இயலும். பாலியல் கல்வியானது இளையோர் தங்கள் உடலை ஏற்றுக்கொள்ளத் துணைபுரிய வேண்டும். அத்துடன், ''பாலியல் வேறுபாட்டைக் கையாளத் தெரியாததால் அதைக் களைந்துவிட முயலும்''[305] உரிமைகோரலைத் தவிர்க்கவும் உதவவேண்டும்.

286. நாம் ஆணாகவோ பெண்ணாகவோ வடிவமைக்கப்பட்டிருப்பது வெறுமனே உயிரியல் மற்று மரபுவழிக் கூறுகளின் விளைவன்று என்னும் உண்மையை மறந்துவிடலாகாது. ஆனால் மனப்போக்கு, குடும்ப வரலாறு, பண்பாடு, பட்டறிவு, கல்வி, நண்பர்களின் தாக்கம் ஆகியவற்றுடனும், குடும்ப உறுப்பினர்கள் மற்றும் மதிப்பிற்குரிய ஆள்களுடனும், பிற உருவாக்கச் சூழல்களுடனும் தொடர்புடைய பல்வேறு கூறுகளால் நாம் அவ்வாறு வடிவமைக்கப்பட்டிருக்கிறோம். கடவுளின் படைப்பினின்று நாம் ஆண்பாலையும் பெண்பாலையும் பிரிக்க இயலாது என்பது உண்மை, அப்படைப்பு நம்முடைய எல்லா முடிவுகளுக்கும் அனுபவங்களுக்கும் முந்தியதாக உள்ளது; அதில் அமைந்துள்ள உயிரியல் கூறுகளை நாம் புறக்கணிக்கவே இயலாது. ஆனால் ஆண்பால், பெண்பால் என்பவை இறுக்கமான வகைகள் அல்ல என்பதும் உண்மையே. எடுத்துக்காட்டாக,



கணவன் ஆண்பாலுக்குரிய முறையில் செயல்படுவது மனைவியின் வேலை அட்டவணைக்கு ஏற்ப நெகிழ்வுத்தன்மையுடன் மாற்றியமைக்கப்படலாம். வீட்டு வேலைகளைச் செய்தல் அல்லது குழந்தை வளர்ப்பில் ஒருசில காரியங்களைக் கவனித்துக்கொள்ளுதல் கணவனுடைய ஆண்தன்மைக்குக் குறைபாட்டைக் கொண்டுவருதலன்று; அது தோல்வியையும் பொறுப்பின்மையையும் சுட்டுவதன்று; அது வெட்கத்திற்குக் காரணமாக அமைவதுமில்லை. தந்தையின் மாண்பைக் குறைக்காத இத்தகு நலமான ''பரிமாற்றங்கள்'' இயல்பானவையே எனக் குழந்தைகள் ஏற்றுக்கொள்வதற்கு அவர்களுக்கு உதவ வேண்டும். இறுக்கமான அணுகுமுறை ஆண்மை அல்லது பெண்மைக்கு அதிக அழுத்தம் கொடுக்கிறது; அது திருமணத்தின் உண்மையான வரையரைகளில் பொதிந்துள்ள மெய்யான கொண்டுகொடுப்புப் பாங்கினைக் குழந்தைகளும் இளையோரும் பாராட்டுவதற்கு உதவாது. இத்தகு இறுக்கமான நிலை தன் பங்குக்கு ஒருவருடைய திறமைகளின் வளர்ச்சிக்குத் தடையாகவும் அமையும். எடுத்துக்காட்டாக, கலை மற்றும் நடனத்தைக் கற்றுக்கொள்வது உண்மையில் ஆண்பாலுக்குரியதன்று என ஓர் ஆணும், தலைமைத்துவத்தை வெளிப்படுத்துவது பெண்பாலுக்குரியதன்று என ஒரு பெண்ணும் எண்ணுமளவுக்கு அவர்களைக் கொண்டு சென்றுவிடும். கடவுளருளால் இத்தகு மனப்பாங்கு இன்று மாறியுள்ளது. ஆயினும் சில இடங்களில் இது பற்றிய தெளிவில்லாத சிந்தனையால் சட்டப்பூர்வ தன்னுரிமை கட்டுப்படுத்தப்படுகிறது; குழந்தைகளின் தனித்துவ அடையாளம், உள்ளார்ந்த ஆற்றல் ஆகியவற்றின் உண்மையான வளர்ச்சி தடுக்கப்படுகிறது.

## இறைநம்பிக்கையை வழங்குதல்

287. குழந்தை வளர்ப்பு சரியான முறையில் இறைநம்பிக்கையை வழங்குவதற்கு அழைப்பு விடுக்கிறது. இது இன்றைய நடைமுறை வாழ்க்கை முறையால், வேலை அட்டவணையால், உயிர்வாழ்வதற்காக வெறிகொண்ட வேகம் காட்டும் மக்கள் வாழும் உலகின் உட்சிக்கல்களால் கடினமானதாக ஆகிவிட்டது.[306] இருப்பினும், இல்லம் என்பது இறைநம்பிக்கையின் பொருளையும் அழகையும் பாராட்டவும், இறைவேண்டல் செய்திடவும்,

அடுத்தவர்களுக்குத் தொண்டாற்றிடவும் கற்றுக்கொள்ளும் இடமாகத் தொடர்ந்து இலங்கவேண்டும். இது திருமுழுக்கில் தொடங்குகிறது. புனித அகுஸ்தீன் கூறியதற்கிணங்க, திருமுழுக்கிற்குக் குழந்தைகளைக் கொண்டுவரும் அன்னையர் ''புனித பிறப்பில் ஒத்துழைக்கின்றனர்''.[307] இவ்வாறு அந்தப் புதிய வாழ்வில் வளர்ச்சியின் பயணம் தொடங்குகிறது. இறைநம்பிக்கை என்பது திருமுழுக்கில் நாம் பெற்றுக்கொண்ட கடவுளின் கொடையே தவிர நம்முடைய செயலன்று; இருப்பினும் அக்கொடை வளரவும் மேம்படவும் கடவுள் பெற்றோரையே கருவிகளாகப் பயன்படுத்துகின்றார். எனவே, ''அன்னையர், தங்கள் மழலைகள் இயேசுவுக்கோ, அன்னை மரியாவுக்கோ பறக்கும் முத்தம் ஒன்று கொடுக்கக் கற்றக்கொடுப்பது அழகானது. அதில் எவ்வளவோ அன்பு உள்ளது. அந்நேரத்தில் குழந்தையின் இதயம் இறைவேண்டலின் இடமாக மாறுகிறது.''[308]

இறைநம்பிக்கையை வழங்குவது என்பது பெற்றோர் தாங்களே கடவுளில் உண்மையான முறையில் பற்றுக் கொண்டிருப்பது, அவரைத் தேடுவது, தங்களுக்குக் கடவுள் தேவை என்பதை உணர்ந்திருப்பது ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். இதன் மூலமாகவே, ''ஒரு தலைமுறை அடுத்த தலைமுறைக்கு உம் செயல்களைப் புகழ்ந்துரைக்கும். வல்லமை மிகு உம் செயல்களை எடுத்துரைக்கும்'' (திபா 145:4). மேலும், ''தந்தையர் தம் பிள்ளைகளுக்கு உமது வாக்குப்பிறழாமை குறித்துப் போதிப்பர்'' (எசா 38:19). இதன் பொருள் யாதெனில், கடவுள் அவர்களுடைய இதயங்களில் செயலாற்றுமாறு நாம் அவரை வேண்டவேண்டும்; நாம் செல்லமுடியாத இடங்களில் எல்லாம் அவர் செயலாற்றிட வேண்ட வேண்டும் என்பதே. கடுகுவிதை சிறியதாயினும் வளர்ந்து பெரிய மரமாகிறது (காண் மத் 13:31–32); இது நம்முடைய செயல்களுக்கும் அவற்றின் விளைவுகளுக்கும் இடையே உள்ள இயைபுப் பொருந்தாமையை நாம் கண்டுகொள்ளக் கற்றுத் தருகிறது. இக்கொடையை நாம் சொந்தமாக்கிக் கொள்ளவில்லை என்பதை நாம் அறிவோம்; ஆனால் அதைக் காப்பாற்றும் பொறுப்பு நம்மேல் சுமத்தப்பட்டுள்ளது என்பதையும் அறிவோம். இருப்பினும் நம்முடைய படைப்பாற்றல் கொண்ட அர்ப்பணமே ஒரு கொடையாக உள்ளது; அது கடவுளுடைய திட்டத்திற்கு நாம் ஒத்துழைப்புக் கொடுக்க வைக்கிறது. இதன் காரணமாகவே, ''தம்பதியரும் பெற்றோரும் மறைக்கல்வியின் செயலூக்கமுள்ள பணியாளர்கள் எனத் தகுந்த விதத்தில் கருதப்படவேண்டும்... தாங்கள் தங்களுடைய குடும்பத்தின் நற்செய்திப் பணியாளர்கள் என்னும் முறையில் ஆற்றவேண்டிய பணியினை இளம்பெற்றோர் அறிந்திருக்க வேண்டும். இதற்கு அவர்களைப் பயிற்றுவிப்பதற்குக் குடும்ப மறைக்கல்வி ஆற்றலுள்ள வழிமுறையாக இருந்து மிகவும் உதவிசெய்கிறது.''[309]

288. இறைநம்பிக்கைக்கான கல்வி வழங்குதல் என்பது ஒவ்வொரு குழந்தைக்கும் ஏற்பத் தழுவியமைக்கப்படவேண்டும்; ஏனெனில், பழைய வழிமுறைகளும் குறிப்புகளும் எப்பொழுதும் பயன் தந்துவிடுவதில்லை. குழந்தைகளுக்கு அடையாளங்களும், செயல்களும், கதைகளும் தேவை. வளரிளம் பருவத்தினர் வழக்கமாக அதிகாரத்துடனும் விதிமுறைகளுடனும் மோதுவார்கள்; அவர்களுக்கு இறைநம்பிக்கையுடன் ஏற்படும் அனுபவத்தை ஊக்கப்படுத்துவது சிறந்ததாகும்; அவர்களுக்குக் கவர்ச்சியான சான்றுகளை வழங்க வேண்டும்; அவை தங்கள் இயல்பான அழகினால் அவர்களை ஈர்த்துவிடும். தங்களுடைய பிள்ளைகளின் இறைநம்பிக்கையைப் பேணிவளர்த்திட ஆர்வம் கொண்டுள்ள பெற்றோர் அவர்களுடைய வளர்ச்சியின் பாணியைக் குறித்து அக்கறை கொண்டுள்ளார்கள்; ஏனெனில், ஆன்மிக அனுபவம் என்பது திணிக்கப்படுவதன்று, மாறாக, சுதந்திரமாய்ப் பரிந்துரைக்கப்படுவது என்பதை அவர்கள் அறிவார்கள். தங்கள் பெற்றோர் இறைவேண்டலை உண்மையிலேயே இன்றியமையாததாகக் கருதுகிறார்கள் என்பதையும் பிள்ளைகள் கண்டுகொள்வது அவசியமானது. எனவே, நற்செய்திப் பணிக்குக் குடும்ப இறைவேண்டல், பக்திமுயற்சிகள் ஆகியவை மறைக்கல்வி வகுப்பையோ, மறையுரையையோ விட அதிகம் ஆற்றலுள்ளவையாக இருக்கின்றன. புனித மோனிக்கா இறைவேண்டல் செய்ததைப் போன்று, கிறிஸ்துவிடமிருந்து அகன்று சென்றுவிட்ட தங்கள் பிள்ளைகளுக்காகத் தொடர்ந்து இறைவேண்டல் செய்திடும் அன்னையர் யாவருக்கும் நான் இவ்விடத்தில் என் தனிப்பட்ட நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

289. இறைநம்பிக்கையின் வெளிப்படுத்துதல் அதன் வளர்ச்சி ஆகியவற்றை எளிதாக்கும் வண்ணமாக, இறைநம்பிக்கையைக் குழந்தைகளுக்கு வழங்குதல் என்பது முழு குடும்பத்திற்கும் அதன்

நற்செய்திப் பணியில் உதவுகிறது. இப்பணி இயல்பாகவே அவர்களைச் சூழ்ந்துள்ளவர்களுக்கும், குடும்ப வட்டத்திற்கு வெளியே உள்ளவர்களுக்கும் இறைநம்பிக்கையைப் பரப்பிடத் தொடங்குகிறது. நற்செய்திப் பணி ஆற்றும் குடும்பங்களிலுள்ள பிள்ளைகள் பெரும்பாலும் நற்செய்திப் பணியாளர்களாகவே மாறுகின்றார்கள். அன்புமிக்க, நட்பான குடும்பங்களில் வளரும் அவர்கள், தாங்கள் வளர்க்கப்பட்டவாறே உலகத்துடன் உறவை ஏற்படுத்திக்கொள்ளக் கற்றுக்கொள்கிறார்கள்; இதில் அவர்கள் தங்கள் நம்பிக்கையையோ உறுதிப்பாட்டையோ விட்டுவிடுவதில்லை. இயேசுவே பாவிகளோடு சேர்ந்து உண்டார், குடித்தார் (காண் மற்; 2:16; மத் 11:19); அவர் சமாரியப் பெண்ணுடன் உரையாடினார் (காண் யோவா 4:7-26); இரவில் நிக்கதேமை வரவேற்றார் (காண் யோவா 3:1-21); பாவியான பெண் ஒருவர் தம்முடைய காலடிகளில் நறுமணத் தைலம் பூச அனுமதித்தார் (காண் லூக் 7:36-50); நோயாளர்களின்மேல் தம்முடைய கைகளை வைக்கத் தயங்கவில்லை (காண் மாற் 1:40-45; 7:33). இவற்றையெல்லாம் நாம் அறிவோம். இத்தகைய செயல்பாடுகளை அவருடைய திருத்தூதர்களும் செய்தார்கள்; அவர்கள் யாரையும் குறைத்து மதிப்பிடவில்லை. அவர்கள் சிறிய, மேட்டிமையான குழாம்களில் சேர்ந்துகொண்டு, தங்கள் மக்களுடைய வாழ்வினின்று பிரிந்து நிற்கவில்லை. அதிகாரிகள் அவர்களுக்குத் தொல்லை கொடுத்தாலும், ''எல்லா மக்களுடைய நல்லெண்ணத்தையும் பெற்றிருந்தார்கள்'' (திப 2:47; காண் 4:21, 33; 5:13).

290. ''இவ்வாறு, குடும்பம் வெளிப்படையாய் நற்செய்தி அறிவிப்பதன் வழியாக அருள்பணியின் இயக்கியாக விளங்குகிறது; அது சான்று வாழ்வின் பல்வேறு வடிவங்களை மரபுக்கொடையாக வழங்குவதன் வழியாகவும் மேற்சொன்னவாறு விளங்குகிறது. அத்தகு சான்று வாழ்வின் வடிவங்களாக ஏழையருடன் கொள்ளும் தோழமையும், பலதரப்பட்ட மக்களிடம் காட்டும் திறந்த மனமும், படைப்பைப் பாதுகாத்தலும், மற்றக் குடும்பங்களுடன், சிறப்பாக அதிகத் தேவையில் உழல்வோருடன் கொள்ளும் அறநெறி சார்ந்த மற்றும் பொருள்சார்ந்த தோழமையும் விளங்குகின்றன. மேலும் பொதுநன்மையை வளர்ப்பதிலும், அநீதியான சமூக அமைப்புகளை மாற்றுவதிலும் காட்டும் அர்ப்பணமும் அதன் வடிவமாகும். அவை குடும்பம் வாழும் பகுதியில் இவ்வுலக வாழ்வு சார்ந்த மற்றும் ஆன்மிகம் சார்ந்த இரக்கச்



செயல்களைச் செய்வதன் வழியாகத் தொடங்குகின்றன.''[310] இவை அனைத்தும் நம்மை வழிநடத்திக் காக்கும் தந்தையின் அன்பில் நாம் வைத்திருக்கும் ஆழமான கிறிஸ்தவ நம்பிக்கையின் வெளிப்பாடாகும். அவ்வன்பு இயேசு கிறிஸ்துவின் முழுத் தற்கையளிப்பில் வெளிப்பட்டது; அவரோ இன்றும் நம்மிடையே வாழ்ந்து, நம் வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் தாக்கும் புயல்களை நாம் எதிர்கொள்ள நமக்கு ஆற்றல் வழங்குகிறார். எல்லாக் குடும்பங்களிலும் நற்செய்தி எதிரொலித்துக் கொண்டே இருக்கவேண்டும்; நல்ல நேரத்திலும் துன்ப நேரத்திலும் நம் பாதையில் ஒளிதருவதாக அது அமைய வேண்டும். குடும்ப வாழ்வின் அனுபவத்தினால் நாம் எல்லாருமே இவ்வாறு சொல்ல இயலவேண்டும்: ''கடவுள் நம்மிடம் கொண்டுள்ள அன்பை அறிந்துள்ளோம்; அதை நம்புகிறோம்'' (1யோவா 4:16). இத்தகு அனுபவத்தின் அடிப்படையிலேயே திருஅவையின் குடும்பங்களுக்கான அருள்பணி அவற்றிற்கு ஆற்றல் அளித்து, அவை இல்லத் திருஅவைகளாகவும், சமூகத்தில் நற்செய்திப் பணியின் புளிப்புமாவாகவும் இலங்க முடியும்.

# அலகு – 8

# உடன்பயணித்தல், வலுவின்மையைத் தெளிந்து தேர்ந்து ஒருங்கிணைத்தல்

291. திருமண உடன்படிக்கையில் ஏற்படும் எவ்வித முறிவும் ''இறைவனின் திருவுளத்திற்கு எதிரானது'' என்று திருஅவை உணர்ந்திருக்கிறது. மேலும் ''பெரும்பாலான தன் குழந்தைகளின் வலுவின்மையையும் அது அறிந்திருக்கிறது'' என்று மாமன்றத் தந்தையர்கள் குறிப்பிடுகின்றனர்.[311] இயேசு கிறிஸ்துவின் பார்வையால் ஒளி பெற்றுள்ளது இத் திருஅவை. ''நல்லதைச் செய்ய வலுவைப் பெறவும், அன்பில் ஒருவர் மற்றவர்மீது அக்கறை கொள்ளவும், தாங்கள் வாழும் சமுதாயத்தில் பணிபுரியவும் தேவையான இறையருள் இம்மக்களின் வாழ்வில் செயல்படுவதை அறிந்து தனது வாழ்வில் நிறைவில்லா முறையில் பங்கேற்கும் இம் மக்கள்மீது திருஅவை தனது அன்பின் கவனத்தைத் திருப்புகிறது''.[312] இந்த அணுகுமுறை இரக்கத்தின் யூபிலி ஆண்டைக் கொண்டாடுவதின் வழியாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. நிறைவை நோக்கிய இறைவனின் அழைப்பைத் தொடர்ந்து முன்னிருத்தி வரும் திருஅவை, இறைவனுக்கு முழுமையான பதில் தரவேண்டும் என்ற அழைப்புடன் நின்றுவிடாமல், ''கடலில் பயணிப்பவர்களுக்குக் கலங்கரை விளக்குபோல் அல்லது வழியிழந்து பெரும்புயலில் சிக்கித் தவிப்பவர்களுக்கு வழிகாண உதவும் விளக்கைப் போன்று புண்பட்டும் கலக்கமுற்றும் இருக்கும் அன்பின் அறிகுறிகளைக் காட்டும் நலிந்த மக்களின் எதிர்நோக்கையும் மனவுறுதியையும் மீட்டுருவாக்க, மிகவும் வலுவற்ற தன் பிள்ளைகளுடன் தகுந்த கவனத்துடனும் அக்கறையுடனும் திருஅவை உடன்பயணிக்க வேண்டும்''.[313] இதில் திருஅவையின் பணி கள மருத்துவமனையைப் போன்றது என்பதை நாம் மறந்துவிடலாகாது.

292. கிறிஸ்து தனது மறையுடலாம் திருஅவையோடு கொண்டிருக்கும் நெருக்கமான உறவின் வெளிப்பாடே கிறிஸ்தவத் திருமணம். இத்தகைய நெருக்கமான உறவு கணவனும் மனைவியும் ஒருவர் ஒருவருக்கு சுதந்திரமான, நம்பிக்கையுடைய ஒருவர் ஒருவருக்கு மட்டுமே உரிய அன்பில்



தங்களைக் கையளிக்கும்பொழுது உணரப்படுகிறது. இவர்கள் இருவரும் ஒருவர் மற்றவருக்கு வாழ்வின் இறுதிவரைச் சொந்தமானவர்கள்; வாழ்வை அடுத்த தலைமுறைக்கு வழங்கத் திறந்த மனதுடன் இருப்பவர்கள்; இல்லத் திருஅவையாகவும், சமூகத்திற்குப் புதிய வாழ்வின் புளிப்பு மாவாகச் செயல்பட அருள்தரும் அருளடையாளத்தால் புனிதப்படுத்தப்பட்டவர்கள். சிலவகை உறவுகள் இந்த இலட்சியத்திற்கு முற்றிலும் மாறுபட்டவைகளாக உள்ளன. இன்னும் சிலவகை உறவுகள் இந்த இலட்சியத்தை மிகுதியாக அல்லது ஓரளவுக்கு ஒத்த வகையில் அடைகின்றன. திருமணம் பற்றிய தனது படிப்பினையுடன் இன்று வரையிலும் அல்லது இனிமேலும் ஒத்துவராத சூழல்களில் உள்ள ஆக்கப்பூர்வமான கூறுகளைத் திருஅவை ஓரளவு ஒதுக்கிவிடவில்லை என்று மாமன்றத் தந்தையர்கள் எடுத்துரைத்துள்ளனர்.[314]

### அருள்பணிசார் கவனிப்பின் படிப்படியான நிலை

293. மாமன்றத் தந்தையர்கள் வெறும் அரசு சார்ந்த திருமணத்தின் தனிச் சூழ்நிலையையும் அல்லது, உரிய வேறுபாட்டுடன், கணவன் மனைவிபோல் கூடிவாழ்தலையும்கூடக் கவனத்தில் கொண்டனர். ''இத்தகைய ஒன்றிப்புகள் ஒரு குறிப்பிட்ட நிலைத்த தன்மையை அடைகின்றபொழுது, சட்டத்தால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றபொழுது, பிள்ளைகள்மீது ஆழ்ந்த அன்பு, அவர்களுக்கான பொறுப்பு என்பவற்றால் அணிசெய்யப்பட்டுள்ளபோது இடர்களை வெற்றிகொள்ளும் ஆற்றலைக் காட்டும்போது இவை திருமண அருளடையாளத்தைக் கொண்டாடும் நோக்கமுடைய அருள்பணிசார் கவனிப்பிற்கான வாய்ப்புகளைத் தரக்கூடும்'' என்று அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.[315] மற்றொருபுறம், இன்று பலர் திருமணத்தில் நம்பிக்கையின்றி, திருமண அர்ப்பணத்தைக் காலவரையின்றி தள்ளிப்போட்டு கூடிவாழ்கின்றனர். இன்னும் சிலர், ஏற்றுக்கொண்ட திருமண அர்ப்பணத்தை முறித்துவிட்டு உடனடியாக புதிய ஓர் ஒன்றிப்பை ஏற்றுக்கொள்கின்றனர். இளைய தலைமுறையின் இதுபோன்ற போக்கு கவலையளிப்பதாக உள்ளது. ''திருஅவையின் உறுப்பினர்கள் என்ற முறையில் அவர்களுக்குப் பரிவிரக்கமும் பயனுள்ள அருள்பணி சார்ந்த கவனிப்பும் தேவைப்படுகின்றன.''[316] ஏனெனில், திருஅவையின் அருள்பணியாளர்கள் கிறிஸ்தவத் திருமணத்தைப்

பேணிவளர்க்க மட்டுமல்ல, ''இந்தத் திருமண உறவை ஒருபோதும் வாழாத பலரின் சூழல்களை அருள்பணிசார்ந்த முறையில் தெளிந்து தேர்ந்திடும் பொறுப்பும் உடையவர்கள். இவர்களோடு அருள்பணி உரையாடல்கள் நிகழ்த்துவது அவசியமானது. அது திருமணத்தின் நற்செய்தியை அதன் முழுமையுடன் ஏற்க அதிகத் திறந்த மனத்திற்கு அவர்களை இட்டுச்செல்லக்கூடிய கூறுகளாக அவர்களுடைய வாழ்வுகளில் உள்ளனவா என இனம் காண உதவும்.''[317] இந்த அருள்பணி சார்ந்த தெளிந்த தேர்வில் ''நற்செய்திப் பணியையும், மனித மற்றும் அருள்வாழ்வு வளர்ச்சியையும் செழிக்கச்செய்கின்ற கூறுகளை அடையாளம் கண்டுகொள்ள வேண்டும்.''[318]

294. ''அரசுசார் திருமணத்தை அல்லது சாதாரணமாகக் கூடிவாழ்தலை தேர்ந்துகொள்ளுதல் பெரும்பாலும் திருமண அருளடையாள ஒன்றிப்பு பற்றிய எதிர்மறையான முற்சார்பு எண்ணங்களாலோ அல்லது அதை எதிர்க்கும் மனநிலையாலோ தூண்டப்படுவதன்று; மாறாக, பண்பாடு சார்ந்த அல்லது தற்செயலான சூழல்களாலேயே தூண்டப்படுகிறது.''[319] இத்தகைய நிகழ்வுகளில், கடவுளின் அன்பை சிலவழிகளில் பிரதிபலிக்கும் அன்பின் அடையாளங்களுக்கு மதிப்பு அளிக்கலாம்.[320] ''நீண்டகாலமாக இவ்வாறு கூடி வாழ்ந்த பின்பு, திருஅவையில் திருமணம் செய்துகொள்வதற்குக் கோரிக்கை விடுக்கிறவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து உயர்ந்து கொண்டே வருவதை நாம் காண்கின்றோம். கூடிவாழ்தல் என்பது பெரும்பாலும் நிறுவனப்படுத்தப்பட்ட அல்லது அறுதியான எதற்கும் எதிரான பொதுவான ஒரு மனநிலையை அடிப்படையாகக் கொண்டது; வாழ்வில் இன்னும் அதிகமான பாதுகாப்பை (நிலையான வேலை மற்றும் ஊதியம்) எதிர்பார்த்துக் காத்திருக்கும் பொழுதும் இத்தகைய கூடிவாழ்தல் நடைபெறலாம். சில நாடுகளில் நடைமுறையில் கூடிவாழ்தல் நிகழ்வுகள் அதிகரிக்கக் காரணம் குடும்பம் மற்றும் திருமணம் ஆகியவற்றின் விழுமியங்களைத் புறந்தள்ளுவதால் மட்டும் அல்ல; மாறாக, முதன்மையாக சமூகச் சூழல்களில் திருமணக் கொண்டாட்டம் என்பது அதிகச் செலவை ஏற்படுத்துவதாகக் கருதப்படுவதால்தான். இதன் விளைவாக, பொருளாதார ஏழ்மை மக்களை நடைமுறை சார்ந்த கூடிவாழ்தலுக்குத் தள்ளுகிறது.''[321] நிகழ்வுகள் எதுவானாலும், ''இத்தகைய சூழல்கள் திருமணம், குடும்பம் என்பவைபற்றி நற்செய்திகாட்டும் முழு உண்மைக்கு இட்டுச்செல்லும்



வாய்ப்புகளாக அவற்றை உருமாற்ற உதவும் ஆக்கப்பூர்வமான பதிலிறுப்பின் தேவையை உணர்த்துகின்றன. இப்படிப்பட்ட வாழ்க்கைத் துணைவர்கள் வரவேற்கப்படவும் பண்பு நயத்தோடும் பொறுமையோடும் வழிநடத்தப்படவும் வேண்டும்.''[322] இவ்வாறே இயேசு சமாரியப் பெண்ணை நடத்தினார் (காண் யோவா 4:1-26); அவளது வாழ்வில் படர்ந்திருந்த இருளிலிருந்து அவளை விடுவிப்பதற்காகவும் நற்செய்தியின் முழுமையான மகிழ்ச்சிக்கு அவளைக் கொண்டு வருவதற்காகவும் அவரது உண்மையான ஆர்வத்தை நிறைவுசெய்தார்.

295. இதை ஒட்டியே புனித இரண்டாம் ஜாண் பால் மனிதர்கள் ''அறம்சார் நலனை பல்வேறு வளர்ச்சிப் பருவங்களுக்கு ஏற்பவே அறிந்து, அன்புசெய்து செயல்படுத்துகின்றனர்''[323] என்பதைக் கருத்தில் கொண்டு ''படிப்படித்தன்மையின் சட்டம்'' என அழைக்கப்படும் விதியை முன்வைத்தார். ''சட்டம் படிப்படியாக உருவாகிறது'' என்பது இதன் பொருளல்ல. மாறாக சட்டத்தை முழுமையாகப் புரிந்துகொள்ளவும் அதன் மதிப்பை அறியவும், அதன் உண்மையான கோரிக்கைகளை நிறைவு செய்யவும் முடியாத மக்கள் அதைப் படிப்படியாக தங்கள் தன்னுரிமைச் செயல்கள் வழியாக முன்மதியுடன் நடைமுறைப்படுத்துவதிலேயே இந்தப் படிப்படித்தன்மை உள்ளது. ஏனெனில் சட்டம் தன்னிலே கடவுளின் கொடை. அது ஒருவர் செல்லவேண்டிய வழியைச் சுட்டிக்காட்டுகிறது; எந்த விதிவிலக்கும் இல்லாமல் ஒவ்வொருவருக்கும் இது ஒரு கொடையாக வழங்கப்பட்டுள்ளது. இருப்பினும் ஒவ்வொரு மனிதரும் அவருடைய தனி சமூக வாழ்வு முழுவதிலும் இறைவனுடைய அறுதியானவையும் முழுமுதலானவையுமான அன்பின் கோரிக்கைகளையும் அவருடைய கொடைகளையும் மேன்மேலும் ஒருங்கிணைந்து படிப்படியாகவே முன்னேறுகிறார்.''[324]

## ''ஒழுங்கற்ற'' சூழல்களைத் தெளிந்து தேர்தல்[325]

296. ஆயர் மாமன்றம் வலுவற்ற அல்லது குறைபாடுகளுடைய பல்வேறு சூழல்களை எடுத்து ஆய்வுசெய்தது. நாம் தவறான பாதையில் செல்லாதபடி, ஒட்டுமொத்த திருஅவைக்கும் தெளிவுபடுத்த விரும்புவதை இங்கு நான் மீண்டும் அழுத்திக் கூற விரும்புகின்றேன். ''இரண்டு வகையாகச் சிந்திக்கும் பாணிகள் திருஅவை வரலாற்றில் மீண்டும் மீண்டும் வருகிறது –

அவை களைவதும் பழையதைத் தழுவுவதும் ஆகும். எருசலேம் சங்கக் காலத்திலிருந்து பரிவிரக்கம், மீள்நிலையாக்கம் என்னும் இயேசுவின் வழிதான் திருஅவையின் வழியாகவும் இருந்து வருகிறது... ஒருவரை என்றுமாகக் கண்டனம் செய்வது திருஅவையின் வழியல்ல; மாறாக, அது நேர்மையான இதயத்தோடு இரக்கத்தை நாடுபவர்களுக்கு இறைஇரக்கம் எனும் நன்மணக் களிம்பு மருந்தைப் பூசி விடுவதாகும்... ஏனெனில் உண்மையான அன்பு என்றும் நமது தகுதிக்கு அப்பாற்பட்டது; நிபந்தனையற்றது; மற்றும் இறைவனாக வலிந்து தருவது.''[326] அதன் விளைவாக, ''பல்வேறு சூழல்களில் சிக்கல்களைக் கணக்கில் எடுக்காத தீர்ப்புகளைத் தவிர்ப்பதும்;'' தவிர்க்க முடியாத நிலையில் ''தங்களின் ஒவ்வொரு சூழல்களால் எவ்வாறு மக்கள் வேதனையை அனுபவிக்கின்றார்கள் என்பது பற்றி மிகக் கருத்தாய் இருப்பதும் இன்றையத் தேவையாகும்.''[327]

297. இது ஒவ்வொருவரையும் தேடிச்செல்லும் பணியாகும். எப்படியெனில், திருஅவைச் சமூகத்தில் ஒருவர் அவருக்கே உரிய முறையில் பங்கெடுக்கவும், இதனால் ''நமது தகுதிக்கும் அப்பாற்பட்ட, நிபந்தனையற்ற இறைவன் கொடையாகத் தரும்'' பரிவிரக்கத்தை அனுபவிக்கவும் உதவுகின்ற ஒரு தேவையாகும். யாரும் நிலையான கண்டனத்திற்கு உள்ளாக முடியாது. ஏனெனில், இது நற்செய்தியின் சிந்தனைமுறை அல்ல. இங்கு நான் மணமுறிவு பெற்று மறுமணம் செய்தவர்களைப் பற்றி மட்டும் அல்ல. மாறாக ஒவ்வொருவரைப் பற்றியும் – அவர் எத்தகைய சூழ்நிலையில் இருந்தாலும் – பேசுகிறேன். தன்னிலே பாவமாகிய ஒரு தீச்செயலை, அது கிறிஸ்தவ இலட்சியத்தின் ஒரு பகுதி என்று ஒருவர் தூக்கிக் காட்டினாலோ அல்லது திருஅவையின் போதனைக்கு மாறான கருத்தைத் திணித்தாலோ, அவர் எவ்வகையிலும் மற்றவர்களுக்குக் கற்பிக்கவோ, போதிக்கவோ, நிச்சயமாக உரிமை எடுத்துக்கொள்ள முடியாது. இவ்வகை நிலைப்பாடு திருஅவைக் குழுமத்திலிருந்து பிரிந்துசெல்லும் போக்காகும் (காண் மத் 18:17). இத்தகையவர் நற்செய்தியின் போதனைக்கும் மனமாற்றத்திற்கான அதன் அழைப்பிற்கும் மீண்டும் செவிமெடுக்க வேண்டும். இருப்பினும், இப்படிப்பட்ட நபருக்கும் கிறிஸ்தவக் குழும வாழ்வில் பங்கெடுக்க சில வழிகள் இருக்கலாம். அது, சமூகப் பணியாகவோ, மன்றாட்டுக் கூட்டமாகவோ அல்லது பங்குப் பணியாளரின் தெளிந்த தேர்வோடு ஒத்துவருகின்ற சொந்த முயற்சியாகவோ இருக்கலாம். வெவ்வேறு ''ஒழுங்கற்ற'' சூழல்களைக் கையாளுவதற்கான வழிகளைக் குறித்து ஆயர் மாமன்றத் தந்தையர்கள் ஒருமித்த கருத்துக்கு வந்துள்ளார்கள். அதையே நானும் ஆதரிக்கிறேன்: ''அரசுசார் திருமண ஒப்பந்தம் செய்து கொண்டவர்கள், மணமுறிவு பெற்று, மறுமணம் புரிந்தவர்கள், அல்லது வெறுமனே கூடிவாழ்பவர்கள் எனும் மக்களுக்கான அருள்பணி அணுகுமுறைகளைப் பற்றிச் சிந்திக்கும்பொழுது திருஅவை அவர்களுடைய வாழ்க்கையில் இறைவன் செயல்படும் முறையை புரிந்துகொள்வதற்கு அவர்களுக்கு உதவிசெய்ய திருஅவைக்குப் பொறுப்பு உண்டு. அவர்கள் இறைவனின் திட்டத்தின் முழுமையை அடைய அவர்களுக்கு வேண்டிய உதவிகளை அளிப்பதும் திருஅவையின் பொறுப்பாகும்.''[328] தூய ஆவியின் வல்லமையால் இவை எப்பொழுதும் இயன்றவையே.

298. எடுத்துக்காட்டாக, மணமுறிவு பெற்று புதியதொரு ஒன்றிப்பைத் தொடங்குகிறவர்கள் பலதரப்பட்ட சூழ்நிலைகளைச் சந்திக்கின்றார்கள். இந்தச் சூழ்நிலைகளை எல்லாம் அவற்றிற்கு ஏற்ற அருள்பணிசார்ந்த உய்த்துணர்வுக்குத் தகுதியற்றது என்ற மிகவும் ஆள்சார்ந்தும் அருள்பணி சார்ந்ததுமான தெளிந்து தேர்தலுக்கு இடமில்லாத வகையில் ஒரு சட்டகத்திற்குள்ளோ அல்லது மிக இறுக்கமான வகைப்படுத்தல்களுக்குள்ளோ அடக்கிவிடக் கூடாது. ஒரு புறம் புதிய குழந்தைகள் எண்பிக்கப்பட்ட நம்பிக்கையுடைமை, தாராளத் தற்கையளிப்பு, கிறிஸ்தவ அர்ப்பணம், தங்களது ஒழுங்கற்ற நிலை பற்றிய உணர்வு, இன்னுமொரு புதிய பாவத்தில் விழாமல் மீண்டும் பிரியமுடியாது என்ற மனச்சாட்சியின் உறுத்தலை உணர்தல் ஆகியவற்றால் அந்த இரண்டாம் ஒன்றிப்பு வேறுபடுத்தப்பட்டிருப்பதுண்டு. ''குழந்தைகளின் வளர்ப்பு போன்ற முக்கிய காரணங்களுக்காகக் கூடிவாழும் ஓர் ஆணும் ஒரு பெண்ணும் தாங்கள் பிரிய வேண்டிய கடமையை நிறைவேற்ற முடியாத அத்தகைய சூழல்களை''[329] திருஅவை ஏற்றுக்கொள்கிறது. தங்களுடைய முதல் திருமணத்தை பாதுகாத்துக்கொள்ள அனைத்து முயற்சிகளும் எடுத்தபோதிலும் சிலர் அநியாயமாகக் கைவிடப்பட்ட நிகழ்வுகளும் உண்டு. அல்லது, ''பிள்ளைகளின் வளர்ப்பிற்காக இரண்டாவது இணைப்பை

ஏற்றுக்கொண்டவர்கள் எவ்வகையிலும் சீர்செய்யமுடியாத அளவுக்கு முறிந்த தங்களது முதல் திருமணம், ஒருபொழுதும் செல்லுபடியான திருமணமாக இருந்ததில்லை என்று தங்களைப் பொறுத்த வரையில் மன உறுதியுடன் இருக்கக்கூடிய நிகழ்வுகளும் உண்டு.''[330] மறுபுறம், பிள்ளைகளுக்கும் குடும்பங்கள் முழுவதற்கும் துன்பத்தையும் குழப்பத்தையும் ஏற்படுத்தும் அண்மையில் செய்யப்பட்ட மணமுறிவைத் தொடரும் புதிய ஒன்றிப்புகளும் உண்டு. அதுபோலவே, குடும்பங்களுக்கு உரிய தன் கடமைகளை நிறைவேற்றுவதில் தொடர்ந்து தவறியவர்களும் உண்டு. திருமணத்திற்கும் குடும்பத்திற்கும் நற்செய்தி எடுத்தியம்பும் இலட்சியம் இதுவல்ல என்பதில் தெளிவாக இருப்பது அவசியம். சூழ்நிலைகளைக் ''கவனமாக ஆய்வுசெய்யும் அணுகுமுறையில்''[331] ''போதிய அளவு வேறுபடுத்தும் தெளிந்து தேர்தலை''[332] மறைபணியாளர்கள் பின்பற்ற வேண்டும் என்ற ஆயர் மாமன்றத் தந்தையர்கள் குறிப்பிட்டுள்ளனர். வேறு முன்னரே முடிவுசெய்யப்பட்ட ''எளிதான வழிமுறைகள்''[333] எதுவும் இல்லை என்பது நாம் அறிந்ததே.

299. ஆயர் மாமன்றத் தந்தையர்கள் கவனித்துக் கூறியுள்ள கருத்தை நானும் ஏற்றுக்கொள்கிறேன், ''திருமுழுக்குப் பெற்றவர்கள் மணமுறிவு பெற்று, அரசுசார் மறுதிருமணம் செய்தவர்களாக இருந்தால், மற்றவர்களுக்கு இடறல் ஏற்படா வண்ணம், பல்வேறு வகையான வழிகளில் அவர்கள் திருஅவைக் குழுமங்களில் இன்னும் அதிக முழுமையாகச் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும். இந்த அருள்பணிக் கவனிப்பு கிறிஸ்துவின் உடலாகியத் திருஅவையைத் தாங்கள் சார்ந்தவர்கள் என அவர்கள் உணருவது மட்டுமல்ல, அதன் மகிழ்வான, பயன் மிக்க அனுபவத்தையும் அவர்கள் பெறமுடியும் என அவர்களை உணரச் செய்வதே அந்த அருள்பணிகள் அக்கறையின் நோக்கம். அவர்கள் திருமுழுக்குப் பெற்றவர்கள், அவர்கள் அனைவரும் சகோதர சகோதரிகள், தூய ஆவி அவர்களின் இதயங்களில் எல்லோருடைய நன்மைக்காவும் கொடைகளைப் பொழிகின்றார். அவர்களின் பங்கேற்புத் திருஅவையின் வெவ்வேறு பணிகளில் வெளிப்படமுடியும். இதற்குத் தெளிந்து தேர்தல் கண்டிப்பாகத் தேவைப்படுகிறது.



திருவழிபாடு அருள்பணி, கல்வி, நிறுவனங்கள் என்பவற்றிலிருந்து அவர்களை விலக்கிவைக்கும் தற்போதைய பல்வேறு நடைமுறைகளைப் பற்றியதாக அந்தத் தெளிந்து தேர்தல் அமையவேண்டும். இத்தகையோர் தாங்கள் திருஅவையிலிருந்து விலக்கிவைக்கப்பட்டவர்கள் என்று அல்ல, மாறாக, தாங்கள் திருஅவையில் வாழ்ந்து வளரக்கூடிய உயிருள்ள உறுப்பினர்கள்; திருஅவை தங்களை எப்பொழுதும் வரவேற்கும், தங்களைப் பாசத்தோடு கவனித்துக்கொள்ளும், வாழ்வின் வழியிலும் நற்செய்திப் பாதையிலும் நடக்கத் தங்களை ஊக்கப்படுத்தும் அன்னை என்ற அனுபவத்தை அவர்கள் பெறவேண்டும். திருஅவைக்கு மிக முக்கியம் என்று கருதப்பட வேண்டிய இவர்களின் பிள்ளைகளின் கிறிஸ்தவ வளர்ப்பிலும் கவனிப்பிலும் இந்த ஒருங்கிணைக்கும் பணி தேவைப்படுகிறது.''[334]

300. நான் மேலே குறிப்பிட்டுள்ள மிகப் பல வகையான சூழ்நிலைகளைக் கண்ணுறும்பொழுது ஆயர் மாமன்றமோ அல்லது இந்தத் திருத்தூது அறிவுரையோ திருஅவைச் சட்ட வடிவிலும் எல்லாச் சூழல்களுக்கும் பொருந்தக்கூடிய முறையிலும் பொது விதிகளைத் தருவதென்பது இயலாத செயல் என்பது புரிந்துகொள்ளக் கூடியது. ஒவ்வொரு சூழலிலும் பொறுப்புள்ள ஆள்சார்ந்தவையும் அருள்பணிசார்ந்தவையுமான தெளிந்து தேர்தலுடன் முடிவுகளை எடுப்பதற்கு மீண்டும் ஊக்கப்படுத்துவதைத்தான் இப்பொழுது நாம் செய்ய முடியும். ஏனெனில் ''பொறுப்புடைமையின் அளவு எல்லாச் சூழ்நிலைகளுக்கும் சமமாக இருப்பதில்லை''[335] என்பதை அறியவேண்டும்; எனவே, சட்டத்தின் விளைவுகளும் பயன்களும்கூட எப்பொழுதும் ஒரேமாதிரியாக இருக்கமுடியாது.[336] ''(மணமுறிவு பெற்று மறுமணம் செய்தவர்களுடன்) உடன் பயணித்து, அவர்களுடைய சூழ்நிலைகளைத் திருஅவைப் படிப்பினையின்படியும் ஆயரின் வழிகாட்டுதலின் படியும் புரிந்துகொள்ள அவர்களுக்கு உதவ அருள்பணியாளர்கள் கடமைப்பட்டுள்ளார்கள். இந்த வழிமுறைக்கு மனமாற்றச் சிந்தனையுடன் கூடிய ஆன்ம ஆய்வு மிகவும் பயனளிக்கும். மணமுறிவு பெற்று மறுமணம் செய்துகொண்ட மணத்துணைவர்கள் தங்களுக்குள் பின்வரும் கேள்விகளைக் கேட்கவேண்டும்: அவர்களின் திருமண உறவு நெருக்கடியில் வந்தபொழுது தங்கள் குழந்தைகளுடன் அவர்கள் எவ்வாறு நடந்துகொண்டார்கள்? இருவரும் மீண்டும் கூடி வாழ

முயற்சி எடுத்தனரா இல்லையா? கைவிடப்பட்ட துணைவரின் நிலை என்னவாயிற்று? இந்தப் புதிய உறவு தங்கள் குடும்பத்தில் மற்றவர்களிலும் நம்பிக்கையாளர்களின் குழுமத்திலும் எத்தகைய விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது? திருமணத்திற்காகத் தங்களையே தயாரிக்கும் இளைய சமூகத்துக்கு எத்தகைய முன்மாதிரி வைக்கப்படுகிறது? இவைபற்றிய நேர்மையான தன்னாய்வு யாருக்கும் மறுக்கப்படாத கடவுளின் இரக்கத்தின்மீது கொள்ளும் நம்பிக்கையை வலுப்படுத்த முடியும்.''[337] உடன்பயணித்து தெளிந்து தேர்ந்திடும் வழிமுறையைப் பற்றியே நாம் பேசுகின்றோம். இவ்வழிமுறை ''கடவுளின் முன்னிலையில் தங்களுடைய சூழ்நிலைபற்றிய விழிப்புணர்வு அடைய நம்பிக்கையாளர்களுக்கு வழிகாட்டுகிறது. அருள்பணியாளர்களோடு அக அரங்கில் நடத்தும் உரையாடல், திருஅவையில் முழுப் பங்கேற்புக்கு எது தடையாய் இருக்கிறது, இந்த முழுப் பங்கேற்பை வளர்த்துக்கொள்ளவும், அதில் வளரவும் என்ன முயற்சியை மேற்கொள்ளலாம் என்பவைபற்றிய சரியான முடிவை எடுக்க உதவுகிறது. இவ்வாறு படிப்படியாக முன்னேறும் தன்மை சட்டத்தில் இல்லாவிட்டாலும்கூட (காண் ***குடும்ப வாழ்வு,*** 34) இந்தத் தேர்ந்து தெளிதல் திருஅவை எடுத்துக்கூறும் நற்செய்தியின் படிப்பினைகளான உண்மை, அன்பு ஆகியவற்றின் முக்கியத்துவத்தை ஒருபொழுதும் குறைக்காது. இத்தகைய தெளிந்து தேர்தலுக்குப் பின்வரும் சூழல்கள் இன்றியமையாதவை. அவை: தாழ்ச்சி, கால இடநோக்குச் செயல்பாடு, திருஅவைக்கும் அதன் படிப்பினைக்கும் உரிய அன்பு, இறைத்திருவுளத்தை அறிய நேர்மையான தேடல், இறைத் திருவுளத்திற்கு இன்னும் அதிக நிறைவான பதிலிறுப்பு செய்வதற்கான ஆர்வம் என்பன.''[338] அருள்பணியாளர் விரைவாக 'விதிவிலக்குகள்' அளிக்கலாம் அல்லது சிலர் தாங்கள் அளிக்கும் உதவிகளுக்குப் பதிலாக அருளடையாளச் சலுகைகள் பெறலாம் என்ற தவறான புரிதலைத் தவிர்ப்பதற்கு மேற்கூறப்பட்ட மனநிலைகள் மிகவும் இன்றியமையாதவை. திருஅவையின் பொதுநன்மையைவிட தம்முடைய சொந்த விருப்பத்தைப் பெரிதாகக் கருதாத பொறுப்பும் நுண் திறமையும் கொண்ட ஒருவர், தம்மிடத்தில் சமர்பிக்கப்படும் ஒரு காரியத்தின் கனாகனத்தை ஏற்றுக்கொள்ளும் ஆற்றல் படைத்த ஓர் அருள்பணியாளரைச் சந்திக்கும்பொழுது, ஒரு தனிப்பட்ட



தெளிந்து தேர்ந்து திருஅவை இரட்டை வேடம் போடுகிறது என்று நினைக்க வழிவகுக்காது என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

## அருள்பணிசார் தெளிந்து தேர்தலை மட்டுப்படுத்தும் காரணிகள்

301. ''ஒழுங்கற்ற'' சூழ்நிலைகளில் சிறப்பான தெளிந்து தேர்வதின் தேவை, வாய்ப்புகள் பற்றிய தகுந்த புரிதலுக்கு ஒரு காரியத்தை எப்பொழுதும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். இப்புரிதல் நற்செய்தியின் கோரிக்கைகள் விட்டுக்கொடுக்கப்படுகின்றன என எவரும் எண்ணுவதைத் தவிர்க்க உதவும். அவ்வாறு விட்டுக்கொடுக்காமல் மட்டுப்படுத்தும் காரணிகள் மற்றும் சூழ்நிலைகள் பற்றிய உறுதியான சிந்தனைத் திரட்டு திருஅவையிடம் உள்ளது. எனவே, 'ஒழுங்கற்ற' சூழ்நிலையில் வாழுபவர்கள் அனைவரும் கனமான பாவத்தில் வாழ்கின்றனர் என்றும் அவர்கள் புனிதப்படுத்தும் அருளை இழந்துவிட்டார்கள் என்றும் ஒருபொழுதும் எளிதாகக் கூறமுடியாது. விதிகளைப் பற்றிய அறியாமையை விடவும் அதிகமானவை இங்கு உள்ளடங்குகின்றன. ஒருவர் ஒரு விதியைப் பற்றி நன்கு அறிந்திருக்கலாம். ஆனால் ''அதன் உள்ளார்ந்த விழுமியங்களைப்''[339] புரிந்துகொள்வதில் அவர் சிக்கல்களைச் சந்திக்கலாம் அல்லது அவர் மேலும் பாவங்களைக் கட்டிக்கொள்ளாமல் வேறுவகையில் செயல்படத் தீர்மானிக்கவும் ஒரு மெய்யான சூழ்நிலை அனுமதிக்காதிருக்கலாம். மாமன்றத் தந்தையர்கள் குறிப்பிட்டுள்ளபடி, ''முடிவெடுக்கக்கூடிய திறமையைக் குறைக்கும் காரணிகள் இருக்கலாம்.''[340] புனித அக்குயின் தாமஸே கண்டுணர்ந்தபடி, ஒருவர் அருளையும் அன்பையும் கொண்டிருந்தாலும். எந்தவொரு நற்பண்பையும் சரியாகச் செயல்படுத்த முடியாமல் போகலாம்.[341] வேறுவகையில் சொல்லவேண்டுமென்றால், ஒருவர் அறநெறிசார் எல்லா நற்பண்புகளையும் உடையவராய் இருந்தாலும், அவைகளில் ஒன்றை வெளிப்படையாகக் கடைப்பிடிப்பது கடினமாக இருப்பதால் அதை அவர் தெளிவாக செயலில் வெளிப்படுத்தாமல் போகலாம். ''சில புனிதர்கள் எல்லா நற்பண்புகளின் மனப்பாங்கைக் கொண்டிருந்தாலும் அவற்றைச் செயல்படுத்திக் காட்டுவதில் இடர்களைச் சந்தித்ததால் அந்நற்பண்புகள் இல்லாதவர்களாகவே கருதப்படுகின்றார்கள்.''[342]

302. *கத்தோலிக்கத் திருஅவையின் மறைக்கல்வி* தெளிவாகவே இந்தக்கூறுகளைப் பற்றிச் சொல்கிறது: "ஒரு செயலைச் செய்வதற்கான பண்பும் பொறுப்புணர்வும் கவனக்குறைவு, கட்டாயப்படுத்தல், பயம், பழக்கவழக்கம், மட்டுமீறிய பற்றுகள், மற்றும் பிற உளவியல், சமூகக் கூறுகளால் குறைக்கப்படுகின்றன அல்லது செல்லுபடியாகாதவை ஆகின்றன."[343] வேறொரு பத்தியில், அறம்சார் பொறுப்புணர்வைக் குறைக்கும் சூழல்களை *மறைக்கல்வி* எடுத்துக்காட்டியுள்ளது. இவைபற்றி மேலும் விரிவாக அது பேசுகிறது, "முதிர்ச்சியற்ற பாசம், உருவாக்கிக்கொண்ட பழக்கத்தின் தாக்கம், பதற்றம் அல்லது பிற உளவியல், சமூகக் காரணிகள் ஆகியவை அறம்சார் குற்றப் பொறுப்பைக் குறைத்தோ அல்லது அதிகப்படுத்தியோ காட்டும் என்று அது குறிப்பிடுகிறது."[344] இக்காரணத்திற்காக, மெய்யான சூழலைப் பற்றிய ஓர் எதிர்மறைத் தீர்ப்பு அதில் ஈடுபட்டுள்ள நபரைப் பொறுப்புடையவராக்கும் அல்லது குற்றப்படுத்தும் தீர்ப்பாகாது.[345] இந்த உறுதிப்பாட்டின் அடிப்படையில்தான், மாமன்றத் தந்தையர்கள் பின்வரும் கூற்றில் வலியுறுத்த விரும்புவதை சரி என நான் கருதுகிறேன்: "ஒரு சில குறிப்பிட்ட சூழ்நிலைகளில் வேறுவகையில் செயல்படுவது மிகவும் கடினமாக இருப்பதாக மக்கள் உணர்கின்றனர். ஆகவே, ஒரு பொதுவிதியைக் கடைப்பிடிக்கும் அதேவேளையில் ஒருசில செயல்களுக்கான அல்லது முடிவுகளுக்கான பொறுப்பு எல்லாச் சூழ்நிலைகளிலும் ஒரேமாதிரியாக அமையாது என்பதையும் கருத்தில் கொள்ளவேண்டும். நன்றாக உருவாக்கப்பட்ட ஒருவரது மனச்சான்று கணக்கில் கொள்ளும் வேளையில் அருள்பணிசார்ந்த தெளிந்து தேர்தலை இச்சூழ்நிலைகளுக்கான பொறுப்பு எடுத்துக்கொள்ள வேண்டும். எடுத்த நடவடிக்கைகளின் விளைவுகள் எல்லா நிகழ்வுகளிலும் ஒரேமாதிரியாக இருக்கவேண்டிய அவசியம் இல்லை."[346]

303. இத்தகைய நடைமுறைக் கூறுகளின் தாக்கத்தை அடையாளம் கண்டு, திருமணம் பற்றிய திருஅவையின் உண்மையான புரிதலை உள்ளடக்காத சில சூழல்களில், தனிநபரின் மனச்சான்றும் திருஅவையின் செயல்பாட்டில் இன்றும், சிறப்பாக உள்ளிணைக்கப்பட வேண்டும். அருள்பணியாளரின் பொறுப்புள்ள சீரிய தெளிந்த தேர்வால் உருவாக்கம்பெற்று வழிநடத்தப்படும் அறிவொளிபெற்ற மனச்சான்றின் வளர்ச்சிக்கு ஊக்கமளிக்கத் தேவையான அனைத்து முயற்சிகளும் எடுக்கப்படவேண்டும். மேலும் இறைஅருளில் அதிக நம்பிக்கை வைக்கவும் முயற்சி மேற்கொள்ள வேண்டும். இருப்பினும், ஒரு குறிப்பிட்ட சூழல் நற்செய்தியின் ஒட்டுமொத்த கோரிக்கைகளுக்குச் சரியாக ஒத்திருக்கவில்லை என்று மனச்சான்று அறிவதை விட இன்னும் அதிகமாகச் செயல்படமுடியும். இப்பொழுது கடவுளுக்கு மிகத் தாராளமாகக் கொடுக்கவேண்டிய பதில் எது என்பதை மனச்சான்று உண்மையோடும் நேர்மையோடும் அறியவும் முடியும். மேலும், ஒருவருடைய குறைபாட்டிலிருந்து எழும் சிக்கல்களின் நடுவில் இறைவன் எதைக்கேட்கிறார் என்பதையும் மனச்சான்று ஒரளவு அறநெறிசார் உறுதியோடு அறியமுடியும். எந்நிலையிலும் இத்தகைய தெளிந்த தேர்தல் இயக்க ஆற்றல் கொண்டது என்பதை நாம் நினைவில் கொள்வோமாக. வளர்ச்சியின் புதிய நிலைகளுக்கும் இலட்சியத்தை முழுமையாக அடைய வழிவகுக்கும் புதிய முடிவுகளுக்கும் இந்தத் தெளிந்த தேர்வு திறந்தநிலை கொண்டதாக இருக்கவேண்டும்.

## விதிகளும் தெளிந்து தேர்தலும்

304. தனியொரு மனிதரின் செயல்கள் பொதுச் சட்டத்தோடோ அல்லது விதியோடோ பொருந்திப்போகின்றனவா என்று கருதுவது மிகவும் குறுகிய சிந்தனையாகும். ஏனெனில் இத்தகைய சிந்தனை மனிதரின் ஒரு மெய்யான சூழலில் கடவுளுக்கு முழு உண்மையுடன் இருப்பதுபற்றித் தெளிந்து தேர்வு செய்யவும் அதை உறுதிசெய்யவும் போதுமானதல்ல, புனித அக்குயின் தாமஸின் படிப்பினைகளை நாம் எப்போதும் நினைவுகூர்ந்து அவற்றை நமது அருள்பணிசார் தெளிந்து தேர்வோடு ஒன்றிணைக்க வேண்டுமென மனமாரக் கேட்டுக்கொள்கிறேன்: "பொது விதிகளுக்கான தேவை இருந்தாலும், சில காரியங்களின் நுணுக்கங்களில் எந்த அளவுக்கு நாம் அதிகக் கவனம் செலுத்துகிறோமோ அந்த அளவிற்கு அதிகமாக நாம் குறைகளைச் சந்திக்கின்றோம்... செயல்பாடுகளைப் பொறுத்தவரை உண்மை அல்லது நடைமுறைசார் நேர்மை ஆகியவை எல்லாருக்கும் பொது மூலக் கொள்கைகளுக்கு இருப்பதுபோல் நுணுக்கங்களில் சரியாக ஒரே மாதிரியாய் இருப்பதில்லை; மேலும் அச்செயலின் நுணுக்கங்களில் நேர்மைத்தன்மை இருந்தாலும் அது எல்லாருக்கும் சமமாகத் தெரிவதில்லை...

நாம் ஒரு காரியத்தின் நுணுக்கங்களுக்குள் அதிகமாகச் செல்லச் செல்ல மூலக் கொள்கை என்பது உண்மைதான் தவறுவதை நாம் காண்கிறோம்''.[347] பொதுவிதிகள் நன்மையைக் காட்டுகின்றன. இந்த நன்மையை ஒருபோதும் அலட்சியப்படுத்தவோ அல்லது புறக்கணிக்கவோ கூடாது. ஆனால் இந்த விதி உருவாக்கத்தில் எல்லாக் குறிப்பிட்ட சூழ்நிலைகளையும் முற்றிலுமாக கணக்கில் எடுத்துக்கொள்ள முடியாது. அதே வேளையில், இத்தகைய காரணத்திற்காகவே, ஒரு குறிப்பிட்ட சூழலில் நடைமுறைசார் தெளிந்து தேர்வு செய்வதின் ஒரு பகுதியாக உள்ளது என்பதால் அது ஒரு விதி என்ற நிலைக்கு உயர்த்தப்பட முடியாது என்பதையும் குறிப்பிட்டாக வேண்டும். இது சகிக்கமுடியா விதிமுறை வாதத்திற்கு இட்டுச்செல்வது மட்டுமல்ல. தனிச்சிறப்பான கவனத்தோடு பாதுகாக்கப்பட வேண்டிய விழுமியங்களுக்கு ஆபத்தையும் உண்டாக்கும்.[368]

305. இக்காரணத்தினால், ''ஒழுங்கற்ற'' சூழ்நிலையில் வாழும் மக்களுக்கு வெறும் அறநெறிச்சட்டங்களைப் பயன்படுத்தினால் போதும் என்று மறைப்பணியாளர் நினைக்கக்கூடாது. ஏனெனில் அறநெறிச் சட்டங்கள் மக்களின் வாழ்க்கையில் எறிய வேண்டிய கற்கள் போன்றவை அல்ல. இது திருஅவையின் படிப்பினைக்குப் பின்னால் ஒளிந்துகொண்டுள்ள ஒருவருடைய மூடிய இதயத்தைப் பற்றிப் பேசுகிறது: அது ''மோசேயின் இருக்கையில் அமர்ந்துகொண்டு சில வேளைகளில் அதிகாரத்தொனியோடு மேலெழுந்தவாரியாக சிக்கலான சூழ்நிலைகளையும் காயப்பட்ட குடும்பங்களையும் தீர்ப்பிடுவது ஆகும்.''[349] இக்கருத்தை ஒட்டி பன்னாட்டு இறையியல் பணிக்குழு பின்வருமாறு வலியுறுத்திக் கூறுகிறது: ''இயற்கை அறநெறிச் சட்டத்தை ஏற்கனவே உருவாக்கப்பட்ட விதிகளாகவும், அவ்விதிகள் நடைமுறை மெய்ம்மைகளுடன் சரிபார்க்கப்படாமலேயே மனிதரைக் கட்டுப்படுத்துகின்றன என்றும் அறிமுகப்படுத்தக் கூடாது. மாறாக, இயற்கைச் சட்டம் தனிப்பட்ட வாழ்வில் ஆழமான முடிவெடுக்கும் வழிமுறைக்கு உதவும் தனிச்சிறப்பான தூண்டுதலின் ஊற்றாகும்.''[350] கட்டுப்படுத்தும், மட்டுப்படுத்தும் காரணிகளால் பாவத்தின் உண்மையான சூழலில் – அகநிலையில் முற்றிலும்கூட குற்றமற்றவராக இருக்கலாம் – அந்நிலையில் அவர் திருஅவையின் உதவியோடு இறையருளில் வாழ்ந்துகொண்டிருக்கவும் அன்புசெய்யவும் இறைஅருளிலும் அன்பிலும் வளரவும் முடியும்.[351] தேர்ந்து



தெளிதல் கடவுளுக்குப் பதில்தரும் வழிகளைக் கண்டுபிடிக்கவும் குறைகளோடு வளரவும் உதவவேண்டும். எல்லாமே எழுத்துவடிவில் உள்ளது என்று நினைப்பதால், நாம் சிலநேரங்களில் அருளின் வழியையும் வளர்ச்சியின் வழியையும் அடைந்துவிடுகிறோம்; இறைவனுக்கு மகிமையளிக்கின்ற புனிதத்தின் வழியையும் தடைசெய்கின்றோம். ''வெளிப்புறத்தில் எல்லாம் ஒழுங்காக இருப்பதுபோல் தோன்றி, எந்தச் சிக்கலையும் எதிர்கொள்ளாமல் நாள் முழுவதும் நகர்ந்து செல்லும் வாழ்க்கையைவிட, பெரிய மனித குறைபாடுகளுக்கு நடுவில் நாம் எடுத்துவைக்கும் ஓர்அடி இறைவனுக்கு அதிக மகிழ்ச்சியைத் தருவதாக இருக்க முடியும்''[352] என்பதை நினைவுகூர்வோமாக. மறைப்பணியாளர்கள், குழுமங்கள் என்போரின் நடைமுறை சார்ந்த அருட்பணி இந்த மெய்மையைத் தழுவிக்கொள்ளத் தவறக்கூடாது.

306. கடவுளின் சட்டத்தை முழுமையாக வாழ்வதில் எழும் சிக்கல்களைச் சந்திப்பவர்களைக் கையாளும் ஒவ்வொரு சூழலிலும், அன்பின் வழியை பின்பற்றுவதற்கு வரும் அழைப்பை தெளிவாகக் கேட்க வேண்டும். சகோதர அன்பே கிறித்தவர்களின் முதல் சட்டமாகும் (காண் யோவா 15:12; கலா 5:14). மனதிற்கு உறுதியளிக்கும் விவிலியத்தின் வார்த்தைகளை நாம் மறத்தலாகாது: ''எல்லாவற்றிற்கும் மேலாக ஒருவருக்கொருவர் ஆழ்ந்த அன்பு காட்டுங்கள். ஏனெனில் அன்பு திரளான பாவங்களையும் போக்கும்'' (1பேது 4:8); ''நல்லறத்தைப் பேணித் தீச்செயல்களை நீக்குக! ஒடுக்கப்பட்டோர்க்கு இரக்கம் காட்டி உம் பாவக்கறைகளைப் போக்கிக்கொள்க! ஒருவேளை உமது வளமை நீடிப்பதற்கு இது வழியாகலாம்'' (தானி 4:27); ''எரியும் நெருப்பைத் தண்ணீர் அவிக்கும்; தருமம் செய்தல் பாவங்களைக் கழுவிப்போக்கும்'' (சீஞா 3:30). இதையே புனித அகுஸ்தீனாரும் கற்பிக்கிறார்: ''நெருப்பை அணைப்பதற்கு தண்ணீரைத் தேடி ஓடுவது போல... பயனற்ற நமது உடலிருந்து எழும் பாவம் என்ற நெருப்பு எழுந்து நம்மை தொல்லைப்படுத்துமானால், இரக்கச் செயல்களைச் செய்வதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டால் தீயை அணைக்க வழங்கப்பட்ட நீரூற்று போலக் கருதி நாம் மகிழ்சியடைவோமாக.''[353]

## அருள்பணிசார்ந்த இரக்கத்திற்கான சிந்தனைமுறை

307. தவறான புரிதல்கள் அனைத்தையும் தவிர்க்க, திருஅவை கடவுளின் திட்டமான திருமணத்தின் இலட்சியத்தை அதன் முழுச் சிறப்புடன் அறிவுறுத்த எந்தவகையிலும் தவறக்கூடாது: “திருமுழுக்குப் பெற்ற இளையோர் திருமண அருளடையாளம் பற்றிப் புரிந்துகொள்வதற்கு ஊக்கப்படுத்த வேண்டும். இந்த அருளடையாளம் அவர்களின் அன்பின் வாய்ப்புகளை வளப்படுத்த முடியும்; கிறிஸ்துவின் அருளாலும் திருஅவை வாழ்வில் முழுமையாக பங்கேற்க முடிவதாலும், திருமணத்தில் அவர்கள் நிலைத்து நிற்கமுடியும்.”[354] ஊக்கமற்ற மனநிலை, ஏதாவது சார்புண்மைக் கொள்கை, அல்லது இத்தகைய இலட்சியத்தை எடுத்துரைக்கத் தேவையற்ற தயக்கம் என்பன நற்செய்தியின்மீது நம்பிக்கைக் குறைவையும், இளையோர்மீது திருஅவை கொண்டுள்ள அன்பின் குறைவையும் காட்டும். விதிவிலக்கான சூழல்களில் புரிந்துகொள்ளும் தன்மையைக் காட்டுவது என்பது முழு இலட்சியம் என்னும் ஒளியை மங்கச்செய்வதாகவோ அல்லது மனிதருக்கு கிறிஸ்து வாக்களித்ததைவிட, குறைவாக எடுத்துரைப்பதாகவோ ஒருபோதும் பொருள்கொள்ளக்கூடாது. இன்று தோல்வியடைந்த திருமணங்களுக்கு நாம் கொடுக்கும் அக்கறையைவிட திருமணங்களை வலுப்படுத்தி அவற்றின் முறிவைத் தடுப்பதே அருள்பணி முயற்சிகளில் முக்கியத்துவம் பெறவேண்டும்.

308. அதேவேளையில், உளவியல், வரலாறு, உயிரியல் என்பவை சார்ந்த மட்டுப்படுத்தும் சூழல்களை நாம் அறிவோம். இதிலிருந்து ஓர் உண்மை தெளிவாகிறது. அதாவது, “நற்செய்தியின் இலட்சியத்தைக் குறைத்துவிடாமல், ஆள்சார் வளர்ச்சி நிகழ்கின்ற நிலைகளுக்கு ஏற்ப பரிவிரக்கத்துடனும் பொறுமையுடனும் உடன் பயணிப்பது அவசியமாகிறது”. இதில் “நம்மை சிறப்பாகச் செய்யத்தூண்டும் ஆண்டவரின் இரக்கத்திற்கு நாம் இடம்தரவேண்டும்.”[355] எவ்வகையான குழப்பமும் இன்றி அதிக ஈடுபாட்டுடன் அருள்பணி ஆற்றுவதை விரும்புவோரை நான் புரிந்துகொள்கிறேன். மனித வலுவின்மையிலும் தூய ஆவியார் விதைக்கும் நன்மைத்தனத்தைக் கண்டுகொள்ளும் திருஅவையையே இயேசு விரும்புகிறார் என நான் உறுதியாக நம்புகிறேன். தாயாகிய அத்திருஅவை தனது உண்மையான படிப்பினையைத் தெளிவாக எடுத்துரைத்ததும், தெருவின் புழுதி தன்னுடைய கால்களிலே பட்டாலும்கூட அது எப்போதும் தன்னால் இயன்ற நன்மையைச் செய்கிறது.[356] திருஅவையின் மறைப்பணியாளர்கள் இறைமக்களுக்கு நற்செய்தியும், திருஅவையின் படிப்பினைகளை முன்வைக்கும் முழு இலட்சியத்தை எடுத்துரைக்கும்போது வலுவற்றவர்களைப் பரிவோடு நடத்தவும், கோபத்தையும், கடினமான அவசரப்பட்ட தீர்ப்புகளையும் விலக்கவும் வேண்டும். யாரையும் கண்டனம் செய்யவோ தீர்ப்பிடவோ கூடாது என்று நற்செய்தியே தெரிவிக்கிறது (காண் மத் 7:1; லூக் 6:37). இயேசு, “மானிடப் பேரிடர்களிலும் நமக்கென்று தனிப்பட்ட அல்லது சமூக வட்டத்துக்குள் பாதுகாப்பான இடம் தேடுவதை நிறுத்தவேண்டும்” என்று எதிர்பார்க்கிறார். அதற்குப்பதிலாக, மற்ற மக்களின் வாழ்க்கையின் மெய்ம்மைக்குள் புகுந்து மென்மையின் ஆற்றலை அறியவேண்டும் என்று விரும்புகிறார். இதைச் செய்கின்றபோதெல்லாம் நம்வாழ்வு வியக்கத்தக்க அளவில் சிக்கலுள்ளதாக மாறுகிறது.”[357]

309. இந்தச் சிந்தனைகளெல்லாம் இரக்கத்திற்காக அர்ப்பணிக்கப்பட்ட புனித யூபிலி ஆண்டில் நடைபெறுவது கடவுளின் அருட்காவல் செயலாகும். ஏனெனில் பல்வேறு சூழ்நிலைகள் குடும்பங்களைப் பாதிக்கின்ற வேளையில் “நற்செய்தியின் இதயத்துடிப்பாகிய இறை இரக்கத்தை அறிவிக்கத் திருஅவை பொறுப்பாணை பெற்றுள்ளது. இந்த இறை இரக்கம் ஒவ்வொரு நபரின் இதயத்தையும் மனத்தையும் அதற்கே உரிய வழியில் ஊடுருவிச் செல்லவேண்டும். விதிவிலக்கின்றி ஒவ்வொருவரையும் சந்திக்கும் இறைமகனை மாதிரியாகக் கொண்டு கிறிஸ்துவின் மணமகள் தம் செயல்பாணியை உருவாக்கிக்கொள்ள வேண்டும்.”[358] இயேசு தொண்ணூற்றொன்பது ஆடுகளுக்கு மட்டும் ஆயனல்ல; மாறாக நூறு ஆடுகளுக்கு ஆயனாக விளங்குகிறார் என்பதை திருஅவை அறியும். அவர் அனைவரையும் அன்பு செய்கிறார். இந்தப் புரிதலின் அடிப்படையில்தான், இறையாட்சி நம் நடுவே ஏற்கனவே மலர்ந்துவிட்டது என்பதின் அடையாளமாக, நம்பிக்கையாளர்கள், தொலைவில் இருப்போர் ஒவ்வொருவரையும் இரக்கத்தின் நறுமண மருந்து சென்றடைய முடியும்.”[359]

310. இரக்கம் என்பது தந்தையின் செயல்பாடு மட்டுமன்று; யார் அவருடைய உண்மைப்பிள்ளைகள் என்பதை அறியும் அளவுகோலாகவும்

உள்ளது. சுருங்கக்கூறின், நமக்கு முதலில் இரக்கம் காட்டப்பட்டுள்ளதால் நாமும் இரக்கம் காட்ட அழைக்கப்பட்டுள்ளோம்.''[360] இது ஒரு வெறும் கற்பனை அல்ல; கடவுளின் அன்புக்கு ஏனோதானோ என்ற அறைகுறையான பதிலும் அல்ல. அவரது அன்பு எப்பொழுதும் நமக்கு மிக நன்மையானதையே தேடுகிறது. ஏனெனில், ''திருஅவையின் வாழ்விற்கு அடித்தளம் இரக்கமே. அது ஆற்றும் அருட்பணி அனைத்தும் நம்பிக்கையாளர்களுக்கு அது காட்டும் கனிவால் ஊடுருவப்படவேண்டும். அதன் படிப்பினையிலும் உலகிற்கு அது அளிக்கும் சாட்சியத்திலும் இரக்கம் சிறிதும் குறையக்கூடாது.''[361] சில நேரங்களில் ''நாம் அருளை எளிதான வழியமைப்பவர்களாகச் செயல்படுவதற்குப் பதிலாக முழு அதிகார நடுவராகச் செயல்படுகிறோம். ஆனால் திருஅவை ஒரு சுங்க அலுவலகம் அல்ல; அது தந்தையின் இல்லம். அங்கே அவரவரர்களுடைய பிரச்சினையோடு எல்லாருக்கும் இடம் உண்டு.''[362]

311. அறநெறி இறையியல் இத்தகைய கருத்துகளை உள்வாங்கிக்கொள்ளத் தவறக்கூடாது. ஏனெனில், திருஅவையின் அறநெறிப் படிப்பினையின் முழுமைபற்றிக் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பது உண்மையானாலும்கூட நற்செய்தியின் மைய, உயர்ந்த விழுமியங்களுக்கு அழுத்தமும் ஊக்கமும் தருவதில் தனிக் கவனம் அவசியம்;[363] சிறப்பாக, ''முற்றிலும் கொடையாக இறைவன் வழங்கும் அன்பிற்குப் பதிலாக நாம் அளிக்கும் பிரதியன்பு முன்னிடம் பெறவேண்டும்.''[364] சில நேரங்களில் நமது அருள்பணி செயல்பாடுகளில் கடவுளின் நிபந்தனையற்ற அன்புக்கு இடம் தருவது நமக்குக் கடினமானதாக இருக்கிறது. இரக்கத்திற்கு பல்வேறு நிபந்தனைகள் விதிப்பதால் இரக்கத்தை வெறுமையாக்கி அதன் உண்மைப்பொருளையும் அதனுடைய முக்கியத்துவத்தையும் பொருளற்றதாக்கிவிடுகிறோம். இவ்வாறு நற்செய்தியை மிகமோசமான முறையில் நீர்த்துப்போகச் செய்கிறோம். எடுத்துக்காட்டாக, இரக்கம் நீதியையும் உண்மையையும் புறந்தள்ளிவிடாது என்பது உண்மையே. ஆனால் முதன் முதலாக இரக்கமே நீதியின் முழுமை என்றும், இரக்கமே இறை உண்மையின் மிகுந்த ஒளிமயமான வெளிப்பாடு என்றும் நாம் எடுத்துரைக்க வேண்டும். இக்காரணத்திற்காகவே, ''இறைவல்லமையை, குறிப்பாக அவரது இரக்கத்தை ஐயத்திற்குள்ளாக்கும் எந்த இறையியல் கருத்தும் குறைபாடுள்ளது''[365] என்பதை எப்பொழுதும் கவனத்தில் கொள்ளவேண்டும்.



